# பகுதி 7

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள்

இப் பகுதி அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் வசதிகள் தொடர்பான அறிமுகத்தை தருவதுடன் அவற்றில் காணப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்களையும் தருகின்றது.


| | |
|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 02 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 08 |
| ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் | 14 |
| களனிப் பல்கலைக்கழகம் | 24 |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 38 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 41 |
| உறுகுணைப் பல்கலைக்கழகம் | 44 |
| கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை (மட்டக்களப்பு) | 52 |
| தென் கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்) | 54 |
| இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் (மிகிந்தலை) | 56 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை (பெலிகுல் ஓய) | 61 |
| வயம்பப் பல்கலைக்கழகம் (குளியாப்பிட்டி) | 67 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 72 |
| கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் | 76 |
| இலங்கை கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் | 76 |
| வவுனியா பல்கலைக்கழகம், இலங்கை | 80 |
| ஸ்ரீபாளி வளாகம், கொழும்புப் பல்கலைக்கழகம் | 80 |
| திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 81 |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரி | 81 |
| சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 81 |

# பகுதி 7

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள்.

**சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| பிர. கணிதம் | - பிரயோக கணிதம் | ஆ.ந.த.தொ | - ஆய்வு நடவடிக்கையும்,தகவல் தொழில்நுட்பமும் |
| அடி. இல. | - அடிப்படை இலத்திரனியல் | | |
| பௌ. விஞ். | - பௌதீக விஞ்ஞானம் | உயி. விஞ். | - உயிரியல் விஞ்ஞானம் |
| தூய கணி. | - தூய கணிதம் | கண. விஞ். | - கணனி விஞ்ஞானம் |
| புள்ளி. | - புள்ளிவிபரவியல் | கைத். முகா. | - கைத்தொழில் முகாமைத்துவம் |
| கணி. | - கணிதம் | புள்ளி.கண.விஞ். | - புள்ளிவிபரவியலும் கணனி விஞ்ஞானமும் |
| மி.வை. விஞ். | - மிருக வைத்திய விஞ்ஞானம் | முகா. விஞ். | - முகாமைத்துவ விஞ்ஞானம் |
| ந.வ.உ.அ. | - நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் க/மொ | | |

**க/மொ** : கற்பிக்கும் மொழி

S - சிங்களம் T - தமிழ் E - ஆங்கிலம் A - அரபு

## கொழும்புப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை(விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கலை | - | S/T/E |
| முகாமைத்துவம் + | - | E |
| சட்டம் | - | E |
| மருத்துவம் | - | E |
| இயன் மருத்துவம் | - | E |
| கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணி. நிதி. * | - | E |
| உயிர்ரசாயனவியலும் மூலக்கூற்று உயிரியலும்* | இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் | E |
| உயி. விஞ்ஞானம் * | இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் | E |
| பௌ. விஞ்ஞானம் * | பிரயோக கணி., பௌதிகவியல், இரசாயனவியலுடன் கணனி விஞ்ஞானம் | E |
| பௌ. விஞ்ஞானம் * | பிரயோக கணி., தூய கணிதம், இரசாயனவியலுடன் கணனி விஞ்ஞானம் | E |
| பௌ. விஞ்ஞானம் * | பிரயோக கணி., புள்ளிவிபரவியல், இரசாயனவியலுடன் கணனி விஞ்ஞானம் | E |
| பௌ. விஞ்ஞானம் * | பிரயோக கணி., புள்ளி விபர., பௌதிகவியலுடன் கணனி விஞ்ஞானம் | E |
| பௌ. விஞ்ஞானம் * | பிரயோக கணி., தூய கணிதம், புள்ளிவிபரவியலுடன் கணனி விஞ்ஞானம் | E |
| பௌ. விஞ்ஞானம் * | பிரயோக கணி., தூய கணிதம், பௌதிகவியலுடன் கணனி விஞ்ஞானம் | E |
| தாதியியல் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |
| ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும் | - | E |
| யுனானி மருத்துவமும் அறுவை சிகிச்சையும் | - | E |
| ஆரம்பக் கல்வி | - | S |
| மருத்துவ படிமவியல் தொழிநுட்பம் | - | E |

**+முகாமைத்துவ நிதி பீடம்**

**மேற்பார்வை :**

உலகளாவிய மற்றும் தேசிய ரீதியாக உயர்கல்வித் துறையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இப்பீடமானது 2009 வருடத்தில் புதிய வியாபார நிர்வாகமாணிக் கற்கைநெறிக் கலைத்திட்டத்தினை வடிவமைத்தது. தொழிற்துறைக்கும் கல்வியியல் அடிப்படையைக் கொண்ட உயர் கல்வித்துறைக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் இலக்கை நோக்காகக் கொண்டு அமையக்கூடிய செயன்முறை அறிவாற்றலுடன் கூடிய கல்வியியல் திறன்களை உருவாக்கக்கூடியதாக இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கலைத்திட்ட மறுசீரமைப்பானது பின்வரும் நோக்கங்களைப் பிரத்தியேகமாகக் கொண்டிருந்தது.

- வெவ்வேறு துறைகளில் சிறப்புத் தேர்ச்சியுடன் கூடிய பரந்தளவிலான இளமாணிப் பட்டங்களை வழங்கக்கூடிய தனிப் பீடத்தை உருவாக்குதல்
- பட்டங்களின் தன்மைக்கேற்ப பட்டம் வழங்கும் திணைக்களங்களை கல்விசார் சிறப்புத் தேர்ச்சி அளிக்கும் திணைக்களங்களாக மாற்றுதல்.
- பாட அலகு முறைமையை உருவாக்குதல்
- பரந்ததும் நெகிழ்ச்சுத்தன்மை உடையதுமான கற்கைநெறியை உருவாக்குவதற்காக கூடிய விருப்பத் தெரிவுப் பாடங்களை வழங்குதல்.
- தொழிற்துறைக்குத் தேவையான செயன்முறைகளை மாணவர்களுக்கு வழங்குதல்.

***வியாபார நிர்வாகமாணிக் கற்கைநெறி** (BBA)*

வியாபார நிர்வாகமாணிக் கற்கைநெறியானது நான்கு வருட முழுந் நேரப் பாடத்திட்டமாகும். மேலும் இப்பீடம் வியாபார நிர்வாகமாணியில் பின்வரும் துறைகளில் சிறப்புத் தேர்ச்சிப் பட்டத்தையும் அளிக்கின்றது. கணக்கியல், வணிகப் பொருளியல், நிதியியல், விருந்துப்பசார ஓய்வுநேர முகாமைத்துவமும், மனித வள முகாமைத்துவமும்,மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சர்வதேச வியாபாரம், வியாபார நிர்வாகம். இவ்விளமாணிக் கற்கைநெறியின் கலைத்திட்டமானது இரு நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளது. அதாவது வியாபார நிர்வாகமாணி நிலை I, வியாபார நிர்வாகமாணி நிலை II. என்பதோடு ஒவ்வொரு நிலையும் நான்கு பருவங்களைக் கொண்டமைவதோடு முழுக் கற்கைநெறியும் எட்டுப் பருவங்களைக் கொண்டதாகும். நிலை ஒன்றி பருவங்களான I, II, ,III, IV ம் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானதாகும். நிலை இரண்டு அவரவர் தெரிவு செய்யும் சிறப்புத் தெரிவுகளைக் கொண்டதாகும்.

இதற்கமைவாக மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியும் :

- வணிக நிர்வாக கௌரவமாணி
- கணக்கியல் - வணிக நிர்வாக கௌரவமாணி
- வணிகப் பொருளியல் - வணிக நிர்வாக கௌரவமாணி
- நிதியியல் - வணிக வியாபார கௌரவமாணி
- விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் - வணிக நிர்வாக கௌரவமாணி
- மனிதவள முகாமைத்துவம் - வணிக நிர்வாக கௌரவமாணி
- சர்வதேச வணிகம் - வணிக நிர்வாக கௌரவமாணி
- சந்தைப்படுத்தல் - வணிக நிர்வாக கௌரவமாணி

***வணிக நிர்வாக கௌரவமாணி (**BBA Honours**)***

இவ்விளமாணிக் கற்கைநெறியானது முகாமைத்துவத்திலும் நிறுவனங்களினதும் வெவ்வேறு வகையான துறைகளில் மாணவர்களிற்கு தேவையான அறிவு, தேர்ச்சி, செயன்முறைப் பயிற்சி ஆகியவற்றை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ நிறுவனக் கற்கையில் மாணவர்களுக்குத் தேவையான கொள்கைமுறை விளக்கங்களை வழங்கும் அதே நேரத்தில் முகாமைத்துவ நிறுவன நடவடிக்கைகளில் மாணவர்கள் எதிர்கொள்ளும் நிகழ்காலப் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சியைச் சாதகமாக்குவதே இக்கற்கைநெறியின் நோக்கமாகும்.

***கணக்கியல் - வணிக நிர்வாக கௌரவமாணி (**BBA Honours in Accounting)*

கணக்கியல் - வணிக நிர்வாக கௌரவமாணி கற்பதற்குத் தகுதி உடையவர்களும் ஆர்வமுள்ளவர்களும் தொழில் நிறுவன நடவடிக்கைகளை ஆராய்வதற்காக கணக்கியல் நோக்கில் பயிற்றுவிக்கப்படுவார்கள். தேவையாக ஆர்வமுள்ளோருக்கு வணிக/பொருளாதார விவகாரங்களை அறிக்கையிடல் நிறுவனங்களில் முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்குதல், அமுல்படுத்தல், செயற்படுத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது.

***வணிகப் பொருளியல் - வணிக நிர்வாக கௌரவமாணி** (BBA Honours in Bussiness Economics)*

இக்கற்கைநெறியில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்கள் வணிகக் கோட்பாடுகளை ஆராய்வதற்காக பொருளியல் நோக்கில் பயிற்றுவிக்கப்படுவார்கள். பொருளியலில் வழமையான பட்டப்படிப்பு போல் அல்லது இம் மாணவர்கள் அடிப்படை முகாமைத்துவக் கற்கைநெறிகளைக் கற்பதற்கான சந்தர்ப்பங்களைப் பெறுவார்கள். பல்வேறு வகையான பொருளாதாரப் பாட அலகுகளை மாணவர்களிற்கு வெளிப்படுத்தப்படுவதன் மூலம் அவர்கள் பொருளாதார அறிவையும் வணிக முகாமைத்துவ நிலைப்பாடுகளை அறியும் திறனையும் கூட்ட முடியும்.

***நிதியியல் - வணிக வியாபார கௌரவமாணி** (BBA Honours in Finance)*

நிதியியலில் ஆர்வமுள்ளவர்களும் இக்கற்கை நெறியைக் கற்கைத்தகுதி உடையவர்களும் வியாபார நிறுவன அமைப்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்காக நிதியியல் நோக்கில் பயிற்றுவிக்கப்படுவார்கள். இக்கற்கை நெறியானது தற்போது நடைமுறையிலிருக்கும் நிதி சார்ந்த செய்முறைகளில் இருந்துத் சகல விதமான முகாமைத்துவ ஒருங்கிணைப்பிலிருந்தும் உருவாகும் பரவலான முடிவுகளையும் விளங்கிக்கொள்வதற்கு வழி அமைக்கின்றது.

***விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் - வணிக நிர்வாக கௌரவமாணி** (BBA Honours in Hospitality and Leisure Management)*

விருந்துபசாரமும் ஓய்வுநேர முகாமைத்துவமும் உலகில் மிகத்தொலை நோக்குடைய ஒரு துறை ஆகும். இலங்கையின் பொருளாதாரம் இத் துறையிலிருந்து ஒரு முக்கிய பங்களிப்பினை எதிர்ப்பார்க்கின்றது. விடுதிகளின் அபிவிருத்தியிலும் சுற்றுலா, ஓய்வுநேர முகாமைத்துத்திலும் புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே இத் துறையில் புதிய தொழில் வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் பெருமளவில் உள்ளன. இக்கற்கை நெறியானது சாத்தியமான தொழில் வாய்ப்பினை உருவாக்கும் தொழில் நிறுவனங்களை இயக்கக்கூடியதும் வெளிநாட்டு செலாவணி வருமானங்களையும் உள்ளக வளர்ச்சியையும் உருவாக்கக் கூடியதுமான கல்விசார் தகைமை வாய்ந்த முகாமையாளர்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகின்றது.

***மனிதவள முகாமைத்துவம் - வணிக நிர்வாக கௌரவமாணி*** (BBA Honours in Human Resource Management)
இக்கற்கைநெறியானது பங்குபற்றுவோருக்கு ஒரு நிறுவனத்தின் முழுமையான வியாபாரத்தையும் உள்ளடக்கியதான மனிதவள முகாமைத்துவத்தை விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கின்றது. மேலும் பங்குபற்றுவோருக்கு மனிதவள முகாமைத்துவத்தினை ஏனைய முகாமைத்துவத் தொழிற்பாடுசார் பிரிவுகளுடன் தொடர்புப்படுத்தக்கூடிய திறன்களை பெற்றுக்கொள்ள வழியமைக்கின்றது.

***சர்வதேச வணிகம் - வணிக நிர்வாக கௌரவமாணி*** (*BBA Honours in International Business*)
இவ்விளமாணிக் கற்கைநெறியானது மாணவர்களுக்கு சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய வாய்ப்புக்களை பூகோள ரீதியில் அறிந்துகொள்ளும் வாய்ப்பினை வழங்குகின்றது. உலகளாவிய சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதியியல், மனித வள முகாமைத்துவம், பொருளாதாரமும், சட்டமும் போன்ற துறைகளில் சர்வதேச வியாபார நடைமுறைகளைப் பெற்றறிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் வியாபார நிர்வாகமாணியில் சிறப்புத் தேர்ச்சிபெறும் விதத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.

***சந்தைப்படுத்தல் - வணிக நிர்வாக கௌரவமாணி*** (BBA Honours in Marketing)
இக் கற்கைநெறியானது மாணவர்களுக்குச் சந்தைப்படுத்தல் சந்தர்ப்பங்களை இனம் கண்டுகொள்வதற்கு தேவையான அறிவு, திறன், எண்ணப்போக்கு, செயன்முறைப் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் அவற்றை நிறுவனத்தில் நன்மைக்காக முதலீட்டு வாடிக்கையாளர்கள், சமுதாயம் என்பவற்றுடன் நிறுவனத்தில் உள்ளேயும் வெளியேயும் உள்ள குழுக்களையும் ஒன்றிணைத்து வழிநடத்துவதற்கமைவாக உருவாக்கப்பட்டுள்ளது.

## மருத்துவ பீடம்

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடமானது ஆங்கில மொழி மூலமான வைத்திய கலாநிதிப் பட்டம் மற்றும் இயன் மருத்துவ விஞ்ஞான இளமாணி (BSc) பயிற்சி நெறிகளைக் கொண்டுள்ளது. அத்துடன் பீடமானது டிப்ளோமா, முதுமாணி மற்றும் முனைவர்(PhD) பட்டப்படிப்புகளையும் கொண்டுள்ளது. இம் மருத்துவ பீடமானது பத்தொன்பது துறைகளையும், கற்பித்தல் சார்ந்த 160 நிரந்தர ஊழியர்களையும் கொண்டுள்ளது அத்துடன் பீடமானது துறைசார் பிரிவுகளுக்கு மேலதிகமாக மாணவர் கற்பித்தல் தொடர்பான, மெய்நிகர் மற்றும் தொலைத்தூர கற்றல் மையம், திறன் ஆய்வகம /உருவகப்படுத்தல் மையம், ஒலி-ஒளி அலகு, தொழில்நுட்ப பிரிவு, மற்றும் மொழிசார் அலகுகள் என்பவற்றையும் கொண்டுள்ளது. மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியசாலைகளாக இலங்கை தேசிய வைத்தியசாலை (கொழும்பு), டி சொய்சா மகப்பேற்று வைத்தியசாலை, பெண்களுக்கான காசல் விதி மருத்துவமனை, மற்றும் லேடி ரிச்வே சிறுவர்கள் மருத்துவமனை போன்ற கொழும்பை அண்மித்த வைத்தியசாலைகள் அமைகின்றன. முதுகலை பட்டப்படிப்பானது துறைசார் நிலையங்கலினூடாகவும், கொழும்பு மருத்துவமனை குழுவிலுள்ள பல்கலைக்கழக கற்பித்தல் அலகுகள் மூலமாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. பல விசேட அலகுகளான மனித மரபியல் பிரிவு, நீரிழிவு ஆராய்ச்சியியல் பிரிவு, ஒட்டுண்ணிகள் ஆராய்ச்சியியல் பிரிவு, சுகாதார அமைப்புகள் ஆராய்ச்சியியல் பிரிவு, வெப்பமண்டல மருத்துவ ஆராய்ச்சியியல் பிரிவு, பாம்பு விஷம் தொடர்பான பிரிவு, விலங்கு வீடு, கிராம சுகாதார ஆராய்ச்சியியல் பிரிவு மற்றும் சுகாதார மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி பிரிவு என்பன ஆய்வுகளில் முன்னேற்றம் அடைந்து பயணிக்கின்றன. மருத்துவ கல்வி மற்றும் தொழில்சார் சுகாதாரம் ஆகிய இரண்டு துறைகளில் உலக சுகாதார அமைப்புடன் இணைந்த நிலையங்களைக் கொண்டுள்ளது.

***வைத்திய கலாநிதிப் பட்டம்***
இப்பட்டமானது மொத்தம் ஐந்து ஆண்டுகள் முழு நேர கற்கைநெறியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது பின்வரும் ஐந்து துறைகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அவையாவன: அடிப்படை விஞ்ஞானத்துறை, பிரயோக விஞ்ஞானத்துறை, சமூக மருத்துவத்துறை, மனிதநேயம், சமூக அறிவியல் மற்றும் தொழில் சார்ந்த மனப்பான்மை என்பன உள்ளடக்கிய துறை மற்றும் மருத்துவ அறிவியல் துறை ஆகும். 1995 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிகளில் வைத்திய கலாநிதிப் பட்ட கற்கைநெறியானது, பாரம்பரிய முறைமைகளில், அதாவது இரண்டாம், மூன்றாம் மற்றும் இறுதி ஆண்டு வைத்திய கலாநிதிப் பட்ட தேர்வுகளை மட்டும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. மருத்துவமனை சார்ந்த கற்பித்தலானது, கொழும்பை அண்டிய மூன்றாம் நிலை மருத்துவமனைகளில் முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும் இப்பாரம்பரிய முறைமையான கற்கைநெறியிலும் காலப்போக்கில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது. அதிவேகமாக வளர்ந்து வரும் மருத்துவ அறிவு மற்றும் நவீனமுறைகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாக பீடமானது இலங்கை மருத்துவ பாடத்திட்டத்தை மாற்றியமைத்தது. ஆறு ஆண்டுத் திட்டமிடலின்படி 1995ஆம் ஆண்டு கொழும்பு மருத்துவப் பீடத்தின் பாடத்திட்டமானது மாற்றியமைக்கப்பட்டது. பாட உள்ளடக்கத்தைக் குறைத்தல் மற்றும் விரிவுரையாளர்களின் விரிவுரைகளின் அளவைக் குறைத்தலுடன் கற்பித்தல் செயற்பாட்டை மாணவர்களை மையமாகக் கொண்டதாகவும் ஒருங்கிணைந்ததாகவும் மாற்றுவதே இப்புதிய மறுசீலமைக்கப்பட்ட முறைமையின் பிரதான நோக்கங்களாகக் காணப்பட்டது. பிரச்சனை - சார் கற்றல், சிறு குழு கலந்துரையாடல்கள், விவாதங்கள், உள்ளக ஒழுக்க செயற்பாடுகள், கள இணைப்புச்செயற்பாடு, மற்றும் குடும்ப இணைப்புச்செயற்பாடு போன்ற கற்கை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மருத்துவ திறன்களுக்கான பயிற்சியானது ஒரு பிரத்தியேக மருத்துவ திறன் ஆய்வகத்தில் நடத்தப்படுகின்றது. இம்முறைமைகளின் பலனாக மாணவர்களின் சுய கற்றல் செயற்பாடு மேம்படுத்தப்படுகின்றது. உடற்தொகுதிகள் அடிப்படையில் கற்றல், மனிதநேயம், தொழில் சார்ந்த மனப்பான்மை, சமூகம் பற்றிய வலியுறுத்தலே இப்பாடத்திட்டத்தின் முக்கிய பண்புகளாகும்.

***இயன் மருத்துவத்துறையின் விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டம்***

இயன் மருத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டமானது சுகாதார விஞ்ஞானம் சார்ந்த துறையால் வழங்கப்படும் 4 வருட தொழில்முறை நுழைவு நிலைசார் கல்வித் திட்டம் ஆகும். இப்பட்டமானது அறிவு, பயிற்சி மற்றும் அணுகுமுறையுடன் கூடிய திறமையான தகுதியான இயன்மருத்துவரை உருவாக்கி அவர்களினூடாக இயலாமையுடன் கூடிய நோயாளிகளுக்கு உயர்தரத்துடனான இயன்மருத்துவத்தையும், புனர்வாழ்வையும் வழங்குவதன் மூலம் அந்நோயாளிகளின் வாழ்க்கைத்தரத்தையும், இயக்கத்திறனையும் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டது. இப்பட்டமானது இளமாணிப் பட்டம் பெற்றவர்களை ஊக்குவிப்பு, தடுப்பு, பராமரிப்பு, சிகிச்சை/தலையீடு மற்றும் புனர்வாழ்வு ஆகிய சுகாதாரமுறைகளில் பயிற்சியளித்து நோயாளர்களின் உடல் மற்றும் சமூக நல்வாழ்வை உறுதி செய்கிறது. இப்பட்டப்படிப்பானது விளைவு அடிப்படையிலான அணுகுமுறையை கொண்டுள்ளதுடன் இதன் உள்ளடக்கங்கள் நேர் மற்றும் கிடையான ஒருங்கிணைப்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. கற்கைநெறியானது மாணவர்களை மையமாகக் கொண்ட பலதரப்பட்ட கற்பித்தல் நடவடிக்கைகளையும் முந்திய மருத்துவமனை சார் கற்பித்தல் நடவடிக்கைகளையும் கொண்டுள்ளது. தொழில்முறைசார் பண்பு, நெறிமுறை, தொடர்பாடல் அணுகுமுறை, ஆய்வு ஆகியவற்றை விசேடமாக வலியுறுத்துகிறது. பாடத்திட்டமானது காலத்துடன் அறிவு மற்றும் தேவைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு பொருத்தமான திருத்தங்களுடன் மாற்றியமைக்கப்படுகிறது.

## * விஞ்ஞான பீடம

விஞ்ஞான பீடம் ஒரு தேறுதற்கூறு அடிப்படையிலான கற்கைநெறி அலகு முறைமையைக் கொண்டிருக்கின்றது. மாணவர்கள் அவர்களின் தொழிலைத் தொடரும் குறிக்கோளுடன் அடிப்படை, தெரிவு மற்றும் மேம்பாட்டுக் கற்கைநெறிகளின் ஒரு பொருத்தமான பாடச் சேர்க்கையினைத் தொடருவர். அனைத்து நான்கு வருடப் பிரிவுகளிலும் **பீடம் பல்வேறு வகையான விஞ்ஞானமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சிகளை வழங்குகின்றது, அதாவது,உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும், மற்றும் உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல்.**

- விஞ்ஞானமாணிப் பட்டத்திற்கு இட்டுச் செல்லும் மூன்று வருட பொதுப் பட்டம் (கூறாநிலை)
- சிறப்பு/ கௌரவ விஞ்ஞானமாணிப் பட்டத்திற்கு இட்டுச்செல்லும் நான்கு வருடப் பட்டம் (“சிறப்புப்பாடப்பரப்பு”) (தெரிவு முதல் இரண்டு வருட பெறுபேறுகளின் அடிப்படையிலானது)

விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெறும் அனைத்து மாணவர்களும் அவர்களது விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட கணனி விஞ்ஞான கற்கைநெறியைக் கற்கும் சந்தர்ப்பத்தை பெறுகின்றனர். இந்த கற்கைநெறிகள் கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்விக் கூடத்தினால் (UCSC) வழங்கப்படுகின்றன. பட்டியலிடப்பட்ட பௌதீக விஞ்ஞான பாடச் சேர்மானத்திற்கான தெரிவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற அனுமதிக் கட்டளைவிதியின் அடிப்படையில் இருக்கும். உயிர் இரசாயனவியல் முதல் இரண்டு வருடங்களில் ஒரு தனியான பாடப் பிரிவாக இனிமேல் வழங்கப்படாமையினால், உயிரியல் விஞ்ஞானங்களிலும், உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் பிரிவுகளிலுள்ள மாணவர்களுக்கும் ஒரு பாடச் சேர்மானம் மட்டுமே கிடைக்கக்கூடியதாக உள்ளது.

பீடத்திற்கு நுழையும் அனைத்து மாணவர்களும் முதல் இரண்டு வருடங்களில் அவர்களது தெரிவுசெய்யப்பட்ட கட்டாயப் பாடச் சேர்மானங்களில் அடிப்படைக் கற்கைநெறிகளைத் தொடர வேண்டப்படுகின்றனர். மேலும், தெரிவுக் கற்கைநெறிகளை இப் பாடத் தொகுதியிலிருந்தும் தெரிவு செய்யலாம். மூன்றாம் வருடத்தில் பீ.எஸ்.சி. 3 வருட பட்ட நிகழ்ச்சிகளிற்கு பதிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு, தொழில்துறை உள்ளகப்பயிற்சி உட்பட, ஒரு பொருத்தமான பாடங்களின் தெரிவுத் தொகுதி கிடைக்கச்செய்யப்படும்.

முதல் இரண்டு வருடங்களில் சிறப்புறும் மாணவர்களுக்கு பீடத்தினால் வழங்கப்படுகின்ற அடிப்படை, பல்துறை, பிரயோக மற்றும் தொழில்துறை சார்ந்த துறைகளில் சிறப்பு/ கௌரவ பட்டக் கற்கை நிகழ்ச்சிகளுக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் தரப்படும். இடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால், இக் கற்கை நிகழ்ச்சிகளிற்கான அனுமதி போட்டி அடிப்படையில் அமையும். அனைத்து சிறப்பு/ கௌரவ பட்டங்களும் ஒரு ஆராய்ச்சிக் கூறுகளைக் கொண்டுள்ளன. தொழில்துறை சார்ந்த பட்டங்களைப் பொருத்தவரை இது உள்ளகப்பயிற்சியாக இருக்கலாம்.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ள சிறப்பு/ கௌரவ பட்டங்களின் பட்டியல் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

**பௌதீக விஞ்ஞானம்** : இரசாயனவியல், கணினித்துவ இரசாயனவியல், பௌதீகவியல், கணினித்துவ பௌதீகவியல், பொறியியல் பௌதீகவியல், கணிதவியல், கணினித்துவ கணிதவியல், பிரயோக கணிதவியல், புள்ளிவிபரவியல், தரவு விஞ்ஞானம், அணுக்கரு மருத்துவ விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், இலத்திரனியலும் தகவல் தொழில்நுட்பமும், பிரயோக புள்ளிவிபரவியல், நிதி மற்றும் காப்பீடு, அறிவியலும் முகாமைத்துவமும், அணு தொழில்நுட்பம்.

**உயிரியல் விஞ்ஞானம்** : இரசாயனவியல், கணினித்துவ இரசாயனவியல், உயிர் இரசாயனவியலும் மூலக்கூற்று உயிரியலும், மருந்தியல், சுற்றாடல் விஞ்ஞானம், விலங்கியல், நோய்த்தடுப்பியலும் ஒருங்கிணைந்த மூலக்கூற்று உயிரியலும், தாவர விஞ்ஞானம், உயிர்த்தகவலியல், தாவர உயிர்த்தொழில்நுட்பவியல், அணுக்கரு மருத்துவ விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், வணிகம் மற்றும் சுற்றுச்சூழல், அறிவியலும் முகாமைத்துவமும், தோட்டக்கலையும் நிலையான நில அழகுபடுத்தலும், அணு தொழில்நுட்பம்.

[கணினித்துவ இரசாயனவியல், கணினித்துவ பௌதீகவியல், உயிர்த்தகவலியல், கணினி விஞ்ஞானத்துடன் கணிதவியல் மற்றும் புள்ளி விபரவியல், மற்றும் கணினி விஞ்ஞானத்துடன் புள்ளிவிபரவியல் பட்டக்கற்கைகளுக்கு கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்விகூடத்துடன் இணைந்து வழங்கப்படுகின்ற அதேவேளை, மருந்தாக்கவியல் மருத்துவப் பீட மருந்தாக்கவியல் துறையுடன் கூட்டாக வழங்கப்படும் என்பதனைக் கவனிக்குக.]

**கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும்** : கைத்தொழில் புள்ளிவிபரவியல், கணிதவியல் நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், பிரயோக புள்ளிவிபரவியல், நிதி மற்றும் காப்பீடு, கணிதவியல்.

**உயிர் இரசாயனவியலும் மூலக்கூற்று உயிரியலும்** : உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல், இரசாயனவியல். (மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை), தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பமும் மேலும் இடம் இருப்பதன் அடிப்படையில், இந்த மாணவர்கள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் உள்ள மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாயிருக்கும் யாதாயினும் சிறப்பு/கௌரவப் பட்டத்தில் சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்படலாம்.

## தாதியியல் பீடம்

தாதியியல் பீடமானது, தாதியியல் துறையில் தாதியியல் விஞ்ஞானப் பட்டத்தை வழங்குகின்றது. சகல வயதுத் தொகுதியைச் சேர்ந்த நோயாளர்களைப் பராமரித்தல், நோய்களைத் தடுத்தல், சுகாதாரத்தை மேம்படுத்தி அதனை மீள்நிலைநாட்டுதல் மற்றும் புனர்வாழ்வு விடயங்களில் உதவுதல் முதலிய அம்சங்களில் அறிவு, திறன்கள் மற்றும் மகோபாவம் ஆகிய அனைத்தையும் முற்றிலும் பயன்படுத்தக்கூடிய தாதிப் பட்டதாரிகளை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் நான்கு வருட காலங்களுக்கு மொத்தம் 127 Credit மணித்தியாலங்கள் அடங்கிய ஒரு Credit அடிப்படையிலான முறைமையில் கையாளப்படுகின்றது. இப் பட்டடப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மொழிமூலம் ஆங்கிலமாகும். தாதியியல் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பாடவிதானம் சர்வதேச ரீதியில் கிடைக்கக்கூடிய அதையொத்த மட்டத்திலான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமாக விளங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடவிதானங்கள், தாதியியல் தொழிலில் நுழைவதற்கு தேவையான முக்கிய தொழில்வாய்ப்பு அளிக்கக்கூடிய தாதியியல் பாடநெறிகளினால் பின்பற்றப்படும் அடிப்படை விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியவற்றின் கோட்பாடுகளின் அடிப்படையிலான ஒரு திடமான அத்திவாரம் மாணவர்களுக்கு இடப்படுகின்றதா என்பதை உறுதிசெய்கின்ற அதே வேளையில் நவீன தொழில்நுட்பங்களைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. குறித்த பாடநெறி தாதியியல் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கும், தாதியியல் கல்வியைப் போஷித்து, சுகாதார ஆராய்ச்சி விடயங்களை மேம்படுத்துவதற்கும் அதிக திறன்களையுடைய தாதியியல் தொழிலாளர்களை உருவாக்கும் நிமித்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் பாடநெறி தமது நிஜ வாழ்க்கையில் தமது அறிவுப் பிரயோகத்தில் திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் செயல்திறன் மீது அதிக அழுத்தத்தைக் கொண்டுள்ளது. பகுப்பாய்வு மற்றும் விமர்சன ரீதியான சிந்தனையையும், பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறன்களையும் வளர்ப்பதில் விஷேட அழுத்தமுடைய செயன்முறை அடிப்படையிலான தாதியியல் ஆராய்ச்சி மற்றும் நிரூபனம் ஆகிய எண்ணக்கருக்களும் இப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. சமுதாய அமைப்புகளிலும், கொழும்பை அண்மித்த பகுதிகளிலும் அதே நேரம் பல வைத்தியசாலைகளிலும் செயல்முறை அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

## தொழில்நுட்பப் பீடம்

தொழில்நுட்பப் பீடம் மூன்று துறைகளில் நான்கு வருட தொழில்நுட்பக் கௌரவ பட்டநெறிகளை வழங்குகிறது. ஒவ்வொரு பட்டநெறியும் 120 திறமைப் பெறுமான மதிப்பு கொண்ட அலகுமுறையானது. இம்மூன்று பட்டநெறிகளுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இம் மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் பின்வருமாறு :

(1) **கருவிமயமும் தானியக்கமும்** பற்றிய பொறியியல் தொழில்நுட்ப கௌரவ பட்டம்
(2) **சுற்றாடல் தொழில்நுட்பம்** பற்றிய உயிரியல் முறைமைத் தொழில்நுட்ப கௌரவ பட்டம்
(3) **விவசாயம்** பற்றிய உயிரியல் முறைமைத் தொழில்நுட்ப கௌரவ பட்டம்

மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினதும் பாடவிதானங்கள் மாணவர்களை தமது பணித்துறைகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு இயலச்செய்யக்கூடிய வகையிலும் மற்றும் சரியான குறித்த அறிவையும் திறன்களையும் பெற்று அவர்கள் தமது தொழில்களில் தனிப்பட்ட ரீதியில் தகுதியுடையவர்களாக மாற்றக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இம் மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் பல விடயப்பரப்புகளை

உள்ளடக்கிக் காணப்படும். இந் நிகழ்ச்சித்திட்டங்கள் மாணவர்களை தொழில்நுட்பத் துறைகளிலுள்ள உயர்தொழில்களுக்கு தகுதியுடையவர்களாக மாறச்செய்யும். மாணவர்கள் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற முழுமையான பட்டதாரிகளை மட்டுமன்றி மக்களின் நலன், பொருளாதாரம், சுற்றாடல் ஆகியன தொடர்பான முக்கிய விடயங்களில் விழிப்புணர்வு உடையவர்களாக மாறக்கூடிய வகையில் பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பின்வருவன உள்ளடங்கியிருக்கும் :

- அடிப்படை விஞ்ஞானம், கணிதம், அடிப்படைத் தொழில்நுட்பம், மானிட சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம் மற்றும் கணக்கியல், சுகாதாரம் ஆகிய பொதுவான முக்கிய பாடங்கள்
- சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்களுக்கு அறிவையும் திறன்களையும் கற்பிக்கின்ற முக்கியமான தொழில்நுட்பப் பாடங்கள்

இது தவிர, மாணவர் ஒருவர்

- குறிப்பிட்டவொரு காலத்திற்கு ஒரு கைத்தொழில் பயிற்சிக்கு உள்ளாகி ஒரு அறிக்கையை அல்லது
- பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டு, முழுமையான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இப் பீடத்திற்கு அனுமதியைப் பெறும் அனைத்து மாணவர்களும் அவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படத்தும் வகையில் நேரடி அனுபவத்தைப் பெறச் செய்வதற்கு கணனிக் கணிப்பீடு, இலத்திரனியல் மற்றும் எந்திரப் பொறியியல் முதலிய விடயங்களில் ஆய்வுகூடங்களிலும், வேலையரங்குகளிலும் பயிற்சி வழங்கப்படும்.

## கலைப்பீடம்

**கலைமாணி பட்டப்படிப்பு**
கலைப்பீடமானது மாணவர்களுக்கு ஒரு பரந்தளவிலான கல்வியினை வழங்குகின்றது. கலைப்பீடத்தினால் பின்வரும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

1. ***கலைமாணி பொதுப் பட்டம் (கற்கைப் பிரிவுகள்- மூன்று வருட கற்கைநெறி)*** : பிரயோக குடியியல், வங்கியியலும் நிதியியலும், வணிகம் மற்றும் முகாமைத்துவ பொருளியல், ஆங்கில கற்கைகள், கோட்பாடும் நடைமுறையும், புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவம், கலாசாரம் மற்றும் பாரம்பரியம், முரண்பாட்டு தீர்வும் சமாதானமும், ஜனநாயகமும் ஆட்சிச் செயன்முறையும், சிங்களக் கற்கைகள், பிரயோக சமூகவியல் கற்கைகள், நகர மற்றும் சமுதாயக் கற்கைகள், பௌத்த கற்கைகள், இரண்டாம் மொழியாக ஆங்கில கற்கைகள், தொடர்பாடல் மற்றும் ஆக்க கலைகள், பிரயோக இஸ்லாமிய கற்கைகள், அபிவிருத்திக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விளையாட்டுக் கற்கைகள்.

2. ***கலைமாணி கௌரவப் பட்டம் (நான்கு வருட கற்கைநெறி):*** பௌத்த கற்கைகள், குடியியல், பொருளியல், ஆங்கிலம், புவியியல், வரலாறு, சர்வதேச உறவுகள், அரசியல் விஞ்ஞானம் மற்றும் அரச கொள்கைகள், சிங்களம், சமூகவியல்.

இப் பட்டப்படிப்புக்களைப் பொறுத்தவரையில் கற்பித்தல் அரையாண்டுப் பருவத்தினையும் மாணவர்களை தொடர்ச்சியாக மதிப்பிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு கற்கைநெறியும் ஒரு அரையாண்டு பருவத்தில் 15 வாரங்களையும் 150 கற்பித்தல் மணித்தியாலங்களையும் கொண்டு பரீட்சிக்கப்படுகின்றது.

பொதுக் கலைமாணிப் பட்டமானது மூன்று வருட (6 அரையாண்டு பருவங்கள்) காலப்பகுதியினைக் கொண்டதாகவும், சிறப்புக்கலைமாணிப்பட்டமானது நான்கு வருட (8 அரையாண்டு பருவங்கள்) காலப்பகுதியினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

# பேராதனைப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கலை | - | S/T/E |
| சட்டம் | - | E |
| முகாமைத்துவம் | - | S/T/E |
| மருத்துவம் | - | E |
| பல் அறுவைச் சிகிச்சை | - | E |
| விலங்கு மருத்துவ விஞ்ஞானம் | - | E |
| விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | - | E |
| உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | - | E |
| பொறியியல் | - | E |
| உயிரியல் விஞ்ஞானம் | - | E |
| விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் | - | E |
| பௌதீக விஞ்ஞானம் | - | E |
| புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் | - | E |
| தாதியியல் | - | E |
| மருந்தகவியல் | - | E |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | - | E |
| ஊடுகதிர்ப்படமெடுப்பு | - | E |
| இயன் மருத்துவம் | - | E |
| புவியியல் தகவல் விஞ்ஞானம் | - | E |
| சமூகப்பணி | - | E |

**விவசாயப் பீடம்**

1948ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்களுக்கும் மேலாக கல்விசார் நடவடிக்கைகளில் சிறப்பான வளர்ச்சி கண்ட இலங்கையின் முதன்மையான விவசாய பீடம் எமதாகும். இப்பீடம் திறமையானவர்களுக்கும், சிறந்த பண்பாளர்களுக்குமான கல்விசார் ஊழியர்களைக் கொண்டது. 137 நிரந்தர கல்விசார் ஊழியர்களைக் கொண்டுள்ள எமது பீடத்தில் அண்ணளவாக 75% கல்விசார் ஊழியர்கள் தமது முதுமாணி பட்டத்தினை உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் பூர்த்திசெய்ததோடு அவர்களுள் அண்ணளவாக 50% பேராசிரியர்கள் ஆவர். இது இலங்கையின் சில பல்கலைக்கழகங்களிலேயே காணப்படும் சிறந்ததொரு பண்பாகும். பீடத்தினால் எட்டு வெவ்வேறு பிரிவுகளினூடாக இளமாணிப் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கென பரந்த சௌகரியமான நவீன வகுப்பறைகள் மற்றும் பரிசோதனை கூடங்கள் அமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பீடத்தினால் கால்நடை மற்றும் தாவரவியல் கல்வி தொடர்பான செயல்முறை கல்வியை மேற்கொள்ளவென விசேட உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதோடு மகா இலுப்பல்லமவில் அமைந்துள்ள உப வளாகம் இதற்கு மேலும் உதவி வழங்குகிறது. விவசாய வியாபார மையம், விவசாய உயிர் தொழில்நுட்பவியல் மையம், விவசாய கல்விப்பிரிவு என்பன கல்விசார் நடவடிக்கைகளுக்கு மேலும் ஆதரவு வழங்குகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது இலங்கையின் ஏனைய பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்கு சிறந்த முன் மாதிரியாக விளங்குகின்றது. அவை:

- விவசாயம் தொடர்பான அறிமுறை, செயல்முறை, இணைந்த விஞ்ஞானம், சமூக மற்றும் பொருளியல் தொடர்பான புரிதல். அத்துடன் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு திறமைகளை விருத்தி செய்தல்.
- மாணவர்களுக்கும் கல்விசார் ஊழியர்களுக்கும் இடையிலான ஆரோக்கியமான உறவு, ஆசிரியரை அறிமுகப்படுத்தல் தொடக்கம் அவர்களை மாணவர்கள் மூலமாக மதிப்பீடு செய்தல், மாணவர்களை சுய கற்றலுக்காக தயார் செய்து சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ளல்.
- மாணவர்களை பல்வேறு துறைகளில் ஆக்கபூர்வமாக ஒருங்கிணைப்பதற்கான சிக்கலான சந்தர்ப்பங்களில் உறுதியான முடிவுகளை எடுக்கவும், குழுவாக வேலை செய்யவும், செயல்முறை சார்ந்தவர்களாக விளங்கவும் அவர்களின் தனிப்பட்ட திறமைகளை விருத்தி செய்தல்.
- உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுக்கிடையில் மாணவர்களை பரிமாற்றம் செய்தல்.
- சர்வதேச மாணவர்களுக்கும் எமது மாணவர்களுக்கும் இடையில் கல்விசார் தொடர்புகளை விருத்தி செய்ய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுத்தல்.
- ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கும் மேற்பட்ட புலமைபரிசில்கள் மற்றும் நிதியுதவிகளை அத்தியவசிய நிதியுதவி தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்குதல்.
- பட்டப்படிப்பின் பின்னர் 100% பட்டதாரிகள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உயர் பதவிகளிலும், விவசாய ஆராய்ச்சிகளிலும், உயர் கல்வியிலும், நிர்வாகத்துறையிலும், முகாமைத்துவத்திலும் பரந்திருத்தல்.
- நிலையானவர்களையும் சமூகத்தை மாற்றி அமைக்கக்கூடிய தலைவர்களையும் உருவாக்குதல்.
- பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின்னர் மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் (ஐக்கிய அமேரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய நாடுகள்) புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ள உதவிசெய்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரஉத்தரவாத பேரவையின் நிகழ்ச்சித்திட்ட மீள் நோக்கத்திற்கு அமைய பீடமானது அதனது அனைத்து விஞ்ஞான இளமாணி கற்கைநெறிகளுக்கும் “A” தரத்தினைப் பெற்றுள்ளது. மேலதிக விபரங்களுக்கு - http://:agri.pdn.ac.lk

எமது பீடமானது பாடத்திட்டத்தில் தொடர் மாற்றங்களை செய்வதன் மூலமாக விவசாய உயர் கல்வியில் மாற்றத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துகின்ற இப் பாடநெறியானது முற்றுமுழுதாக ஆங்கில மொழி மூலமாக பயிற்றுவிக்கப்படுவதுடன், மாணவர்களின் ஆங்கில மொழி தேர்ச்சியினை விருத்தி செய்வதற்கான பயிற்சி பீடத்தின் ஆங்கில மொழி கற்கை பிரிவு வழங்குகின்றது. அவையாவன: தற்போது 3 வேறுபட்ட 4 வருட பட்டப் படிப்புகளை விவசாயப் பீடம் வழங்குகிறது.

· விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி
· உணவுவிஞ்ஞான தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்
· விலங்குவிஞ்ஞான மீன்பிடியியல் விஞ்ஞான இளமாணி

*விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப்பட்டம்*

விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் இளமாணி பட்டப்படிப்பு விவசாய பீடத்தினால் வழங்கப்படும் பிரதான கற்கைநெறியாகும். இப் பட்டப்படிப்பு தனித்துவமானதும் எட்டு பருவங்களையும் ஆகக்குறைந்தது 126 தகுதிமதிப்பு அலகுகளையும் கொண்டது. இக் கற்கைநெறியானது எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்குரிய சிறந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்கு 5 கருப்பிரிவுகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். அவையாவன. 1. தாவர விலங்கு உற்பத்தி 2. விவசாய உற்பத்திப் பொருள் பதனிடல் தொழில்நுட்பம் 3. இயற்கை வளங்களின் நிலையான முகாமைத்துவம் 4. சமூக பொருளியல் அபிவிருத்தியும் வணிக முகாமைத்துவமும் 5. தொழில்சார் மனப்பாங்கும் தன்னம்பிக்கை விருத்தியும். மும்மொழி தேர்ச்சியானது எங்கள் பட்டதாரிகளுக்கு சிறந்த வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கின்றது என நாங்கள் நம்புகின்றோம். அத்துடன் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியினை கற்கும் வாய்ப்பினையும் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியினை கற்கும் வாய்ப்பினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பட்டபடிப்பின் பாடத்திட்டமானது விஞ்ஞான தொழில்நுட்ப உலகத்தினையும் முகாமைத்துவ உலகத்தினையும் பற்றி இளங்கலை மாணவர்கள் கண்டறிய வாய்ப்பளிக்கும் வகையில் அறிமுறைக்கும் செயல்முறைக்கும் சமநிலையை சிறந்த முறையில் வழங்குகின்றது. இப்பட்டபடிப்பின் பாடத்திட்டமானது 2 பிரதான தொகுதிகளை உள்ளடக்கியது. அவையாவன கட்டாய கற்கை தொகுதி, மேலதிக கற்கை தொகுதி, கட்டாய கற்கை தொகுதியில் மாணவர்கள் 8 பிரதான பிரிவுகளினால் வழங்கப்படும் பாடநெறிகள் பல்திறமைகளிலும் தடம் பதித்த சகல துறை ஆளுமை கொண்ட தனியாளாக திகழ வழிவகுக்கின்றது. மேலதிக கற்கை தொகுதியில் மாணவர்கள் 8 பிரிவுகளினால் வழங்கப்படும் 12 பாட பிரிவுகளில் தங்களுக்கு விரும்பிய ஒரு பாடப் பிரிவினை தெரிவு செய்து கொள்ளலாம். இத் தெரிவானது க.பொ.த. (உ/த) உயிரியல் விஞ்ஞான பிரிவினை தெரிவு செய்த மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற ஒரு அறிய வாய்ப்பாகும். இவ்வாறான பன்முக தன்மை கொண்ட உயர் கல்வி வாய்ப்புகள் பீடத்தினால் உயர் தர தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்கு உறுதுணையாய் இருந்ததென்பதற்கு உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் உள்ள பழைய மாணவர்கள் சான்று பகர்கின்றனர். விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவ விஞ்ஞான இளங்கலை பட்டதாரியின் எதிர்காலமானது ஒளிமயமானதும் உத்தரவாதமானதும், உறுதியானதுமாகும். நிகழ்ச்சித்திட்ட மீள்நோக்கிற்கு அமைய இக்கற்கைநெறியானது இலங்கையின் மற்றைய எல்லா கற்கைநெறிகளை விடவும் மிக உயர்ந்த புள்ளிகளுடன் "A" தரத்தினைப் பெற்றுள்ளது.

*உணவு விஞ்ஞான தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி*

ஆங்கில மொழி மூலம் வழங்கப்படும் உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பட்டப்படிப்பானது 8 பருவங்களை கொண்டது. இதன் மூலமாக விவசாய உணவு உற்பத்திகளை பதனிடல் மற்றும் செயற்படுத்தல், பௌதீக இரசாயன மற்றும் உணர்வு ரீதியான உள்ளடக்கங்களை ஆராய்தல், தரநிர்ணயம், உணவு பாதுகாப்பு, உணவின் உயிர் இரசாயன மற்றும் தொழில் முறை தோற்றத்தை விசாரணை செய்தல், மனித ஊட்டச்சத்து தொடர்பான அறிவினை வளர்த்தல், தொழில் ரீதியான தகைமைகளை கட்டியெழுப்புதல் மற்றும் தன்னம்பிக்கையை விருத்தி செய்தல் போன்ற தகைமைகள் விருத்தி செய்யப்படும். மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் செயல்முறை மற்றும் அறிமுறைகளை கொண்ட 126 தகுமதிப்பு அலகுகளையும் கொண்ட பாட நெறிகள் தரமான கல்வி சார் ஊழியர்களினால் வழங்கப்படும். செயல்முறை பாடநெறியானது மாணவர் சார்பான கற்கை முறை மூலம் வழங்கப்படும் உணவுத் தொழில் துறைகளில் வெளிக்காட்டப்பட்டு பல்வேறு கற்கும் உத்திகளை கையாள்வதன் மூலம் தன்னம்பிக்கை மற்றும் அனுபவம் வளர்க்கப்படும். இறுதி பருவத்தில் மாணவர்கள் 4 மாத ஆராய்ச்சிக்காகவும் ஆராய்ச்சி கட்டுரையை பூர்த்தி செய்யவுமென கல்விசார் ஊழியர்கள் மேற்பார்வைக்காக ஒழுங்கு செய்யப்படுவர். கற்கைநெறியை சிறப்பாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உணவுத்துறையில் தங்களது சிறந்த பங்களிப்பை வழங்குவர்.

*விலங்கு விஞ்ஞான மீன்பிடியியல் விஞ்ஞான இளமாணி*

விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு விவசாய பீடத்தினால் வழங்கப்படும் மற்றொரு கற்கை நெறியாகும். இப் பட்டப்படிப்பு எட்டு பருவங்களையும் ஆக குறைந்தது 126 தகுதி மதிப்பு அலகுகளையும் கொண்டது. இக் கற்கை நெறியானது பிரதானமான விலங்கு உற்பத்தி முகாமைத்துவம், அடிப்படை விவசாயம், உட்பத்தி பொருள், பொருளியல் மற்றும் விரிவாக்கம் என பல்வேறு பாட விதானங்களின் சேர்க்கையை 2 பருவங்களில் பிரித்து வழங்கப்படுகிறது. முதல் இரு பருவங்களும் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாகவும் தொடர்ந்து வரும் 6 பருவங்களில் கட்டாயமானதும், விருப்பத்தேர்வுக்குரியதுமான கூறுகளையும் கொண்டது. இறுதி பருவமானது முற்று முழுதாக விலங்கு தொழில் துறை சார்ந்த ஆராய்ச்சி திட்டதிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் சுற்றாடலில் சிறந்த ஒரு பரீட்சியத்தை உண்டாக்கவென இரு தடவைகள், இரு பருவங்களின் இடையில் தொழில் துறைகளில் தொழில்துறை பயிற்சிக்காக மாணவர்கள் அனுப்பப்படுவர்.

## இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

தற்போது இங்கு பட்டதாரி பயிலுனர்களுக்காக ஐந்து விஞ்ஞானங்களில் பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றன.

*மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்களில் இளமாணிப் பட்டம்*

நான்கு (04) வருட கல்வியாண்டை உள்ளடக்கிய மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞாள கௌரவ இளமாணிப் பட்டத்திற்கானபாடநெறியாக வடிவமைக்கப்பட்டுள்ளது, மருத்துவ ஆய்வுகூட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் முன்பதிவு பாடநெறியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப் படிப்பின் நோக்கம் பொதுமக்களுக்கு நவீன மருத்துவ ஆய்வுகூட சேவையினை வழங்கும் வகையில் மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் தொடர்டான சிறந்த அறிவினை வழங்குவதுடன் ஆய்வுகூட முடிவுகளுக்கு விளக்கம் அளித்தல் தவறுகளின் மூலங்களை விளங்கிக் கொள்ளல் மற்றும் பிரச்சினைகளை தீர்த்தல் என்பவற்றுக்கான ஆற்றலினையும் விருத்தி செய்வதாகவும் அமைகின்றது.

*தாதி சேவைக்கான விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டம்*

நான்கு (04) வருட கல்வியாண்டை உள்ளடக்கிய தாதி சேவைக்கான விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டமானது முன்பதிவு பாடநெறியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாடநெறியானது பொதுநிலை தாதி குடும்பநல தாதி, சிறுவர் பராமரிப்பு தாதி, சமூக சுகாதார தாதி போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளுக்கு உயர் தரத்தில் திறன் வாய்ந்ததும் பாதுகாப்பானதுமான தாதிச் சேவையினை வழங்கும் தாதிமார்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது தாதி பயிலுனர்களுக்கு விஞ்ஞானம் மற்றும் மனிதாபிமான அடிப்படை அறிவினை. வழங்குவதாகவும் தாதி சேவைக்கு அவசியமான பாதுகாப்பு பராமரிப்பு, குணப்படுத்தல் புனர்வாழ்வு அளித்தல் மற்றும் சுகாதார மேம்பாடு என்பவற்றுக்கு மாணவர்களின் தி-றனை தொடர்புபடுத்துகின்றது. அத்தோடு இப்பாடநெறியானது தாய்மை பருவ பெண்கள் உள்ளடங்கலாக வாழ்நாள் முழுவதும் தீராத நோயினாலும் தீவிரமான நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு தேவையான சேவையி-னை வழங்கல் என்பனவற்றுக்கு மாணவர்களை பயிற்றுவிப்பதாகவும் அமைகின்றது. இப்படப்படிப்பிற்கான பாடத்திட்டம் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொண்டுள்ள பாடத்திட்டத்திற்கமைய வடிவமைக்கட்பட்டுள்ளது. மேலும் இப்பாடத்திட்டமானது தாதிச்சேவை ஆய்வுகளுக்கான எண்ணகருவினை அறிமுகப்படுத்தல் மற்றும் ஆரம்பநிலைகளில் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விமர்சன ரீதியானதும் பிரதிபலிப்பு மிக்கதுமான சிந்தனை, பிரச்சினைகளை தீர்த்தல், பட்டதாரி பயிலுனர்களின் சமூகதிறன், தொழில்நிலை திறன் மேம்பாடு, விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நியதிகள் தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றினை முக்கியப்படுத்தல் என்பனவும் இப்பாடத்திட்டத்தில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இப்பாடத்திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட வைத்தியசாலைகள் மற்றும் சமூக அமைப்புக்கள் போன்ற சிகிச்சை நிலையங்களில் பயிற்சியுடனான கற்கை வழங்கப்படும். இப்பாடத்திட்டத்தின் பிரதான நோக்கம் கோட்பாடுகள் மற்றும் பயிற்சிநெறி ஆகிய இரண்டும் கலந்த பாடத்திட்டங்களினூடாக மாணவர்களை தொடர்புபடுத்தி கருணைக் குணம், பராமரிப்புத் திறன் மற்றும் தீவிர விழிப்புணர்வுமிக்க தாதி பயிற்சியாளர்களை உருவாக்குவதாகும்.

*இயன் மருத்துவத்தில் விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டம்*

நான்கு (04) வருட கல்வியாண்டை உள்ளடக்கிய இயன்மருத்தவத்தில் விஞ்ஞான கௌரவ இளமாணிப்பட்டமானது முன்பதிவு பாடநெறியாக அமைகின்றது. இப்பாடத்திட்டமானது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்வகைப்பட்ட அமைப்புகளில் உயர் தரம் மிக்க இயன்மருத்துவம் மற்றும் புனர்வாழ்வு என்பவற்றினை வழங்கும் தகுதிவாய்ந்த இயன்மருத்துவர்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாடத்திட்டமானது மாணவர்களை தற்போதைய எண்ணக்கருக்கள் மற்றும் இணைந்த சுகாதரா கற்கை துறையில் துரிதமாக வளரச்சியடையும் உயர்நிலை பிரிவுகள் என்பவற்றில் தகுதி வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பயிற்சியினைபெறும் பட்டதாரிகள் இயன்மருத்துவத்தினை திட்டமிடல் மதிப்பிடல் விருத்தி செய்தல் என்பனவற்றுக்கும் அவசியமானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் மற்றும் மதிப்பிடல் என்பனவற்றுக்கு தகுதியுடையவர்களாக காணப்படுவர். இப்பட்டப்படிப்பானது பட்டதாரிகளின் பாதுகாப்பான சிகிச்சை பயிற்சிகைளை உறுதி செய்வதாகவும் பட்டதாரிகளுக்கு உடற்பயிற்சியியல் தொடர்பான பட்டபின்படிப்பு பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்பினை வழங்குவதாகவும் அமைகின்றது.

*மருந்தகவியலில் விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டம்*

இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் நான்கு (04) வருட கல்வியாண்டை உள்ளடக்கிய மருந்தகவியலில் விஞ்ஞான கெ-ளரவ இளமாணிப்பட்டத்திற்கு இட்டுச்செல்லும் முன்பதிவு பட்டப்படிப்பு பாடநெறியாகும். மருந்தகவியல் சுகாதார கல்வியின் ஒரு பிரிவாகும். இது மருத்துவப் பொருட்களின் தயாரிப்புக்கு தேவையான மூலப்பொருட்கள் தொடக்கம் மருந்துகளை உபயோகித்ததன் பின்னர் நோயாளர்களின் உடல் நலத்தில் ஏற்படும் முன்னேற்றம் என்பனவற்றை கண்காணித்தல் வரை விரிவடைந்து செல்கின்றது. இப்பாடநெறி மருந்தகவியலுடன் தொடர்புடைய பின்வரும் விடயப் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. தயாரிப்பு, தரம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, ஒழுங்குமுறை விவகாரம், ஆரோக்கியம் மற்றும் சிகிச்சை, மருந்தகம், சட்ட அமுலாக்கம் மற்றும் சட்ட நடைமுறை, கல்வி பரம்பல், சந்தைப்படுத்தல், முன்னேற்றல், ஆவணப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், சமூக சேவை தொடர்பான தகவல்களையும் பராமரிப்பு அறிவினையும் வழங்கல். இந்நான்கு வருட பாடத்திட்டமானது மருந்தக பயிற்சி தொடர்பான விஞ்ஞான மற்றும் சேவை நோக்கு அடிப்படையிலான ஆதாரத்தினை வழங்குகின்றன. மேலும்இப்பாடநெறியானது பட்டதாரிகளை தொழில் ரீதியாக தகுதி வாய்ந்த சுயாதீனமான மருந்தகவியலாளர்களாக தம்மை விருத்தி செய்வதற்கான தன்னம்பிக்கையினை வளர்த்துக் கொள்ளும் வகையில் தயார்படுத்துவதுடன் ஏனைய சுகாதாரநலப்பிரிவுகளுடன் இணைந்து செயற்படும் ஆற்றலையும் வளர்க்கும் வகையில் உள்ளது. மேலும் இப்பாடத்திட்டம் மாணவர்களை சுய கற்கை மூலம் தமது அறிவினை விருத்தி செய்வதற்கு தயார்படுத்துவதுடன் புதிய அணுகுமுறைகளை பெறுவதற்கான நுண்ணறிவை பெறுவதையும் ஊக்குவிக்கின்றது. மேலும் இப்பாடத்திட்டம் பகுப்பாய்வு திறனை உயர்ந்த மட்டத்தில் விருத்தி செய்த பட்டதாரிகளை உருவாக்குவதையும் மருத்துவ துறையில் தேவையான தலைமைத்துவத்தினை விருத்தி செய்வதனையும் நோக்காக கொண்டுள்ளது. இப்பாடத்திட்டத்தின் முக்கியத்துவம் பட்டதாரி பயிலுனர்களுக்கு தர்க்கரீதியானதும், பிரதிபலிப்பு மிக்கதுமான சிந்தனை, பிரச்சினைகளை தீர்த்தல் சமூகத்திறன் என்பவற்றுடன் தொழில்திறன் விழுமியங்கள் மற்றும் ஒழுக்கவியல் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் என்பவற்றினை விருத்தி செய்வதாக அமைகின்றது.

*ஊடுகதிர்படமெடுப்பில்/ ஊடுகதிர் மருத்துவத்தில் விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டம்*

இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஊடுகதிர் படமெடுப்பில் / ஊடுகதிர் மருத்துவ பாடநெறியானது 4 வருட கல்வியாண்டை உள்ளடக்கிய 120 திறமைபட பெறுமானங்களைக் கொண்ட முன்பதிவு பட்டப்படிப்பாகும். ஊடுகதிர்படமெடுப்பாளர்கள் மருத்துவ சூழலில் ஊடுகதிரியக்கத்தினை எண்ணக்கரு மற்றும் சிகிச்சை அடிப்படையில் உபயோகிப்பவர்களாக உள்ளனர். இத்துறையானது சிறந்த தரத்துடன் கூடிய தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ஒழுக்க நெறிகளுக்கான தரத்தினை உயர்த்துவதுடன் இதன் பிரதிபலிப்புத் தன்மையுடைய உயர் மட்டத்திலான தொழில் நிலையினை வழங்குவதாகவும் அமைகின்றது. ஊடுகதிரப்படமெடுப்பாளர் தொழிலானது மருத்துவ விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோகங்களை பயன்படுத்துவதில் ஆர்வமுடையவர்களுக்கு பொருத்தமானதாக உள்ளது.

**கலைப் பீடம்**

***கலைப் பீடத்தினால் வழங்கப்படும் பட்டதாரி மாணவர்களுக்கான பாடநெறிகள்:*** கலைப்பீடமானது மாணவர்களுக்கு பரந்த அடிப்படையிலான பட்டதாரி பயிலுனர் கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது. பீடத்தினால் வழங்கப்பட்டு வரும் பட்டப்படிப்புகள் பின்வருமாறு:

- கலை இளமாணி பொது பட்டம்
- கலை இளமாணி கௌரவப் பட்டம்
- சட்ட இளமாணி பட்டம்

இப்பட்டப்படிப்புகளானவை பருவ அடிப்படையில் கற்பிக்கப்படுவதுடன், மாணவர்களை தொடர்ச்சியான மதிப்பீடுகளுக்கும் உட்படுத்துகின்றது. பருவம் ஒன்றில் ஒவ்வொரு பாடநெறியும் 15 கிழமைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் 45 மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் கற்பிக்கப்படும். பருவ இறுதியில் மாணவர்களின் திறன் பரீட்சை மூலமாக மதிப்பிடப்படும். பொதுக் கலை இளமாணி பட்டப்படிப்பு மூன்று வருட (ஆறு பருவ காலம்) கல்வி ஆண்டுகளுக்குரியதாகவும், சமூகப்பணி கௌரவ இளமாணிப் பட்டம் என்பன நான்கு வருட (எட்டு பருவ காலம்) கல்வி ஆண்டுகளுக்குரியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

***சட்ட இளமாணிப்பட்டம்***

**தெரிவு செய்யப்படும் முறை:** பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் பகுதி 2.2.8.10 குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு இணங்க.
**பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுடைய சுருக்க விளக்கம்:** இது பேராதனை பல்கலைக்கழக, கலைப்பீடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பாடநெறி அலகு முறைமையின் பிரகாரம் விருத்திசெய்யப்பட்ட சட்டத்தில் நான்கு வருட விசேட பட்டத் திட்டமாகும். கற்கைத் திட்டத்தின் முதலாவது ஆண்டில், சட்டத்தின் ஆதாரங்களிலும், தெரிவுசெய்யப்பட்ட சமூக விஞ்ஞான பாடநெறிகளில் மாணவர்கள் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய பூரண அறிவைப் பெறுவர். இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்களில், அரசியலமைப்புச் சட்டம், குடும்பச் சட்டமுறை, குற்றவியல் சட்ட, ஒப்பந்தச் சட்டம், ஆதனச் சட்டம் ஆகியன உட்பட சட்டத்தின் சகல பிரத்தியேகமான துறைகள் உள்ளடக்கப்படும். மூன்றாவது ஆண்டில் இருந்து, கூட்டுச் சட்டம், மனித உரிமைகள், மற்றும் சூழல் சட்டம், சர்வதேசச் சட்டம், குற்றவியல் சட்டம் அல்லது மாற்றுப் பிணக்கு இணக்கம் ஆகியவற்றில் சிறப்பினைப் பெற முடியும்.

***புவியியல் தகவல் விஞ்ஞானத்திற்கான விஞ்ஞானமாணி கௌரவப்பட்டம்***

**தெரிவு செய்யப்படும் முறை:** பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் பகுதி 2.2.8.33 குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு இணங்க.
**பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுடைய சுருக்க விளக்கம்:** இக் நெறியானது நான்கு வருட கௌரவப்பட்ட படிப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பருவ முறைமையின் அடிப்படையாக கொண்டு பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறையினால் பாடங்கள் நடத்தப்படும். கொள்கையை வகுப்பாளர்கள் மற்றும் திட்டமிடலாளரிகளுக்கு வெளி ரீதியான பகுப்பாய்வு சார்ந்த உதவிகளை வழங்கும் வகையில் திறமை கொண்ட பட்டதாரிகளை உருவாக்க உதவுவதே இப்பட்ட படிப்பின் நோக்கமாகும். இப்பட்ட படிப்பின் உள்ளடக்கமானது தற்போது நடைமுறையில் உள்ள புவியியல் சிறப்பு பட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாட விடயங்கள் மற்றும் கலைப் பீட அடிப்படை பாட விடயங்கள் ஆகியவற்றுடன் புவியியல் தகவல் விஞ்ஞானத்தின் புதிய பாட விடயங்களின் தொகுதியையும் கொண்டமைக்கப்பட்டுள்ளது. வகுப்பறை ஆய்வுகூட மற்றும் வெளிக்கள கற்பித்தல் முறைகளை கொண்டதாக மாணவர்களின் திறன்களை மேன்படுத்தும் நோக்குடன் அனேக பாடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இறுதி வருடத்தில் மாணவர்கள் ஆய்வு கட்டுரை மற்றும் துறை சார் பயிற்சிகள் மூலம் ஆய்வு சார் மற்றும் தொழில் சார் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

***சமூகப்பணி இளமாணிக் கௌரவக் கற்கைநெறி***

**தெரிவு செய்யப்படும் முறை:** பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் பகுதி 2.2.1.2 குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு இணங்க.
**பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுடைய சுருக்க விளக்கம்:** சமூகவியல் துறையினால் வழங்கப்படும் சமூகப்பணி இளமாணிச் கௌரவக் கற்கையானது நான்கு வருடங்களைக் கொண்ட ஒரு கற்கைநெறியாகும். இவ் கற்கைநெறியின் நோக்கமானது தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான பல்வேறு அமைப்புகளில் சமூகப்பணியில் ஈடுபடுவதற்கான பொதுவான பயிற்சியினை சமூகப்பணிவல்லுனர்களுக்கு வழங்குவதாகும். இது சமூகவியல், உளவியல், பொருளியல், பொதுசுகாதாரம் மற்றும் சமூக மருத்துவம் ஆகிய துறைகளின் பங்களிப்புடன் ஒரு பல்துறை மாதிரி அமைப்பபைக் கொண்ட கற்கைநெறியாக எட்டு பருவங்களில் வழங்கப்படுகிறது. களப்பணியானது இக் கற்கைநெறியின் முக்கியமான ஒரு கூறாகக்காணப்படுவதுடன் இது பொது, தனியார் அல்லது அரசு சாரா நிறுவனத்தில் அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் இரண்டு பருவங்களில் முழுநேரப் பயிற்சியாக மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இக் கற்கைநெறியானது மாணவர்கள் உயர்தரமான தொழில்முறைசார் சமூகப் பணிக் கல்வியின் தரத்திற்கு ஏற்ப வழங்கத் தயார்படுத்துகின்றது.

***முகாமைத்துவ பீடம்***

முகாமைத்துவ பீடமானது ஐந்து துறைகளுடன் இளமாணிப் பட்டப் படிப்பில் கௌரவப் பட்டங்களை வழங்குவதற்காகப் பின்வரும் கல்விசார் பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களைக் கொண்டுள்ளது. இந்த எல்லாப் பட்டப் படிப்புப் பாடநெறிகளும் பருவங்களை அடிப்படையாகக் கொண்ட கற்கை அலகு முறைமை மற்றும் ஒவ்வொரு பருவமும் 15 கல்விசார் வாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பட்டப் படிப்புக்குமான பாட நிறையானது 120 நிறை கொண்ட சித்திகளைக் கொண்டிருப்பதுடன் எட்டுப் பருவ காலங்களை அல்லது நான்கு வருடங்களைக் கொண்டதாகும்.

***வியாபார நிர்வாக இளமாணி (கௌரவ) பட்டப் படிப்பிற்கான (BBA) பாடநெறி***

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் வணிகப் பிரிவில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் ஆங்கில மொழி மூலமான இந்த நான்காண்டுச் கௌரவப்பட்டப் படிப்பிற்கு அனுமதிக்கப்படுவர். இந்த BBA பட்டப் படிப்பில் கலந்துகொள்ளும் மாணவர்கள் முதல் இரண்டு ஆண்டுகளில் பொதுவான கல்விசார் பாடநெறிகளிலும் அடுத்து வரும் இரண்டு வருடகாலப் பகுதியில் பின்வரும் குறிப்பிடப்பட்ட துறைகளில் சிறப்பு துறையினையும் தெரிவுசெய்ய முடியும்.

- கணக்கீடும் நிதியியலும்
- மனிதவள முகாமைத்துவம்
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
- செயற்பாட்டு முகாமைத்துவம்
- நிறுவன முகாமைத்துவம்

***வணிக இளமாணி (கௌரவ) பட்டப் படிப்பிற்கான (B.Com) பாடநெறி***

இந்தக் கூட்டுப் பட்டப் படிப்பிற்கான பாடநெறியானது கலைப் பீடத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றது. முதலாம் ஆண்டில் வழங்கப்பட்ட முகாமைத்துவக் கற்கை நெறிகளின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு கலைப் பீடத்தில் அனுமதி பெற்ற மாணவர்கள் B.Com பட்டப்படிப்பிற்கான பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். B.Com பட்டப்படிப்பினைத் தெரிவுசெய்யும் மாணவர்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமாக இதனைத் தெரிவுசெய்து பின்பற்றலாம். ( B.Com பட்டப்படிப்பினைத் தொடர விரும்புபவர்கள் கட்டாயமாகக் கலைப் பீடத்திற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்)

***பல் மருத்துவ விஞ்ஞான பீடம்***

பல்மருத்துவ விஞ்ஞான பீடம், பட்டதாரி பயிலுனர்களுக்கு பல் மருத்துவ சத்திரசிகிச்சை இளமாணி பட்டத்திற்கான பாடநெறிகளை வழங்குகின்றது. இப்பாடத்திட்டத்திற்கான கால வரையறை ஐந்து கல்வி ஆண்டுகளாகும். இப்பாடநெறிக்கான போதனைகள் ஆங்கில மொழி மூலமே வழங்கப்படும்.

**பொறியியல் பீடம்**

பொறியியல் பீடமானது பொறியியல் விஞ்ஞானமாணி கௌரவ (BScEngHons) பட்டத்திற்கான ஒரு முழு நேர இளமானிப் பட்டப் பாடத்திட்டத்தினை வழங்குகிறது. இவ் இளமானிப் பட்டப் பாடத்திட்டம் நான்கு ஆண்டுகளைக் கொண்டது. இப்பீடமானது 15 வார காலப்பகுதியை ஒரு தவணையாகக் கொண்ட பாடநெறி அலகு முறையைக் கொண்டுள்ளது. பாடநெறி வேலையும் (ஆய்வுகூடவேலை, வடிவமைப்பு, வெளிவேலை) தொழிற்துறை பயிற்சியும், இளமானிப்பட்டப் மாணவர் பயிற்சி நெறியின் ஒருங்கினைந்த பகுதிகளாக அமைந்துள்ளன. இப்பட்டமானது வொஷிங்டன் ஒப்பந்தத்தின் (Washington Accord) கீழான இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தால் (IESL) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொறியியல் விஞ்ஞானமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குள் பிரவேசிக்கின்ற எல்லா மாணவர்களும் முதலாம் வருட காலத்தில் பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டத்தினைப் (General Program in Engineering - GPE) பயில வேண்டும். பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டத்தைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்பவர்கள் சிறப்புப் பொறியியற் பாடத்திட்டத்திற்குள் (Specialized Program in Engineering - SPE) அனுமதிக்கப்படுவார்கள். சிறப்பு பொறியியற் பாடத்திட்டத்தின் போது மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறப்புப் பட்டத்திற்கான ஆறு துறைகளில் ஏதாவது ஒன்றிற்கு அனுமதி பெறுவர். இவ் அனுமதியானது மாணவர்களின் தெரிவு மற்றும் பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டத்தில் அவர்களின் செயல்திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. பின்வரும் சிறப்பு பெறுவதற்கான துறைகள் பொறியியலில் உள்ளன.

i.இரசாயன மற்றும் செயல்முறைப் பொறியியல
ii.குடிசார் பொறியியல்
iii.கணனிப் பொறியியல்
iv.மின் மற்றும் இலத்திரன் பொறியியல்
v.உற்பத்தி மற்றும் தொழிற்துறைப் பொறியியல்
vi.இயந்திரப் பொறியியல்

பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான கட்டாய பாடநெறிகளை உள்ளடக்கியுள்ளது. சிறப்பு பொறியியற் பாடத்திட்டம் மூலாதாரப் பாடநெறிகள், தொழில்நுட்பத் தெரிவுப் பாடநெறிகள் மற்றும் பொதுத் தெரிவுப் பாடநெறிகள் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலாதாரப் பாடநெறிகள் சிறப்பு துறைகளில் உள்ள மாணவர்களுக்குக் கட்டாயமானதாகும். தொழில்நுட்பத் தெரிவுப் பாடநெறிகள், மூலாதாரப் பாடநெறியுடன் தொடர்புபட்ட அல்லது மூலாதாரப் பாடநெறிகளின் அறிவை வளப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட பாடநெறி தொடர்பான ஆழமான அறிவினைத் தரும். பொதுத் தெரிவு பாடநெறிகள் ஆனவை தொழில்நுட்பமல்லாத பாடநெறிகளாகும். இப்பாடநெறியலகுகள் ஒரு மாணவனை முழுமையான தொழில் வல்லுனராகவும் பொறுப்புள்ள ஒரு குடிமகனாகவும் அவரது பங்கினை ஆற்றுவதற்கும் பரந்த முன்னோக்கு அறிவினைத் தருகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமானது தற்போது இளமானி பட்டப்படிப்பு பாடத்திட்டத்தை புதுப்பித்து மீளகட்டமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. திருத்தப்பட்ட பாடத்திட்டம் 2022∴2023 கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படும். முன்மொழியப்பட்ட பாடத்திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று, இளமானி மாணவர்களை இரண்டாம் தவணை முதல் அவர்களின் சிறப்பு பொறியியல் துறைகளுக்கு ஒதுக்குவதாகும்.

**மருத்துவ பீடம்**

**பட்டப் பயிலுனர் திட்டம்**

மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணிப் பட்டத்திற்கு (MBBS) இட்டுச் செல்லும் மருத்துவ நெறியொன்றை பீடம் வழங்குகின்றது.

இப்பட்டப்படிப்பு பாடநெறிக்கான கால எல்லை 14 பருவங்களைக் கொண்ட 5 கல்வி ஆண்டுகளாகும். 2004ஆம் ஆண்டுக்கு முந்திய பாடத்திட்டமானது திருத்தத்திற்குட்பட்டு 2005ஆம் ஆண்டு ஒவ்வொரு பருவத்திற்கும் மாதிரி அடிப்படையிலான 5 பாடநெறிகள் வழங்கப்படும். பல்கலைக்கழகத்தின் பாடநெறிகளானவை 2003ஆம் ஆண்டு, நவீன உலகின் தேவைகள் மற்றும் கேள்விக்கமைய, மருத்துவ கல்விக்கான உலக தாபனத்தின் (WFME) பரிந்துரைகளுக்கு இணைவாக பாட திட்டத்தினை மாற்றியமைத்தது. இப்புதிய பாடத்திட்டமானது முதன் முதலில் 2004/2005ஆம் கல்வி ஆண்டுகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு 2005ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பாரம்பரிய பாடத்திட்டத்திற்கு மாறாக இப்புதிய பாடத்திட்டமானது, பிரதானமாக முன் மருத்துவ பயிற்சிகள், சுய கற்றல், தொழில்சார் அபிவிருத்தி மற்றும் சமூகத்தை மையப்படுத்திய கற்றல் என்பனவற்றை நோக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பாடத்திட்டமானது பின்வரும் 5 துறைகளுக்கு (முதல் 8 பருவங்களின் போது) அமைய வடிவமைக்கப்பட்டுள்ளது.

- SBM - மருத்துவத்திற்கான அடிப்படை விஞ்ஞானம் - மருத்துவ ஆய்வுகூட முகாமைத்துவ திறனை அடிப்படையாகக் கொண்ட அறிவு வழங்கப்படும்.
- CLM - மருத்துவ ஆய்வுகூட முகாமைத்துவம் - மருத்துவம், ஆய்வுகூடம் மற்றும் நோயாளர் பராமரிப்புத்திறன்
- CLR - தகவல் தொடர்பாடல், கற்றல் மற்றும் ஆய்வு - தகவல் தொடர்பாடல் திறனை விருத்தி செய்தல், ஆங்கில மொழித்திறன், இணையத்தளம் மூலமான கற்றல் மற்றும் ஆய்வுத்திறன்
- DIS - சமூகத்தில் வைத்தியர் - சமூகத்தில் குடிசன பிரச்சினைகள், சட்டரீதியான மருத்துவப் பரிசோதனைகள் என்பனவற்றில் வைத்தியர்களின் பங்களிப்பை வலுவூட்டல்
- HCT - ஆஸ்பத்திரி சனசமூக அடிப்படையிலான பயிற்சி

### விஞ்ஞான பீடம்

தாவரவியல், இரசாயனவியல், புவிசரிதவியல், கணிதவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரகத் தொழில்நுட்பம், பௌதீகவியல், புள்ளிவிபரங்கள் மற்றும் கணனி விஞ்ஞானம் மற்றும் விலங்கியல் ஆகிய எட்டு நூற்கல்வி பிரிவுகளையும், விஞ்ஞான கல்வி அலகு மற்றும் ஆங்கில மொழி கல்வி கற்பித்தல் அலகு ஆகிய இரு அலகுகளையும் பீடம் கொண்டுள்ளது. பீடத்தினால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகூட, கணனி மற்றும் நூலக வசதிகளுடன் பட்டப் பயிலுனர்களுக்கு சிறந்ததொரு கற்கைச் சூழலை பீடம் வழங்குகின்றது.

| பட்ட நிகழ்ச்சித் திட்டம் | காலம் | விவரணம் |
|---|---|---|
| விஞ்ஞானத்தில் பீ.எஸ்சி. பொதுப் பட்டம் | 3 வருடங்கள் | உயிரியல் மற்றும் பௌதீகவியல் விஞ்ஞான பிரிவுகளில் நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படும். |
| பீ.எஸ்சி. உயிரியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. தாவரவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. இரசாயனவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. புவிசரிதவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. கணிதவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரக தொழில்நுட்பவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. பௌதீகவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. புள்ளிவிபரவியலில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. கணனி விஞ்ஞானத்தில் கௌரவப் பட்டம்<br>பீ.எஸ்சி. விலங்கியலில் கௌரவப் பட்டம் | 4 வருடங்கள் | ஒரு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் மூன்றாம் வருடத்தின் ஆரம்பத்தில் 100 மற்றும் 200 மட்டங்களில் அவர்களது பெறுபேற்றினை கரிசனைக்கு எடுத்து போட்டிக்குரிய அடிப்படையொன்றில் அனுமதிக்கப்படுகின்றார்கள். சிறப்புப் பெறுகின்ற பாடத்தில் நெறி அலகுகளையும் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவினால் சிபார்சு செய்யப்படும் ஏனைய நெறி அலகுகளையும் மாணவர்கள் எடுக்க முடியும் என்பதுடன், இறுதியாண்டில் ஆராய்ச்சிக் கருத்திட்டமொன்றையும் நடத்த வேண்டும். |
| பீ.எஸ்சி. பிரயோக விஞ்ஞானங்களில் கௌரவப் பட்டம் | 4 வருடங்கள் | பொது விஞ்ஞான இளமாணி பட்டத்தினை சிறப்பாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கு நான்காம் வருடத்தினை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இப்பாடநெறி பொது விஞ்ஞான இளமாணி பட்டத்திற்கான தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மட்டுமே. இப்பாடநெறி 16 கிழமைகளுக்கு கைத்தொழில் இணைப்புடன் கைத்தொழில் தொடர்புடைய பாடநெறிகளை வழங்குவதாக அமைகின்றது. |
| பீ.எஸ்சி புள்ளிவிபரவியலும், தொழிற்பாட்டு ஆராய்ச்சியும் கௌரவப்பட்டம் | 4 வருடங்கள் | |

பீடத்தின் கற்கைநெறிகள், பாடப்பிரிவுக்கமைய ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் 2 பருவங்கள் என்ற அடிப்படையில் 100, 200, 300, 400 ஆகிய மட்டங்களில் பாடங்களை வழங்குகின்றது. பாடங்கள் ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்படும். உயர்நெகிழ்வுத்தன்மையினை வழங்கும் வகையில் பல்வேறுபட்ட பாடங்கள் மாணவர்களின் தெரிவுக்காக வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் குறிப்பிட்ட சில பாடங்களுக்கான அனுமதி மிகவும் போட்டித்தன்மையினைக் கொண்டிருக்கும்.

### மிருக வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம்

மிருக வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம் மிருக வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம் மட்டுமே கால்நடை அறிவியல் இளமானி (BVSc) பட்டத்திற்கு வழிவகுக்கும் இளமானீ பயிற்சியை வழங்கும் ஒரே நிறுவனம் ஆகும். ஆங்கில மொழியில் வழங்கப்படும் இந்த பட்டப்படிப்பு, ஐந்து கல்வி ஆண்டுகள் (10 செமஸ்டர்கள்) வரை நீட்டிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் ஐந்து கல்வித் துறைகளால்( Departments )நிர்வகிக்கப்படுகிறது (அடிப்படை கால்நடை அறிவியல் துறைகள், கால்நடை நோய்க்குறியியல், கால்நடை பொது சுகாதாரம் மற்றும் மருந்தியல், கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பண்ணை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம்). 2020 இல் செயல்படுத்தப்பட்ட ஐந்தாண்டு பாடத்திட்டமானது பாட அலகு முறையை அடிப்படையாக கொண்டது் எனவே, மாணவர்கள் பட்டப்படிப்பு நேரத்தில் ஒட்டுமொத்த GPA பெறுவார்கள், ஐந்தாம் ஆண்டு விரிவுரை இல்லாத மருத்துவப் பயிற்சிக்கு மட்டும் அர்ப்பணிக்கப்படும் அதே வேளையில் நான்காம் ஆண்டு இறுதிக்குள் அனைத்து உபதேச போதனைகளும் முடிக்கப்படும். ஐந்தாவது ஆண்டில், மாணவர்கள் இரண்டு கால்நடை போதனா மருத்துவமனைகள் ஜசெல்லப்பிராணி, காட்டு மற்றும் மிருகக்காட்சிசாலை விலங்குகள் (VTH- CWZA) மற்றும் பண்ணை விலங்குகள் (VTH - FA)], கால்நடை கற்பித்தல் பண்ணை (VTF) அல்லது அரசு அல்லது தனியார்- சொந்தமான புறம்பான இடங்கள்.ீ இரண்டு கட்டாயப் பட்டியல்கள் (வணிகக் கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகள்) மற்றும் இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல்களுடன் எட்டு வார வெளிப்படை பயிர்சிஸ. BVSC பட்டம் பெற்றவுடன், பட்டதாரிகள் இலங்கை கால்நடை மருத்துவ சபையில் (VCSL) கால்நடை மருத்துவராக பதிவு செய்வதற்கு முன் ஆறு மாத பயிற்சியை (கால்நடை சுகாதாரம் மற்றும் உற்பத்திக்கு பொறுப்பான அரசாங்க அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படுகிறது ) மேற்கொள்ள வேண்டும்.

## ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கலை | - | S |
| ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் (TESL) | - | E |
| கலை - தகவல் தொழில்நுட்பம் | - | E |
| உயிரியல் விஞ்ஞானம் | | E |
| பௌதீக விஞ்ஞானம் | | E |
| உணவு விஞ். தொழில்நுட்பமும் | - | E |
| பௌதிக விஞ்ஞானம் (ICT) | - | E |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | - | E |
| பொலிமர் -விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை முகாமைத்துவம | - | E |
| முகாமைத்துவம் | - | S/E |
| முகாமைத்துவம் மற்றும் பொதுக்கொள்கை | - | S/E |
| வணிகவியல் | - | S/E |
| ஆதன முகாமைத்துவமும் மதிப்பீடும் | - | S/E |
| வியாபார தகவல் முறைமைகள் (கௌரவம்) (BIS) | - | S/E |
| மருத்துவம் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |
| பொறியியல் | - | E |
| தாதியியல் | - | E |
| மருந்தகவியல் | - | E |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | - | E |
| பார்வை அளவை | - | E |
| பல்அறுவைச்சிகிச்சை | - | E |
| நீருயிரின வளங்கள் | - | E |
| நகர்ப்புற உயிர்வளங்கள் | - | E |
| கணினி விஞ்ஞானம் | - | E |
| மென்பொருள் பொறியியல் | - | E |
| தகவல் முறைமைகள் | - | E |
| நிதிப் பொருளியல் | - | E |
| ஆக்கத்திறன் இசை தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித்திறன் | - | S/E |
| சங்கீதம் | - | S/E |
| சமூகப்பணி | - | E |

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்** (Faculty of Humanities & Social Science)

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் மூலம் இளங்கலை மாணவர்களுக்கு பல்வேறு பட்டப் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன. இந்த பீடம் சிங்களம் மற்ற ஆங்கிலம் ஆகிய இரு மொழி மூலம் பட்டப் பாடநெறிகளை அறிமுகப்படுத்துகின்ற விரிவுரைகள் மற்றும் மதிப்பீடுகள் ஒரு கலவை முறையில் (நேருக்கு நேர் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் மூலம்) நடத்தப்படுகின்றன.மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் அரை இறுதி அடிப்படையில் கற்பித்த தொடர்ச்சி மதிப்பீடுகள் மற்றும் இறுதி மதிப்பீடுகள் நடத்துகின்றது. ஒவ்வொரு பட்டப் பாடநெறியிலும் ஓர் அரை இறுதியுக்குள் 45 கற்கை மணிநேரங்க உள்ள 15 வாரங்கள் அடங்குகின்றன. அந்த 15 வாரங்களிலும் கற்பித்தல் மற்ற தேர்வு நடவடிக்கைகள் நடைபெறும்.

பீடத்தின் மூலம் பின்வரும் பட்டப் பாடநெறிகள் வழங்கப்படுகினறன.
(1) கலைமாணிப் பட்டம் (SLQF 5)
(2) கலைமாணிச் கௌரவ பட்டம் (SLOF 6)
(3) விஞ்ஞானச் கௌரவ பட்டம் (SLOF 6)
(4) சமூகப் பணி கௌரவ பட்டம் (SLQF 6)

கலைமாணிப் பட்டம் பாடநெறிக்கான கால அவகாசம் மூன்று (03) வருடங்களாகும். கலைமாணி கௌரவ பட்டப் பாடநெறிக்கான கால அவகாசம் நான்கு (04) வருடங்களாகும்.

பீடம் மூலம் மானிடவியல், தொல்பொருளியல், பௌத்த நாகரிகம், வணிகப்புள்ளிவிபரவியல். பௌத்த மரபுரிமைகள் மற்றும் சுற்றுலாத் துறை, சீனம், குற்றவியல் மற்றும் குற்ற நீதி, நடனம் மற்றும் பண்பாடு கற்கைகள், பொருளியல்,ஆங்கிலம் ப்(கு)ரெஞ், புவியியல், புவிசார் தொழில்நுட்பம், ஹிந்தி, வரலாறு, தகவல் தொழில்நுட்பம், ஜப்பான், வெகுஜனதொடர்பியல், மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம், பாளி, தத்துவவியல், உளவியல், அரசியல் விஞ்ஞானம், சமஸ்கிருதம்,சிங்களம், சமூகவியல், சமூகப் பணி மற்றும் சமூக புள்ளிவிபரவியல் ஆகிய பாடங்களுக்கு கலைமாணி பொதுப்பட்டப்பாடநெறி வழங்கப்படுகிறது.

பீடம் மூலம் மானிடவியல், தொல்பொருளியல், பௌத்த நாகரிகம், வணிகப்புள்ளிவிபரவியல். பௌத்த மரபுரிமைகள் மற்றும் சுற்றுலாத் துறை, சீனம், குற்றவியல் மற்றும் குற்ற நீதி, நடனம் மற்றும் பண்பாடு கற்கைகள், பொருளியல்,ஆங்கிலம் ப்(கு)ரெஞ், புவியியல், புவிசார் தொழில்நுட்பம், ஹிந்தி, வரலாறு, தகவல் தொழில்நுட்பம், ஜப்பான், வெகுஜன தொடர்பியல், மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பம், பாளி, தத்துவவியல், உளவியல், அரசியல் விஞ்ஞானம், சமஸ்கிருதம், சிங்களம், சமூகவியல், சமூகப் பணி மற்றும் சமூக புள்ளிவிபரவியல் ஆகிய பாடங்களுக்கு கலைமாணி கௌரவப்பாடநெறி வழங்கப்படுகிறது.

மேலதிகமாக, பீடம் மூலம் ஒரு சிறப்பு அடிப்படையில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு பின்வரும் கலைமாணி கௌரவ பட்ட எண்ணிக்கையிலான பாடநெறி வழங்கப்படுகிறது.

படைப்பு இசை தொழில்நாட்பம் மற்றும் தயாரிப்பு - கலைமாணி கௌரவம்
பொருளியல் - கலைமாணி கௌரவம்
தகவல் தொழில்நுட்பம் - கலைமாணி கௌரவம்
இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் - கலைமாணி கௌரவம்

ஒவ்வொரு இளங்கலை மாணவரும் ஆங்கிலம். சமூகம் மற்றும் கலாச்சாரம், தகவல் தொழில்நுட்பம், அளவு பகுப்பாய்வு, நிறுவன விழிப்புணர்வு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு ஆகிய கட்டாய பாடநெறிகளை கற்க வேண்டும். இந்த எல்லா பாடநெறிகளும் இலங்கை கல்வித்தகைமை மட்ட நியமத்தின் பிரமாணங்கள் (SLQF) மற்றும் பாட அளவுகோல்களுக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## பிரயோக விஞ்ஞான பீடம் (Faculty of Applied Sciences)

பிரயோக விஞ்ஞான பீடத்தில் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்கான கற்பித்தல்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயேழு வழங்கப்படுகின்றன. அடிப்படை விஞ்ஞான பாடங்களான இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகியவை முதல் வருடத்தில் ஆங்கில மொழியில் வழங்கப்படுவதோடு தேவை ஏற்படின் சிங்கள மொழியில் விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இரண்டாம் வருடம் தொடக்கம் ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது.

அனைத்து மாணவர்களும் (Non Credit) ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மற்றும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் ஆகிய பாடங்களுக்கு மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேரடியாக தெரிவுசெய்யப்படுகின்றார்கள்.

எனினும் மேற்குறிப்பிட்ட ஏனைய பட்டப்படிப்புக்களை தெரிவுசெய்யும் மாணவர்கள் கட்டாயமாக மூன்று பாடங்களை உள்ளடக்கிய ஒரு பட்டப்படிப்பை தெரிவுசெய்யவேண்டியது கட்டாயமாகும்.

மாணவர்கள் பாடச்சேர்க்கையை தெரிவுசெய்யக்கூடிய வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இப் பாடச்சேர்க்கை பற்றிய தொகுப்பு பௌதிக விஞ்ஞானம் அல்லது உயிரியல் விஞ்ஞானம் ஆகிய தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பாடச்சேர்க்கைகள்**
**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**

| **குறியீட்டு இலக்கம்** | **விடயம்** | **மொழிமூலம்** |
|---|---|---|
| உ 01 | இரசாயனவியல், விலங்கியல், பௌதிகவியல் | E |
| உ 02 | இரசாயனவியல், விலங்கியல், தாவர உயிர் தொழில்நுட்பம் /தாவர உயிரியல்/ நுண் உயிரியல் | E |
| உ 03 | இரசாயனவியல், விலங்கியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல் | E |
| உ 04 | இரசாயனவியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், தாவர உயிர் தொழில்நுட்பம்/ தாவர உயிரியல் /நுண் உயிரியல் | E |
| உ 05 | இரசாயனவியல், விலங்கியல், நீர் வாழ் வளங்கள் முகாமைத்துவம் | E |
| உ 07 | இரசாயனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம், தாவர உயிர் தொழில்நுட்பம் /தாவர உயிரியல் /நுண் உயிரியல் | E |
| உ 08 | இரசாயனவியல், விலங்கியல், முகாமைத்துவ விஞ்ஞானம் | E |
| உ 09 | இரசாயனவியல், உணவியல், உயிரியல் | E |
| உ 12 | இரசாயனவியல், நீரியல் வள முகாமைத்துவம், முகாமைத்துவ விஞ்ஞானம் | E |
| உ 13 | இரசாயனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம், உயிரியல் | E |
| உ 14 | இரசாயனவியல், உயிரியல், மரபியல் மற்றும் நுண்உயிரியல் | E |

**பௌதிக விஞ்ஞானப் பிரிவு**

| **குறியீட்டு இலக்கம்** | **விடயம்** | **மொழிமூலம்** |
|---|---|---|
| பௌ 01 | கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல் | E |
| பௌ 02 | கணிதம், இரசாயனவியல், புள்ளிவிபரவியல் | E |
| பௌ 03 | கணிதம், பௌதிகவியல், புள்ளிவிபரவியல் | E |
| பௌ 04 | கணிதம், இரசாயனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம் | E |
| பௌ 05 | கணிதம், பௌதிகவியல், முகாமைத்துவ விஞ்ஞானம் | E |
| பௌ 06 | கணிதம், கணனி விஞ்ஞானம், புள்ளிவிபரவியல் | E |
| பௌ 07 | கணிதம், கணனி விஞ்ஞானம், பௌதிகவியல் | E |
| பௌ 08 | கணிதம், புள்ளிவிபரவியல், பொருளியல் | E |
| பௌ 12 | கணிதம், பிரயோக கணிதம், கணனி விஞ்ஞானம் | E |
| பௌ 13 | கணிதம், பௌதிகவியல், இலத்திரனியல் | E |
| பௌ 14 | கணிதம், பிரயோக கணிதம், முகாமைத்துவ விஞ்ஞானம் | E |

**பொதுப்பாடச்சேர்க்கைகள்**
**(உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதிக விஞ்ஞானப் பிரிவுகள்)**

| குறியீட்டு இலக்கம் | விடயம் | மொழிமூலம் |
|---|---|---|
| பொ 01 | இரசாயனவியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம் | E |
| பொ 02 | இரசாயனவியல், பௌதிகவியல், பொலிமர் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | E |

***பி.எஸ்.சீ பொது பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம்*** (90 Credits - SLQF Level 5)
BSc

மூன்று வருடங்களைக் கொண்ட இப் பட்டப்படிப்பானது சிறந்த முடிவுகளை எடுக்கும் திறன் தலைமைத்துவ ஆற்றல் ஆகியவற்றைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்க வடிவமைக்கப்பட்டதாகும். இப் பாடநெறியின் அனைத்து மாணவர்களும் முதல் இரு வருடங்களில் அவர்கள் தேர்ந்தெடுக்கும் விடயங்களுடன் தொடர்புபட்ட அடிப்படை அலகுகளை (Course Unit) கற்பது அத்தியவசியமாகும். தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் தொழில் தேவைகள் தொடர்பாக தகுந்த பலதரப்பட்ட விடயங்கள் மூன்றாவது வருடத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

***பி.எஸ்.சீ கௌரவ பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்*** (120 Credits - SLQF Level 6)
BSc Honours in Specializing Field, Example:BSc Honours in Chemistry

தேர்ந்தெடுக்கப்படும் விடயமொன்றிற்கு உரியதாக பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மற்றும் துறையியளாளர்கள் ஆகுவதற்கு எதிர்பார்க்கின்ற மாணவர்கள் தொடர்பாக நான்கு வருட கௌரவப் பட்டப் பாடநெறிகள் வழங்கப்படுகின்றன. இதன் போது முதல-ாவது இரு வருடங்களுள் உயர்மட்டத்திறமைகள் தோற்றுகின்ற மாணவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்குரிய கௌரவப் பட்டப்பாடநெறிகள் தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
அவ் விடயங்களானது, இரசாயனவியல், பல்லுருப்பு இரசாயன விஞ்ஞானம், கைத்தொழில் இரசாயனவியல், உயிரியல், நீர் வாழ் வளங்கள் முகாமைத்துவம், கணனியியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், கணிதம், பிரயோக கணிதம், தாவர உயிர் தொழில்நுட்பம், நுண் உயிரியல், புள்ளிவிபரவியல், பௌதிகவியல் மற்றும் விலங்கியலாகும்.
இதற்கு மேலதிகமாக உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்,விளையாட்டியல் மற்றும் முகாமைத்துவ பாடநெறியும் இதன் கீழ் எடுக்கப்படும்.

***விஸ்திரப்படுத்தப்பட்ட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம்*** (120 Credit - SLQF Level 6)
BSc Honours in Applied Sciences

இந்நான்கு வருட கௌரவ பட்டப்பாடநெறி, தொழில்சார்ந்த துறையில் (Industry) நுழைய விரும்பும் மாணவர்களுக்கென பிரத்தியமாக உருவாக்கப்பட்டதாகும்.

பொது பட்டப்படிப்பில் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டிய மாணவர்கள் நான்காம் வருடத்தில் இக் கௌரவ பட்டப்படிப்பில் நுழையலாம். நான்காம் வருட இரண்டவது இடை வருடம் இறுதியடைகின்ற போது கீழே குற்ப்பிட்டுள்ள விடயங்களுடன் தொடர்புபட்டதாக மற்றும் கட்டாயமான Inplant Trainning/Internship அல்லது ஆய்வுக் கருத்திட்டமென்றை புரணப்படுத்தல் வேண்டும்.
அவ்விடயங்கள்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்(ICT), பல்லுருப்பியல் மற்றும் தொழில்நுட்பம்(PST), முகாமைத்துவயியல், பொருளியல், உயிரியல், தாவர உயிரியல்(ீடீவு), கணிதம், புள்ளியியல், இரசாயனவியல், பௌதிகவியல், கணியியல்,சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், நீர் வாழ் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் விலங்கியலாகும்.

மேலதிக தகவல்களுக்கு இவ் இணையதளத்தினை பார்வையிடலாம்.
http://science.sjp.ac.lk/

***பி.எஸ்.சீ பௌதிகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்*** (PICT)
(90 Credits - SLQF Level 5)

பௌதீக விஞ்ஞானம் - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் வகைப்படுத்தலின் கீழ் க.பொ.த. (உ.த) கூட்டுக் கணிதம் மற்றும் பௌதீகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் (ICT), கற்ற மாணவர்களுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் மூன்றுவருட விஞ்ஞானமானி, பௌதீகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டத்திற்கு உட்படுத்தப்படும். இம் மாணவர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடய தேர்மானமொன்றை கற்றிட சந்தர்ப்பமளிக்கப்படும்.

இம் மாணவர்கள் பொது விடயப்பரப்பின் கீழ் கணிதம் மற்றும் பௌதிகவியல் கற்கின்றதால் திறன் அடிப்படையில் கணிதம மற்றும் பௌதிகவியல் விசேட பட்டம் கற்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

| குறியீட்டு இலக்கம் | விடயம் | மொழிமூலம் |
|---|---|---|
| ஐ01 | கணிதம், பௌதிகவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | நு |
| ஐ02 | கணிதம், பௌதிகவியல், இலத்திரனியல் | நு |

மேலதிக தகவல்களுக்கு Web: http://science.sjp.ac.lk.

## முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல்பீடம் (Faculty of Management Studies and Commerce)

- வியாபார நிருவாகம் - விஞ்ஞான சிறப்புமாணி
- முகாமைத்துவம் மற்றும் பொதுக்கொள்கை - விஞ்ஞான சிறப்புமாணி
- வணிக சிறப்புமாணி
- ஆதன முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு கௌரவ விஞ்ஞானமாணி
- கணக்கியல் விஞ்ஞான சிறப்புமாணி
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் விஞ்ஞான சிறப்புமாணி
- மனிதவள முகாமைத்துவம் விஞ்ஞான சிறப்புமாணி
- நிதியியல் விஞ்ஞான சிறப்புமாணி
- வியாபார பொருளியல் - வியாபார நிருவாகம் - விஞ்ஞான சிறப்புமாணி
- செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் - விஞ்ஞான சிறப்புமாணி
- வியாபாரத் தகவல் முறைமைகள் விஞ்ஞான சிறப்புமாணி
- முயற்சியாண்மை - விஞ்ஞான சிறப்புமாணி

இலங்கையின் முகாமைத்துவ கல்வித் துறையில் முன்னோடியாகத் திகழும் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடம் (FMSC) அதன் புரட்சிகரமான பயணத்தை 1959 இல் ஆரம்பித்தது. அதன் ஆரம்பம் முதற்கொண்டே, உள்ளூர் மற்றும் உலகளாவிய ரீதியில் சிறந்து விளங்கும் ஆயிரக்கணக்கான முன்மாதிரியான கல்வியலாளர்களையும் ஆளுமைகளையும் உருவாக்கியுள்ளது.

தற்போது, இது 12 கல்வித் துறைகளையும் முகாமைத்துவத்தில் உள்ள அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 60 பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிப் பட்டம்பெற்ற 100 பேர் உள்ளடங்களாக 250 இற்கும் மேற்பட்ட கல்வி மற்றும் கல்விசாரா உதவியாளர்களைக் கொண்ட ஒரு முழு அளவிலான முகாமைத்துவ பீடமாகும், முகாமைத்துவக் கல்வியில் சிறப்பு மையமாக திகழும் FMSC, இலங்கையில் முகாமைத்துவக் கல்விக்காக அதிகம் விரும்பப்படும் பீடமாகும். இது 5000 க்கும் மேற்பட்ட உள்ளக இளங்கலை பட்டதாரிகளுக்கும் 750 க்கும் மேற்பட்ட முதுகலை மாணவர்களுக்கும் தனது சேவைகளை வழங்குவதுடன் இது இலங்கையின் மிகப்பெரிய முகாமைத்துவ பீடமாகவும் திகழ்கிறது.

"முகாமைத்துவக் கல்வியின் மூலம் வளமான வாழ்வு" என்ற தனது மூலோபாய நோக்கத்தால் வழிநடத்தப்பட்டு, தேவையான அறிவு, திறன்கள், சரியான அணுகுமுறைகள் மற்றும் இலங்கையின் சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார சூழல் பற்றிய நல்ல புரிதலுடன் பட்டதாரிகளை உருவாக்குவதற்கும் அர்ப்பணிப்புடன் நாடு மற்றும் உலகம் முழுவதும் வளர்ச்சிக்கு பங்களிக்கும் திறன் கொண்டதுமாக இப் பீடம் திகழ்கிறது.

### முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தினால் வழங்கப்படும் பட்டப் பாடநெறிகள்

### கணக்கியல் விஞ்ஞான சிறப்புமாணி

1991 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கியல் விஞ்ஞான சிறப்புமாணி பட்டப் பாடநெறி, பொது மற்றும் தனியார் துறைகளில், உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் கணக்கியல், நிதி முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் நிர்வாக பதவிகளை வகிக்கும் திறன் கொண்ட வளமிக்க பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பட்டப் பாடநெறி சர்வதேச கணக்கியல் நடைமுறைகள், கணினிமயமாக்கப்பட்ட கணக்கியல் மற்றும் கணக்கியல் ஆராய்ச்சி திறன்கள் உட்பட கணக்கியலில் முக்கிய மற்றும் ஏனைய பகுதிகள் பற்றிய விரிவான உள்ளடக்கத்தை வழங்குகின்ற அதே நேரத்தில் தலைமைத்துவம், தனிப்பட்ட திறன் மற்றும் தொடர்பாடல் உள்ளிட்ட திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது. மேலும் கணக்கியல் மற்றும் நிதித்துறையில் இரண்டு ஆண்டுகளுக்கான கட்டாயப் உள்ளிருப்புப் பயிற்சி காலகட்டமானது, மாணவர்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை மேம்படுத்தும் செயல்சார் அனுபவத்தை வழங்கும் மிகவும் முக்கியமான காலகட்டம் ஆகும். இந்த பட்டப் பாடநெறியினை பின்பற்றும் மாணவர்கள் இலங்கையில் இயங்கும் தொழில்சார் கணக்கியல் நிறுவனங்களால் நடத்தப்படும் பரீட்சைகளில் விலக்குகளையும் அனுபவிக்கின்றனர்.

### வியாபார நிருவாகம் - விஞ்ஞான சிறப்புமாணி

60 ஆண்டுகளுக்கும் மேலான கல்வி வரலாற்றைக் கொண்ட வியாபார நிருவாகம் - விஞ்ஞான சிறப்புமாணிபட்டப் பாடநெறி என்பது இலங்கையில் முகாமைத்துவக் கல்வியின் முன்னோடியான மற்றும் முதன்மையான கற்கைநெறியாகும். இது கல்வியாளர்கள் மட்டுமன்றி மாணவர் மற்றும் வணிக சமூகம் மத்தியிலும் அதிக புகழ் மற்றும் அங்கீகாரத்தைப் பெறுகிறது.

இப் பாடநெறியானது மாணவர்களுக்கு பரந்த சமூகத்தினாலும் பெருநிறுவன அமைப்புகளினாலும் முன்மொழியப்பட்ட வணிக முகாமைத்துவத்திலான "அறிவு" மற்றும் "திறன்களை" வழங்கக்கூடிய அவதானத்துடன் வடிவமைக்கபட்டதும் புதுப்பிக்கப்பட்டதுமான பாடத்திட்டத்தினை உள்ளடக்குகின்றது. அதனடிப்படையில் மாறும் வணிக சூழலில் நெறிமுறைகள் மற்றும் யதார்த்தத்திற்கு உணர்வளிக்கக்கூடிய திறமைமிகு தலைவர்களை உருவாக்கும் விதத்தில் மாணவர்களை வழிநடத்துகிறது. வியாபார நிருவாகம் - விஞ்ஞான சிறப்புமாணி பட்டப் பாடநெறியில் முதன்மை மற்றும் விருப்பத்தெரிவுக்கான பாடநெறிகளும் உள்ளடங்குவதோடு முகாமைத்துவ பிரயோகப் பயிற்சிநெறியையும் (மாணவர்களின் தெரிவுக்கமைவாக ஒருவருடம் வரை) ஆய்வு அனுபவத்தையும் திறன் விருத்தியையும் உள்ளடக்குகிறது. இப் பாடநெறியானது வணிக முகாமைத்துவக் கோட்பாட்டில் திடமான அடித்தளத்தையும், வணிகப் பிரயோகத்தில் அனுபவத்தினையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குவதால் அதிக தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

## வியாபார பொருளியல் - வியாபார நிருவாகம் - விஞ்ஞான சிறப்புமாணி

இக் கற்கைநெறியானது, பொருளியல் மற்றும் முகாமைத்துவத் துறைகளை இணைக்கும் பாடத்திட்டத்திற்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் 2002 இல் உருவாக்கப்பட்டது. இந்த பட்டப் பாடநெறியின் நோக்கம், முகாமைத்துவத் துறையில் உள்ள மாணவர்களின் பகுப்பாய்வு திறன்கள், விமர்சன சிந்தனை, தலைமைத்துவ திறன்கள், தகவல் தொடர்பு திறன் மற்றும் குழுப்பணி ஆகியவற்றை மேம்படுத்தும் அதே வேளையில், வியாபார நிருவாகத்தில் பொருளியல் கோட்பாடு மற்றும் பயன்பாட்டுடன் அவர்களை சித்தப்படுத்துவதாகும். இந்த பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு வங்கியியல், அபிவிருத்திக் கற்கைகள், சர்வதேச பொருளாதாரம் மற்றும் வணிகம் ஆகிய மூன்று சிறப்புப் பிரிவுகளை வழங்குவதன் மூலம் அதிக நெகிழ்வுத்தன்மை வழங்கப்படுகிறது. இக் கற்கைநெறியானது, முகாமைத்துவப் பொருளியல், செயல்திட்ட முகாமைத்துவம், அளவைப்பொருளியல், நிதி பொருளியல், சர்வதேச வர்த்தகம் மற்றும் கொடுப்பனவுகள், நாணயப் பொருளியல், உயர்தர அளவைப் பொருளியல், கணிதப் பொருளியல் மற்றும் அபிவிருத்திப் பொருளியல் போன்ற மிகவும் வேண்டப்படுகின்ற பாடங்களைக் கொண்டுள்ளது. மேலும், இப் பட்டப் பாடநெறியானது கட்டாயப் உள்ளிருப்புப் பயிற்சி, வணிக பொருளியல் தொடர்பான சுயாதீன ஆய்வு மற்றும் நுண்திறன்கள் மற்றும் தகவல் தொடர்பு திறன் மேம்பாட்டு என்பவைகளை உள்ளடக்கியுள்ளது. பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்தவுடன், மாணவர்களுக்கு வங்கியியல், பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்டமிடல், வணிக முகாமைத்துவம், ஆராய்ச்சி, நிதி, காப்பீடு, வர்த்தகம் மற்றும் சர்வதேச வணிகம் ஆகிய துறைகளில் சிறந்த தொழில் வாய்ப்புகள் உறுதி செய்யப்படுகின்றன. எங்கள் பட்டதாரிகள் தற்போது உள்ளூரிலும் சர்வதேச அளவிலும் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்.

## வணிக சிறப்புமாணி

1973 ஆம் ஆண்டு முதல் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இந்தப் பட்டப்படிப்பு நடைமுறையில் உள்ளது. வணிக சிறப்புமாணி பட்டத்தின் நோக்கம், நவீன வணிக நிறுவனங்களின் சவால்களை எதிர்கொள்ளும் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மையுடன் மாறும் உலகளாவிய மற்றும் உள்ளூர் பொருளாதார சூழலின் கடுமையான போட்டியை எதிர்கொள்ளக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதாகும். வணிகவியல் பட்டதாரி, அவர்கள் படிக்கும் துறையில் பரந்த கருத்தியல் மற்றும் கோட்பாட்டு கூறுகள் மற்றும் சர்வதேச முன்னோக்கு பற்றிய புரிதல் உட்பட, அறிவுத் தொகுப்பில் நன்கு தேர்ச்சி பெற்ற திறமையான நபராக இருக்க வேண்டும். மேலும், வணிகவியல் பட்டதாரி, அடிப்படை அனுமானங்கள் மற்றும் கோட்பாடுகளை மதிப்பீடு செய்து பயன்படுத்துதல், சிக்கல்களைக் கண்டறிதல், அவற்றின் தீர்வுக்கான பொருத்தமான செயல்முறைகளை உருவாக்குதல் மற்றும் மூலோபாய முடிவெடுக்கும் செயல்முறைகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட விமர்சன, கருத்தியல் மற்றும் பிரதிபலிப்பு சிந்தனை மற்றும் விசாரணைக்கான திறனைக் கொண்டிருக்க வேண்டும். இது நான்கு ஆண்டு கால பாடநெறியாகும். இது ஆறு மாத காலத்திற்கு விரிவான தொழில் பயிற்சியையையும், அறிவு மற்றும் நடைமுறை வெளிப்பாடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய ஒரு ஆராய்ச்சி ஆய்வறிக்கை சமர்ப்பிப்பையும் இறுதி ஆண்டில் கொண்டுள்ளது. இந்த பாடத்திட்டமானது, பொருளியல், கணக்கியல், முகாமைத்துவம், சர்வதேச வர்த்தகமும் நிதியும், தீர்வியல், தகவல் தொழில்நுட்பம், வங்கி, காப்பீடு மற்றும் வணிகச் சட்டம் ஆகியவற்றினை கவனமாக ஒன்றிணைத்த பாடத் தொகுப்பை வழங்குகின்றது. மேலும், முக்கிய பாடப்பிரிவுகள் மற்றும் பரந்த அளவிலான தெரிவுப் பாடப் பகுதிகளிலிருந்து கொண்டுள்ளது. பாடத்திட்டத்தில் உள்ள முழுமையான அணுகுமுறை பட்டதாரிகளுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் முகாமைத்துவ மற்றும் நிர்வாக பதவிகளைப் பெற உதவுகின்றது. சிக்கல் தன்மை, போட்டித்தன்மை மற்றும் ஆற்றல்மிக்க உலகளாவிய வணிகச் சூழல்களில் வெற்றிபெற உறுதிப்பாடு கொண்டிருப்பவர்களுக்கு இந்தத் கற்கைநெறி பொருத்தமானது.

## ஆதன முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு கௌரவ விஞ்ஞானமாணி

ஆதன முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் என்பது 1972 இல் தொடங்கப்பட்ட நிலம் சார்ந்த ஒரு முன்னோடி தொழில்சார் கற்கைநெறியாகும். இது நிலத்தினை ஒரு உற்பத்திக் காரணியாக முகாமைத்துவம் செய்வது தொடர்பில் உள்ள ஒரு சவாலான மற்றும் ஊக்கமளிக்கும் பட்டப்படிப்பாகும். இது சொத்து மதிப்பீடு, ஆதன மேம்பாடு மற்றும் முகாமைத்துவம், நகர்ப்புற மற்றும் பிராந்திய திட்டமிடல் போன்ற பிரிவுகளையும் அதன் சார் நிபுணத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இத்திட்டமானது விரிவுரைகள், நடைமுறைப் பயிற்சிகள் மற்றும் நடைமுறை சார் செயல் திட்டங்களினை கொண்டுள்ளது. இதன் மூலம் பட்டதாரிகள், சிக்கலான தரவை நிர்வகிக்க மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறனை மேம்படுத்துவதோடு சிக்கல்களைத் தீர்ப்பது, பயனுள்ள தொடர்பாடல், குழுப்பணி, தலைமைத்துவம், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், கோட்பாட்டை நடைமு- றையில் பயன்படுத்துவதற்கான திறன், உறவுகளை உருவாக்குதல், புதிய வணிகத்தை உருவாக்குதல் மற்றும் வாடிக்கையாளர்கள், பிற தொழில் வல்லுநர்கள் மற்றும் பொது மக்களுடன் நன்றாக வேலை செய்தல் ஆகிய திறன்களை மேம்படுத்திக்கொள்வர். பட்டப்படிப்பின் காலம் நான்கு (04) ஆண்டுகள் ஆகும். இறுதி ஆண்டில் தொழிற்பயிற்சி மற்றும் ஆய்வு ஆகியவற்றை கொண்டுள்ளது. இப் பட்டப்பாடநெறி, இலங்கை மதிப்பீட்டாளர்களின் நிறுவனம் அளவையியலளர்களின் ராயல் நிறுவனம் - ஐக்கிய ஆகியவற்றினால் (IVSL) மற்றும் பட்டய இராச்சியம் (RICS UK) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்கள், பரிந்துரைக்கப்பட்ட தகுதிக்கு பிந்தைய தொழில்முறை பயிற்சியை முடித்து, இத் தொழில்முறை அமைப்புகளின் உறுப்பினர்களாக தகுதியுடையவர்கள் ஆவர். வெற்றிகரமான பட்டதாரிகள் மதிப்பீடு, சொத்து மேம்பாடு மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளிலும், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் முகாமைத்துவ மற்றும் நிர்வாக பதவிகளை வகிக்கக்கூடியவர்களாவர். இப் பட்டதாரிகளுக்கு முதுகலை தகுதிகளையும் பெறுவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன. இது நுழைவுத் தகுதிகளுக்கு உட்பட்டு, கணிதத்தை விரும்பும் மாணவர்களுக்கும், மேலும் விரிவான களப்பணி மூலம் நடைமுறை வெளிப்பாட்டை கற்றுக்கொள்ள தயாராக உள்ளவர்களுக்கும் பொருத்தமானது ஆகும்.

## நிதியியல் விஞ்ஞான சிறப்புமாணி

2021இல் அறிமுகப்படுத்தப்பட்ட நிதியியல் விஞ்ஞான சிறப்புமாணி பட்டப் பாடநெறியானது, வங்கியியல், முதலீடு, சொத்து முகாமைத்துவம், நிதிசார் ஆய்வு மற்றும் கூட்டுறவு நிதி, முதலியவற்றில் தொழில்ரீதியில் அத்தியாவசியமானதுமான நிதிசார், தொகைசார் மற்றும் பகுப்பாய்வுசார் திறன்களை வழங்குகின்றது. இது கூட்டுறவு நிதி, முதலீடுகள், நிதிச் சந்தைகளும் நிறுவனங்களும் மற்றும் நிதிசார் தொழில்நுட்பம் முதலிய முதன்மை நிதிசார் பரப்புகளில் அவதானம் செலுத்துகின்றது. வாழ்நாள் கற்கையை ஊக்குவிக்கவும், ஒழுங்குமுறைகள், மற்றும் பேண்தகு தரங்களுடனான தீர்மானமெடுத்தலை வலியுறுத்தவும் வாய்ப்பளிக்கிறது. இப் பாடநெறியில் சுயாதீன ஆய்வுக்கற்கையொன்று அவசியமாகும். அதே வேளை நிதித்துறையில் மூன்று மாதத்திற்குக்குறையாத பயிற்சிநெறியையும் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் இப் பாடநெறியில் மாணவர்களுக்கு தொழில்சார் கற்கைகளுக்கான புலமைப்பரிசில்களை வழங்கும் பட்டைய நிதியியல் ஆய்வாளருடன் (ஊகுயு) ஒருங்கிணைந்துள்ளது. அவ்வாறே, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், ஊஐஆயு மற்றும் யுஊஊயு முதலிய தொழில்சார் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## மனிதவள முகாமைத்துவம் விஞ்ஞான சிறப்புமாணி

1994 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இப் பட்டப் பாடநெறி, மனித மேம்பாடு, நிறுவன மேம்பாடு மற்றும் அவர்களின் சொந்த மேம்பாட்டிற்கு பொருத்தமான, குறிப்பிடத்தக்க மற்றும் தனித்துவமான பங்களிப்புகளைச் செய்வதற்குத் தேவையான பண்புகளைக் கொண்ட மனிதவள முகாமைத்துவ பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பட்டப் பாடநெறியானது மனிதவள பாடப் பிரிவுகள், பொது முகாமைத்துவம், மனித உறவுகள், தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல், தனியாள் மேலாண்மை மற்றும் மனிதவள தர மேம்பாடு உள்ளிட்ட ஏழு பரந்த களங்கள் தொடர்பான பொருத்தமான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்கினை வழங்குகின்றது. மேலும், மனிதவள முகாமைத்துவத்தில் திறமையான வல்லுநர்களாகவும், அதே சமயம் தொடர்ச்சியான கற்றல் மற்றும் சுய-வளர்ச்சிக்கான மன, உடல் ரீதியான ஆயத்தத்தினையும் இது வழங்குகிறது. இது நான்கு ஆண்டு கால பாடநெறியா-கும். மேலும் இது, மனிதவள முகாமைத்துவத்தில் ஒரு வருட கால கட்டாய வேலைப்பயிற்சி மற்றும் ஒரு சுயாதீன ஆய்வினையும் உள்ளடக்கியது. இது ஒரு நிறுவனத்தில் மனிதவள முகாமைத்துவத்தின் பல்வேறு அம்சங்களில் நடைமுறை அனுபவத்தினை பெறுவதற்கு மாணவர்களுக்கு உதவுவதோடு, மனிதவள முகாமைத்துவத்தில் முறையான மற்றும்∴அறிவியல் ரீதியிலான விசார-ணையில் ஈடுபடுத்துகின்றது. இது மாணவர்களுக்கு ஒழுக்க மேம்பாடு, நெறிமுறை மற்றும் சமூக செயல்திறன், இயற்கை சூழல் மேம்பாடு மற்றும் சுய முகாமைத்துவம் குறித்து அறிவுறுத்துகின்றது. மனிதவள முகாமைத்துவத்தில் திறமையான பட்டதாரிகள், நிர்வாகிகள், மேலாளர்கள், ஆலோசகர்கள், தலைவர்கள், பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களாக மனிதவள முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் பணியாற்றும் வகையில் இந்த பட்டப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையான மனிதவள முகாமைத்துவ வினையூக்கிகளாக (தொழில்களில் பொருத்தமான மனிதவள முகாமைத்துவத்தினை நிறுவுவதற்கு காரணமானவர்கள்) திறனும் ஊக்கமும் உள்ளவர்களுக்கும், நிறுவனங்களுக்கு வெற்றி மற்றும் நிலைத்தன்மையை தரக்கூடிய உச்ச தனிப்பட்ட மற்றும் கூட்டுப் பங்களிப்பை வழங்கும் பொருத்தமான மற்றும் திருப்தியான பணியாளர்களை இருக்கும் நிபுணர்களாக விரும்புபவர்களுக்கும் இப் பட்டப் பாடநெறி பொருத்தமானது.

## சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் விஞ்ஞான சிறப்புமாணி

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் விஞ்ஞான சிறப்புமாணி பட்டப் பாடநெறியானது, துல்லியமான அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வழங்குவதன் மூலம் சந்தைப்படுத்துதலில் உள்ளூர் மற்றும் உலகளாவிய தொழில்துறை தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் 1994இல் தொடங்கப்பட்டது. இந்த பட்டப்பாடநெறியானது நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட, சமநிலையான கலவையாக சேர்க்கப்பட்ட கட்டாய மற்றும் தெரிவுக்கான பாடநெறிகளைக் கொண்டமைந்துள்ளது. இப் பாடநெறியா-னது, அறிவு, திறன், மனப்பாங்கு, பெறுமதிகள் மற்றும் நிபுணத்துவம் உள்ளடங்களான கற்றல் பெறுபேறுகளை மேம்படுத்தக்கூடிய, முக்கியமாக சந்தைப்படுத்தற் துறையினூடாக வாழ்வில் முன்னேறுவதற்கான பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது. மேலும் இப் பாடநெறியானது, நிறுவனத்திற்கும் முழுமையான சமூகத்திற்கும் பெறுமதி சேர்க்கும் விதத்தில் நவீன, ஆக்கபூர்வமான, புத்தாக்கமான பட்டதாரிகளை உருவாக்குவதற்கான நவீன வசதிகளுடன் முழுமையான கற்கைக்கான சூழலினுள் உயர் தகைமைமிக்க கல்விசார் பணியாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

## முகாமைத்துவம் மற்றும் பொதுக்கொள்கை - விஞ்ஞான சிறப்புமாணி

இப் பட்டப்பாடநெறி மூலம் உருவாக்கப்படும் பட்டதாரிகள் தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கினை கொண்டிருப்பதனால், உள்நாட்டிலும், உலகளாவிய அளவிலும் இயங்கும் அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களில் முகாமையாளர்கள் மற்றும் நிர்வாகிகளாக சிறந்து விளங்க இயலும். இது பல்துறை சார் பாடவிதானங்களை உள்ளடக்கும் நான்காண்டு பாடநெறி ஆகும். மேலும், மாணவர்களின் சுயாதீனமான நுண்சிந்தனையை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வு ஆராய்ச்சியும், மாணவர்களுக்கு தேவையான நிர்வாகத் திறன்களை வழங்குவதற்கான செயல்முறை சார் பயிற்சியும் இப் பட்டப்பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பாடநெறியின் கற்றல் நடவடிக்கைகள் முதலாவது மற்றும் இரண்டாவது வருடங்களில் இரு மொழி மூலங்களால் (சிங்களம், ஆங்கிலம்) நடாத்தப்படுவதோடு, மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்களில் ஆங்கில மொழி மூலமாக மாத்திரமே நடாத்தப்படும். சமுதாயத்தில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பல்வேறு தொழிற்துறைகளில் பல்வித பொறுப்புகளுடன் பணியாற்ற விரும்பும் மாணவர்களுக்காக இந்த பட்டப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## வியாபாரத் தகவல் முறைமைகள் விஞ்ஞான சிறப்புமாணி

2001இல் அறிமுகப்படுத்தப்பட்ட வியாபாரத் தகவல் முறைமைகள் விஞ்ஞான சிறப்புமாணி ஆனது, முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய இரு துறைகளிலும் உயர் மட்ட அறிவைக் கொண்ட தொழில்நுட்ப ரீதியாக சிறந்த எதிர்கால பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முகாமைத்துவக் கல்வியில் தகவல் தொழில்நுட்பத்தின் சிறப்பு வெளிப்பாட்டை ஒருங்கிணைக்கும் வகையிலான முன்னோடியானதும், தனித்துவமானதுமான ஒரே பட்டப் பாடநெறி இதுவாகும். இது டிஜிட்டல் முறையில் செயல்படுத்தப்படும் பணிச்சூழலில் செயல்பட அத்தியாவசிய நுண்திறன்கள் மற்றும் அறிவு, திறன்கள், மனப்பான்மைகள், விழுமியங்கள், தொழில் சார் மனப்பான்மை மற்றும் முன்னுதாரண அடிப்படையிலான கற்றல் விளைவுகளை உள்ளடக்கிய அறிவுசார் கட்டாய மற்றும் தெரிவு பாடங்களை ஒருங்கிணைத்துள்ளது. ஆகவே, மாணவர்கள் கோட்பாட்டு அறிவு மற்றும் முகாமைத்துவம், தகவல் அமைப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் நடைமுறை அனுபவத்தினைப் பெற வழிவகுக்கப்படுவர். இவ் நான்காண்டுப் பாடநெறியில் தகவல் அமைப்பு மேம்பாட்டு ஆய்வு அல்லது தகவல் அமைப்புகள் தொடர்பான ஆய்வு உட்பட உலகளாவிய பொருளாதார நடைமுறைகளை மாணவர்களிற்கு வெளிப்படுத்துகின்ற ஆறு மாத கால தொழிற்பயிற்சினையும் கொண்டுள்ளது. பட்டப்படிப்பின் நிறைவில் பட்டதாரிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு, பொது அல்லது தனியார் துறைகளில் முகாமைத்துவ மற்றும் நிர்வாக மட்ட பதவிகளைப் பெற இயலும். மேலும், பட்டதாரிகள் மென்பொருள் மேம்பாட்டுத் துறையில் புதிய வணிக முயற்சிகளைத் தொடங்கும் தொழில் முனைவோராகவும் செயல்பட முடியும். தகவல் முறைமைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள, ஆற்றல்மிக்க, ஆக்கப்பூர்வமான பல்துறை வணிக வல்லுநர்களாகவோ, தலைவர்களாகவோ, மாற்று முகவர்களாகவோ உருவாக வலுவான உற்சாகம் உள்ளவர்களுக்கு இப் பட்டப் பாடநெறி பொருத்தமானது.

## செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் - விஞ்ஞான சிறப்புமாணி

முகாமைத்துவத் துறைக்கு முதலில் 2008 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இச் செயற்பாட்டு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் - விஞ்ஞான சிறப்புமாணி பட்டப்பாடநெறியானது, தற்போதைய வணிகத் துறைக்கு மிகுந்தளவில் பொருந்தும் அதிக கேள்வியையுடைய முதன்மையானதொருப் பட்டப் பாடநெறியாகும். இது செயன்முறை முகாமையாளர்கள், தர முகாமையாளர்கள் விநியோகச் சங்கிலி முகாமையாளர், வணிக பகுப்பாய்வாளர் மற்றும் வணிக ஆலோசகர் உள்ளடங்களாக பல்வேறு தகைமைமிக்க பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பரந்த பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இப் பாடநெறியானது செயன்முறை முகாமைத்துவம், விநியோகச் சங்கிலி முகாமைத்துவம், சேவை முகாமைத்துவம், தர முகாமைத்துவம், தொழில்நுட்ப முகாமைத்துவம், செயற்பாட்டு முறைமை திட்டமிடல் முகாமைத்துவம், வணிக பகுப்பாய்வு மற்றும் செயன்முறை ஆய்வுகள் முதலிய பிரதான பாடங்களையும் உள்ளடக்குகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக கணக்கீடு, நிதி, மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் பொருளியல் முதலிய முகாமைத்துவம் சார்ந்த பாடங்களும் உள்ளடங்குகின்றன. இப்பட்டப் பாடநெறியின் கீழ் ஆளுமை மற்றும் திறன் விருத்திக்கான பாடநெறிகளும் வழங்கப்படுகின்றன. பட்டதாரிகளைத் தொழில் உலகிற்கு தயார்செய்ய அவர்களது இறுதிக் கல்வியாண்டில் பிரயோகப் பயிற்சிநெறிக்கான வசதியும் வழங்கப்படுகின்றது.

மேலும் பட்டதாரிகளின் பகுப்பாய்வுத் திறன்களையும் தகவல் தொழில்நுட்ப திறன்களை விருத்திசெய்வதற்கான வாய்ப்பினை வழங்கும் விதமாகவும் இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. தீர்வியல் கல்விப்பிரிவின் நவீன மென்பொருட்களைக் கொண்டமைந்த முழுமையான கணினி மையமானது இத் திறன்களை விருத்திசெய்துகொள்ள உதவுகிறது. கல்விப்பிரிவானது இலங்கையின் முதன்மை நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களினூடாக நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதுடன், கல்விப் பிரிவின் வள நிலையத்தினூடாக கைத்தொழிற் துறைகளுடன் இணைந்து ஆய்வுகளிலும் ஈடுபடுகிறது.

விரிவுரைகள் உள்ளடங்கிய கற்பித்தல், களப் பயணம், வெளிக்களப் பயிற்சிநெறிகள் மற்றும் கைத்தொழில்-கல்வி இணைப்புகள் என்பவற்றையும் உள்ளடக்குகிறது. இம் முழுமையான பாடநெறி, பட்டதாரிகள் கோட்பாட்டு ரீதியான அறிவினை மாத்திரமன்றி, பிரயோக ரீதியான அனுபவத்துனூடாக பிரயோக நுண்ணறிவையும் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதையும், செயன்முறை மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் முதலிய மாற்றமிகு துறையின் வெற்றிக்கு தயாராகவுள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

### முயற்சியாண்மை - விஞ்ஞான சிறப்புமாணி

முயற்சியாண்மை - விஞ்ஞான சிறப்புமாணி பட்டமானது ஒரு தனித்துவமான கற்கையாகும். இது பொருளாதார மற்றும் சமூக நிலைத்தன்மையின் உலகளாவிய போக்கு தொடர்பிலானதாகும். புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வணிக முயற்சிகளை தொழில்முனைவோரின் மனப்பான்மையுடன் பேணக்கூடிய வணிக தொழில்முனைவோர் மற்றும் முகாமையாளர்களை உருவாக்குவதையே இப் பட்டப் பாடநெறி நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முக்கியமாக வணிக முகாமைத்துவம் மற்றும் முயற்சியாண்மை ஆகிய இரண்டு பிரிவுகளில் அறிவை வழங்குவதோடு, உலகளாவிய ரீதியில் வணிக உலகில் வெற்றிபெறத் தகுதியுள்ள பட்டதாரிகளுக்கான அறிவு, திறன்கள், மனப்பான்மை மற்றும் மனநிலை அடிப்படையிலான கற்றல் விளைவுகளை ஒருங்கிணைக்கின்றது. மேலும், இந்த நான்காண்டு பட்டப்படிப்பானது கட்டாயப் பயிற்சியை உள்ளடக்கியதோடு, சொந்த தொழில் முயற்சிகளைத் தொடங்க ஆர்வமுள்ள மாணவர்கள் அந்தப் பாதையைத் தொடர வழிநடத்தப்படுகிறார்கள். அதே நேரத்தில், தொழில்முனைவு சார் முகாமையாளர்களாக ஆவதற்கு ஆர்வமுள்ள மாணவர்கள் நிறுவனங்களில் முகாமைத்துவப் பயிற்சியினைப் பெற வழிநடத்தப்படுகிறார்கள். மேலும் இக் கற்கைநெறியில் மாணவர்கள் கோட்பாடு மற்றும் பயிற்சி தொடர்பான ஒரு ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். மிக முக்கியமாக, இந்தத் கற்கைநெறி தன்னம்பிக்கை, படைப்பாற்றல், இடர் ஏற்றல், தளராத முயற்சி, தாங்குதன்மை, “செய்ய முடியும்” என்ற மனப்பான்மை, தொலைநோக்குப் பார்வை, வாய்ப்புகள் தேடல், சமூக உணர்வு, உள்ளுணர்வு மற்றும் செயலூக்க உத்திகள் என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் மாணவர்களை தொழில் முனைவோரிற்கான சிந்தனையுடனும், திறன்களுடனும் ஆயத்தப்படுத்துகிறது. இப் பட்டதாரிகள் பெருமைமிக்க இலங்கை தொழில்முயற்சியாளர்களாக தங்கள் நிலையை உறுதிப்படுத்தும் அதே வேளையில் மற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளனர். தங்கள் சொந்த வணிகத்தில் தொழில்முனைவோர் ஆக ஆர்வமுள்ளவர்கள் மற்றும் ஆக்கவள மாற்றங்களை நோக்கி நிறுவனங்களை இயக்கும் தொழில்முனைவுத் திறன்களைக் கொண்ட தொழில்சார் மேலாளர்கள் (பெருநிறுவன தொழில்முனைவோர்) ஆக ஆர்வமுள்ளவர்கள் இப் பட்டப்பாடநெறிக்கு மிகவும் பொருத்தமானவர்கள் ஆவர்.

## மருத்துவ விஞ்ஞான பீடம்

#### மருத்துவமாணி மற்றும் அறுவைசிகிச்சைமாணிப் பட்டம்

மருத்துவமாணி மற்றும் அறுவைசிகிச்சைமாணிப் பட்டப் பாடநெறி 5 ஆண்டு பாடநெறியாக இருப்பதோடு ஒவ்வொரு கல்வியாண்டும் 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. இப் பாடநெறியை மூன்று கட்டங்களாக வகுக்கப்படுகின்றது. மருத்துவப் பயிற்சி மூன்று கல்வியாண்டில் ஆரம்பிப்பதுடன் இறுதியாண்டு பெரும்பாலும் முற்றிலும் வைத்திசாலையைச் சார்ந்தே அமைந்துள்ளது. இக் கற்கைநெறி முற்றுமுழுதாக ஆங்கிலமொழி மூலத்திவ் நடைபெறுகின்றது.

#### மனித உயிரியல் இளங்கலை சிறப்பு விஞ்ஞானப் பட்டம்

மனித உயிரியல் இளங்கலை சிறப்பு விஞ்ஞானப் பட்டப் படிப்பை பயிலும் வாய்ப்பானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் விஞ்ஞான பீடத்தின் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் முதலாம் ஆண்டு படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. சராசரியாக “B” தரம் அல்லது அதற்கு மேல் பெற்ற மாணவர்கள் மட்டுமே இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இம் முழு கற்கைநெறிக்கான போதனைகள், ஆங்கில மொழி மூலமே வழங்கப்படும். மாணவர்கள் தமது கல்வி நிகழ்ச்சி நிரலில் பின்வரும் சிறப்புத் துறைகளில் ஒன்றைத் தேர்வு செய்யலாம். உடற்கூறியல், உயிர்வேதியியல், உணவு மற்றும் ஊட்டச்சத்து, நோயெதிர்ப்பியல் மற்றும் நுண்ணுயிரியல்.

## தொழில்நுட்ப பீடம்

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடமானது, 2016 ஆம் ஆண்டு இலங்கையில் க.பொ.த உயர்தரப் பாடத்திட்டத்தில் (GCE A-Level) தொழில்நுட்பக் கல்வியானது உள்வாங்கப்பட்டதன் பின்னர் நிறுவப்பட்ட முதல் தொழில்நுட்ப பீடமாகும். அன்றுமுதல் ஸ்ரீஜயவர்தனப்புரப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடமானது தொழில்நுட்பசார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றது. அத்துடன் இப்பீடமானது இலங்கை இளைஞர் யுவதிகளது தனித்தன்மை வாய்ந்தத் தொழில்நுட்பம் சார் திறமைகளைக் கண்டறிந்து, அவற்றை வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறைகளில் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப அறிவுசார் சமூகமொன்றினை உருவாக்குதல் மற்றும் சமூகத்தின் தொழில்நுட்பம் சார் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்றவற்றை தனது பிரதானக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

தொழில்நுட்பப் பீடமானது தற்போது பொறியியல் மற்றும் பிரயோக விஞ்ஞானம் சார் இடைமுகங்களில் மூன்று இளமாணிப் பட்டங்களை வழங்கி வருகின்றது. இம்மூன்றும் 120 தொகை மதிப்புப் புள்ளிகளுடன் (Credits) கூடிய நான்கு வருட கௌரவ இளமாணிக் கற்கைநெறிகள் ஆகும். இக்கற்கைநெறிகள் ஆங்கில மொழி மூலத்திலேயே (English Medium) முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இக்கற்கைநெறியினுள் உள்வாங்கப்படும் மாணவர்கள் குறிப்பிட்ட தொழில்நுட்பம் சார் துறையில் தனது கற்றல் நடவடிக்கைகளையும் சுய ஆர்வங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றனர். ஒவ்வொரு கற்கைநெறியின் கீழும் வழங்கப்படும் இளமாணிப் பட்டங்களும் அதனுடன் தொடர்புடைய துறைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**01. உயிர் முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம்** - Bachelor of Biosystems Technology (BBST) Honors Degree

- விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் தொழில்நுட்பம் (Agriculture and Environmental Technology)
- உணவு செயன்முறை தொழில்நுட்பம் (Food Processing Technology)
- கைத்தொழில் உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (Industrial Biosystems Technology)

**02. பொறியியல் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம்** -Bachelor of Engineering Technology (BET)Honors Degree

- ஆட்டோமொபைல் தொழில்நுட்பம் (Automobile Technology)
- கட்டுமானம் மற்றும் கட்டட சேவைகள் தொழில்நுட்பம் (Construction and Building Services Technology
- சக்தி மற்றும் சுற்றுச்சூழல் தொழில்நுட்பம் (Energy and Environmental Technology)
- புவிசார் தொழில்நுட்பம் (Geotechnology)
- மெகாட்ரானிக்ஸ் தொழில்நுட்பம் (Mechatronics Technology)
- பாலிமர் செயலாக்க தொழில்நுட்பம் (Polymer Processing Technology)

**03. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம்** -Bachelor of Information and Communication Technology (BICT) Honors Degree

- மல்டிமீடியா தொழில்நுட்பம் (Multimedia Technology)
- வலைப்பின்னல் தொழில்நுட்பம் (Network Technology)
- மென்பொருள் தொழில்நுட்பம் (Software Technology)

மேற்குறித்த அனைத்துப் பாடத்திட்டங்களும் மாணவர்கள் கல்வி மற்றும் தொழில்ரீதியாக சிறந்து விளங்குவதற்காகக் கல்விக் கோட்பாடு மற்றும் தொழில்சார்ந்த பயன்பாடு ஆகியவற்றின் தனித்துவமான கலவையாகக் காணப்படுவதுடன் ஆறுமாத தொழில்சார்ந்த வேலைவாய்ப்பு மற்றும் ஒரு வருட ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புத் திட்டத்தினை உள்ளடக்கியுள்ளன. இப்பீடமானது மாணவர்கள் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் சிறந்து விளங்குவதற்குத் தேவையான பகுப்பாய்வு, பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் தொழில் முனைவோர் சார் திறன்கள் போன்றவற்றை மேம்படுத்துவதற்காகவும் அது தொடர்பிலான முன்னனுபவத்தினைச் சிறந்த வகையில் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான அனைத்து விதமான உட்கட்டமைப்பு வசதிகள், அதிநவீன கருவிகள், ஆய்வகங்கள் மற்றும் பயிற்சிப் பட்டறை வசதிகளையும் கொண்டுள்ளது.

## பொறியியற் பீடம்

#### பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்பு பட்டப் பாடநெறி

பொறியியல் பீடத்தால் வழங்கப்படும் பொறியில் விஞ்ஞானமாணி சிறப்பு பட்டப் பாடநெறி நான்கு கல்வியாண்டுகள் கொண்ட ஒரு முழுநேர பாடநெறியாகும். பொறியில் பிரிவின் கீழ் மாணவர்கள் பட்டப்படிப்பில் சேர்க்கப்படுவார்கன் இப்பாடநெறி 24 வார கால தொழில்துறை பயிற்சியையும் கொண்டுள்ளது. மாணவர்கள் பொதுவான பாடத்திட்டத்தின் முடிவில் செயல்திறன் மற்றும் அவர்களின் விருப்பம் அடிப்படையில் நான்னு (4) சிறப்புத்துறைகளுக்குத் தேர்தெடுக்கப்படுவார்கள். சிறப்பு துறைகள்:

(i) சிவில் பொறியியல்
(ii) கணினி பொறியியல்
(iii) மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்
(iv) இயந்திர பொறியியல்

பொறியில் கல்விக்கான தேசிய மற்றட் சர்வதேச தரங்களுக்கு இணங்க கல்வீ நடவடிக்கைகளின் சீரான பணிச்சுமையை வழங்குவதற்காக அனைத்து சிறப்புத் துறைகளுக்கான பாடத்திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

கூடுதல் விவரங்களைப் பின்வரும் இணையப்பக்கத்திலிருந்து பெறலாம்.

இணையம்: http://eng.sjp.ac.lk/

## இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

#### விஞ்ஞானமாணி தாதிப்பட்டம்

விஞ்ஞானமானி தாதிப்பட்ட பாடநெறி 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. மருத்துவசாலைகள் அடிப்படையாகக் கொண்ட சிகிச்சையாக தாதிப் பயிற்சி முதலாவது வருடத்திலிருந்து ஆரம்பமாகும். மொத்த கற்கை பாடநெறிக்கான மொழிமூலம் ஆங்கிலமாகும்.

#### மருத்துவ இரசாயன விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம்

மருத்துவ இரசாயன விஞ்ஞானத்தில் விஞ்ஞானமானிப் பட்டப் பாடநெறி 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. மருத்துவசாலைகள் அடிப்படையாகக்

கொண்ட சிகிச்சையாக தாதிப் பயிற்சி முதலாவது வருடத்திலிருந்து ஆரம்பமாகும். மொத்த கற்கை பாடநெறிக்கான மொழிமூலம் ஆங்கிலமாகும்.

#### ஔடதமாணிப் பட்டம்

ஔடதமானிப் பட்டம் பாடநெறி 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. பட்டப் பாடநெறிக்கு கற்பித்தல், செயல்முறை வகுப்புக்கள் மற்றும் ஆராய்வுத்திட்டங்கள் போன்றே அரச துறைசார் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற செயல்முறை பயிற்சியொன்றும் உட்படுகிறது.

### பல் மருத்துவ விஞ்ஞான பீடம்

#### பல் மருத்துவ சத்திரசிகிச்சை இளமாணிப்பட்டம் (BDS)

பல் மருத்துவ சத்திரசிகிச்சை இளமாணிப்பட்டப் படிப்பானது ஒவ்வொரு கல்வியாண்டிலும் மூன்று 10 வாரங்களைக் கொண்ட ஐந்து ஆண்டு கால பட்டப் படிப்பாகும். இப் பாடத்திட்டமானது ஒருங்கிணைக்கப்பட மற்றும் அமைப்பு அடிப்படையிலானதுடன் கட்டம் 1, கட்டம் 2 மற்றும் கட்டம் 3 என மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முதற் கட்டமானது மனித உடலின் இயல்பான கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டை உள்ளடக்கிய நான்கு முக்கிய பாடங்களைக் கொண்டுள்ளதுடன் அதன் கற்றல் செயற்பாடுகள் மருத்துவ விஞ்ஞான பீடத்தின் மருத்துவ மாணவர்களுடன் சேர்ந்து முன்னெடுக்கப்படும். இரண்டாம் கட்டமானது துணை மருத்துவப் பாடநெறிகளை உள்ளடக்கியத்துடன், மனித உடலைப் பாதிக்கும் பல்வேறு நோய்கள் மற்றும் அதன் ஒவ்வொரு நிலையிலும் தொடர்புடைய அசாதாரண உடல் அமைப்பு மற்றும் செயற்பாட்டைக் கற்றுக்கொடுப்பதுடன், இக் கட்டத்தில் மாணவர்கள் சமூக பல் மருத்துவம் மற்றும் பற்சிகிச்சைக்குப் பயன்படுத்தும் உயிரியல் பொருட்கள் தொடர்பிலும் கற்றுக்கொள்கிறார்கள். மூன்றாம் கட்டமானது இறுதிப் பகுதி மற்றும் பகுதி ” ஆகியவற்றை உள்ளடக்கியதுடன், இதன் போது பல மருத்துவ சிகிச்சை முறைகள் தொடர்பில் கற்றுக்கொள்ளப்படுகிற பகுதி 1 இன் போது மாணவர்கள் பல் மருத்துவத்தின் எட்டு முக்கிய பாட பகுதிகளைக் கற்றுக்கொள்வதுடன் அது தொடர்பிலனா திறன்களை மேம்படுத்திக்கொள்வார்கள். இறுதி ஆண்டில், சிகிச்சை நெறிமுறைகளின் பரிச்சயத்துடன் முழுமையாக நோயாளிகள் சிகிச்சைக்கு உட்படுத்துவது தொடர்பில் கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படும். இம் முழு கற்கை நெறிக்கான போதனை ஆங்கில மொழி மூலமே வழங்கப்படும்.

### நகர்ப்புற மற்றும் நீர்வாழ் உயிரியல் வளங்கள் பீடம்

நகர்ப்புற மற்றும் நீர்வாழ் உயிரியல் வளங்கள் பீடம் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமீபத்திய சேர்க்கை ஆகும். நாட்டிற்கு மிகவும் தேவைப்பாடு உள்ள உயிரியல் பொருளாதாரம் தொடர்பான, விசேடமாக நீல-பச்சை நிலையான பொருளாதாரத்திற்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய சவால்களை எதிர்கொள்ள உள்ள கூடிய தொழில்ரீதியாக தகுதிவாய்ந்த பட்டதாரிகள் மற்றும் முதுகலை பட்டதாரிகள் குழுவை உருவாக்க இந்தப் பீடம் திட்டமிட்டுள்ளது. பின்வரும் நான்கு முழுநேர விஞ்ஞானமாணி (BSc) பட்டப்படிப்புகள் இப்பீடத்தினால் வழங்கப்படுகின்றன.

நீர்வாழ் உயிரியல் வளங்கள் விஞ்ஞானமாணி
நீர்வாழ் உயிரியல் வளங்கள் (கௌரவ) விஞ்ஞானமாணி
நகர்ப்புற உயிரியல் வளங்கள் விஞ்ஞானமாணி
நகர்ப்புற உயிரியல் வளங்கள் (கௌரவ) விஞ்ஞானமாணி

க.பொ.த (உயர்தரம்) உயிரியல் பிரிவில் சித்தி பெற்ற மாணவர்கள் மேற்கண்ட பட்டப்படிப்பு திட்டங்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

இப்பாடநெறிகள் பயிற்றுவிக்கப்படும் ஊடகம் ஆங்கிலம். விஞ்ஞானமாணி மற்றும் (கௌரவ) விஞ்ஞானமாணி பட்டப்படிப்புகளுக்கான இலங்கை தரக் கட்டமைப்பின் (SLQF) நிலை 5 மற்றும் நிலை 6 இல் முறையே 90 மற்றும் 120 புள்ளிகளை இந்தப் பாடநெறிகள் கொண்டிருக்கின்றன.

நகர்ப்புற மற்றும் நீர்வாழ் உயிரியல் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு ஆறு வளங்களின் பீடத்தால் வழங்கப்படும் அரையாண்டுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை, (கௌரவ) விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு ஒவ்வொரு அரையாண்டிலும் 15 வாரங்கள் படிப்புடன், எட்டு அரையாண்டுகளைக் கொண்டுள்ளது. விஞ்ஞானமாணி மற்றும் (கௌரவ) விஞ்ஞானமாணி பட்டப்படிப்புகள் கற்பிக்கப்பட்ட பாட தொகுதிகளுடன் ஒத்துப்போகின்ற ஒரு தொழில்துறை பயிற்சி மற்றும் களப்பயணத்தினை உள்ளடக்கியது. மேலும்,(கௌரவ) விஞ்ஞானமாணி பட்டப்படிப்புகள் இறுதியாண்டில் ஒரு ஆராய்ச்சித் திட்டத்தைக் கொண்டிருக்கும்.நீர்வாழ் உயிரியல் வளங்கள் பட்டப்படிப்பு திட்டங்களின் முக்கிய பகுதிகள்:

- ☐ கடல் வளர்ப்பு
- ☐ கடற்பாசி உற்பத்தி
- ☐ நீர்வாழ் விலங்கு ஆரோக்கியம்
- ☐ நீர்வாழ் உயிரியல் வளங்களில் உயிர்த்தொழிநுட்பம்
- ☐ ஸ்மார்ட் மீன் வளர்ப்பு
- ☐ அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் இனப்பெருக்கம்
- ☐ மீன் தீவன தொழில்நுட்பம்

நகர்ப்புற உயிரியல் வளங்கள் பட்டப்படிப்பு திட்டங்களின் முக்கிய பகுதிகள்:

- ☐ பசுமைக் கட்டிடங்கள் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சி
- ☐ நகர்ப்புற வனவியல் மற்றும் வனவிலங்கு நகர்ப்புற கால்நடை உற்பத்தி
- ☐ நகர்ப்புற உயிரியல் வளங்களில் உயிர்த்தொழினுட்பம் நகர்ப்புற உரம், மண் மற்றும் உர முகாமைத்துவம்
- ☐ போன்சாய் மற்றும் போத்தல் தோட்டம்
- ☐ ஸ்மார்ட் விவசாயம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் விவசாயம்

- உயிர் ஆற்றல், நகர்ப்புற விவசாயத்தின் பொறியியல் அம்சங்கள்

மேலும், அனைத்து பட்டப்படிப்பு திட்டங்களின் இளங்கலை பட்டதாரிகளுக்கும் அவர்களின் படிப்புத் துறையில் வெற்றிபெற, பகுப்பாய்வு கருவிகள், தொழில்முனைவு மற்றும் வணிக மேம்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற அத்தியாவசிய அடிப்படைகள் பற்றிய அறிவும் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

## கணினி பீடம்

கணினியியல் இளங்கலை (கௌரவ) பட்ட நிகழ்ச்சித்திட்டம்

கணினி பீடம் மூலம் வழங்கப்படுகின்ற கணினி இளமானி கௌரவ கற்கைநெறிகள், முழு நேரம் நான்கு வருட காலத்தைக் கொண்ட இளங்கலை பட்டபடிப்புகளாகும். கணினியின் மூன்று முக்கிய துணைபிரிவுகளின் கீழ் மாணவர்கள் பாடநெறிக்காக உள்வாங்கபடுவர். இப்பட்டப் பாடநெறியானது எட்டு (8) அரை இப் பட்ட கல்வியாண்டுகளை கொண்டமைந்ததாகும். ஒரு கல்வியாண்டு இருபது (20) வார காலத்தினுள் நடைபெறுவதோடு, இதற்குள் மாணவர்களின் பரீட்சை/ மதிப்பீடு காலங்களும் உட்படுகின்றன.

கணினி பீடத்தால் வழங்கப்படும் கௌரவ பட்டப்படிப்புகளின் துணைப்பிரிவுகள்

i. கணினி விஞ்ஞானத்தில் கணினி கௌரவ இளமாணிப் பட்டம்
ii. மென்பொருள் பொறியியலில் கணினி கௌரவ இளமாணிப் பட்டம்
iii தகவல் முறைமைகளில் கணினி கௌரவ இளமாணிப் பட்டம்

இந்த பாடத்திட்டங்களும், அதன் துணைத் துறைகளும் மிக உயர்த்த சர்வதேச தரத்திற்கு ஏற்றால்போல் உருவாக்கப்பட்டுள்ளதோடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டதாகும். இந்த பட்டப்படிப்பு, ஆராய்ச்சி திட்டம் மற்றும் 20 வார தொழில் துறை பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது

# களனிப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் | - | E |
| தொழில்வழிச்சிகிச்சை | - | E |
| கலை | - | S |
| சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | - | E |
| முகாமைத்துவம் | - | E |
| வணிகவியல் | - | E |
| முகாமைத்துவமும் தகவல் தொழினுட்பமும் (MIT) | - | E |
| உயிரியல் விஞ்ஞானம் | - | E* |
| பௌதீக விஞ்ஞானம் | - | E* |
| சூழல் பேணலும் முகாமைத்துவமும் | - | E |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | - | E/S |
| மென்பொருள் பொறியியல் | - | E |
| திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் | - | S |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |
| [1]பௌதீக விஞ்ஞானம் - ICT | - | E* |
| பிரயோக இரசாயனவியல் | - | E |
| இலத்திரனியல் மற்றும் கணினி விஞ்ஞானம் | - | E |
| ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் (TESL) | - | E |
| கணினி விஞ்ஞானம் | - | E |
| நிதி பொறியியல் | - | E |
| கணக்கியல் தகவல் முறைமை | - | E |
| [2]விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | - | E* |
| உயிர் முறைமைகள் தொழினுட்பம் (BST) | - | E |

1 பட்ட நிகழ்ச்சித்திட்டம் பீ.எஸ்..சி. பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல்

2 பட்ட நிகழ்ச்சித்திட்டம் விளையாட்டு அறிவியல் கௌரவ விஞ்ஞானமானி

*1ஆம் வருடத்தின் 1ம் பருவத்தில் கற்கைநெறிகள் சிங்களம் மற்றும் ஆங்கிலத்திலும், 2ஆம் பருவத்தில் இருந்து கற்கைநெறிகள் ஆங்கிலத்தில் நடாத்தப்படும்.

களனிப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு திட்டங்களானது கற்கை நெறிகள் "கற்கை நெறி அலகு முறைமையில்" இயங்குகின்றன, அதாவது ஒரு கல்வியாண்டிற்குள் இரண்டு பருவங்கள் உள்ளடக்கப்பட்ட கற்கைநெறி அலகின் இறுதிப் பரீட்சைகளுடனான அமைப்பாகும். பாடங்களை தேர்ந்தெடுப்பதில் அதிகபட்ச நெகிழ்வுத்தன்மையை வழங்க வடிவமைக்கப்பட்ட பல்வேறு பாட சேர்க்கைகளை இது வழங்குகின்றது.கற்கைநெறி என்பது ஒரு பாடத்தொகுதி ஆகும், இது ஒரு திறமைப் பெறுமானத்தை கொண்டுள்ளது. திறமைப் பெறுமானம் என்பது தர புள்ளி சராசரி கணக்கிடுவதில் பயண்படுத்தப்படும் நேர அடிப்படையிலான அளவீடு ஆகும். பட்டப்படிப்பின் கற்கைநெறிகள் நிலை 1,நிலை 2,நிலை 3,நிலை 4 என நான்கு நிலைகளில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

களனிப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் நிலை 1,நிலை 2, மற்றும் நிலை 3 இல் கற்கை நெறிகளைப் பின்பற்ற வேண்டும் விருப்பமான மற்றும்∴அல்லது துணைப்பாட அலகுகளுடன் மூன்று பாடக் கலவைகள் அல்லது விருப்ப மற்றும்/அல்லது துணைப் பாட அலகுகளுடன் இரண்டு பாடக் கலவைகள் உள்ளன. அத்துடன் அனைத்து மாணவர்களும் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் அனைத்து கற்கை நெறிகளையும் பின்பற்ற வேண்டும். ஒரு மாணவர் மற்ற பீடங்களில் இருந்து ஒரு பருவத்திற்கு 2 திறமைப் பெறுமானத்தை மிகாமல் அதிகபட்சம் 6 திறமைப் பெறுமானம் வரை கற்கை நெறிகளைப் பின்பற்ற முடியும்.ஒரு மாணவர் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 30 திறமைப் பெறுமானத்திற்குரிய கற்கை நெறிகளைப் பின்பற்ற வேண்டும்.

களனிப் பல்கலைக்கழகத்தில் கலை பட்டப்படிப்புகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களால் இணைந்து நடத்தப்படுகின்றன. களனிப் பல்கலைக் கழகத்தில் கலை பட்டப்படிப்புகளிற்கு பதிவு செய்த பின் க.பொ.த உயர் தரத்தில் படித்த பாடங்கள் மற்றும் Z-Score மதிப்பெண்களின் அடிப்படையில் இரண்டு பீடங்களுக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பட்டப் படிப்பிற்காக மாணவர்கள் தெரிவு செய்யப் பட்ட பீடத்தில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களைப் பின்பற்றுவது கட்டாயமாகும்.

## மானிடவியல் பீடம்

**மானிடவியல் பீடத்தின் கலைமாணி விசேட/ கௌரவ பட்ட கற்கைநெறியில் பின்வரும் பாடநெறிகள் போதிக்கப்படுகின்றன.**

| | |
|---|---|
| ஆங்கிலத்துறை | ஆங்கிலம் |
| நவீன மொழிகள் துறை | பிரெஞ்சு, ஜேர்மன், ஜப்பான், ரஷியன், சைனிஷ், கொரியன், ஸ்பானிஷ் |
| பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை | பாளி, பௌத்த தத்துவவியல், பௌத்த கலாசாரம், பௌத்த உளவியல் |
| மேற்கத்தைய தொன்மைக் கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ கலாசார துறை | மேற்கத்தைய தொன்மைக் கலாசாரம் (பண்டைய கிரேக்க மற்றும் உரோம் மற்றும் கிறிஸ்தவ கலாசாரம் தொடர்பான ஆய்வுகள்) |
| நுண்கலைத் துறை | கட்புலக் கலைகளும் வடிவமைப்பும் (வரைதலும் உருவகப்படுதலும்), அரங்கேற்றக் கலைகள் (நடனம்), அரங்கேற்றக் கலைகள் - இசை (இந்துஸ்தானி மற்றும் மேற்கு) |
| நாடகம், சினிமா மற்றும் தொலைக்காட்சித் துறை | புடகலை (புகைப்படம் எடுத்தல்), திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி ஆய்வுகள், நாடகம் மற்றம் அரங்கம் |
| மொழியியல் துறை | மொழியியல், இரண்டாவது மொழியாக தமிழ் (TASL)* மொழிபெயர்ப்பு படிமுறைகள்* |
| சமஸ்கிருதம் மற்றும் கிழக்கு ஆய்வுகள் | சமஸ்கிருதம், வாஸ்து சாஸ்திரம், இந்து மதம் |
| சிங்களத்துறை | சிங்களம், இலக்கியத் திறனாய்வு |
| ஹிந்தி துறை | ஹிந்தி |
| ஆங்கில மொழி கற்பித்தல் துறை | இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) |

***இரண்டாவது மொழியாக தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பு முறைமைகள் ஆகிய பாடநெறிகள் கலைமாணி பட்டநெறியில் மட்டுமே போதிக்கப்படும்.**

மானிடவியல் பீடத்தால் நடாத்தப்படும் மேலே குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகளுக்குரிய பாடங்களைப் பயில்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- அரங்கேற்ற கலைகள் (இசை/ நடனம்) கற்கைநெறியினைப் பயில்வதற்கு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் குறிப்பிடப்பட்ட பாடத்தில் குறைந்தது சாதாரண (S) சித்தியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஆங்கில கற்றைநெறியினைப் பயில்வதற்கு க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண(S சித்தியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- பிரெஞ்சு மற்றும் ஜப்பானிய மொழி கற்கைநெறியினைப் பயில்வதற்கு க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் பிரெஞ்சு அல்லது ஜப்பானிய மொழியில் குறைந்தது சாதாரண சித்தியினைக் (S) கொண்டிருத்தல் வேண்டும் அல்லது குறித்த துறையினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- மொழிபெயர்ப்பு முறைமைகள், இரண்டாம் மொழியாகத் தமிழ் ஆகிய கற்கைநெறிகளிற்கு குறித்த துறையால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) கற்கைகளிற்கு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் ஆங்கில இலக்கியத்தில் குறைந்தது சாதாரண சித்தியினைக் (S) கொண்டிருத்தல்.

மானிடவியல் பீடத்தினால் நடாத்தப்படும் ஏனைய கற்கைநெறிகளுக்கு குறித்த தேவைப்பாடுகள் எதுவுமில்லை.

## சமூக விஞ்ஞான பீடம்

**1. இளங்கலை (பொது) பட்டப் பாடநெறி** - இப்பீடத்தின் மூலம் பொருளியல், அரசியல், சர்வதேச கற்றைகள், சமூக புள்ளிவிபரவியல், தொல்பொருளியல், வரலாறு, உளவியல், புவியியல், மெய்யியல், அபிவிருத்திக் கல்வி, மக்கள் தொடர்பாடல், நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம், உல்லாசத்துறை மற்றும் பண்பாட்டுவள முகாமைத்துவம், மானுடவியல், விளையாட்டு மற்றும் சரீர விஞ்ஞானக் கல்வி, சமுதாய விஞ்ஞானம், மனித உறவு மற்றும் ஊடக முகாமைத்துவம்

**2. இளங்கலை (கௌரவ) பட்டப் பாடநெறி** - மானுடவியல் பாடத்தை தவிர்த்து மேலே 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அனைத்துப் பாடங்களும்.

அபிவிருத்திக் கற்கைகள் மற்றும் புவியியல் ஆகிய இரு பட்டப்படிப்புக்களும் சிங்கள மற்றம் ஆங்கில மொழிகளில் நடத்தப்படுகின்றன.

**3. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் கௌரவ கலைமாணி** - நான்கு ஆண்டு காலப் பட்டப்படிப்புப் பாடநெறியாக அமையும் இப்பாடநெறியைப் பின்பற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று பாடங்களில் தோற்றி பல்கலைக்கழக அனுமதியைப் பெற பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கலாம். இவ்விளமாணி நிகழ்ச்சித்திட்டம் ஆங்கில மொழிமூலம் மட்டும் நடாத்தப்படும்.

**3. இளங்கலை (கௌரவ) பட்டப் பாடநெறி** - மானுடவியல் பாடத்தை தவிர்த்து மேலே 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அனைத்துப் பாடங்களும்.

**4. சர்வதேசக்கல்வி இளங்கலை (கௌரவ) பட்டப் பாடநெறி** - ஆங்கில மொழி மூலம் மட்டும் நடாத்தப்படும்.

சமூக விஞ்ஞான பீடத்தில் பாடங்களைத் தெரிவு செய்யும்போது ஆரம்ப அறிவுத்தகுதியாகப் பின்வருவன இருக்க வேண்டும்.

1. சமூக புள்ளிவிபரவியல் பாடநெறியைப் பின்பற்ற க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் குறைந்தது "C" சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.
2. புவியியல் பாடநெறியினைக் கற்பதற்கு க.பொ.த. (உ.த.) பரீட்சையில் அப்பாடத்தில் "S" சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

சமூக விஞ்ஞான பீடத்தால் வழங்கப்படும் மற்றைய பாட நெறிகளைப் பின்பற்ற அடிப்படைத் தகைமைகள் அவசியமில்லை.

மானிட பண்பாட்டியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களினால் முன்வைக்கப்படும் கலைமானி பட்டப் படிப்புப் பாடநெறியானது மூன்று வருட கல்வியாண்டுகளையும் கலைமானி கௌரவ பட்டப் படிப்புப் பாடநெறியானது நான்கு வருட கல்வியாண்டுகளையும் கொண்டது. ஒரு கல்வியாண்டு இரு பருவங்களை (Semester) உள்ளடக்கியது. ஒரு பருவம் 15 கிழமைகளை உள்ளடக்கியது. கௌரவ பட்டப்படிப்புப் பாடநெறிகள் விடய அலகு முறைக்கமைய அமையும். விடய அலகு என்பது பற்று (Credit) அந்தஸ்துள்ள பாட அலகுகளாகும். பட்டப்படிப்புப் பாடநெறியை முழுமைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பற்றுக்களின் (Credit) அளவு உண்டு. அதற்கேற்ப பாடநெறி அலகுகளைத் தேர்ந்தெடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமுண்டு. பிரதான விடயப் பரப்பு இரண்டு அல்லது மூன்றினை அடிப்படையாகக் கொண்டு கலைமானி பட்டப் படிப்பினைப் பின்பற்றலாம். தமது பாடப்பரப்பின் கட்டாயப் பாடநெறிகளைக் கற்பதற்கு மேலதிகமாக மானிட பண்பாட்டியல், சமூகவியல், வணிகவியல், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் விஞ்ஞானம் போன்ற பீடங்களின் ஊடாக முன்வைக்கப்படும் சில பாடங்களையும் தமது விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து கற்பதற்கும் சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கலைமானி கௌரவ பட்டப்படிப்புப் பாடநெறியினைப் பின்பற்றுவதற்கு முதல் வருட இறுதிப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும்.

## வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடம் (வ.மு.க.பீ)
Faculty of Commerce and Management Studies (FCMS)

க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் வர்த்தகத் துறையில் தோற்றி சித்தியெய்திய மாணவர்களிடையே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு களனிப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடம் நான்கு வருடகாலப் பகுதி கொண்ட கௌரவ இளமாணிக் கற்கைகளை வழங்குகின்றது. அவையாவன : வர்த்தகமாணி கௌரவ கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி மனிதவள முகாமைத்துவ சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி கணக்கீடு சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி சந்தைப்படுத்தல் கௌரவ கற்கைநெறி மற்றும் வியாபார முகாமைத்துவமாணி நிதி சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி வங்கியியல் சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி காப்புறுதி சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி நிதிப்பொறியியல் சிறப்பு கற்கைநெறி என்பனவாகும். வர்த்தகமாணி கௌரவகற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்படுவோர் நேரடியாக வர்த்தக நிதி முகாமைத்துவ துறைக்கு உள்வாங்கப்படுகின்றனர். அதேவேளை முகாமைத்துவ கற்கைநெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவோர் உயர்தரத்தில் அவர்கள் பெற்ற Z புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு ஏனைய துறைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

### வர்த்தகமாணி கௌரவ கற்கைநெறி – Bachelor of Commerce Honours Degree programme

இதன் காரணமாக பாரம்பரிய வியாபார நடவடிக்கைகளுக்கு பதிலாக மின் வணிகம், மின் வர்த்தகம், மின் நிதி, மின் சந்தைப்படுத்தல், மின் நிறுவன வளத்திட்டமிடல் (EPR) முறை என்பனவற்றின் பாவனைக்கு பாரிய அளவில் பங்குகொள்கின்றது. இத்தகைய நவீன வர்த்தக அமைப்புகளின் நிர்வாக சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கும் நவீன வர்த்தக உலகில் காணப்படும் வாய்ப்புகளை இனம் கண்டு தமது வர்த்தகத்தினை ஆரம்பிப்பதற்கு தேவையான அறிவு, திறமை மற்றும் அணுகுமுறை என்பவற்றினால் தொழில் ரீ-தியாக தகுதி வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்காகவே இப் பாடநெறியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. சமகால வணிக உலகில் காணப்படும் மாற்று துறையில் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்தி கொள்வதற்கு ஏற்ற வகையிலான கீழ்காணும் நான்கு கற்கைநெறிகளை வணிக மற்றும் நிதி துறையானது அறிமுகப்படுத்தியுள்ளது.

வர்த்தகமாணி கௌரவ கற்கைநெறி
வர்த்தகமாணி கௌரவ தொழில் உரிமைத்துவம்
வர்த்தகமாணி கௌரவ வியாபாரத் தொழில்நுட்பம்
வர்த்தகமாணி கௌரவ நிதி முகாமைத்துவம்

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு கற்கைநெறிகளும் முதல் இரண்டு வருடத்தில் மாத்திரம் பொதுவானவை. பின்பு இரண்டாம் வருடத்தில் இருந்து தாம் விரும்பிய கற்கைநெறியில் கௌரவக் கற்கையினை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. இரன்டாம் வருட ஆரம்பத்திலிருந்து கல்வி பிரிவினரால் மாணவர்கள் உரிய பட்ட பாட நெறிக்காக பிரித்து வேறாக்கப்படுவதோடு அது முன்னர் தீர்மானிக்க பட்ட முறையான தெரிவு முடிவுகளின் அடிப்படையில் அமையும், அனைத்து கற்கைநெறிகளுக்குமான பாடத்திட்டங்களும் நான்கு வருடத்திற்க்கு ஒரு முறை மீளமைக்கப்படும். மற்றும் அணைத்து கற்கைநெறிகளும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும். நான்காம் வருடத்தில் மாணவர்கள் அவர்களது கல்வி துறைக்கு ஏற்ப செய்முறை பயிற்சிக்கு முன்வைக்கப்படுவார். இக் காலத்தில் பகல் நேர விரிவுரைகளில் இருந்து அவர்கள் விலக்களிக்கப்படுவர்.

#### வர்த்தகமாணி கௌரவ கற்கைநெறி
வர்த்தகமாணி கௌரவ கற்கைநெறியானது வணிக துறையின் பொரும்பகுதியை உள்ளடக்க்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறியானது வணிகம் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நடைமுறை மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவை வழங்குவதாக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலமாக தேசிய மற்றும் சர்வதேச போட்டி ரீதியான வர்த்தக உலகுக்கு தேவையான திறமைவாய்ந்தோரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

#### வர்த்தகமாணி கௌரவ தொழில் உரிமைத்துவம்
இக் கற்கைநெறியானது இலங்கையில் புதிய தொழில்களை உருவாக்குவதற்கான ஊக்கமளிப்பின் மூலமாக தனிப்பட்ட மற்றும் குழுவான முறையில் முயற்சியாண்மை தேர்ச்சியை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இச் சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தும் வகையில் இப் பாடநெறியானது உயர்ந்த தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கும் அவற்றை முகாமை செய்வதற்கு கோட்பாட்டு ரீதியான பரந்த அறிவையும் வழங்குகின்றது.

#### வர்த்தகமாணி கௌரவ வியாபாரத் தொழில்நுட்பம்
நவீன வணிக உலகம் தொழில்நுட்பத்தில் பெரிதும் தங்கியுள்ளது. இதன் காரணமாக மின் வர்த்தகம், மின் வணிகம், எண்ணிலக்க (டிஜிட்டல்) சந்தைப்படுத்தல், வணிக பகுப்பாய்வு, கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச சூழலில் நிரம்பட் சங்கிலி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் தகமை வாய்ந்த பட்டதாரிகளின் கேள்வி நிலவுகின்றது. இத் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட இலங்கையின் நவீன பட்ட கற்கை நெறியின் சகல நிபுணத்துவதையும் கொண்டுள்ள பட்ட கற்கை நெறியாக வர்த்தகமாணி கௌரவ வியாபார தொழில்நுட்ப கற்கை நெறியினை குறிப்பிடலாம். ஆகையால் இப்பட்ட கற்கை நெறியானது நவீன வணிக

துறைக்கான பட்ட கற்கைநெறியாக முன்வைக்கப்படுவதோடு மாணவர்களின் நவீன வர்த்தக மற்றும் வணிக முகாமைத்துவ துறையின் அறிவுக்கு மேலதிகமாக வர்த்தக துறையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனை பற்றிய நிபுணத்துவத்தை வழங்குவதும் இப்பட்ட கற்கைநெறியின் நோக்கமாகும்.

**வர்த்தகமாணி கௌரவ நிதி முகாமைத்துவம்**

வர்த்தகமாணி கௌரவ நிதி முகாமைத்துவ கற்கைநெறியானது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கணக்கீடு மற்றும் நிதிசார் தொழில்களில் அதிகரித்துவரும் கேள்விகளுக்கு அமைய மாணவர்களை நெறிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களை இத் துறையில் மேலும் சிறப்புறச் செய்வதற்கு அவசியமான அனைத்து பாடநெறிகளையும் உள்ளடக்கியுள்ளது. இக் கற்கைநெறியானது மாணவர்கள் இக் குறித்த துறையில் கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியிலான அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மனித வள முகாமைத்துவத்தில் வணிக இளங்கலை (கௌரவ) பட்டம்**

கார்ப்பரேட் மற்றும் பொதுத் துறைகளில் மூலோபாய இலக்குகளை அடைவதற்கு மனித ஆற்றலைக் கண்டறிந்து அவற்றை வளர்ப்பதற்கான உண்மையான நோக்கத்துடன், மனிதவள முகாமைத்துவத் துறை அதன் முக்கிய கல்வித் திட்டமான மனிதவள முகாமைத்துவத்தில் இளங்கலை வணிக முகாமைத்துவப் (கௌரவ) பட்டத்தை வழங்கி வருகிறது. 1999 முதல் ஆயிரக்கணக்கான பட்டதாரி சுயவிவரங்களை வளப்படுத்தும்போது. கல்வியாளர்களும் அதன் மாணவர்களும் திணைக்களத்தின் பார்வையை உணர முயற்சி செய்கிறார்கள், இலங்கையில் சிறந்த முத்திரை குத்தப்பட்ட HRM தீர்வு வழங்குநராகவும், HRM ஆராய்ச்சி, ஆலோசனைகள் மற்றும் தொழில்துறையின் முதல் தேர்வுக்கான இயற்கையின் தேர்வாக மாறுவதற்கான அதன் நோக்கம் HRM பட்டதாரிகளுக்கும், HRM/HRD முதுகலை மாணவர்களுக்கு தொழில்முறை சிறந்த தேர்வு.

மனிதவள முகாமைத்துவத்தில் நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், முகாமைத்துவம் தகவல் அமைப்புகள் (எம்ஐஎஸ்), மொத்த தர முகாமைத்துவம், வணிக மற்றும் தொழிலாளர் சட்டம் மற்றும் திட்ட முகாமைத்துவம் போன்ற முக்கிய வணிக முகாமைத்துவ துறைகளின் வெற்றிகரமான பாதுகாப்பு உள்ளது, அதே நேரத்தில் மனித வள முகாமைத்துவத்தில் முக்கிய கவனம் செலுத்துகிறது, இது மிகவும் வலியுறுத்துகிறது நவீன கார்ப்பரேட் அரங்கில் திறமை இடைவெளியை நிரப்புவதன் மூலம் இளங்கலை பட்டதாரிகளின் அறிவு, திறன்கள் மற்றும் மதிப்புகள் அவர்களை இணக்கமாக்கின்றன.

மனிதவள முகாமைத்துவத்தைப் படிப்பதைத் தேர்ந்தெடுப்பது, இளங்கலை பட்டதாரிகள் தங்கள் வாழ்க்கையை மனிதவளக் களத்திற்கு மட்டுமே கட்டுப்படுத்துகிறார்கள் என்று அர்த்தமல்ல, ஆனால் நிதி மற்றும் தணிக்கை, சந்தைப்படுத்தல் மேலாண்மை, எம்ஐஎஸ் மற்றும் சட்டம் போன்ற பல்வேறு வாழ்க்கைப் பாதைகளைத் தேர்வு செய்ய அவர்களுக்கு அனுமதி உண்டு. அனைத்து மாணவர்களும் மேற்பார்வையிடப்பட்ட ஆய்வேடு மற்றும் 600 மணித்தியாலப் பயிற்சித் திட்டத்தால் மதிப்பீடு செய்யப்படுகின்றனர்.

மனிதவள தகவல் முறைமையில் உயர்தர சான்றிதழ் கற்கைநெறி மேலதிக தகைமையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு வழியமைக்கும், பட்டதாரிகள் மத்தியில் மனிதவள தகவல் முறைமையில் அறிவைப் பரப்பும் நோக்குடன் இந்த பட்டப்படிப்புத் திட்டத்தினை பயிலும் மாணவர்கள் தனியார்துறை அமைப்புடன் தொழில் அனுபவத்துடன்கூடிய கற்றல் வடிவமைப்பு ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

மேலும் தனியார்துறை அமைப்பினால் வழங்கப்படும் "வேலை தகைமைச் சான்றிதலுக்கான திறன்கள்" இல் உயர்தர சான்றிதழ் கற்கைநெறி நாட்டின் அடுத்த கட்ட மக்கள் சவால்களை எதிர்கொள்ள, மனிதவள பட்டதாரிகளுக்கு ஒட்டுமொத்த தேர்ச்சி ஒன்றிற்கான பல் திறன்களை விருத்திசெய்வதற்கான பொதுவான தளமொன்றினையும் உருவாக்குதலுடன் பட்டதாரி மாணவர்களின் மென்திறன் விருத்தியினையும் இலக்காகக் கொண்டுள்ளது.

இளங்கலை பாடத்திட்டத்தை வரையறுக்காமல், மனிதவள முகாமைத்துவ திணைக்களம் தனது கற்றல் இலக்கை மனிதவள முதுகலை பட்டம் மற்றும் மனித வள முகாமைத்துவத்தில் உயர் டிப்ளோமாவுக்கு விரிவுபடுத்துகிறது. கூடுதலாக, இது 2005 முதல் இளநிலை வணிக மேலாண்மை (பொது) பட்டம் என்ற தலைப்பில் வெளி பட்டப்படிப்பை வழங்கி வருகிறது.

**கணக்கியலில் வணிக மேலாண்மை (கௌரவ) இளங்கலை:**

இந்த பட்டப்படிப்பு திட்டம் கணக்கியல் துறையில் ஒரு தொழிலை நாட விரும்பும் மாணவர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நிலவும் வேலைவாய்ப்புகளுக்காக அறிவுள்ள மற்றும் திறமையான பட்டதாரிகளை உருவாக்குவதே இதன் நோக்கம். பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் கணக்கியல் அடிப்படையிலான பதவிகள் இந்த பட்டப்படிப்பு திட்டத்தின் பட்டதாரிகளை கோருகின்றன. மேலும், அங்கீகார செயல்முறை மற்றும் தொழில்முறை தொடர்புக்கு முக்கியத்துவம் அளிப்பது, கணக்கியல் மாணவர்கள் தொழில்முறை பயிற்சி பெற்றவர்களாக மாறுவதற்கான நடைமுறை பயிற்சி வாய்ப்புகளில் கணக்கியல் மாணவர்கள் நன்கு இடம்பிடித்திருப்பதை உறுதிசெய்கிறது. கூடுதலாக, பட்டப்படிப்பு திட்டம் வணிக நிர்வாகத்தில் பல தொழில் வாய்ப்புகளை வழங்குகிறது.

பட்டத்தின் பாடத்திட்டம் மாணவர்களுக்கு புதுப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவை வழங்குவதிலும், ஒவ்வொரு பாடநெறி அலகுகள் மூலமாகவும் தொழில் வெளிப்பாடுகளை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. பணக்கார கற்றல் மேலாண்மை அமைப்புடன் தொடர்புகொள்வதன் மூலம் இளநிலை பட்டதாரிகள் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட கற்றல் கலாச்சாரத்தை அனுபவிக்கின்றனர். மேலும் இளங்கலை பட்டதாரிகள் கணக்கியல் தொகுப்புகள் மற்றும் மேம்பட்ட மென்பொருள் தொகுப்புகளைக் கற்றுக்கொள்கிறார்கள், அவை நவீன நிறுவனங்களுக்குத் தேவையான திறன்களைக் கொண்டுள்ளன.

**தணிக்கை மற்றும் தடயவியல் கணக்கியலில் வணிக மேலாண்மை இளங்கலை (கௌரவம்)**

தடயவியல் கணக்காளர்களுக்கான கோரிக்கையை அதிகரிக்கும் மோசடிகளை அதிகரிப்பதால் இலங்கை சூழலில் தடயவியல் கணக்கியலின் முக்கியத்துவம் மற்றும் செல்லுபடியாகும். மேலும் தடயவியல் கணக்காளர்களுக்கு உலகில் அதிக தேவை உள்ளது. இந்த கோரிக்கையை பூர்த்தி செய்வதற்காக, "தணிக்கை மற்றும் தடயவியல் கணக்கியலில் வணிக மேலாண்மை இளங்கலை (கௌரவம்) என்ற பட்டப்படிப்பு திட்டத்தை கணக்கியல் துறை வழங்குகிறது. இலங்கையில் உள்ள ஒரு மாநில பல்கலைக்கழகம் வழங்கும் தடயவியல் கணக்கியலில் நிபுணத்துவம் பெற்ற முதல் இளங்கலை பட்டப்படிப்பு இதுவாகும்.

கணக்கியல் தொழில் மிகவும் சிக்கலானதாகி வருகிறது, மேலும் கணக்காளர்களுக்கான வேலை சந்தை மிகவும் போட்டித்தன்மையுடன் மாறிவிட்டது. தடயவியல் கணக்கியல் துறையில் நிபுணத்துவம் பெற்றது, வேலை சந்தையில் போட்டியை வெற்றிகரமாக வெல்ல

ஒரு கணக்கியல் இளங்கலை பட்டதாரிக்கு கூடுதல் தகுதியாக செயல்படும்.

**வணிக முகாமைத்துவ கௌரவ கணக்கியல் தகவல் அமைப்புகளில் பட்டம்**

தகவல் தொழில்நுட்பத்தின் விரைவான பரிணாமம் மற்றும் போட்டி ஒவ்வொரு தொழிலையும் முன்பை விட வேகமாக மாற்றுகிறது. மேலும், இலங்கை இப்போது வணிக செயல்முறையில் நன்கு அறியப்பட்ட இடங்களில் ஒன்றாக மாறியுள்ளது. எனவே, வணிகப் பிரிவில் பல்கலைக்கழகத்தில் நுழையும் மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கணக்கியல் முகாமைத்துவ படிப்புத் திட்டங்களைத் தொடங்க ஆர்வத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி உள்ளது.

வணிக முகாமைத்துவ கௌரவ கணக்கியல் தகவல் அமைப்புகள் தகவல் அமைப்புகளின் பட்டம் மற்றும் முகாமைத்துவ திறன்களுடன் கணக்கியல் துறையில் உயர்கல்வியைப் பெற மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. அதன்படி, கணக்கியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள மாணவர்களின் சிறந்த தேர்வாக இந்தக் பட்டப்படிப்பு இருக்கும்.

இலங்கையில் அரச பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் கணக்கியல் தகவல் அமைப்புகளில் நிபுணத்துவம் பெற்ற முதலாவது பட்டப்படிப்பு இதுவாகும். கணக்கியல் தகவல் அமைப்புகள் துறையில் நிபுணத்துவம் பெற்றிருப்பது, வேலை சந்தையில் போட்டியை வெற்றிகரமாக வெல்வதற்கு, கணக்கியல் பட்டதாரிக்கு கூடுதல் தகுதியாக செயல்படும்.

**நிதியியல் - வணிக முகாமைத்துவமாணி கௌரவமாணி**

நிதி திணைக்களத்தினால் வழங்கப்படும் நிதியியல் - வணிக மகாமைத்துவ கௌரவமாணி பட்டப்படிப்பு திட்டமானது களனி பல்கலைக்கழகத்தில் ISO 9001:2015 தர சான்றளிக்கப்பட்ட வணிக முகாமைத்துவ பிரிவாகும். மேலும் நிதியியல் திணைக்களம் 2013-2018ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட சுய மதிப்பீட்டு மதிப்பாய்வுக்கான (SER) "A” தரத்தை பெற்றது.

நிதியியல் - வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டமானது இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் நிதிச் சேவைகள் தொழிற்துறையால் உருவாக்கப்படும் மிகப் பெரிய வளர்ச்சியை எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் படி இவ் நிகழ்ச்சித் திட்டமானது, நிதியியல் மற்றும் பொறியியல் துறைகளிலுள்ள முக்கிய பாடங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன, அடிப்படை பெரு நிறுவன நிதியியல், சேவை முகாமைத்துவம் மற்றும் வள திட்டமிடல், முகாமைத்துவ பொருளியல், அளவை பொருளியல், பணவியல் பொருளியல் முதலியனவாகும். நிதியியல் துறையில் முகாமைத்துவமாணி (கௌரவ) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை அமேரிக்காவின் பட்டய நிதி ஆய்வாளர்கள் நிறுவனமானது சீ.எப்.ஏ (CFA) அங்கீகாரமுடைய பட்டப்படிப்பாக ஏற்றுக் கொண்டுள்ளது. இருப்பினும் முதலாவது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையில் சீ.எப்.ஏ அங்கீகாரத்துடன் நிதித் துறையில் ஆரோக்கியமான பங்காளித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் வழிகோலுவதாய் அமைவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தையுடன் மாணவர்கள் ஆரோக்கியமான நட்புறவை ஏற்படுத்த நுளைவாயிலாகவும் விளங்குகிறது.

பட்டப்படிப்பில் அனைத்து பாடப்பிரிவுகளிலும் தொழிற் பயிற்சியானது இறுதி ஆண்டு பாடத்திட்டத்தில் ஒரு கட்டாய பாடப்பிரிவு ஆகும். இது, இளங்கலை பட்டதாரி மாணவர்கள் நடைமுறைத் தொழிற் சூழலில் அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் நாளாந்தம் துரிதமாக வளர்ந்துவரும் தொழிற்துறை பற்றிய அறிவினையும் வேலை வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்ளவும் உதவுகிறது. மேலும் ஆய்வு முறையில், கருத்துருவாக்கம், கோட்பாடுகளை உள்வாங்கி தமது அறிவினை மாணவர்கள் விருத்தி செய்யம் முகமாக இறுதி வருட மாணவர்கள் யாவரும் கட்டாயமாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும்.
நிதியியல் துறையால் அறிமுகப்படுத்தப்படும் புதிய பட்டப்படிப்பு திட்டத்தின் பிரகாரம் முதல் இரு வருடங்கள் பின்வரும் மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஒரே வகையில் விரிவுரைகள் அமையும். தமது கல்வி அடைவு மட்டங்களிற்கு ஏற்ப மூன்றாம் வருடத்திலிருந்து மாணவர்கள் பின்வரும் துறைகளில் ஒன்றைத் தெரிவு செய்து கௌரவ பட்டத்தை பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

நிதியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்
காப்புறுதித் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்
வங்கியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்

**காப்புறுதித் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்**

இந்த பட்டப்படிப்பானது பட்டதாரிகள் விரைவாக மாறும் வியாபார உலகின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, காப்பீட்டில் சிறப்பு அறிவைப் பெறும் முகமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்தப் பாடத்திட்டத்தில் காப்புறுதித் துறையின் முக்கிய அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவையாவன: எழுத்தாக்க முகாமைத்துவம், காப்பீட்டு கோரிக்கை முகாமைத்துவம், காப்பீட்டு இடர் முகாமைத்துவம், நடைமுறை மதிப்பீடு முதலியனவாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது எதிர்காலத்தில் காப்புறுதித் துறையில் தொழில்சார் அறிவு பெற்றுக்கொள்ளவும், தமது நிறுவனத்திற்கும் சமுதாயத்திற்கும் பெறுமதியான வகையில் செயலாற்றும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தங்கப்பதக்கங்களை வழங்க நிதித்துறையானது Peoples Insurane PLC, Union Assurance PLC, Janashakthi Insurance PLC, LOLC Life Assurance Limited/ LOLC Genera lInsurance PLC மற்றும் Softlogic Insurance PLC போன்ற நிதிநிறுவனங்களுடன் தொடர்புகளை மேம்படுத்திக் கொண்டுள்ளது.

**வங்கியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்**

இவ் வங்கியியல் துறைப்பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது வங்கியல் துறையின் எதிர்பார்ப்புகளுக்கமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பெற்றுக் கொண்ட அறிவையும், திறமையையும், மனப்பாண்மையும நடைமுறையையும், நுண்ணறிவையும், பயன்படுத்தி வங்கித்துறையில் முக்கிய பங்கை வகிக்கக்கூடிய எதிர்கால வங்கியியல் நிபுணர்களை வழங்குவதே இந்த பட்டப்படிப்பு திட்டத்தின் இலக்காகும். இந்தப் பாடத்திட்டத்தில் வங்கித் துறையின் முக்கிய அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவையாவன: கடன் முகாமைத்துவம், கருவூல முகாமைத்துவம், வங்கியில்லா நிதி வர்த்தகம், முதலீடு மற்றும் அபிவிருத்தி வங்கியியல் முதலியனவாகும்.

மேலும் வங்கியியல் இளங்கலை பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு மற்றும் தங்கப்பதக்கங்களை வழங்குவதற்காக நிதியியல் துறையுடன் Institution of Bankers of Sri Lanka (IBSL) மற்றும் The Association of Professional Bankers of Sr Lanka (APB) போன்ற வங்கி நிறுவங்களுடன் தொடர்புகளை மேம்படுத்திக் கொண்டுள்ளது.

**நிதி பொறியியல் துறையில் வணிகமுகாமைத்துவமாணி கௌரவ பட்டநிகழ்ச்சித்திட்டம்**

நிதி பொறியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி பட்டமானது தனித்துவமான முறையில் வழங்கப்படுகின்றது. இந் நிகழ்ச்சித்திட்டமானது மாறுகின்ற நிதியியல் சேவைத் துறையின் தேவைக்கமைவாக நிதி பொறியியல் துறையில் விசேட அறிவினைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டமானது எதிர்காலத்தில் இடர் முகாமைத்துவம், உற்பத்தி அபிவிருத்தி ஆகிய துறைகளில் திறன் வாய்ந்த நிபுணர்களை உருவாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டத்தில் நிதியியல் கணித மாதிரிகள், நிதியியல் நுட்பங்கள், திறன் கணிதம் மற்றும் தேர்வுமுறை முதலிய நிதி பொறியியல் துறையின் முக்கிய அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இவ் கற்கைநெறியை அமேரிக்காவின் பட்டயநிதி ஆய்வாளர்கள் நிறுவனம் சீ.எப்.ஏ. (CFA) அங்கீகாரமுடைய பட்டப்படிப்பாக ஏற்றுக்கொண்டுள்ளது.

மேலும் நிதிப்பொறியியல் இளங்கலை பட்டதாரிகள் தொழில் பயிற்சி மூலம் ஒன்றரை வருட தொழில் அனுபவங்களை பெறலாம். மேலும் நிதித்துறையானது NDB Capital Limited, Acuity Knowledge Partners, மற்றும் KPMG போன்ற நிறுவகங்களுடன் இணைந்து வேலைவாய்ப்புகள் மற்றும் பட்டதாரிகளக்கு தங்கப்பதக்கங்களை வழங்குகின்றது.

**வியாபார முகாமைத்துவமாணி சந்தைப்படுத்தல் கௌரவ கற்கைநெறி**

வணிக மேலாண்மைக்கான இளங்கலை கௌரவ சந்தைப்படுத்தல் பட்டம் சந்தைப்படுத்தல் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது. இது களனிப் பல்கலைக்கழகத்தில் ISO 9001:2015 தரச்சான்றிதழ் பெற்ற வணிக முகாமைத்துவ திணைக்களமாகும். இந்த பட்டப்படிப்பு திட்ட வடிவமைப்பானது திறமையான மற்றும் இயலுமைமிக்க மற்றும் தன்னம்பிக்கை கொண்ட சந்தைப்படுத்தல் மூலோபாயவாதிகள், ஆற்றல்மிக்க மற்றும் போட்டி வணிகச்சூழல்களில் சிறந்து விளங்க முடியும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

பட்டப்படிப்பு திட்டத்தின் பாடத்திட்டமானது ஒரு தனித்துவமான இரு அடுக்கு பட்டதாரி சுயவிவரத்தை சுற்றி கட்டமைக்கப்பட்டுள்ளது. அங்கு மாணவர்கள் நான்கு முக்கிய திறன் பகுதிகளில் “நிபுணத்துவம்” மற்றும் “முதுநிலை” மூலம் படிப்படியாக முன்னேறுகிறார்கள். அவசிய அடிப்படை திறன்கள், வணிகத் திறன்கள், ஆற்றல் திறன்கள் மற்றும் பல்துறை திறன்கள். இந்த தனித்துவமான அணுகுமுறை, சந்தைப்படுத்தல் துறையில் விதிவிலக்கான மதிப்பை உருவாக்க தேவையான நடைமுறை அறிவு, மூலோபாய சிந்தனை மற்றும் புத்துருவாக்க திறன்களுடன் பட்டதாரிகளை சித்தரிக்கிறது.

பட்டப்படிப்புடன், இளங்கலை பட்டதாரிகளுக்கு நிறுவன வளத் திட்டமிடல் (DERP) மற்றும் டிப்ளோமா இன் பீப்பிள் ஸ்கில்ஸ் (DPS) ஆகியவற்றைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

மேலும் இளங்கலை பட்டதாரிகளை வெற்றிகரமாக முடித்த பட்டதாரிகள் சந்தைப்படுத்தல், மக்கள் திறன்களில் டிப்ளோமா (DPS) , மற்றும் நிறுவன வளங்கள் திட்டமிடலில் டிப்ளோமா (DERP) ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்கள், தொழில்துறை-கல்வி அங்கீகார அமைப்பால் வழங்கப்படும் சான்றளிக்கப்பட்ட “Certified Professional Marketing Graduate (CPMG)” பட்டத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட CPMG அங்கீகாரக் குழுவினால் நடத்தப்பட்ட கடுமையான தெரிவு செயன்முறையின் பின்னர் களனிப் பல்கலைக்கழகத்தின் உயர் செயல்திறன் மற்றும் விதிலக்கான சந்தைப்படுத்தல் பட்டதாரிகளுக்கு இந்த தலைப்பு வழங்கப்படுகிறது.

**வியாபார முகாமைத்துவமாணி டிஜிட்டல் சந்தைப்படுத்தல் கௌரவ பட்டம்**

வணிக மேலாண்மைக்கான இளங்கலை கௌரவ டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டம் சந்தைப்படுத்தல் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது. இது களனிப் பல்கலைக்கழகத்தில் ISO 9001:2015 தரச்சான்றிதழ் பெற்ற வணிக முகாமைத்துவ திணைக்களமாகும். இந்த பட்டப்படிப்பு திட்ட் வடிவமைப்பானது திறமையான மற்றும் இயலுமைமிக்க மற்றும் தன்னம்பிக்கை கொண்ட சந்தைப்படுத்தல் மூலோபாயவாதிகள், ஆற்றல்மிக்க மற்றும் போட்டி வணிகச்சூழல்களில் சிறந்து விளங்க முடியும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

பட்டப்படிப்பு திட்டத்தின் பாடத்திட்டமானது ஒரு தனித்துவமான இரு அடுக்கு பட்டதாரி சுயவிவரத்தை சுற்றி கட்டமைக்கப்பட்டுள்ளது. அங்கு மாணவர்கள் நான்கு முக்கிய திறன் பகுதிகளில் “நிபுணத்துவம்” மற்றும் “முதுநிலை” மூலம் படிப்படியாக முன்னேறுகிறார்கள். அவசிய அடிப்படை திறன்கள், வணிகத் திறன்கள், ஆற்றல் திறன்கள் மற்றும் பல்துறை திறன்கள். இந்த தனித்துவமான அணுகுமுறை, சந்தைப்படுத்தல் துறையில் விதிவிலக்கான மதிப்பை உருவாக்க தேவையான நடைமுறை அறிவு, மூலோபாய சிந்தனை மற்றும் புத்துருவாக்க திறன்களுடன் பட்டதாரிகளை சித்தரிக்கிறது.

பட்டப்படிப்புடன், இளங்கலை பட்டதாரிகளுக்கு நிறுவன வளத் திட்டமிடல் (DERP) மற்றும் டிப்ளோமா இன் பீப்பிள் ஸ்கில்ஸ் (DPS) ஆகியவற்றைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

மேலும் இளங்கலை பட்டதாரிகளை வெற்றிகரமாக முடித்த பட்டதாரிகள் சந்தைப்படுத்தல், மக்கள் திறன்களில் டிப்ளோமா (DPS), மற்றும் நிறுவன வளங்கள் திட்டமிடலில் டிப்ளோமா (DERP) ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்கள், தொழில்துறை-கல்வி அங்கீகார அமைப்பால் வழங்கப்படும் சான்றளிக்கப்பட்ட “Certified Professional Marketing Graduate (CPMG)” பட்டத்திற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட CPMG அங்கீகாரக் குழுவினால் நடத்தப்பட்ட கடுமையான தெரிவு செயன்முறையின் பின்னர் களனிப் பல்கலைக்கழகத்தின் உயர் செயல்திறன் மற்றும் விதிலக்கான சந்தைப்படுத்தல் பட்டதாரிகளுக்கு இந்த தலைப்பு வழங்கப்படுகிறது.

## விஞ்ஞான பீடம்

களனிப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடமானது 3 வருட காலத்திற்கான 3 விஞ்ஞானமாணி பட்டப்படிப்புகளையும், 4 வருட காலத்திற்கான 20 விஞ்ஙான கௌரமாணி பட்டப்படிப்புகளையும் வழங்குகின்றது. அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. விஞ்ஞானமாணி மற்றும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்புகள்.
2. சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞானமாணி மற்றும் சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்புகள்.
3. பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு.
4. பிரயோக இரசாயனவியல் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பு.
5. இலத்திரனியல் மற்றும் கணினி விஞ்ஞானம் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பு.
6. தகவல் தொழில்நுட்பம்/ முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்புகள்.
7. மென்பொருள் பொறியியல் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பு.
8. விளையாட்டு விஞ்ஞானம் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பு.

**1. விஞ்ஞானமாணி மற்றும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்புகள்.**

விஞ்ஞானமாணி பட்டப்படிப்பானது உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீகவியல் விஞ்ஞானத் துறைகளில் பின்வரும் பாட சேர்க்கைகளின்படி 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

| துறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானம் | உயிர் இரசாயனவியல் - இரசாயனவியல் - நுண்ணுயிரியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | உயிர் இரசாயனவியல் - இரசாயனவியல் - தாவர உயிரியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | உயிர் இரசாயனவியல் - இரசாயனவியல் - விலங்கியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - கணினிக்கற்கைகள் - தாவர உயிரியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - கணினிக்கற்கைகள் - விலங்கியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - நுண்ணுயிரியல் - விலங்கியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - தாவர உயிரியல் - நுண்ணுயிரியல் | E* |
| உயிரியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - தாவர உயிரியல்- விலங்கியல் | E* |

| துறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|
| பௌதீகவியல் விஞ்ஞானம் | பிரயோக கணிதம் - இரசாயனவியல் - தூய கணிதம் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | பிரயோக கணிதம் - கணினி விஞ்ஞானம் - தூய கணிதம் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | பிரயோக கணிதம் - பௌதீகவியல் - தூய கணிதம் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | பிரயோக கணிதம் - தூய கணிதம் - புள்ளிவிபரவியல் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - கணினி விஞ்ஞானம் - தூய கணிதம் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | இரசாயனவியல் - கணினி கற்கைகள் - தூய கணிதம் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | கணினி விஞ்ஞானம் - பௌதீகவியல் - தூய கணிதம் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | கணினி விஞ்ஞானம் - தூய கணிதம் - புள்ளிவிபரவியல் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | கணினி கற்கைகள் - இலத்திரனியல் - பௌதீகவியல் | E* |
| பௌதீகவியல் விஞ்ஞானம் | இலத்திரனியல் - பௌதீகவியல் - தூய கணிதம் | E* |

* கற்கைநெறிகள் முதலாம் வருட முதலாம் அரையாண்டில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலமும், முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஏனையவை ஆங்கில மொழி மூலமும் நடாத்தப்படும்.

உயிரியல் விஞ்ஞானத்திற்கான மாணவர்களின் விருப்பப் பாடத்தெரிவானது முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஆரம்பமாகும் மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை உரிய அளவை விட அதிகரிப்பின் அவர்களின் முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சையின் அடைவு மட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். உயிரியல் விஞ்ஞானத்தில் உயிர் இரசாயனம், கணனிக் கற்கைகள் மற்றும் நுண்ணுயிரியல் ஆகிய பாடங்கள் வரையறுக்கப்பட்ட அனுமதிகளைக் கொண்டிருக்கும்.

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஆரம்பமாகும் பௌதீக விஞ்ஞானத்திற்கான மாணவர்களின் விருப்பப் பாடத்தெரிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை உரிய அளவை விட அதிகரிப்பின் அவர்களின் முதலாம் வருட முதலாம் அரையாண்டிலிருந்தே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். பௌதீக விஞ்ஞானத்தில் இரசாயனவியல், கணனி விஞ்ஞானம், கணனிக் கற்கைகள் மற்றும் இலத்திரனியல், பௌதீகவியல் மற்றும் புள்ளிவிபரவியல் ஆகிய பாடங்கள் வரையறுக்கப்பட்ட அனுமதிகளைக் கொண்டிருக்கும்.

பட்டநெறி மாணவர்கள் மூன்று ஆண்டுகளிலும் பெற்றுக்கொள்ளும் மதிப்புக்களின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு விஞ்ஞானமாணி பட்டம் வழங்கலில் கவனத்திற்கொள்ளப்படும்.

விஞ்ஞான பீட மாணவர்கள் இரண்டாம் கல்வியாண்டின் இறுதியில் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றை கௌரவ பட்டநெறிப் பாடமாக தெரிவு செய்ய முடியும். மாணவர்கள் நான்கு ஆண்டுகளிலும் பெற்றுக் கொள்ளும் மதிப்புக்களின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் வழங்கலில் கவனத்தில் கொள்ளப்படும்.

| இல. | பட்டப்படிப்பு | காலவரையறை |
|---|---|---|
| 1. | உயிர் இரசாயனவியல் - விஞ்ஞான கௌரவமாணி | 4 ஆண்டுகள் |
| 2. | இரசாயனவியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 3. | கணினி விஞ்ஞானம் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 4. | கணினிக்கற்கைகள் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 5. | இலத்திரனியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 6. | கணித பௌதீகவியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 7. | கணிதம் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 8. | நுண்ணுயிரியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 9. | மூலக்கூற்று உயிரியல் மற்றும் தாவர உயிரியல் தொழில்நுட்பம் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 10. | பௌதீகவியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 11. | தாவர உயிரியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 12. | புள்ளிவிபரவியல் - விஞ்ஞான கௌரவமாணி | |
| 13. | விலங்கியல் - விஞ்ஞான கௌரவமாணி | |

**2. சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞானமாணி மற்றும் சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்புகள்.**

களனிப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தினால் முறையே மூன்று மற்றும் நான்கு வருடங்களுக்கான சூழல் பேணலும் விஞ்ஞானமாணி மற்றும் சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்புகளை வழங்குகின்றன.

இப்பட்டப் படிப்பானது தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் சூழல் பேணலும் முகாமைத்துவ பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது. இதன் பாடத்திட்டமானது முகாமைத்துவம், இரசாயனவியல், விலங்கியல், தாவரஉயிரியல், உயிரியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆகிய பல்துறைகளின் சேர்க்கையாக அமைக்கப்பட்டுள்ளது. பொருளியல், சட்டம் ஆகியவை தொடர்பான பாடப்பரப்புக்களின் ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. இப் பாடத்திட்டம் மூலம் தாவரம் மற்றும் விலங்குகளின் பன்முகத்தன்மை (Diversity of Plant and Animal), சூழலியல்(Ecology), வனவியல்(Forestry), நீரியல்(Hydrology), நீர் வள முகாமைத்துவம் (Water Resource Management), வன வாழ் உயிரின முகாமைத்துவம் (Wildlife Management), பாதுகாப்பு உயிரியல் (Conservation Biology), சுற்றாடல் பொருளியல் (Environmental Economics), மண் வள பாதுகாப்பு(Soil Conservation), காற்று தர முகாமைத்துவம்(Air Quality Management), திண்ம கழிவுகள், கழிவு நீர் மற்றும் அபாயகரமான கழிவு முகாமைத்துவம்(Solid Waste, Waste Water and Hazardous Waste Management)> சுற்றாடல் கண்காணிப்பு(Environmental Monitoring), சுற்றாடல் சுகாதாரம்(Environmental Health), சுற்றாடல் தாக்க மதிப்பீடு நடைமுறைகள்(Environmental impact assessment Practices) மற்றும் தொலை உணர்வுக்கு பயன்பாடுகள்(GIS and remote sensing applications),சுற்று சூழல் கொள்கைகள் மற்றும் சட்டம் இயற்றல் மற்றும் சட்டமியற்றல்(environmental policies and legislation), காலநிலை மாற்றங்கள்(climatic changes), இயற்கை அனர்த்தங்கள்(Natural Disasters), பசுமை தொழில் நுட்ப நடைமுறைகள் (Green Technologies)ஆகிய விசேடமான துறைகளில் நிபுணத்துவம் பெற வழிவகுக்கப்படுகின்றது.

இப் பட்டப்படிப்பானது, சகல மாணவர்களுக்கும் சூழல் பேணலும் முகாமைத்துவம் தொடர்பான சிறந்த தொழில் நுட்ப மற்றும் தொழில் துறை நிபுணத்துவம் வழங்கப்படுகின்றது. அத்தோடு சூழல் பேணலும முகாமைத்துவம் சம்பந்தமான துறை சார்பான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ளவும் உரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விஞ்ஞானமாணி பட்டதாரி மாணவர்களால் குறுகிய கால குழு ஆராய்ச்சி திட்டங்களில் ஈடுபடுவதோடு, விஞ்ஞான கௌரவமாணி மாணவர்கள் ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய்ய கூடிய விசேட ஆராய்ச்சி திட்டங்களிலும் ஈடுபடுவார்கள். இதற்கு மேலதிகமாக சூழல் பேணலும் முகாமைத்துவம் சம்பந்தமான மிக உயர்தரமான தலைப்புகளுக்கும் விஞ்ஞான கௌரவமாணி மாணவர்கள் ஈடுபடுத்தபடுவார்கள்.

சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞானமாணி பயிலும் மாணவர்கள் இரண்டாம் கல்வியாண்டின் இறுதியில் சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பு பயில விண்ணப்பிக்க முடியும். மாணவர்கள் நான்கு ஆண்டுகளிலும் பெற்றுக் கொள்ளும் மதிப்புக்களின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் வழங்கலில் கவனத்திற் கொள்ளப்படும்.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞானமாணி | 3 ஆண்டுகள் | சூழல் பேணலும் முகாமைத்துவமும் | E |
| சூழல் பேணலும் முகாமைத்துவமும் விஞ்ஞானமாணி | 4 ஆண்டுகள் | சூழல் பேணலும் முகாமைத்துவமும் | E |

3. **பௌதீகவியல் மற்றும் இலத்திரனியலில் - விஞ்ஞானமாணி**

இது பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் ஆகிய இரு பிரதான பாடங்களையும் மற்றும் மூன்றாவது பாடப்பரப்பிற்கு சமமாக உள்ளடக்கக்கூடிய கணிதம் மற்றம் முகாமைத்துவம் அல்லது கணிதம் மற்றும் கணனிக் கற்கைகள் ஆகிய பகுதி-களை உள்ளடக்கிய மூன்று வருடகால பட்டக்கற்கை நெறியாகும். இதன் குறிக்கோள், க.பொ.த. உயர்தரத்தில் பௌதீக-வியல், இணைந்த கணிதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்ற மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேவைகளை பூர்த்திசெய்த விஷேட மாணவர் குழுவாக இணைத்துக் கொள்வதாகும்.

பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்கையில் பட்டதாரிகள் பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் சம்மந்தமான பட்டக்கற்கையின் தரத்தின் சிறந்த அறிவும், நிபுணத்துவமும் மற்றும் தெளிவும் பெற்றிருப்பதோடு அதற்கு மேலதிகமாக கணிதம் மற்றும் கணனிக் கற்கைகள் சம்மந்தமான சிறந்த அறிவு கொண்ட பட்டதாரிகளாகவும் செயற்பட வழிவகுக்கின்றது.

களனிப் பல்கலைக்கழகத்தின் நிதி முகாமைத்துவக் கற்கைப்பிரிவு, புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானக் கற்கைகள் மற்றும் கணிதக் கற்கைகள் பிரிவு ஆகியவற்றின் உதவியோடு பௌதீகவியல் மற்றும் இலத்திரனியவியல் கற்கைதுறையினால் இக் கற்கைநெறி நடாத்தப்படுகின்றது.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் - விஞ்ஞானமாணி | 3 ஆண்டுகள் | பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் | E* |

* கற்கைநெறிகள் முதலாம் வருட முதலாம் அரையாண்டில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலமும், முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஏனையவை ஆங்கில மொழி மூலமும் நடாத்தப்படும்.

4. **பிரயோக இரசாயனவியல் - விஞ்ஞான கௌரவமாணி**

பிரயோக இரசாயனவியல் விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பானது, பிரயோக இரசாயனவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அதன் பயன்பாடுகள், ஆய்வகங்களில் பயன்படுத்தப்படும் பகுப்பாய்வு நுட்பங்களில் திறன்கள், தொழில்துறை சார்ந்த பிரயோக இரசாயனவியல் துறைகளில் மேம்பட்ட அறிவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பன்முகப்படுத்தும் வகையில் தேசிய மற்றும் உலகளாவிய தேவைகளுக்கேற்ப பட்டதாரிகளை வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| பிரயோக இரசாயனவியல் விஞ்ஞான கௌரவமாணி | 3 ஆண்டுகள் | பிரயோக இரசாயனவியல் | E |

5. **இலத்திரனியல் மற்றும் கணினி விஞ்ஞானம் - விஞ்ஞான கௌரவமாணி**

விஞ்ஞான பீடமானது மற்றுமொரு பட்டப்படிப்பை கல்வியாண்டு 2020/2021 இலிருந்து வழங்குகின்றது. இப்பட்டப்படிப்பானது இலத்திரனியல் மற்றும் கணினி விஞ்ஞானத்தின் கோற்பாடுகள் மற்றும் நடைமுறை பின்னணிகளாகக் கொண்டு மென்பொருள் நிபுணத்துவம் பெற்ற பட்டதாரிகளை தேசிய பொருளாதாரத்திற்கு உற்பத்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| இலத்திரனியல் மற்றும் கணினி விஞ்ஞானம் - விஞ்ஞான கௌரவமாணி | 4 ஆண்டுகள் | இலத்திரனியல் மற்றும் கணினி விஞ்ஞானம் | E |

6. **தகவல் தொழில்நுட்பம் - விஞ்ஞான கௌரவமாணி/ முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பம் - விஞ்ஞான கௌரவமாணி**

இந்த நான்கு வருட கௌரவ பட்டப்படிப்பப்பானது முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் விரிவான அறிவு மற்றும் திறன்களை வழங்குகின்றது. மாணவர்கள்ஈ முதலாம் ஆண்டு நிறைவில் தகவல் தொழில்நுட்பம் - விஞ்ஞான கெ-ளரவமாணி அல்லது முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் - விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பைத் தொடர தெரிவு செய்யப்படுவார்கள். மாணவர்களின் செயல்திறன் மற்றும் விருப்பின் அடிப்படையில் உரிய பட்டப்படிப்பிங்கான இறுதித் தெரிவு மேற்கொள்ளப்படும்.

### 6.1 தகவல் தொழில்நுட்பம் - விஞ்ஞான கௌரவமாணி

இந்த பட்டப்படிப்பின் அடுத்த மூன்று வருடங்கள், மாணவர்களின் தொழில் நோக்கத்தைப் பொறுத்து அவர்களின் தகவல் தொழில்நுட்பத் திறன்களை வளர்ப்பதில் கவனம் செலுத்தும். கணினி நிபுணர்களின் அதிகரித்து வரும் தேசிய மற்றும் சர்வதேச தேவையை கருத்திற் கொண்டு இந்த பட்டப்படிப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டப்படிப்பின் பாடத்திட்டமானது யுஊஆ மற்றும் ஐநுநுநு போன்ற அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை அமைப்புகளின் சமீபத்திய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதோடு மென்பொருள் பொறியில், தரவு அறிவியல், கணினி பொறியில், தரவுத்தள நிர்வாகம், வலையமைப்பு பொறியில், வணிக பகுப்பாய்வு மற்றும் மென்பொருள் தர பொறியில் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பத் துயைில் தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களுடனான மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 6.2 முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டப்படிப்பு கற்கைநெறி

இந்த பட்டப்படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் தமது மூன்று வருட கால கல்வி ஆண்டினுள் கீழ் கண்ட பிரிவுகளில் சிறப்பு தேர்ச்சினையும் பெறுவர். தகவல் தொழில்நுட்பம் (Information Technology-IT), வணிக அமைப்புப் பொறியியல் (Business Systems Engineering-BSE) மற்றும் செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் (Operations and Supply Chain Management-OSCM) ஆகிய பாடங்களையும் கணணித்துறையில் தகவல் அமைப்புக்கள் (Information Systems-IS) மற்றும் ஆகியவற்றையும் தெரிவு செய்ய முடியும்.

**(அ) வணிக அமைப்புப் பொறியியல்** (Business Systems Engineering-BSE)
வணிக அமைப்புப் பொறியியல் எனப்படுவது ஒரு வர்த்தகத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தேவையான வர்த்தக செயற்பாடுகள், கொடுக்கல வாங்கல்களை அடையாளம் காண்பதோடு அவற்றை செயற்படுத்துவதற்கான, விரிவான அனுகுமுறையாகும். உலகச் சந்தையில் போட்டியிடுவதற்கு எமது நிறுவனங்கள் தமது செயன்முறைகளை உலகத் தரத்தில் முகாமைத்துவச் செயற்பாடுகளைத் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வர்த்தக சந்தர்ப்பங்களை அடைவதற்கு மீளத் திட்டமிடுகிறது.

**(ஆ) செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்** (Operations and Supply Chain Management-OSCM)
இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பாடவிதானமானது வினியோகச் சங்கிலி செயற்பாடுகளின் முகாமைத்துவத்துக்குரிய உலகத் தரத்தில் செயற்பாடுகளைத் தகவல் தொழில்நுட்பத்தைப் அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே இந்த நிகழ்ச்சித்திட்டமானது செயற்பாடுகள் மற்றும் வினியோகச் சங்கிலி முகாமைத்துவத்தில் காணப்படும் வர்த்தக செயற்பாட்டு முகாமைத்துவத்திற்குரிய தொழில்சார் அறிவு மற்றும் திறமை களை வெளிக்க காட்டுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**(இ) தகவல் அமைப்புக்கள்** (Information Systems-IS)
தகவல் அமைப்புக்களானது வர்த்தக தீர்மானங்களை எடுப்பதற்குரிய தகவல்களை பிரதான தீர்மானம் எடுப்பவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்குவது தொடர்பான மூலோபாயத்தினை நிகழ்த்துகின்றது. பங்குதாரர்களுக்குரிய உச்ச வரவினை பாவனையாளர்களிடமிருந்து பெருவதற்குரிய பொருட்கள் மற்றும் சேவைகளை செயற்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் வழங்குகின்றது. எனவே தற்போதைய மாறிவரும் மற்றும் போட்டிகரமான வர்த்தக சூழலில் தகவல் தொழில் நுட்பவழங்களை முகாமைத்துவப்படுத்துவது வெற்றிக்குக் காரணமாக அமைகிறது. தகவல் தொழில்நுட்பத்தின் பிரதானநோக்கமாக அமைவது தொழில்நுட்பத் தேவை பெருகி, பராமரிப்பு மற்றும் தகவல் அமைப்புகளை மேம்படுத்தத் தேவையான தொழில்முனைஞர்களை அதற்குரிய அறிவுடையோர்களாக மனிதவள மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்வதுடன் நிறுவன உத்திகள் மற்றும் நடைமுறைகளுடன் சிறப்பாக கட்டுப்பட்டவர்களாக உருவாக்குவதே ஆகும்.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பம் - விஞ்ஞான கௌரவமாணி / முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்படும் - விஞ்ஞான கௌரவமாணி | 4 ஆண்டுகள் | முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் | E |

### 7. மென்பொருள் பொறியியல் - விஞ்ஞான கௌரவமாணி

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ACM வழிகாட்டுதல்களின்படி வடிவமைக்கப்பட்ட இந்த நான்கு ஆண்டு பட்டப்படிப்பு, உள்ளூர் மற்றும் சர்வதேச தொழில்துறையில் மென்பொருள் பொறியாளர்களாக செயற்பட தேவையான திறன்கள், அறிவு, பொறியியல் பயிற்சி மற்றும் மனப்பான்மைகளைப் பெற மாணவர்களுக்கு உதவுகிறது. ஆறு மாத பயிற்சி வாய்ப்பு (Internship) மாணவர்களுக்கு அவர்களின் தொழில்நுட்ப அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்துறை வெளிப்பாடுகளை வழங்கும். மேலாக, ஒரு வருட மென்பொருள் பொறியியல் ஆராய்ச்சி கூறு(Software Engineering Research Component) இந்த திட்டத்தின் ஒரு தனித்துவமான அம்சமாகும். இந்தப் பட்டப்படிப்பைப் பின்பற்றும் மாணவர்கள் ஆறு (06) சிறப்புப் பயன்பாட்டுக் களங்களை இணைத்துக்கொண்டு தங்கள் சொந்த ஆர்வமுள்ள துறையில் நிபுணத்துவம் பெற நெகிழ்வுத்தன்மையை வழங்கியுள்ளனர் நெட் சென்ட்ரிக் (Net Centric), மொபைல் கம்ப்யூட்டிங் (Mobile Computing),டிஜிட்டல் கேமிங் மற்றும் அனிமேஷன் (Digital Gaming and Animations), சுகாதார தகவலியல் (HealthInformatics), வணிகபொறியியல் பயன்பாடுகள்(Business Engineering Applications ), மற்றும் தரவு அறிவியல் மற்றும் பொறியியல் பயன்பாடுகள்(Data Science and Engineering Applications)

**அ) நிகர மையம்** (Net Centric)

நிகர மைய சிறப்பு (Net Centric Specialization) என்பது மேம்பட்ட வலை பயன்பாடு (Advanced Web Application), விநியோகிக்கப்பட்ட மற்றும் கிளவுட் கம்பியூட்டிங் (Cloud) மற்றும் ஆன்டாலாஜிக்கல் இன்ஜினியரிங் (Ontological Engineering) ஆகியவற்றில் வெற்றிகரமான மென்பொருள் பொறியியளாளர்களாகுவதற்குத் தேவையான மேம்பாட்ட திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆ) நகர்வுக் கணிமை** (Mobile Computing)

மொபைல் கம்பியூட்டிங் (Mobile Computing ) என்பது வேகமாக வளர்ந்து வரும் கம்பியூட்டிங் பகுதியாகும்,இது மகத்தான சந்தை திறனையும் வளர்ச்சியையும் கொண்டுள்ளது. மொபைல் கம்பியூட்டிங் நிபுணத்துவம், மொபைல் கம்பியூட்டிங் தொழில்நுட்பங்கள் (Mobile Technologies), மொபைல் நெட்வோர்க்குகள் (Mobile Networks) மற்றும் மொபைல் பயன்பாட்டு மேம்பாட்டில் (Mobile Application Development) மேம்பாட்ட திறன்களை உருவாக்குதல் பற்றிய முழுமையான அறிவை வழங்குகின்றது.

**இ) எண்மம் விளையாட்டு மற்றும் அசைவூட்டம்** (Digital Gaming and Animations)

இந்த நிபுணத்துவம் அதி நவீன டிஜிட்டல் கேமிங் மற்றும் அனிமேசன் (Digital Gaming and Animations) தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவை வழங்குகின்றது மற்றும் டிஜிட்டல் கேமிங் மற்றும் அனிமேசன் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவையான மேம்பட்ட திறன்களை உருவாக்குகின்றது.

**ஈ) சுகாதார தகவலியல்** (Health Informatics)

இந்த நிபுணத்துவம் சுகாதார தகவல் மேலான்மை, சுகாதார தகவல் அமைப்பு வடிவமைப்பு மற்றும் மேம்பாடு மற்றும் மருத்துவ சிந்தனை (Medical imaging ) மற்றும் பயோமெடிக்கல் செயலாக்கம் (Biomedical Signal Processing) பற்றிய மேம்பட்ட அறிவை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. மருத்துவ தகவல் (Medical Infomatics) உடன் இணைந்த மென்பொருள் பொறியியல் திறன்கள்,மேம்பட்ட மென்பொருள் பொறியியல் திறன்களைக் கொண்ட சுகாதாரத் தகவல் வல்லுநர்களுக்கான துறையில் உள்ள இடைவெளியை நிரப்பும்.

**உ) வணிக பொறியியல் பயன்பாடுகள்** (Business Engineering Applications)

மென்பொருள் பொறியியல் என்பது நவீன வணிக பயன்பாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். வணிக பொறியியல் பயன்பாடுகள் நிபுணத்துவம் ஒரு மென்பொருள் பொறியியலாளருக்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்குகிறது மற்றும் வணிக செயல்முறைகள் மற்றம் சேவைகளை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை செயல்படுத்துகிறது. பாடத்திட்டத்தில் வணிக அமைப்புகள் மாதிரி மற்றும் தேர்வுமுறை, கணனி அடிப்படையிலான செயற்பாட்டு மேலாண்மை மற்றும் வணிக செயல்முறை பொறியியல் உள்ளக்கப்படுகின்றன.

**ஊ) தரவு விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பயன்பாடுகள்** (Data Science and Engineering Applications)

தரவு விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பயனபாடுகள், வணிக நுண்ணறிவு மற்றும் முகாமைத்துவ ஆதரவு அமைப்புகளை உருவாக்கல், பெரிய தரவு உட்கட்டமைப்புகளை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துல் மற்றும் நுண்ணறிவுகளை வழங்குவதற்கும் புதிய உறவுகளைக் கண்டறிய பெரிய தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் தேவையான மேம்பட்ட அறிவு மற்றும் திறன்களுடன் மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| மென்பொருள் பொறியியல் - விஞ்ஞான கௌரவமாணி | 4 ஆண்டுகள் | மென்பொருள் பொறியியல | E |

**8. விளையாட்டு விஞ்ஞானம் - விஞ்ஞான கௌரவமாணி**

இப் பட்டப்படிப்பானது மாணவர்களின் அறிவு, திறன்கள், மனப்பாண்மை மற்றும் மனப்போக்கு ஆகியவற்றை விருத்தி செய்து அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் விளையாட்டுத் துறையில் தொழில் வாய்ப்புக்கு பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் பட்டப்படிப்பிற்கு அனைத்து துறை மாணவர்களையும் தயார்படுத்துவதற்காக அறிவியலில் அடித்தளம் மற்றும் பொது முக்கிய திறன்களை வழங்கும் வகையில் நான்கு (4) வார அடித்தள நிகழ்ச்சி நடத்தப்படும். இவ் அடித்தள நிகழ்ச்சியானது விளையாட்டு விஞ்ஞானம் - விஞ்ஞான கௌரவமாணி பட்டப்படிப்பிற்கான நேரடி பாதையாக பட்டப்படிப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமாகும். விளையாட்டு விஞ்ஞான பாடநெயிகளுக்குத் தேவைப்படும் க.பொ.த. உயர்தரப் பாடங்களைப் படித்த மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த பாதையாகும். இவ் அடித்தள நிகழ்ச்சியினை திருப்திகரமாக முடித்த மாணவருக்கு நிறைவுச் சான்றிதழ் வழங்கப்படும்.

| பட்டப்படிப்பு | காலவரையறை | பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற) | மொழிமூலம் |
|---|---|---|---|
| விளையாட்டு விஞ்ஞானம் - விஞ்ஞான கௌரவமாணி | 4 ஆண்டுகள் | விளையாட்டு விஞ்ஞானம் | E |

**மருத்துவ பீடம்**

**மருத்துவ சத்திரசிகிச்சைக் கற்கை** (M.B.B.S)

மருத்துவ சத்திரசிகிச்சைக் கற்கையானது, ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒவ்வொன்றும் பத்து வாரங்களைக் கொண்ட மூன்று தவணைகளையுடைய ஒன்றிணைக்கப்பட்ட உறுப்புத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட ஐந்து வருடங்களைக் கொண்டது. ஒவ்வோர் கட்டத்தின் இறுதியில் அமைந்த மூன்று துறைசார் பரீட்சைகளைக் கொண்டது. முதலாம் இரண்டாம் வருடங்களின் போதான முதற் கட்டமானது, சாதாரண உடலமைப்பு மற்றும் உடற்தொழில் தொடர்பானது. மூன்றாம் நான்காம் வருடங்களின் போதான இரண்டாம் கட்டமானது நோய்க்கான மூல காரணங்கள், நோயியல், சிகிச்சைகள் மற்றும் நோய்தடுப்பும் நோய்கட்டுப்பாடும் தொடர்பானது. மூன்றாம் ஆண்டில் ஆரம்பமாகும் மருத்துவவியற் பயிற்சியானது பல்வேறுபட்ட சிறப்புத்துறைகளுடனான இணைப்புக் கற்கைகளைக் கொண்டது. நான்காம் ஆண்டுக் காலப்பகுதியில், மாணவர்கள் சிறு குழுக்களாக மேற்பார்வையின் கீழான ஆய்வினைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும். முற்றிலும் வைத்தியசாலை சார்ந்த இறுதியாண்டின் போதனா மூன்றாம் கட்டமானது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பல்கலைக்கழக அலகுகளில் கற்கை நெறியைக் கொண்டது. மருத்துவ சத்திரசிகிச்சைமாணி இறுதியாண்டுப் பரீட்சையானது, மருத்துவம், பெண் நோயியலும் மகப்பேற்றியலும், குழந்தை மருத்துவம், மன நோயியல் மற்றும் சத்திர சிகிச்சையியல் ஆகிய ஐந்து துறைகளைக் கொண்டது.

கற்கைநெறியின் போதனா மொழி முற்றிலும் ஆங்கிலம் ஆகும். இறுதியாண்டு மருத்துவ சத்திர சிகிச்சைமானிப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பயிலுனர் வைத்தியராக 12 மாதகால சேவையை நிறைவு செய்வது, இலங்கையில் மருத்துவராகப் பணியாற்றுவதற்கான முழுமையான பதிவினை இலங்கை மருத்துவச் சபையில் மேற்கொள்ள அவசியமாகும்.

**பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டம்**

**பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்**

இவ் விசேட பட்டப்படிப்பே இலங்கையில் பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானத்தில் (பேச்சு மொழிச்சிகிச்சை அல்லது செவிப்புலனியலில் கௌவர பட்டம்) கௌவர பட்டத்தை பெற்றுக்கொள்வதற்கான ஒரேயொரு பட்டப்படிப்பாகும். இப்பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்வது இலங்கையில் தொழில் முறைசார திறன் மிக்க ஓர் பேச்சு மொழி சிகிச்சையாளர் அல்லது செவிப்புலனியலாளர் ஆவதை குறிக்கின்றது. பாடத்திட்டமானது வகுப்பறை சார்ந்த கற்றல் நடவடிக்கைகளையும் மற்றும் சுகாதாரம், கல்வி மற்றும் புனர்வாழ்வு துறைகளில் பல்வேறு அமைப்புக்களில் பயிற்சி அனுபவங்களையும் கொண்டிருக்கும். இப் பட்டப்படிப்பின் ஒட்டுமொத்த நோக்கமானது தொடர்பாடல் பிரச்சினைகளைக்கொண்ட நபர்களிற்கும் அவர்களின் குடும்பத்திற்கும் பலவிதமான புனர்வாழ்வு சேவைகளை வழங்கக்கூடிய, அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களைக்கொண்ட திறமையான பேச்சு மொழி சிகிச்சையாளர்கள் செவிப்புலனியளாளர்களை பயிற்சியின் மூலம் உருவாக்குதல், இலங்கையிலுள்ள பரந்துபட்ட சமூகங்களிற்கு அல்லது தொடர்பாடல் இயலாமை பற்றிய விழிப்புணர்வு மற்றும் அறிவை உருவாக்கல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளுடான அவர்களின் சொந்த தொழில்முறை விருத்திகளூடாக இத் துறையில் கல்வித்தளத்தை மேம்படுத்தல். இப் பட்டப்படிப்பின் காலம் தொகுதிக் கட்டமைப்புக்களைக் (Modular structure) கொண்ட நான்கு வருடங்களைக் கொண்டதுடன் குறைந்தபட்சம் 120 கி-ரெடிட்ஸ் (Credits) தேவையையும் கொண்டதாகவுள்ளது. இறுதியாண்டில் கட்டாயமான ஆராய்ச்சி திட்டம் ஒன்று உள்ளது. இத்திட்டத்திற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் பரீட்சைகளுக்கான ஊடகம் ஆங்கிலம் ஆகும்.
மேலதிக தகவல்கள் மற்றும் விபரங்களுக்கு https://medicine.kln.ac.lk/depts/dds/ இணையத்தளத்தை அணுகவும்.

**செயல்வழிச் சிகிச்சையில் இளவிஞ்ஞானமாணி**

இந்த பட்டப்படிப்பானது செயல்வழிச் சிகிச்சையில் தொழில்முறை தகுதிக்கு வழிவகுக்கிறது. இப்பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவுசெய்வது செயல்வழிச் சிகிச்சையில் இளமாணிப் பட்டத்தை வழங்குவதற்கு வழிவகுக்கின்றது. அனைத்து வகையான இயலாமை கொண்ட மக்களுக்கம் மற்றும் அனைத்து வயதினரும் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான அறிவியல் அடிப்படையிலான சிகிச்சை தலையீடுகளை வழங்குவதற்காக செயல்வழிச் சிகிச்சையாளர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். இது மனநலப் பிரச்சனைகள், நீடித்த நோய்கள் மற்றும் குறுகிய மற்றும் நீண்ட கால காயங்களுடன் வாழ்கின்ற குழந்தைகள் மற்றும் வயதான பெரியவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இப் பட்டப்படிப்பின் ஒட்டுமொத்த நோக்கமானது மேம்படுத்தும், நிலைநிறுத்துகின்ற, மீண்டெடுக்க உதவுகின்ற புனர்வாழ்வு சேவைகளை வழங்குவதன் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட ஒருவரின் வாழ்க்கை முறையில் வித்தியாசத்தை வழங்கக்கூடிய திறன்கள், அறிவு மற்றும் தொழில்முறை அணுகுமுறைகளைக் கொண்ட சிறந்த செய்ல்வழி சிகிச்சையாளரை பயிற்றுவிப்பதாகும். இத் திட்டமானது 4 ஆண்டுகள் முழுமையாக வழங்கப்படுவதுடன், விரிவான வகுப்பரைசார்ந்த அடிப்படை கோட்பாடுகள் மற்றும் வேறபாட்டு எல்லைகளைக் கொண்ட சுகாதார அமைப்புகளிலும் மற்றும் வெவ்வேறு தேவைகளைக் கொண்ட மக்களிலும் ஓர் தீவிர மருத்துவப் பயிற்சியை கொண்டதாகும்.

## கணினி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்

பொறியியல் தொழிநுட்ப இளங்கலை கௌரவப் பட்டப்படிப்பு [Bachelor of Engineering Technology(Honours)] இப் பட்டப்படிப்பின் பயிற்சிக் காலம் 4 வருடங்கள் ஆகும். இந்த பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு களனிப்பல்கலைக்கழகமானது பொறியியல் தொழில்நுட்ப கௌரவ இளங்கலை பட்டத்தினை வழங்கும்.

இப் பொறியியல் தொழில்நுட்ப கௌரவ இளங்கலை பட்டப்படிப்பானது நடைமுறை விடயம் சார்ந்த விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் சிறந்த நடைமுறை அறிவை வழங்குவதுடன் பன்முகத்தன்மை வாய்ந்த தொழில் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பட்டதாரிகளை உருவாக்கவுள்ளது. இந்த பட்டப்படிப்பின் முதல் இரு வருடங்களானது பொறியியல் தொழில்நுட்பவியல் சார்ந்த பொதுவான திறமைகளை விருத்தி செய்வதை இலக்காக கொண்டுள்ளதுடன் அடுத்த இரு வருடங்களானது தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் விஷேட திறமையினை விருத்தி செய்யும் நோக்கினை இலக்காக கொண்டுள்ளது. தற்போது வழங்கப்படும் விசேட துறைகளாக கீழ்வருவன பட்டியலிடப்பட்டுள்ளது.

- ☐ பொருள் மற்றும் செயல் முறை பொறியியல் தொழில்நுட்பம் (Material and Process Technology
- ☐ தொழில்துறை தன்னியக்கம் மற்றும் ரோபோட்டிக்ஸ் (Industrial Automation and Robotics)
- ☐ நிலையான தொழில்நுட்பங்கள்(Sustainable Technologies)

தன்னியக்கம் மற்றும் தொழில்துறை ரோபோட்டிக்ஸ் துறையில் சிறப்பு தேர்ச்சியினை மேற்கொள்ளும் மாணவர்கள் கட்டுப்பாட்டு அமைப்பு தொடர்பான கணனி அல்லது ரோபோ மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் தொடர்பான வெவ்வேறு நடைமுறைகள் மற்றும் தொழில்சந்தைக்கு தேவையான இயந்திரங்கள் ஆகியவற்றை விருத்தி செய்யும் திறன்களை பெற்றுக் கொள்வர். பொருள் மற்றும் செயல் முறை பொறியியல் சிறப்பு தேர்ச்சியினை மேற்கொள்ளும் மாணவர்கள் வடிவமைப்பு நடைமுறைகள் மற்றும் கட்டமைப்பு ஆகிய செயற்பாடுகளின் மூலம் மூலப்பொருட்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை எவ்வாறு பெறுமதிமிக்க உற்பத்திப் பொருளாக மாற்றுதல் தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்வர்.

இந்த பட்டப்படிப்பினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தங்களது நான்காவது வருடத்தில் தொழில்துறை சார் பயிற்சியினை ஆறு மாதமளவிற்கு தொழில் சந்தையில் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும். இந்த பட்டப்படிப்பின் கற்பித்தல் மற்றும் மூலம் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் மூன்றாம் வருட கல்வியை தொடர்வதற்கு இரண்டாம் வருட இறுதியில் பல்கலைகழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச கல்விசார் அடைவு மட்டத்தினை பெற்று இருத்தல் வேண்டும்.

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளங்கலை கௌரவப் பட்டப்படிப்பு**

இந்த பட்டபடிப்பின் பயிற்சிக் காலம் 4 வருடங்கள் ஆகும். இப் பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு களனிப் பல்கலைக்கழகமானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் இளங்கலைப்பட்டத்தினை (ஹொன்ஸ்) வழங்கும்.

இந்த பட்டப்படிப்பின் மூலம் மாணவர்கள் மென்பொருள் தயாரிப்பாளர், இணைய நிர்வாகிகள், மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் தொழில் வல்லுனர்களாக தொழில் சந்தையில் செயற்படுவதற்கு தேவையான திறன்கள், அறிவு மற்றும் அணுகு முறைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள முடியும். இந்த பட்டப்படிப்பின் மூலம் மின்னியல் மற்றும் தகவல் தரவு தொடர்பு ஆகிய துறைகளில் சிறந்த அடிப்படை அறிவை பெறுவதுடன் இதற்கு துனையாக பயன்தகு ஆய்வுகூட நடைமுறை பயிற்சி நெறிகளும் வழங்கப்படுவதன் மூலம் தொழில் சந்தையின் தராதரத்திற்கு அமைவான மென்பொருள் மற்றும் கணினி வலையமைப்பு ஆகியவற்றை வடிவமைத்து விருத்தி செய்து அத்துடன் பேணும் அறிவினை வழங்கும். இந்த பட்டப்படிப்பில் கீழ் வரும் உப துறைகளான மெய்நிகராக்கல், கிளவுட் கம்பி!ட்டிங், இணைய முகாமைத்துவம், வயர்லஸ் மற்றும் மொபைல் தகவல் தொடர்பு, கணனி பாதுகாப்பு, வலை நிலராக்கல், மொபைல் அப்லிகேசன் உருவாக்கல், கணனி விளையாட்டு மற்றும் அனிமேஷன் மற்றும் மெய் நிகர் உண்மை ஆகிய துறைகளில் மாணவர்கள் தங்களுடைய விஷேட தகுதியினை தங்களுடைய ஆர்வத்திற்கு ஏற்றவாறு தெரிவு செய்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் மற்றும் நெகிழ்வுத் தன்மை ஆகியன இந்த பட்டப்படிப்பின் மூலம் வழங்கப்படவுள்ளது. தற்போது வழங்கப்படும் விசேட துறைகளாக கீழ்வருவான பட்டியலிடப்பட்டுள்ளது.

கணனி நேட்வேர்க்குகள் தொழில்நுட்பம் (Computer Networks Technology)
விளையாட்டு மற்றும் அனிமேஷன் (Games and Animation)
மென்பொருள் அமைப்பு தொழில்நுட்பம் (Software Systems Animation)

இந்த பட்டப்படிப்பினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தங்களது நான்காவது வருடத்தில் தொழில்துறை சார் பயிற்சியினை ஆறு மாதமளவிற்கு தொழில் சந்தையில் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும். இந்த பட்டப்படிப்பின் கற்பித்தல் மூலம் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் மூன்றாம் வருட கல்வியை தொடர்வதற்கு இரண்டாம் வருட இறுதியில் பல்கலைகழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச கல்விசார் அடைவு மட்டத்தினை பெற்று இருத்தல் வேண்டும்.

**கணினி விஞ்ஞானம் பி.எஸ்.சி ஹொனர்ஸ் பயிற்சி நெறி**

இந்த பட்டப்படிப்பானது 4 வருட கற்கைநெறியாக வழங்கப்படுவதுடன் இதன் இறுதியில் விஞ்ஞானமானி (கணினி விஞ்ஞானம், கௌரவ தேர்ச்சி) என்ற பட்டம் களனி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படவுள்ளது. இந்த பட்டப்படிப்பானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணினி தொடர்பான குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் கணினி இயந்திரங்கள் சங்கம் மற்றும் மின் மற்றும் மின்னனு பொறியியல் நிறுவனம் ஆகியவற்றின் வழிகாட்டல்களும் இப்பட்டப்படிப்பின் உருவாக்கத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த பட்டப்படிப்பின் மூலம் மாணவர்கள் மென்பொருள் சந்தை மற்றும் ஆய்வுகள் மூலம் கணினி விஞ்ஞானத்திற்குதேவையான அறிவினை வழங்குவதற்கு தேவையான திறன்கள் அறிவு மற்றும் அனுகுமுறைகள் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள முடியும். கணனி விஞ்ஞான அனுகுமுறை தொடர்பான ஆழ்ந்த அறிவினை வழங்குவதுடன் ஆய்வுகூட பயிற்சிகள் மூலம் மென்பொருட்களை உருவாக்கல் மதிப்பீடு செய்தல் நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான நடைமுறை அறிவினை செயல்முறை பயிற்சிகள் மூலம் மாணவர்கள் பெற்றுக்கொள்வர். இந்த பட்டப்படிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளானது விசேட திறமையினை பெற்றக்கொள்ள வழிவகுக்கும் தகவல் முறைமை, இயந்திர கற்றல், தகவல் பாதுகாப்பு, தொகுப்புகளின் கோட்பாடு, இணைகணிப்பீடு, உயர் செயல் திறன் கணினி, டிஜிட்டல் ஆய்வுத்துறை, பொருள் வலை மற்றும் இலத்திரனியல் வியாபார தொழில்நுட்பம். கணினி விளையாட்டு மற்றும் அனிமேஷன் மற்றும் மெய்நிகர் உண்மை ஆகிய துறைகளில் ஏதாவது ஒரு துறையில் சிறப்பு தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளும் முகமாக பாடப்பரப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்படும் விசேட துறைகளாக கீழ்வருவான பட்டியலிடப்பட்டுள்ளது.

தரவு அறிவியல் (Data Science)
செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence)
இணைய பாதுகாப்பு(Cyber Security)
அறிவியல் கொம்பியுட்டிங் (Scientific Computing)

இந்த பட்டப்படிப்பினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தங்களது நான்காவது வருடத்தில் தொழில்துறை சார் பயிற்சியினை 6 மாதமளவிற்கு தொழில் சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும். இந்த பட்டப்படிப்பின் கற்பித்தல் மற்றும் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படும். நான்காவது வருடத்தில் அனைத்து மாணவர்களும் தங்களுடைய விருப்பத்திற்கு அமைவான துறையில் ஆய்வுத்திட்டம் ஒன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

# மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| பொறியியல் | - | E |
| பொறியியல் (EM) | - | E |
| பொறியயல் (TM) | - | E |
| தகவல் தொழில்நுட்பம் (IT) | - | E |
| கட்டடக்கலை | - | E |
| வடிவமைப்பு | - | E |
| கணிய அளவையியல் | - | E |
| நகர தகவலியல் மற்றும் திட்டமிடல் | - | E |
| நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | - | E |
| வசதிகள் முகாமைத்துவம் | - | E |
| போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் விநியோக பொறியியல் (TMLE) | - | E |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | - | E |
| நிலத்தோற்றக் கட்டடக்கலை | - | E |
| வியாபார விஞ்ஞானம் | - | E |
| செயற்கை நுண்ணறிவு | - | E |

**கட்டடக்கலைப் பீடம்**

கட்டக்கலைப்பீடமானது இலங்கையில் கட்டடக்கலை, கணிய அளவையியல், வசதிகள் முகாமைத்துவம், வடிவமைப்பு திட்டமிடலும் போன்ற துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளை வழங்கிவரும் தனித்துவமான கற்கை நிறுவகமாக திகழ்கிறது. இப்பீடமானது கட்டடக்கலைத் திணைக்களம், கட்டடப் பொருளியல் திணைக்களம், பட்டினமும் நாடு திட்டமிடலும் திணைக்களம் மற்றும் ஒருங்கிணைந்த வடிவமைப்புத் திணைக்களம் போன்ற நான்கு பிரதான திணைக்களங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் கட்டடக்கலைப்பீடத்தினால் கட்டடக்கலை, நிலவடிவமைப்புக்கலை, கணிய அளவையியல், பட்டினமும் நாடு திட்டமிடலும், வசதிகள் முகாமைத்துவம் மற்றும் வடிவமைப்பு போன்ற துறைகளில் இளமாணிப்பட்டம் அளிக்கப்படுகிறது.

**கட்டடக்கலைத் திணைக்களமானது** ஐந்து வருட முழுநேர கௌரவ கட்டடக்கலை இளமானி [B.Arch. (Hons)] பட்டக் கற்கைநெறி மற்றும் நான்கு வருட முழுநேர கௌரவ நிலவடிவமைப்பு இளமாணி [B.L.A. (Hons)] பட்டக்கற்கைநெறி ஆகியவற்றை வழங்கி வருகிறது. கட்டடக்கலை இளமானி பட்டமானது, இலங்கை கட்டடக்கலையியலாளர் நிறுவகம் (SLIA) பிரித்தானிய கட்டடக்கலையியலாளர் நிறுவகம் (RIBA) மற்றும் கட்டடக்கலையியலாளர் பொதுநலவாய அமைப்பு (CAA) போன்றவற்றால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

**கட்டடப் பொருளியல் திணைக்களம்**

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கட்டிட பொருளியல் திணைக்களத்தால் வழங்கப்படும் கணிய அளவையியல் கௌரவ விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு, நான்கு வருட முழுநேர இளமாணி பட்டப்படிப்பாகும். இந்த பட்டப்படிப்பு கட்டுமானத் துறையில் கட்டிட அளவீடுகள், கட்டுமான பொருளாதாரம், வர்த்தக மேலாண்மை மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் தொடர்பான பரந்த அளவிலான பாடங்களை உள்ளிடக்கியது. இது கட்டிட வடிவமைப்பு, கட்டிட சேவைகள் மற்றும் ஒப்பந்த உறவுகளின் மேலாண்மை ஆகியவற்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட சூழலை ஆராய்வதற்குத் தேவையான திறன்களை வழங்குகிறது. இப்பட்டப்படிப்பு, கட்டுமான ஆலோசனை மற்றும் கட்டமைப்பு ஒப்பந்தம் மூலம் நடைமுறைத் திறன்களைப் பெறுவதை வலியுறுத்துகின்றது. தற்போது, கணிய அளவையியல் பட்டம் பரந்த அளவிலான தொழில் அனுபவ வேலைவாய்ப்புகள், ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது. இந்த பட்டப்படிப்பு உள்ளூர் மற்றும் சர்வதேச முன்னணி தொழில்துறை அமைப்புகளான இலங்கை கணிய அளவையியல் நிறுவனம் (IQSSL), பட்டய அளவையியலாளர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவையியலாளர் நிறவனம் (RICS), அவுஸ்ரேலியா கணிய அளவையியல் நிறுவனம் (AIQS), கட்டிட பொறியியல் அளவையியலாளர் பட்டய நிறுவனம் (CICES) மற்றும் பசிபிக் கணிய அளவையியலாளர் சங்கம் (PAQS) என்பவற்றால் அங்கீகாரம் பெற்றுள்ளது.

**நகர தகவலியல் மற்றும் திட்டமிடலும் திணைக்களம்**

நகர தகவலியல் மற்றும் திட்டமிடல் திணைக்களமானது நகர மற்றும் சூழல் அபிவிருத்தித் திட்டமிடலில் கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்தினை வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு நிறுவனமாகும். மேலும், இத்திணைக்களமானது நகர தகவல் விஞ்ஞானம், உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தித் திட்டமிடல், நகர அபிவிருத்தியும் வடிவமைப்பும் மற்றும் சூழல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்கின்றது. தற்போது இத்திணைக்களமானது நான்கு வருட கௌரவ விஞ்ஞான இளமாணி நகர தகவலியல் மற்றும் திட்டமிடல் [B.ScHons (UI&P)] பட்டக்கற்கைநெறியினை வழங்குகின்றது. இக்கற்கைநெறியானது இலங்கை நகர திட்டமிடலாளர் நிறுவகத்தினால் (ITPSL) அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். அத்துடன், தொடர்ந்தேர்ச்சியான நகர அபிவிருத்தித்துறையின் முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு மேம்படுத்தப்படும் ஒரு கற்கைநெறியாகும்.இக்கற்கைநெறி யினைப் பூர்த்தி செய்யும் பட்டதாரிகள் பிரதானமாக நகர அபிவிருத்தித் திட்டமிடல், சூழல் முகாமைத்துவம் மற்றும் நகர தகவலியல் சார்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி புரியக்கூடியவர்களாவர்.

**ஒருங்கிணைந்த வடிவமைப்புத் திணைக்களமானது** நான்கு வருட முழுநேர கௌரவ இளமானி வடிவமைப்பு [B.Des. Hons] பட்டக் கற்கைநெறியை வழங்கிவருகிறது. இக் கற்கைநெறியானது நவநாகரிக வடிவமைப்பு, ஊடக மற்றும் தொடர்பாடல் வடிவமைப்பு, உற்பத்தி வடிவமைப்பு ஆகிய மூன்று பெரும் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. இரண்டாவது பாடநெறியானது அலங்கார வடிவமைப்பு மற்றும் உற்பத்திபொருள் உருவாக்க வடிவமைப்பு (Fashion Design & Product Development) இளமாணி கௌரவப் பட்டமாகும் (BDes). இப் பாடநெறியானது நான்கு வருடகால முழுநேரப் பாடநெறியாக நடாத்தப்படுகிறது. தொழிற் பயிற்சியானது மூன்றாவது வருடத்தில் நடைபெறுகிறது. மூன்றாவது பாடநெறியானது போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ அறிவியல் இளமாணி கௌரவ பட்டமாகும் (BSc in Transport & Logistics Management). இப்பாடநெறியானது

## பொறியியல் பீடம்

பொறியியல் பீடமானது மூன்று முழுநேர பாடநெறிகளை வழங்குகிறது. முதலாவது பொறியியல் துறையின் அறிவியல் இளமானிச் கௌரவப் பட்டமாகும் (BSc Eng Hons). இப் பாடநெறிக்கு மாணவர்கள் மூன்று பிரிவுகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்: Engineering (MPR), Engineering (EM) மற்றும் Engineering (TM). இப் பாடநெறியானது நான்கு வருடகால எட்டு செமெஸ்டர்களில் பாட அலகு (course unit) முறையைப் பின்பற்றி நடைபெறும். ஒவ்வொரு செமெஸ்டரும், பரீட்சைக் காலம் உட்பட, 20 வார காலமுடையவை. Engineering (MPR) மாணவர்கள் முதலாவது செமெஸ்டரின் பின்னர் தமது விருப்பத்தின்படியும் முதலாவது பருவப் பெறுபேறுகளின்படியும் எட்டு துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அவையாவன: (1) உயிரியல் மருத்துவப் பொறியியல், (2) இரசாயனச் செயல்முறைப் பொறியியல், (3) குடிசார் பொறியியல், (4) கணனி அறிவியல் மற்றும் பொறியியல், (5) மின்சாரப் பொறியியல், (6) இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புப் பொறியியல், (7) எந்திரவியல் பொறியியல், (8) பொருள் அறிவியல் மற்றும் பொறியியல். Engineering (EM) மாணவர்கள் புவிவளப் பொறியியல் துறைப் பாடநெறியையும் Engineering (TM) மாணவர்கள் புடவை மற்றும் உடுதுணிப் பொறியியல் துறைப் பாடநெறியையும் பின்பற்றுவார்கள். பத்துத் துறைப் பாடநெறிகளிலும் ஆய்வுகூடவேலை, வடிவமைப்பு மற்றும் களவேலை உட்பட்ட பாடவேலையும் தொழிற்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளன. B.Sc. EngHons பாடநெறியானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொழில்சார் நிறுவனங்களால் அங்கீகாரம் பெற்றது.

## தகவல் தொழில்நுட்ப பீடம்

தகவல் தொழில்நுட்ப பீடமானது தகவல்தொழில்நுட்பம் (IT), கணக்கீட்டு கணிதம் (CM), மற்றும் இடைநிலை ஆய்வுகள் (IDS) ஆகிய மூன்று துறைகளை உள்ளடக்கியுள்ளது. இப்பீடம் பின்வரும் மூன்று 4 ஆண்டுப்பட்டங்களை வழங்குகின்றது. கௌரவ விஞ்ஞானமானி (தகவல்தொழிநுட்பம்), கௌரவ விஞ்ஞானமானி (தகவல்தொழிநுட்பம் மற்றும் மேலாண்மை), மற்றும் கௌரவ விஞ்ஞானமானி (செயற்கை நுண்ணறிவு) இந்த மூன்று பட்டங்களும் பல்கலைக்ககை அனுமதிக்கான கைநூலின் பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அதேவேளை வெவ்வேறு நுழைவு தகைமைகளைக் கொண்டுள்ளன.
இவ்விரண்டு கௌரவ இளமாணிப் பட்டங்களுக்குமான கற்பித்தல் மொழி ஆங்கிலமாகும்.

#### தகவல் தொழில்நுட்பத் துறையிலான கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரல்

தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான கேள்வி அதிகரிப்பிற்கேற்ப அறிவும் திறமையும் திடமும் கொண்ட மதிநுட்பம் மிக்க தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகளை உருவாக்குவதற்காக இப்பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரலானது வரையப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி நிரலில் நவீன தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்காக பட்டதாரிகளை உருவாக்கும் போது தகவல் தொழில்நுட்பத்தின் பரந்து விரிந்த தன்மை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத் துறையிலான கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரலின் தற்போதைய பாடத்திட்டங்களும் விதப்புரைகளும் கணனித் தொழில்நுட்பத்தின் சகல துறைகளையும் முகாமைத்துவ நடைமுறைகளையும் தொழிலக நோக்கங்களையும் உள்ளடக்கியுள்ளன. தகவல் தொழில்நுட்பத் துறையிலான கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கானது (பௌதீகம் ஒரு பாடமாக உள்ளடங்கியிருக்க வேண்டும்) முதலிரண்டு கல்வியாண்டுகளுக்கான நிகழ்ச்சி நிரலில் பன்முகப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்பத் துறையின் கட்டாயமான மையப்பாடநெறிகள் அடங்கியிருக்கும். மூன்றாம் கல்வியாண்டின் ஆரம்பத்திலிருந்து மாணவர்கள் தாமே தெரிவுசெய்யக்கூடிய பாடநெறிகள் மூலமாக கௌரவ பாடவிதானங்களை நோக்கி முனைப்புப்படுத்தப்படுவார்கள். மூன்றாம் கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிலகப் பயிற்சி உள்ளடங்கியிருக்கும். அது மாணவர்களுக்கு பலதரப்பட்ட வேலை அனுபவங்களையும் போட்டி மேலாண்மையையும் வழங்கவல்லது. இந்நிகழ்ச்சி நிரலானது படித்த கொள்கை சார்ந்த விடயங்களையும் நடைமுறை விடயங்களையும் இணைப்பதற்காக தொழிலகம் சார்ந்த வேலைத்திட்டங்களையும் உள்ளடங்கியதாயிருக்கும். கடைசிக் கல்வியாண்டில் ஆராய்ச்சிகளை மையப்படுத்திய மேற்கல்விப் பட்டப்படிப்புகளுக்காக உந்தப்பட்ட மாணவர்கள் விருப்பமாயின் தனிப்பட்ட ஆராய்ச்சி வேலைத்திட்டத்திலும் பங்குபெறலாம். இறுதி கல்வியாண்டின்போது முழுமை பொருந்திய கட்டாயமானதொரு குழு வேலைத்திட்டத்தில் சவாலான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினையொன்றை தீர்ப்பதற்காக மாணவர்கள் தங்கள் அறிவையும் திறன்களையும் பயன்படுத்துவார்கள்.

#### தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் என்ற துறையிலான கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரல்

தகவல் தொழில்நுட்பத் துறைக்கு இயைபாக்கம் அடையக்கூடியதாகவும் முகாமைத்துவ கொள்கைகளைப் பிரயோகிப்பதில் பரிச்சயமாகவும் உள்ள தகவல் தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான தேவை எப்போதும் அதிகரித்துச் செல்வதைக் கருத்திற்கொண்டு இப்பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரலானது 2010ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பலதரப்பட்ட மாணவர்களின் தொழில்நுட்பக் கல்விக்கான கதவுகளைத் திறப்பதை இலக்காகக் கொண்டுள்ள இந்நிகழ்ச்சி நிரலானது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய அனைத்துப் பிரிவு மாணவர்களுக்காகவும் திறந்துள்ளது. இப்பட்டப்படிப்பு நிகழ்ச்சி நிரலானது இளமாணிப் பட்டதாரிகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தின் முக்கிமான திறன்களோடு மேலதிகமான தரப்படுத்தப்பட்ட முகாமைத்துவ மேலாண்மையை வழங்குவதால் தகவல் தொழில்நுட்பத்துறையில் விரைவாக முகாமைத்துவ மட்டங்களுக்கு முன்னேற வழிசெய்கிறது. இந்நிகழ்ச்சி நிரலானது படித்த கொள்கை சார்ந்த விடயங்களையும் நடைமுறை விடயங்களையும் இணைப்பதற்காக, வியாபார மற்றும் முகாமைத்துவ கோட்பாடுகளை உள்ளடக்கிய வேலைத்திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. மூன்றாம் கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிலகப் பயிற்சி உள்ளடங்கியிருக்கும். அது மாணவர்களுக்கு பலதரப்பட்ட வேலை அனுபவங்களையும் போட்டி மேலாண்மையையும் வழங்கவல்லது. கடைசிக் கல்வியாண்டில் ஆராய்ச்சிகளை மையப்படுத்திய மேற்கல்விப் பட்டப்படிப்புகளுக்காக உந்தப்பட்ட மாணவர்கள் விருப்பமாயின் தனிப்பட்ட ஆராய்சி வேலைத்திட்டத்திலும் பங்குபெறலாம். கடைசிக் கல்வியாண்டின்போது முழுமை பொருந்திய கட்டாயமானதொரு குழு வேலைத்திட்டத்திலும் பங்குபெறலாம். கடைசிக் கல்வியாண்டின்போது முழுமை பொருந்திய கட்டாயமானதொரு குழு வேலைத்திட்டத்தில் சவாலான தகவல் தொழினுட்பம் சார்ந்த பிரச்சினையொன்றை தீர்ப்பதற்காக மாணவர்கள் தங்கள் அறிவையும் திறன்களையும் பயன்படுத்துவார்கள்.

#### செயற்கை நுண்ணறிவில் கௌரவு இளமாணிப் பட்டப்படிப்பு

பட்டதாரிகளுக்கான அதிகரித்து வரும் உலகளாவிய தேவையைப்பூர்த்தி செய்யும் வகையில் கௌரவஇளமானி (செயற்கை நுண்ணறிவு) பட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பாடத்திட்டத்தின் அமைப்பானது கோட்பாடு மற்றும் செயற்கை நுண்ணறிவுப்பயிற்சி, கணினி அறிவியல், கணிதம் மற்றும் விவரங்களின் பரந்த அளவியலான கோட்பாட்டை கொண்டுள்ளது. கணக்கீட்டு கணிதத்துறை,

இப்பாடத்திட்டத்தை 4 ஆண்டு பட்டமாக வடிவமைத்துள்ளது இது மாணவர்களின் செயற்கை நுண்ணறிவின் சரியான மனநிலையை பட்டப்படிப்பின் முதல் ஆண்டிலிருந்து உருவாக்குகிறது. கல்வி தொழில் மற்றும் பிற துறைகளைச்சேர்ந்த செயற்கை நுண்ணறிவு சார் நிபுணர்களுக்குகான உலகளாவிய மற்றும் உள்ளூர் கோரிக்கைகள் அதிவேகமாக அதிகரித்து வருகின்றன. இதனால் செயற்கை நுண்ணறிவு பட்டதாரிகளுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கலை | - | T |
| முகாமைத்துவம் | - | T/E |
| வர்த்தகம் | - | T/E |
| சட்டம் | - | E |
| மருத்துவம் | - | E |
| சித்த மருத்துவமும் அறுவைச்சிகிச்சையும் | - | T |
| விவசாயம் | - | E |
| உயி. விஞ்ஞானம் * | தயவுசெய்து கீழே பார்க்கவும் | T/E |
| பொறியியல் | - | E |
| பௌதிக விஞ்ஞானம் * | தயவுசெய்து கீழே பார்க்கவும் | T/E |
| கணனி விஞ்ஞானம் (நேரடி) | - | T/E |
| தாதியியல் | - | E |
| மருந்தகவியல் | - | E |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | - | E |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | - | E/T |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| உடற்கல்வி | - | E |
| இசை | - | T |
| நடனம் | - | T |
| சித்திரமும் வடிவமைப்பும் | - | T |

* **விஞ்ஞான பீடம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் நூற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டிசைப்படுத்தப்பட்ட கடன் மதிக்கப்பட்ட அரையாண்டு அடிப்படையிலான கற்கைநெறி முறைமையின் அடிப்படையிலேயே தொழிற்படுகின்றது. பட்டப்படிப்பு கற்கை நெறிகள் அலகு தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4 என்றவாறு 4 தரங்களாக நடாத்தப்படுகின்றது. கற்கைநெறி அலகுகளானது கீழ்க் குறிக்கப்படும் வகைகளிலிருந்து பெறப்படுகின்றது.

(அ) துணைக் கற்கைநெறிகள்
(ஆ) மேம்படுத்தல் கற்கை நெறிகள்
(இ) பிரதான பாடத்துறைகள்
(ஈ) குறைநிரப்பு பாடத் துறைகள்
(உ) விடய குறிப்பான துறைகள்
(ஊ) பீடங்களுக்கிடையிலான கற்கை நெறிகள்

**(அ) துணைக் கற்கை நெறிகள்: கீழ்வரும் துணைக் கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| (அ) | ஆங்கில மொழி I | மட்டம் I |
| (ஆ) | சமூக ஒற்றுமை மற்றும் செயற்பாட்டு குடியுரிமை | மட்டம் I |
| (இ) | ஆங்கில மொழி II | மட்டம் II |
| (ஈ) | தொழில் வழிகாட்டி | மட்டம் III |
| (உ) | முகாமைத்துவமும் தொழில்முயற்சி திறன்களும் | மட்டம் III |
| (ஊ) | தொடர்பாடல் திறன்கள் | மட்டம் III |

துணைக் கற்கை நெறி அலகுகள் தரச்சித்திகள் சாராத கற்கை நெறி அலகுகளாகும். எனினும் சகல துணை கற்கை நெறி அலகுகள் ஆய்வு செய்யப்பட்டு பட்டங்கள் வழங்குவதற்காக கரிசனைக்கு எடுக்கப்படுகின்றன.

**(ஆ) மேம்படுத்தல் கற்கைநெறிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | பௌதீக விஞ்ஞான மாணவர்களுக்கு உயிரியல் மற்றும் உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கு கணிதம் | மட்டம் I (2 தரச்சித்திகள்) |
| (ஆ) | கணினி அறிவு | மட்டம் I (2 தரச்சித்திகள்) |
| (இ) | விஞ்ஞானமும் சமூகமும் | மட்டம் I (2 தரச்சித்திகள்) |

**(இ) பிரதான பாடத்துறைகள்**

பீடமானது கீழ்வரும் பத்து பிரதான பாடப் துறைகளை வழங்குகின்றது.

- பிரயோக கணிதம்
- மீன்பிடியியல் விஞ்ஞானம்
- தாவரவியல்
- இரசாயனவியல்
- கணினி விஞ்ஞானம்
- கணிதம்
- பௌதிகவியல்
- தூயகணிதம்
- புள்ளிவிபரவியல்
- விலங்கியல்

**குறிப்பு:**

(அ) மட்டங்கள் 1ஜீ இலும் 2ஜீ இலும் பிரதான பாடங்களாக தூய கணிதத்தையும், பிரயோக கணிதத்தையும் எடுத்துள்ள மாணவர்களை கணிதத்தில் கணித தனித்த கௌரவ பட்ட கற்கைநெறிக்கு அனுமதிக்கப்பட முடியும்.

**(ஈ) பாட குறிப்பான துறைகள்**

கல்வி மற்றும் கணினி விஞ்ஞாணம் (நேரடி) போன்ற குறிப்பான பாடத்துறையில் கற்கைநெறியை பீடம் வழங்குகின்றது. கலைப் பீடத்தின் கல்வித் துறையிலிருந்து பணியாளர்களின் உதவியுடன் விஞ்ஞான இளமாணி மாணவர்களுக்கு (கல்வியுடன்) கல்வியில் கற்கைநெறிகளை மட்டுமே பீடம் வழங்குகின்றது.

(உ) **குறைநிரப்புப் பாடத் துறைகள்**

கிடைக்கக்கூடிய வளங்களைப் பொறுத்து பீடமானது பெருமளவு குறைநிரப்புப் பாடத் துறைகளில் கற்கை நெறிகளை வழங்குவதுடன், வழங்கப்படும் கற்கை நெறிகள் வருடத்திற்கு வருடம் மாறுபடலாம். குறைநிரப்புப் பாடத் துறைகளில் கற்கை நெறி அலகுகள் மட்டங்கள் 2ஜீ இலும் 3ஜீ இலும் மட்டுமே வழங்கப்படுகின்றன.

குறைநிரப்புப் பாடத் துறைகள்

- அடிப்படைக் கணனி
- இலத்திரனியல்
- சுற்றாடல் விஞ்ஞானம்
- உயிரியல் கணிதமும், புள்ளிவிபரவியலும்
- உயிர்தொழில்நுட்பம்
- உணவு விஞ்ஞானமும் போசாக்கும்

(ஊ) **பீடங்களுக்கிடையிலான கற்கை நெறிகள்**

விஞ்ஞானப் பீட சபையின் முன் அங்கீகாரத்துடன், நேரசூசி அனுமதித்தால் இப் பல்கலைக்கழகத்துடன் இன்னொரு பீடத்தினால் வழங்கப்படும் கற்கை நெறி அலகுகளை தெரிவு செய்யலாம்.

மூலாதார மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறி அலகுகள்

ஒவ்வொரு பிரதான பாடமும் மூலாதார மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறி அலகுகளைக் கொண்டிருக்கின்றது. சகல மட்டம் 1 கற்கைநெறி அலகுகள் மூலாதாரமானவை.

**வேறுபட்ட தரங்களில் கற்கைநெறி அலகுகளைக் தேர்ந்தெடுத்தலும், பதிவு செய்தலும்**

முதலாம் வருட கற்கைக்கான மாணவர்கள் 3 பிரதான பாடங்களுக்கும், சம்பந்தப்பட்ட அவற்றுக்குரிய துணை கற்கைநெறி அலகுகளுக்கும் பதிவு செய்துகொள்ளலாம். பிரதான பாடப்பரப்பிலிருந்து அனுமதிக்கப்பட்ட பாடச்சேர்க்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறிப்பிட்ட பாடத்திற்கும் அல்லது பாடச் சேர்க்கைக்கும் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையானது வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், இப்படிப்பட்ட பாடங்களுக்கு அல்லது பாடச்சேர்க்கைகளுக்கு மாணவர்கள் திறமை அடிப்படையிலும், க.பொ.த. (உ.த.) தரத்தின் பெறுபேற்றையும் அடிப்படையாகக் கொண்டு அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த நூற் கல்வி ஆண்டில் 2ஆம், 3ஆம், 4ஆம் வருட கற்கைக்கு மாணவர்கள் அவர்கள் விரும்பிய கற்கை நெறி அலகுக்கு கல்வியாண்டின் ஆரம்பத்தில் பதிவு செய்துகொள்ளலாம். மட்டமொன்றின் பதிவு செய்யப்பட்ட கற்கை நெறி அலகுகளின் திறமைச் சித்திகளின் மொத்த எண்ணிக்கை அம்மட்டத்திற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விட குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ இருக்கக் கூடாது.

விஞ்ஞான பீடச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கல்வி ஆலோசகர் மாணவர்களுக்கு கற்கைநெறி அலகுகளைத் தீர்க்கமாக தெரிவு செய்ய உதவி செய்வார்கள். பதிவு செய்துகொண்ட கற்கைநெறி அலகை பருவம் ஆரம்பித்து முதல் 2 வாரங்களுக்குள் மட்டும் மாணவரால் மீளப்பெறமுடியும். இது குறைந்த திறமைத் தேவையை குழப்பக்கூடாது. தகுந்த மற்றும் வைத்திய சான்றுகள் தவிர இந்த மீளப்பெறுகை கால அவகாசம் முடிந்தால் மாற்ற முடியாது.

குறிக்கப்பட்ட கற்கைநெறிக்கு ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். கிடைக்கக்கூடிய வளங்களைப் பொறுத்து திணைக்களமானது இந்த தொகையைத் தீர்மானிக்கும்.

**நான்கு வருட பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தெரிவு**

மூன்றாவது வருடத்தின் ஆரம்பத்தில் மாணவர்கள் ஹொனர்ஸ் பட்டப்படிப்பு (தனித்த மற்றும் இணைந்த) மற்றும் பி.எஸ்சி. (கல்வியுடன்) கற்கை நெறிகளுக்காக அனுமதிக்கப்படுகின்றார்கள். கிடைக்கக்கூடிய இடங்களையும், தரங்கள் 1ஜீ, 2ஜீ கற்கை நெறி அலகில் விண்ணப்பதாரியின் பெறுபேறையும் அடிப்படையாகக் கொண்டே அனுமதிகள் கிடைக்கின்றன. 2ஆம் வருட முடிவில் தாம் விரும்பும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தினைப் பின்பற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தனித்த சிறப்பு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது பின்வரும் கௌரவ பட்டப்படிப்பில் பிரதான பாடங்களாக வழங்கப்படுகின்றன. தாவரவியல், இரசாயனவியல், மீன்பிடியியல் விஞ்ஞானம், கணனி விஞ்ஞானம், கணிதம், பௌதிகவியல், புள்ளிவிபரவியல், விலங்கியல்

**அனுமதிக்கப்பட்ட பாடச்சேர்க்கைகள் - 1ஆம் வருடம்**

- தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல்
- தாவரவியல், விலங்கியல், மீன்பிடியியல் விஞ்ஞானம்
- தாவரவியல், இரசாயனவியல், மீன்பிடியியல் விஞ்ஞானம்
- இரசாயனவியல், விலங்கியல், மீன்பிடியியல் விஞ்ஞானம்
- தூய கணிதம், பிரயோக கணிதம், புள்ளிவிபரவியல்
- தூய கணிதம், பிரயோக கணிதம், கணினி விஞ்ஞானம்
- தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல்
- தூய கணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல்
- புள்ளிவிபரவியல், தூய கணிதம், இரசாயனவியல்
- புள்ளிவிபரவியல், தூய கணிதம், கணனி விஞ்.
- புள்ளிவிபரவியல், பிரயோக கணிதம், இரசாயனவியல்
- புள்ளிவிபரவியல், பிரயோக கணிதம், பௌதீகவியல்
- கணினி விஞ்ஞானம், தூய கணிதம், பௌதீகவியல்
- கணினி விஞ்., பிரயோக கணிதம், பௌதீகவியல்
- கணினி விஞ்., பிரயோக கணிதம், இரசாயனவியல்
- தூய கணிதம், பௌதிகவியல், புள்ளிவிபரவியல்
- இரசாயனவியல், கணினி விஞ்ஞானம், தூய கணிதம்
- இரசாயனவியல், கணினி விஞ்ஞானம், புள்ளிவிபரவியல்
- கணினி விஞ்ஞான (நேரடி) கற்கைநெறியானது குறிப்பிட்ட கற்கைநெறி அலகுகளைக் கொண்டுள்ளது.

**பொறியியல் தொழில்நுட்பம் கௌரவ இளங்கலைமாணி நிகழ்ச்சித் திட்டம்** [BET(Hons)]

யாழ் பல்கலைக்கழகத்தின் தொழினுட்பப் பீடத்தினால் வழங்கப்படும் இப் பொறியியல் தொழிநுட்பப் பாடநெறியானது பின்வரும் கௌரவ கற்கைநெறிகளை வழங்குகின்றது.

- மோட்டார் வாகனவியல்
- கட்டிட நிர்மாணவியல்
- இலத்திரனியல்

**கலைப்பீடம்**

**வழங்கப்படும் பாடங்கள் மற்றும் அவற்றின் தேர்வுகள் குறித்த விபரங்கள்:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர் ஒருவருக்குப் பின்வரும் பாடங்கள் அவரது தேர்வுப்பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கலைமாணிப் பட்டக்கற்கையில் உள்ளீர்க்கப்படுகின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிலை ஒன்று (ஆண்டு ஒன்று) பொதுவானதாகும்.

நிலை ஒன்று மாணவர்கள் கலைப்பீடத்தினால் வழங்கப்படும் பின்வரும் பாடங்களுள் எவையேனும் மூன்று பிரதான பாடங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். பாடங்களின் விபரம் வருமாறு:

மானுடவியல், தொல்லியல், கலை வரலாறு, கிறிஸ்தவ நாகரிகம், கலாசாரச் சுற்றுலா, நாடகமும் அரங்கலைக்களும், பொருளியல், ஆங்கில இலக்கியம் (ஆங்கில மொழிமூலம்), ஆங்கில மொழி கற்பித்தல் (ஆங்கில மொழிமூலம்), புவியியல், வரலாறு, மனைப்பொருளியல், மொழியியல், ஊடகக் கற்கைகள், மெய்யியல், சமுதாய மற்றும் பிராந்தியத் திட்டமிடல், அரசறவியல், உளவியல், சமூகவியல், தமிழ், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்.

மேலும், கலைப்பீடத்திற்கு அனுமதிக்கப்படுகின்ற மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடத்தினால் வழங்கப்படும் இந்து தத்துவம் (சைவசித்தாந்தம்), இந்து நாகரிகம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மூன்று பாடங்களுள் ஏதாவது ஒரு பாடத்தினைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படும். ஆயினும், குறிப்பிட்ட பாடத்தினைத் தெரிவு செய்வதற்கு பல்கலைக்கழக அனுமதிக்காக குறித்த மாணவர் க.பொ.த. உயர்தரத்தில் அப்பாடத்தினைத் தெரிவுசெய்திருத்தல் அவசியமானதாகும்.

மேலதிக உள்ளீர்ப்பு மூலம் (Additional Intake) பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்படும் பாடம் அல்லது பாடங்களைத் தெரிவு செய்து, மிகுதியான பாடம் அல்லது பாடங்களைக் கலைப்பீடம் தரும் பாடப்பட்டியலிலிருந்து அவ்வவற்றுக்குரிய துறைகளை அணுகிக் கலந்துரையாடித் தெரிவுசெய்து கொள்ளலாம்.

நிலை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்த மாணவர் ஒருவர், நிலை இரண்டிலிருந்து சிறப்புக்கலைப் பட்டப்படிப்பை தொடர விரும்பின், தான் தேர்ந்தெடுத்த பாடங்களுள் எவையேனும் ஒன்றினைப் பயிலுவதற்கு பீடாதிபதி அலுவலகத்தினால் பரிந்துரைக்கப்படும் படிவத்தினை முறையாகப் பூர்த்திசெய்து, அதற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

சிறப்புக்கலைப் பட்டப்படிப்பிற்காகக் கலைப்பீடத்தினால் பரிந்துரைக்கப்படும் பாடங்கள் வருமாறு:

தொல்லியல், கலை வரலாறு, கிறிஸ்தவ நாகரிகம், கலாசாரச் சுற்றுலா, நாடகமும் அரங்கலைக்களும், பொருளியல், ஆங்கில இலக்கியம் (ஆங்கில மொழிமூலம்), ஆங்கில மொழி கற்பித்தல் (ஆங்கில மொழிமூலம்), புவியியல், வரலாறு, மனைப்பொருளியல், மொழியியல், ஊடகக் கற்கைகள், மெய்யியல், சமுதாய மற்றும் பிராந்தியத் திட்டமிடல், அரசறவியல், உளவியல், சமூகவியல், தமிழ்.

**குறிப்பு:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் வழங்கப்படும் சட்டமாணி மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகளுக்கான மாணவர்களுக்கான மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய பிரத்தியேக அனுமதிமுறையில் உள்வாங்கப்படுவார்கள்.

## உறுகுணைப் பல்கலைக்கழகம்

| கற்கை நெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கலை | - | S |
| முகாமைத்துவம் | - | E |
| மருத்துவம் | - | E |
| விவசாய வள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும் | - | E |
| பொறியியல் | - | E |
| உயி. விஞ்ஞானம் | தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல் | E |
| உயி. விஞ்ஞானம். | இரசாயனவியல், தாவரவியல், பௌதிகவியல் | E |
| உயி. விஞ்ஞானம் | இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல் | E |
| உயி. விஞ்ஞானம் | பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் | E |
| பௌ. விஞ்ஞானம் | இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் | E |
| பௌ. விஞ்ஞானம் | கணனி விஞ்ஞானம், பௌதிகவியல், கணிதம் | E |
| பௌ. விஞ்ஞானம் | இரசாயனவியல், பிரயோக கணிதம், கணிதம் | E |
| பௌ. விஞ்ஞானம் | பிரயோக கணிதம், கணிதம், பௌதிகவியல் | E |
| பௌ. விஞ்ஞானம் | இரசாயனவியல், கணிதம், கணனி விஞ்ஞானம் | E |
| பௌ. விஞ்ஞானம் | கணனி விஞ்ஞானம், கணிதம், பிரயோக கணிதம் | E |
| பௌ. விஞ்ஞானம் | கணிதம், கைத்தொழில் கணிதம், இரசாயனவியல் | E |
| பௌ. விஞ்ஞானம். | கணிதம், கைத்தொழில் கணிதம், பௌதிகவியல் | E |
| கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் | - | E |
| தாதியியல் | - | E |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | - | E |
| மருந்தகவியல் | - | E |
| கணனி விஞ்ஞானம் | - | E |
| விவசாய வியாபார முகாமைத்துவம் | - | E |
| பசுமைத் தொழில்நுட்பம் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |
| கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானங்கள் | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| நிதியியல் கணிதக்கற்கை மற்றும் தொழில்முறை புள்ளியியல் | - | E |

### மானுடப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடம்

பட்டப்படிப்பு பயில்வோர்களின் அறிவைப் பூரணப்படுத்துவதற்கு அடிப்படை கற்றைநெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடிப்படை கற்கைநெறிகளை தெரிவுசெய்வதற்காக முன்நிபந்தனைகள் இல்லை. தமது விருப்பத்திற்கேற்றப் பாடங்களைத் தெரிவுசெய்து கற்பதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. ஆங்கிலம், தகவல் தொழிநுட்பம் (IT) அடிப்படைக் கணிதம், மானுடப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான ஆய்வுமுறையியல் என்ற பாடங்களில் ஆங்கிலமும் தகவல் தொழிநுட்பம் (IT) மற்றும் ஆங்கிலமும் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக தமிழ், பிரெஞ்சு, ஜேர்மன், கொரியன், ஜப்பான், ஹிந்தி மொழிகளைக் கற்பதற்கான சான்றிதழ் பாடநெறிகள் உள்ளன.
மதிப்பீடு முறை
செமஸ்டர் முறையில் தேர்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தொடர் மதிப்பீடுகளும் செமஸ்டர் இறுதியில் பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

மதிப்பளவு அடிப்படையாகக் கொண்ட அரை ஆண்டு கற்கைநெறி அலகுகளுள்ள செமஸ்டர் முறை (Credits based course units semesters system) மானுட பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடத்தில் பயன்படுத்தப்படும்.

உயர்ந்த புத்தியுள்ள தொழில் திறன் கொண்ட ஆக்கபூர்வமான பட்டதாரிகளை உருவாக்குவது பீடத்தின் முக்கிய நோக்கமாகும். பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அவர்களின் பங்களிப்பு எதிர்பார்க்கப்படும். அத்தோடு சிறந்த நல்வாழ்வோடும் கூர்மையான அறிவுள்ளவர்களாகவும் சமூகத்தில் விளங்குவதும் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

1. இளங்கலைமாணி (சாதாரண பட்டம்) மூன்று வருடங்கள்
2. இளங்கலைமாணி (கௌரவப் பட்டம்) நான்கு வருடங்கள்

இளங்கலைமாணி (சாதாரண பட்டம்) கற்கை நெறியின் கீழ் ஆங்கிலம், தொல்பொருளியல், வரலாறு, பௌத்த நாகரீகம், பாளி, பௌத்த தத்துவம், அரசியல், பொருளியல், சிங்களம், புவியியல், சமூகவியல், சமூகப் புள்ளியியல், தகவல் தொழில்நுட்பவியல் ஆகியனவை கற்றுக்கொள்ளலாம். இந்த பாடநெறிக்கான விண்ணப்பிக்க விரும்புவோர் மூன்று விடயங்களைத் தெரிவுசெய்ய முடியும்.

ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில இலக்கியம் அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆங்கிலம் ஒரு பாடமாக செய்து சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.
சமூக புள்ளியியலை ஒரு பாடமாகக் கற்றுக்கொள்ள விரும்புவோர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதத்தில் ஆகக் குறைந்த பட்சம் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.

பாளி கற்கைநெறியைப் பயில்வதற்கு க.பொ.த. (உ/த) பரீட்சையில் பாளி மொழியை ஒரு பாடமாக செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும். தகவல் தொழில்நுட்பவியல் பாடநெறிக்கான மாணவர்கள் பீடத்தால் நடாத்தப்படும் திறனறி தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் ஆங்கிலமும் தகவல் தொழில்நுட்பமும் தவிர ஏனைய கற்கை நெறிகளில் ஒன்று சிறப்புப் பட்டப் படிப்பாக தெரிவு செய்வதற்கான வாய்ப்புபள் வழங்கப்பட்டுள்ளன.

முதலாம் வருடத்தில் இரண்டு செமஸ்டர்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு சிறப்புப் பாடநெறிக-ளைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும். மாணவர்கள் தாங்கள் விரும்பிய பாடநெறிகளை ஆங்கில மொழி மூலமாகவும் கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டு.

## முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம்

முகாமைத்துவம் மற்றும் நிதி பீடம் 2003 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன் மாணவர் எண்ணிக்கையில் (2018ஆம் ஆண்டில் 1511 மாணவர்கள்) றுகுணை பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பாரிய பீடமாகும். முகாமைத்துவம் மற்றும் நிதி பீடம், கணக்கியல் மற்றும் நிதி, தொழில் முனைவு, மனித வள முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் உள்ளிட்ட நான்கு கல்வி சார் துறைகளை உள்ளடக்கியது. பீடம், இலங்கை தர கட்டுப்பாடு வரம்புக்கு (SLQF)வின் 6வது நிலைக்கு சமனாக ஒவ்வொன்றும் 120 பாட அலகுகள் உள்ளடக்கிய பட்ட கல்வி மில்ஹான்ச் இத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் பட்ட கல்வியில் கட்டாய தொழில் பயிற்சி மற்றும் சுயாதீன ஆய்வு செயத்திட்டங்கள் அடங்கும்.

#### முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தினால் வழங்கப்படும் பட்ட கல்வி நிகழ்ச்சி திட்டங்கள்

#### கணக்கியல்சார் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டம் (SLQF 6)

கணக்கியல் சார் வணிக நிர்வாக (கௌரவ) இளமானி பட்டம் தேசிய மற்றும் சர்வதேச தனியார் மற்றும் அரச துறைகளில் வெற்றிகரமாக கணக்கியல் முன்னேற்றங்களை பெற்றுக்கொள்ளவதற்கு தேவையான திறமை, தகுதிகள் மற்றும் தொழில் துறை சார் அறிவு உள்ளிட்ட தரமான பட்டதாரிகளை உருவாக்குவதற்காக வரையப்பட்டுள்ளது. இப் பட்ட கல்வி செயல்த்திட்டங்கள் உலகளாவிய சூழமைவில் முன்னிலையில் உள்ள பல்வகைப்பட்ட நிறுவனங்களில் மாணவர்களின் இயல்திறன்களை வலுப்படுத்துவதுமுகமாக பயில் நிலை உள்ளக பயிற்சி, ஆய்வு அறிக்கைகள் மற்றும் வெளிக்கள பயிற்சி தொடர் மதிப்பீடுகள் உள்ளிட்ட செயல்முறை பிரிவுகள் பல தற்கால பாட அலகுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் இக் கல்வித்துறை மாணவர் விட்டனர் மற்றும் குழுமங்கள் ஊடக படைப்பயிற்றல், புத்தாக்கம், மற்றும் அறிவினை பகிர்தலை விருத்தி செய்யும் நோக்குடன் வெளிவாரி பாட நிகழ்ச்சி செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இறுதியாக, இப் பாட செயற்றிட்டத்தினால் தேசிய மற்றும் உலகளாவிய மட்டங்களில் மிக சிறந்த தொழில் வாய்ப்புகளை பெற்று கொள்ள முடியுமாயுள்ளதுடன் சமூகத்தின் மற்றும் நிறுவனங்களின் உயர் மதிப்பினை மேலும் வலுப்படுத்த முடியுமாயுள்ளது.

#### வணிக முகாமைத்துவம் சார் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டம் (SLQF 6)

இலங்கை மற்றும் சர்வதேச சூழமைவுகளில் வணிக முகாமைத்துவ துறையில் தற்போதைய மற்றும் விருத்தி அடைந்து வரும் தேவை பரிமாற்றங்களுக்கு தேவையான திறமை, ஆற்றல் மற்றும் அறிவாற்றல் உள்ள பட்டதாரிகளை உருவாகும் நோக்குடன் வணிக முகாமைத்துவ பாட கல்வி நிகழ்ச்சி திட்டம் வணிக நிர்வாக (கௌரவ) இளமானி பட்ட செயற்றிட்டம் எதிர்பார்க்கின்றது. 120 பாட அலகுகள் உள்ளடக்கிய நான்கு வருட கௌரவ பட்ட செயற்றிட்டத்தில் வணிக முகாமையாளர்களை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்க படுவதுடன் பட்ட கல்வி மாணவர்களின் முகாமைத்துவ கல்வியால் கட்டாய ஆய்வு கூறுகள் மற்றும் பயில் நிலை உள்ளடக்கிய பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், இப் பட்ட கல்வி செயல் திட்டம் வணிக சூழலின் வாய்ப்புகளை மதிப்பீடு செய்வதற்கான பிரச்சனைகளை தீர்க்கும் திறமை மற்றும் எண்ணியல் திறைமைகளை விருத்தி செய்தல் என்பன திட்டமாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது இங்கு மாணவர்கள் வணிக துரையின் முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கான வணிக நிகழ் வாய்ப்பு திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் புரிந்து கொல்லவதற்கு தேவையான திறமை ஆற்றல் மற்றும் தொழில் துறை நிபுணத்துவத்தை பெற்று கொள்ள முடியும். இறுதியாக வணிக நிர்வாக பட்டதாரிகள் தேசிய மற்றும் சர்வதேச சூழமைவுகளுக்கு பொருத்தமான உயர் மட்ட புலமை பிரிவில்கள், தொழில்துறை நிபுணத்துவதில் மிக சிறந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியுமாயுள்ளது.

#### தொழில் முனைவுசார் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டம் (SLQF 6)

வணிக நிர்வாக கௌரவ இளமாணி பட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படுவது இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய அளவின் பங்களிப்பினை ஆரம்பிக்கபட்டு வரும் வணிக முயற்சிகளில் பங்களிக்க கூடியவாறு திறமை சார் தொழில் முனைவர் பண்புகள் உள்ளிட்ட மாணவர்களை உருவாக்குவதேயாகும். பட்ட கல்வி நிகழ்ச்சி பாட திட்டத்தின் முதல் மூன்று பருவ காலங்கள் பாட திட்டத்தில் வணிக முகாமைத்துவத்தின் செயற்பாட்டு துறையின் அடிப்படை கருத்துக்களை தீவிரமாக புரிந்து கொள்வதற்காக அறிவினை வழங்குவதுடன் இறுதி ஐந்து பருவ காலங்களில் விசேடத்துவ துறை வழங்கப்படுகிறது. முதல் மூன்று பருவ காலங்களில்ன் இறுதியில் பட்ட தகவு திறன் தேவைகளை பூர்த்தி செய்த மானவர்கள் தொழில் முனைவர் சார் (கௌரவ) வணிக நிர்வாக இளமானி பட்டத்தினை தொடர்வதற்கு முடியும். பீடத்தினால் ஏற்கனவெ தீர்மானிக்கப்படும் தொழில் முனைவுக்கான வணிக நிர்வாக இளமானி பட்ட மாணவர்களுடன் தொழில் துறை நிறுவனங்களுக்கு இணைக்க பட்டு செய்யப்பட்டுள்ள வெள்ளிவாறு பயிற்ச்சி செயற்பாடுகள்மற்றும் செயல் முறை அறிவும் மற்றும் வெளி கள பயணங்கள் போன்ற பல செயற்பாடுகள் ஊடாக தொழில் முனைவர் பாட துறையில் பயிற்சியினை வெளிப்படுத்தி கொள்ள முடியும். இவ் செயற்பாடுகள் ஊடாக மாணவர்கள் தங்களது நபர்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் தோழமையை கட்டியெழுப்பும் இயல் திறனை விருத்தி செய்யவும் முடியும்.

**மனித வள முகாமைத்துவதில் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டம்** (SLQF 6)

சம கால வணிக நிறுவனங்களுக்கு தேவையான திறமை, ஆளுமை மற்றும் விரிவான அறிவினை உள்ளடக்கிய மனிதவள முகாமைத்துவ பட்டதாரிகளை உருவாகும் நோக்குடன் மனிதவள முகாமைத்துவதின் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டம் வரையப்பட்டுள்ளது. பாட நிகழ்ச்சி திட்டம் முதல் மூன்று பருவ காலங்களிலும் வணிக முகாமைத்துவம் பற்றிய சகல அடிப்படை கருத்துக்களும் வழங்கப்படுவதுடன் பட்ட கல்வி நிகழ்ச்சி திட்டத்தின் இறுதி ஐந்து பருவ காலங்களிலும் விசேடத்துவம் உள்ளடக்கியுள்ளது. முதல் மூன்று பருவ கால செயற்றிட்டங்கள் இறுதியில் பீடத்தினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தகவு திறன் தேவைகளை பூர்த்தி செய்த மாணவர்கள் மனித வள முகாமைத்துவத்துவ பட்ட கல்வி திட்டத்தில் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டகல்வியில் இணைந்து கொள்வதற்கான தகுதியினை பெறுகின்றனர்.

மனித வள முகாமைத்துவம் சார் வணிக நிர்வாக (கௌரவ) பட்ட கல்வி மாணவர்கள் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தொழில் துறை நிறுவனங்களில் வெளிவாரி பயிற்சி திட்டங்கள், செயல் முறை மற்றும் வெளிக்கள பயிற்சி போன்ற பல்வகைப்பட்ட செயற்பாடுகள் ஊடாக மனித வள முகாமைத்துவதின் நவீன போக்குகள் மற்றும் திறந்த செயல் முறைகளை ஆய்வுக்குட்படுத்த முடியும். இச் செயற்பாடுகளின் ஊடாக மாணவர்கள், நபர்களுக்கிடையிலான தகவல் மற்றும் குழுமங்களை கட்டி எழுப்புவதற்கான இயல் திறன்களை விருத்தி செய்ய முடியும்.

**சந்தைபடுத்தல் சார் வணிக நிர்வாக (கௌரவ) இளமாணி பட்டம்** (SLQF 6)

சந்தைபடுத்தல் தொழிற் துறையினை விருத்தி செய்யும் முக்கிய முயற்சி என்ற வகையில் நாட்டின் முன்னிலையில் உள்ள கற்கை துறையான சந்தைபடுத்தல் துறை 2008ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. வணிக சூழலின் வேகமாக மாற்றம் தொடர்ந்து இடம்பெறும் மாற்றங்களின் பிரதி பலனாக முற்போர்க்கு அறிவு மற்றும் நிபுணத்துவ திறன் படைத்தவர்களின் தேவை நாட்டில் இன்று வேகமாக உருவாகியுள்ளது. சந்தைப்படுத்தல் துறை, விரிவுரைகள், ஆய்வுகள், ஆலோசனை வளங்கள் மற்றும் வேறு பல நிபுணத்துவ மற்றும் கொள்கை பங்களிப்பினை விருத்தி செய்தல் சார்பான அறிவினை வியாபிப்பதற்கும் மற்றும் உருவாக்குவதற்கும் முகமாக உயர்மட்ட தகுதியுள்ள மற்றும் ஊக்கமுள்ள கல்வி சார் அங்கத்தவர் குழுவினை உள்ளடக்கியுள்ளது. மேலும் இத்துறை தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின் சேவையாற்ற கூடிய அறிவாற்றல் படைத்த புத்தி ஜீவிகளை உருவாக்குகின்றது. இக் கல்வி துறையை சேர்ந்த மாணவர்கள், தங்களது கல்வி சார் பயிற்சிகளை விருத்தி செய்தல் மட்டுமின்றி பீடத்தின் பட்டதாரி பக்க தோற்றத்திற்கான தேவைப்பாடுகளை அணுகும் பொழுது தனது சமூக பொறுப்புணர்வுகளை விருத்தி செய்யவும் முடியுமாயுள்ளது.

**நிதி வணிக நிர்வாக (கௌரவ) இளமானி பட்டம்** (SLQF 6)

நிதி வணிக நிர்வாகச் சிறப்புமாணி பட்டப்படிப்பானது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நிதியியல் உயர்தொழி வெளிப்படுகின்ற வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உயர் திறன் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குகின்றது. இலங்கை கல்வித்தகைமை மட்ட நியமத்தின் (SLQF) ஆறாம் மட்டத்தில் நிலைப்படுத்தப்பட்டு இந்த நான்காண்டு விசேட பட்டப்படிப்பானது 120 தகுமதிப்புக்களை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பட்டப்படிப்பை பின்பற்றுவதன் மூலம் நிதியியல் தொடர்பான பிரதான எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் நுட்பங்கள் மட்டுமன்றி, நவீன நிதியியல் பூகோளத்தினை ஒழுங்கமைக்கும் காரணி-களை புரிந்து கொள்ளவும் நிர்வகிக்கவும் அவசியமான தொடர்பாடல் திறன், பகுப்பாய்வுத் திறன் மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் திறன் ஆகியவற்றின கற்றுக்கொள்ள முடியும். மேலும், கட்டாய சுயாதீன ஆய்வுக் கட்டுரையானது நீண்டகால கற்றலையும் ஆத வாதங்களைக் கட்டமைப்பதற்கான திறன்களையும் வளர்க்கும் அதேவேளை, தொழில்சார் உள்ளகப் பயிற்சிய மாணவர்களுக்கு தொழிற்துறை அனுபவத்தை வழங்குவதோடு தாங்கள் பெற்றுக்கொண்ட அறிவு, திறன் உளப்பான்மை போன்றன தொழில் சூழலில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்ற அனுபவத்தினை பெற்றுக்கொடுக்கின்றது. நிதியியல் பட்டதாரிகள், நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது தங்களுக்கென சுயதொழில்களை ஆரம்பிப்பதனை செய்து கொள்ளலாம்.

**வியாபார சட்டம் தொடர்பான வியாபர நிர்வாகமாணி இளமானி பட்டம்** (SLQF 6)

வியாபார சட்டம் தொடர்பான வியாபர நிர்வாகமாணி கௌரவப் பட்டப் பாடநெறியானது, முகாமைத்துவம் மற்றும் வியாபார சட்டம் ஆகிய கற்கைத் துறைகளை ஒன்றிணைத்து இலங்கையில் முதன்முறையாக உருவாக்கப்பட்ட ஒரு தனியான பட்டப் பாடநெறியாகும். வியாபார சட்டம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகள் பற்றிய ஆழ்ந்த அறிவைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதே இப்பாடநெறியின் நோக்கமாகும். இதன் மூலம் மாணவர்கள் வியாபர முகாமைத்துவம் மற்றும் நிறுவன இயக்க நடவடிக்கைகளின் போது எழும் பிரச்சினைகளுக்கு சட்ட அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்ட தீர்வுகளை வழங்கும் ஆற்றலைப் பெறுகின்றனர். முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஆகியவற்றுடன் தொடர்பான அறிவு திறன்கள் மற்றும் அணுகுமுறைகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் மாணவர்களின் போட்டியிட்டு முன்னேறும் ஆற்றலை வலுப்படுத்துகின்றன. ஒரு கல்வித் தவணை முழுவதும் மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சி முறையிலான கட்டாய செயல்முறைப் பயிற்சியொன்று வழங்கப்படும். இதன்மூலம் மாணவர்களுக்கு வியாபார முகாமைத்துவத்தில் சட்டங்களின் பிரயோகங்கள் தொடர்பான விளங்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகின்றது. இது மாணவர்களுக்கு அவர்களின் தொழில்முறை உலகத்திற்கான சிறப்புரிமை பெற்ற தொடக்கப் புள்ளியை வழங்குகிறது. இப் பாடநெறியின் மூலம் உருவாகும் பட்டதாரிகள் சட்டம் மற்றும் வியாபார முகாமைத்துவம் பற்றிய அறிவைக் கொண்ட நிபுணர்களுக்கான கேள்வியை பூர்த்தி செய்யக்கூடியவர்களாக இருப்பர். எனவே, அனைத்து வகையான சட்ட ரீதியான ஆவணங்களையும் தயாரித்தல், உள்ளக சட்ட விடயங்களை கையாளுதல் மற்றும் நிறுவனங்களின் மூலோபாயத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதற்குப் பொறுப்பான சட்ட முகாமையாளராகப் பணியாற்றல் போன்ற தொழில் வாய்ப்புகள் அவர்களுக்காகக் காத்திருக்கின்றன.

உறுகுணுப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தின் இவ் வியாபார சட்டம் தொடர்பான வியாபர நிர்வாகமாணி கௌரவப் பட்டப் பாடநெறியினைப் பூர்த்தி செய்வது இலங்கை சட்டக் கல்லூரி ஒன்றினுள் பதிவு செய்வதற்கான தகைமையாகாது.

## விஞ்ஞான பீடம்

### விஞ்ஞானமாணி (பொது/கௌரவ) பட்டம்

சகல கல்வியாண்டுகளும் ஒவ்வொன்றும் 15 கிழமைகளுக்கு உட்பட்ட இரண்டு பருவ ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளன. பாடநெறி அலகுகள், பயிற்சிக் கூற்று மதிப்பீட்டு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பட்டப்பாடநெறியின் முதற் கட்டத்திலேயே மாணவர்கள் விரும்பியவாறு தங்களது பாடச் சேர்க்கைகளை தெரிவு செய்தல் வேண்டும். முதலாம் மற்றும் இரண்டாம் வருடங்களில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள மூலப் பாட அலகுகளை தெரிவுசெய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் எதிர்கால அபிலாஷைகளுக்கு அமைவாக ஒவ்வொரு துறைகளும், வழங்கும் விருப்புத் தேர்வு பாடங்களுக்கு உள்ளடக்கிய பாட அலகுகளை தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விருப்பத் தெரிவுப் பாடநெறிகளில் பல, பௌதீக மற்றும் உயிரியல் விஞ்ஞான பாடதேர்வுகளுக்கும் பொதுவானவையாகும். பீடத்தினால் வழங்கப்படும் சில விருப்பப் பாட அலகுகள் கீழே தரப்பட்டுள்ளன.

மின்னணுவியல், நுண்தடுப்புகளும், பாவனைகளும், கணக்கிடல் பௌதிகவியல், வானியியல் மற்றும் விண்ணியல், முகாமைத்துவம், கணக்கீடு, சந்தை முகாமைத்துவம், ஆய்வு செயற்திட்டம், ஆய்வு முறைமையியல், பேச்சு முறையும் தொடர்பாடலும், உடற் தகுதி மற்றும் சுகாதார முகாமைத்துவம், அறிவியல் சார்ந்த எழுத்துக்கலை மற்றும் தொடர்பு, மரபியற் தொழில்நுட்பம், உயிரியற் தொழில்நுட்பம், உயர் தர சுற்றாடலியல், தோட்ட வேளாண்மை மற்றும் மலர்செடி வளர்ப்பு மற்றும் நிலவடிவமைப்பு, காடு வளர்ப்பு அறிவியல், உணவுத் தொழில்நுட்பம், செயல் முறை பூச்சியியல், நோய் தடுப்புவியல், நீரின் விருத்தியியல், ஒட்டுண்ணியியல், பறவையியல், உயிரியல் ஆய்வு ஒழுக்க விதி, பொருளியலுக்கான ஆரம்ப கணித முறைகள், நரம்பு வலையமைப்புக்குரிய கோட்பாடு மற்றும் முறைமை, கட்புல செயல்திட்டம், கணனி வன்கணியம் மற்றும் வலையமைப்பு, முறைமை மற்றும் வலையமைப்பு நிர்வாகம், கைத்தொழிலுக்கான இரசாயனம், சுற்றாடல் இரசாயனம். மேலதிகமாக கணனி விஞ்ஞானம் ஒரு பாடமாகத் தெரிவுசெய்யாத பௌதீக விஞ்ஞான மாணவர்களும், மற்றும் சகல உயிரியல் விஞ்ஞான மாணவர்களும் முதல் கல்வி ஆண்டில் கணனி கற்கை பாடநெறியை (CLC) கட்டாயமாக பின்பற்ற வேண்டியுள்ளதுடன், CLC இல் அனுபவம் உடையவர்கள் இரண்டாம் வருடத்தில் தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாட நெறியை தெரிவுசெய்ய உரிமைபெறுவர்.

முதலாம் மற்றும் இரண்டாம் வருட பரீட்சைகளில் திறம்பட தேறிய மாணவர்களுக்கு தாவரவியல், இரசாயனவியல், கணினி விஞ்ஞானம், கணிதம், பௌதீகவியல் மற்றும் விலங்கியல் விசேட பட்டப் பாட நெறிகளும் நடாத்தப்படுகின்றன. (மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் விசேட பட்டப் பாடநெறிகள் வழங்கப்படுகின்றன). இப்பாட செயற்திட்டங்களின் நோக்கம் கல்விசார் மற்றும் ஆய்வுத் துறைகளில் தொழில் விருத்திகளை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதாகும்.

சகல மாணவர்களும் வழங்கப்பட்டுள்ள பாடநெறிகளை தொடர ஆங்கில மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டப்படுகின்றனர். பாடநெறி அலகுகள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் வளங்கள், வசதிகள் பல்கலைக்கழக இணையத் தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். http://www.ruh.ac.lk

### கணினி விஞ்ஞான இளமானி பட்டங்கள் (பொது/விசேட)

இதற்கான மாணவர்கள் விசேட தெரிவு வழியாக உட்புகுத்தப்படுகின்றனர். மாணவர்கள் கணினி விஞ்ஞான பட்டப் பாடநெறிக்கூடாக கணினி பற்றிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய அறிவினைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்றாம் ஆண்டுகளில் மிகச் சிறப்பான தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மேலதிகமாக ஒரு வருடத்திற்கு கணினி விஞ்ஞான (கௌரவ) பட்டப் பாடநெறியினை தொடர்வதற்கு தெரிவுசெய்யப்படுவர்.

## மருத்துவ பீடம்

உறுருகுணுப் பல்கலைக்கழக மருத்துவ பீடமானது இலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ள ஒரேயொரு மருத்துவ பீடமாகும். இது 1980 இல் நிறுவப்பட்டதிலிருந்து நீண்ட துர பயணத்தின் பின் இலங்கையிலுள்ள சிறந்த மருத்துவ பீடங்களில் ஒன்றாக பரிணாமித்துள்ளது. பட்டதாரிகளின் தரமானது நாட்டிலுள்ள வேறு எந்த மருத்துவ பீட பட்டதாரிகளிலும் குறைவானதல்ல. இங்கு 15 துறைகள் உள்ளன. அவையாவன அவையாவன, உடற்கூற்றியல் துறை, உயிரியல் இரசாயனத் துறை, சமூக மருத்துவ துறை, சட்ட மருத்துவம் மற்றும் தடையப்பகுப்பாய்வியல் துறை, மருத்துவ துறை, நுண்ணுயிரியல் துறை, மகப்பேற்றியல் மற்றும் பெண்ணியல் மருத்துவ துறை, குழந்தையியல் மருத்துவ துறை, ஒட்டுண்ணியியல் துறை, நோய் பகுப்பாய்வியல் துறை, மருந்தியல் துறை, உடல் தொழிட்பாட்டியல் துறை, உள நோயியல் துறை, அறுவைச் சிகிச்சையியல் துறை, மயக்க மருந்தியல் துறை ஆகும். பீடத்தின் உட்கட்டுமானங்களாவன வரிவுரை மண்டபங்கள், பயிற்சிக் கூடங்கள், ஆய்வு கூடங்கள், மருத்துவ திறமை ஆய்வு கூடம், தொழில்நுட்ப ஆய்வு கூடம், நூலகம், உணவகம், உடற்பயிற்சிக்கூடம், விளையாட்டு மைதானம் மற்றும் விசாலமான கேட்போர் கூடம் என்பனவாகும். இங்கு மாணவர் உதவிச் சேவை நிலையமொன்று நாள் முழுவதும் இயங்குகின்றது. பீட வளாகத்தினுள் மாணவர் விடுதி 560 மாணவர்களுக்கு போதுமான வசதிகளைக் கொண்டுள்ளது.

## இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்

தாதியியல் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் மற்றும் மருந்தகவியல் ஆகிய துறைகளில் இளமானிப் பட்டப் படிப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்காக 2008ஆம் ஆண்டில் உறுகுனுப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கீழ் இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டம் (AHSDP) தாபிக்கப்பட்டது. அத்தகைய இளமானி பட்டப்படிப்புக்கான தேவையானது பல தசாப்தங்களாக நாட்டின் சுகாதாரத் துறையால் உணரப்பட்டது. இதுவே நவீன சுகாதார நலத்திட்டத்தின்போக்குகளைச் சமாளிக்கக்கூடிய திறமையுள்ள அதிகம் பயிற்றுவிக்கப்பட்ட தனிநபர்களுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்த கற்கைநெறிகளானவை, தேசிய மற்றும் சர்வதேச தொழிற் சந்தையில் தொழில் புரிவதற்குப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

உறுகுணப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நிறுவப்பட்டுள்ளது. இதுவே இலங்கையின் தென் மாகானத்தில் அமைந்துள்ள ஒரேயொரு இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமாகும். இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது தற்போது மூன்று பட்டப் படிப்பு கற்கைநெறிகளை வழங்கும் மூன்று துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன தாதியியல் இளம்விஞ்ஞானமானி(கௌரவ) பட்டம், மருத்துவ ஆய்வுகூட இளம்விஞ்ஞானமானி(கௌரவ) பட்டம், மருந்தகவியல் இளமானி(கௌரவ) பட்டம் என்பனவையாகும். மூன்று பட்டப்படிப்புகளும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு பட்டப்படிப்பு கற்கைநெறிகளும் 120 மதிப்பெண்களை உள்ளடக்கியுள்ளது. இப் பாடத்திட்டமானது தனியாள் ஆய்வு செயற்திட்டங்கள் மற்றும் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (மருத்துவமனை, மருத்துவ சிகிச்சை, சமூக மற்றும் கைத்தொழிற் துறை உள்ளிட்ட அடிப்படைக் கூறுகளுடன் இலங்கை தரக் கட்டமைப்பு (SLQF) வழிகாட்டுதலுக்கு இணங்கி நான்கு வருடங்களுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது மிகவும் அண்மித்த எதிர்காலத்தில் புதிய இளமானிப் பட்டப் படிப்பகள் மற்றும் சுகாதார விஞ்ஞானத்துடன் தொடர்பான முதுகலைமாணி பட்டப்படிப்புகளை தொடங்கத் திட்டமிட்டிருக்கின்றது.

## பொறியியற் பீடம்

பொறியியல் இளமானி கௌரவப் பட்டத்துக்கு (B.Sc.Eng. (Hons)) இட்டுச்செல்லும் வகையில் நான்கு ஆண்டு முழு நேர பட்டபடிப்புக்களைப் பொறியிற் பீடம் வழங்குகின்றது. ஒரு கல்வியாண்டுக்கு 15 வாரங்களைடைய இரண்டு பருவங்களைக் கொண்டதாக நான்கு கல்வியாண்டுகளாகப் பட்டபடிப்பு ஒழுங்கமைக்கபட்டுள்ளது. பட்டபடிப்புகள் ஆரம்பிக்க முன்னதாக நடாத்தப்படும் அபிவிருத்திக்கற்கை நெறியில் கணினி அறிமுகம் சமூகவிழிப்புணர்வு, ஆங்கிலம் கற்பிக்கப்படும். முதல் இரண்டு பருவங்களில் அனைத்து மாணவர்களும் பொது கட்டாய கற்கைநெறியினை (CCC) பின்பற்ற வேண்டும். அடுத்து ஆறு பருவங்களுக்கும் பொறியியல் கற்கையின் உபபிரிவு ஒன்றை பின்பற்ற வேண்டும். பொது கட்டாய கற்கைநெறியினை திருப்திகரமாக நிறைவு செய்த மாணவர்கள் பொது கட்டாய கற்கை நெறியில் அவர்கள் காட்டிய திறமைகளுக்கமைய பின்வரும் ஐந்து விசேட கற்கைநெறிகளில் ஒன்றைத் தொடர தேர்ந்தெடுக்கப்படுவர்.

1. குடிசார் மாற்றம் சூழல் பொறியியல்
2. கணினி பொறியில்
3. மின் மற்றும் தகவல் பொறியியல்
4. கடற்சார் பொறியியல் மற்றும் கப்பல் கட்டுமானவியல்
5. இயந்திரவியல் மற்றும் உற்பத்தி பொறியியல்

மேற்குறித்த விசேட கற்கைநெறிகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் பொறியியற்பீடத்தின் ஐந்து கற்கை துறைகளால் வழங்கப்படும். அவையாவன குடிசார் மற்றும் சூழல் பொறியியல் துறை (DCCE), மின் மற்றும் தகவல் பொறியியல் துறை (DEIE), இயந்திரவியல் மற்றும் உற்பத்தி பொறியியல் துறை (DMME), கடற்சார் பொறியியல் மற்றும் கப்பல் கட்டுமானவியல் (DMENA) ஆகிய துறைகளால் வழங்கப்படும் தொழிநுட்பவியல் பாடங்களுக்கு மேலதிகமாக தரமதிப்பீட்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் DIS துறையானது பொறியியல் கணிதம், முகாமைத்துவம், பொறியியல் பொருளியல், மானிடவியல், சமூக விஞ்ஞானம், கலை, தொழில் தர்மம் போன்ற பரந்த வீச்சையுடைய பாடங்களை வழங்குகின்றது.

DCCE, DEIE, DMME, DMENA ஆகிய துறைகள் கைத்தொழில் கலந்தாய்வுக் குழுக்களின் (ICCs) மூலமாக பொறியியல்சார் நிறுவனங்களுடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேணி வருகின்றது. பாரிய பொறியியல் நிறுவனங்களின் பொறியியலாளர்களினதும் தொழில்தருநர்களினதும் தொடர் பங்களிப்பினால் பொறியியற் பீடத்தின் பாடத்திட்டங்கள் இன்றைய பொறியியல் கைத்தொழிலின் வளர்ச்சிக்கும் அதன் தேவைகளுக்கும் நாட்டின் தொழில் தேவைக்கும் அமைவானது என்பது உறுதிச் செய்யப்படுகிறது.

இப்பட்டப்படிப்பானது கணிதம், பொறியியல் விஞ்ஞானம், பொறியியல் வடிவமைப்பு தொடர்பான பாடங்களையும் பல மேலதிக தெரிவுப்பாடங்களையும் கட்டாய தொழிலக பயிற்சியையும் மையமாகக் தொண்டு, விளைவை அடிப்படையாகக் கொண்ட கற்கைநெறியாக (outcome Based Education) வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விசேட கற்கைநெறிகளில் ஒன்றைத் தெரிவுச் செய்யும் மாணவர்களுக்கு பின்வரும் வகைகளில் விசேட நிபுணத்துவத்தை அடைய வாய்ப்புள்ளது.

| குடிசார் மற்றும் சூழல் பொறியியல் | கணினி பொறியியல் | மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் |
|---|---|---|
| குடிசார் பொறியியலாளர் | தகவல் விஞ்ஞான பொறியியலாளர் | மின் பொறியியலாளர் |
| கலையோர மற்றும் நீர்சார் பொறியியலாளர் | உட்பொதி பொறியியலாளர் | இலத்திரனியல் பொறியியலாளர் |
| சூழல் பொறியியலாளர் | வலையமைப்பு பாதுகாப்புப் பொறியியலாளர் | வலைப் பொறியியலாளர் |
| புவிதொழிநுட்ப பொறியியலாளர் | மென்பொருள் பொறியியலாளர்<br>அமைப்புப் பொறியலாளர் | தொலைத் தொடர்பு பொறியியலாளர் |
| போக்குவரத்து நெடுஞ்சாலைகள் பொறியியலாளர் | | |
| கட்டடப்பொறியலாளர் | | |

| இயந்திரவியல் மற்றும் உற்பத்திப் பொறியியல் | கடற்சார் பொறியியல் மற்றும் கப்பல் கட்டுமானவியல் |
|---|---|
| இயந்திரவியல் பொறியியலாளர் | கடற்சார் பொறியியலாளர் |
| கட்டடசேவைகள் (MEP) பொறியியலாளர் | கப்பல் கட்டுமான பொறியியலாளர் |
| பதார்த்தப் பொறியியலாளர் | கப்பல் அளவையியல் |
| இயந்திர மின்னுட்ப பொறியியலாளர் | கப்பல் வடிவமைப்பு பொறியியலாளர் |
| உற்பத்தி பொறியியலாளர் | மின் உற்பத்தி பொறியியலாளர்<br>கடல்சார் ஆய்வு பொறியியலாளர் |

மேதிகமாக, பொறியியல் இளமானி கௌரவப் பட்டத்தை (B.Sc. Eng (Hons)) வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்கள் உறுகுணப் பல்கலைக்கழகத்தாலோ அல்லது ஏனைய உலகத்தரமிக்க பல்கலைகழகங்களிலினாலோ வழங்கப்படும் பட்டப்பின் படிப்புகளுக்கு (MEng,MSc, Mphil, DEng, PhD) இணையும் தகுதியையும் பெறுகின்றனர்.

தற்போது பொறியியற் பீடத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்புகள் அனைத்தும் வாசிங்டன் ஒப்பந்தத்துக்கு அமைய இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) தர மதிப்பீடு செய்யப்பட்டு நிபந்தனையற்ற முழு தரத்தைக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாசிங்டன் ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ள நாடுகளான (Washington Accord Sifnatory countries) அவுஸ்திரேலியா, கனடா, தாய்வான், ஹொங்கொங், அயர்லாந்து, யப்பான், தென்கொரியா, மலேசியா, நியூசீலாந்து, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இப்பட்டம் ஏற்றுக் கொள்ளப்படும்.

### தொழில்நுட்பவியல் பீடம்

தொழில்நுட்பவியல் பீடம் நான்கு துறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன :

பொறியியல் தொழில்நுட்பவியல் (DET), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (DICT), உயிர் முறை தொழில்நுட்பவியல், பல்துறை கற்கைகள் என்பனவாகும்.

பீடத்தினால் உயர் தர தொழில்நுட்பவியல் பிரிவு மாணவர்களுக்கு நான்காண்டு இளமாணிப் பட்டங்கள் இரண்டு வழங்கப்படுகின்றன. அவையாவன:

1. பொறியியல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம் [BET (HONS)]
2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம் [BICT (HONS)]
3. உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம் [BBST (HONS)]

மேற்குறிப்பிட்ட அனைத்து இளமாணிப் பட்டப்படிப்புக்களும் ஒவ்வொன்றும் 15 வாரங்களைக் கொண்டு எட்டு செமஸ்டர்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு குறைந்தபட்சம் 120 கிரெடிட் கொண்ட பாடங்களும் ஆறு மாத தொழிலக பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதே வேளை பல்துறை கற்கை துறையானது இம்மூன்று இளமாணிப் பட்டங்களிற்கும் தேவையான மேலதிக பாடங்களை வழங்குகின்றது. இம்மூன்று துறைகளும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும். பாட உள்ளடக்கங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் தரப்பட்டுள்ளன.

### விவசாய பீடம்

உறுகுணப் பல்கலைக்கழக விவசாய பீடம் 1978ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதோடு, தற்போது இலங்கையின் தென் திசையின் விவசாய கல்வி மற்றும் ஆய்வுத் துறையின் மத்திய நிலையமாகவும் அமைந்துள்ளது. ஏழு கல்வித்துறைகளைக் கொண்ட இந்த பீடம் விஞ்ஞானம் தெழில்நுட்பம், முகாமைத்துவம், பொருளாதாரம், சூழல் சமூக மூல கோட்பாடுகளை, உபயோகித்து உணவு, மிருக உணவு, நார் மற்றும் எரிபொருள், (உயிரியல்) தொடர்பாக அதிகரிக்கப்படும் உலக தேவைகளை நிறைவேற்ற பங்களிப்பு செய்யக்கூடிய பலவிதத்திலான மற்றும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய தொழிலாளர்களை உருவாக்குவது விவசாய விஞ்ஞானத் துறையினுள் மரபு சார்ந்த போகப் பயிர்ச் செய்கைகளையும் மற்றும் கால்நடை நிருவாகம் ஆகிய பிரதான விடய நெறிகளுக்கு அப்பால் பரந்து சென்ற நடைமுறை அறிவினால் கல்விமான்களை முன்னடையச் செய்வதுமாகும்.இந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ருகுனு பல்கலைக்கழக விவசாய பீடம் கீழ் குறித்த கொளரவ பட்டதாரி பாடநெறிகள் மூன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

1.விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Agricultural Resource Management Technology)

2.விவசாய வியாபார முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Agribusiness Management)

3.பசுன்திர தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Green Technology)

விவசாய விஞ்ஞானம், சூழல் மற்றும் வளங்கள் முகாமைத்துவ துறையில் இணைந்த எதிர்கால தலைவர்களுக்குத் தேவையான கல்வி அறிவுகள் உட்பட உரிய பயிற்சிகளை பெற்றுக்கொடுத்து சமூக ஒழுக்க நெறிகளால் அவர்களை வலிமைப்படுத்தி மற்றும் சமூகத்தினுள் சிறந்த அறிவுள்ள நோக்குகளைக் கொண்ட தொழில் துறையினர்களை உருவாக்குவது இந்த பட்டதாரி பாடநெறிகளின் பிரதான அபிலாசைகளாகும். பட்டப் பாடநெறிகள் மூன்றிலும் உள்ளடக்கப்பட்ட பாடவிதான மூலம் பட்டதாரிகளுக்கு வியாபார பெறுமதி வாய்ந்த அனுபவங்கள் மற்றும் எதிர்காலத்தில் விவசாயத் துறைக்கு உட்செல்லத் தேவையான அமைப்புகளையும் பெற்றுக் கொடுப்பதாகும். உரிய பிரிவுக்கான அறிவு மற்றும் பயிற்சிகளுடனான விசேட தொழில்துறையினர்கள் மூலம் நடாத்தப்படும் போதனைகள் மற்றும் விஞ்ஞான கூட அமர்வுகள் உட்பட தொழில் பயிற்சிகள், வெளிச் சுற்றுலாக்கள், போதனைகள் மற்றும் அதிதிகளினால் நடாத்தப்படும். கற்கைநெறிகள் மூலம் இந்தப் பயிற்சிகளை இடைவிடாமல் பெற்றுக்கொடுப்பதுண்டு.

**1. விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டம்** (BSc in Agricultural Resource Management Technology)

இந்த விஞ்ஞான பட்ட பாடநெறியானது நான்கு வருட (8 கல்வித் தவணைகள்) விசேட நிபுணர் கௌரவ (SQLF 6 ஆம் தரம்) பட்டமொன்றாவதுடன் சிறந்த தகைமைகளையுடைய கல்வி சாரா பதவியினர் குழுவினர் மூலம் விடய நெறியொன்று பூர்த்தியாக்கப்படும். பாரம்பரிய மற்றும் வைத்திய விவசாய முறைகளுக்கு பதிலாக நவீன தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத்திற்குரிய அறிவு செயற்பாட்டு வேலைகள், உலகிற்கு பொருத்தமான அனுபவங்கள் மற்றும் வெளி ஆய்வுகளின் மூலம் எங்கள் பட்டதாரிகளுக்குக் கிடைக்கும். மனித வளத்தின் நல்வாழ்வுக்காக பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச தேவைகளை வழங்குவதற்காக உணவு, நார் மற்றும் மீள்பிறப்பு வளு உற்பத்தியின் போது சூழல் வளு தொடர்பாக அவதானத்தைக் கொண்டு விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டத்தினை மிகவும் கவனமாக உருவாக்கியுள்ளது. இன்றைய உலகின் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்தில் இந்த முழு பாடநெறியையும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும். பயிராக்கவியல், விவசாய சூழல் விஞ்ஞானம், நீடு நிலையுடைய விவசாய கைத்தொழில் வளங்கள் முகாமைத்துவம், இறக்குமதி பயிர்கள், பயிரிடப்பட்ட பயிர்கள், வயல்கள் மற்றும் மரக்கரி உற்பத்தி தொழில்நுட்ப போக மாற்றங்கள், போக ஆய்வு, விசித்திர போகங்கள், நுண்ம மற்றும் பொது பொருளாதாரவியல் விவசாய வியாபார முகாமைத்துவம், மனித வளு முகாமைத்துவம், விவசாய விற்பனை, உணவு உயிர் இரசாயனவியல் மற்றும் போசாக்கு, உணவு பாதுகாப்பு தொழில்நுட்பம், உணவு உயிரினவியல் விஞ்ஞானம், பயிர் உடல் விஞ்ஞானம், மரபணு தொழில்நுட்பம் மற்றும் பயிர் இனப்பெருக்கம், பயிர் காப்புறுதி, நிரந்த குப்பை முகாமைத்துவம், விவசாய இயந்திரவியல், கால நிலை விஞ்ஞானம் மற்றும் கால நிலை மாற்ற முன்கூறல், பின் விளைச்சல் தொழில்நுட்பம், போக நீர் விநியோகம் மற்றும் நீர் முகாமைத்துவம் மற்றும் முன்வைத்தல் தொடர்பான திறமை உட்பட பாடநெறியொன்றை பாராட்டுதலுடனான செயல்முறையுடன் கற்பிக்கப்படும். அனைத்து விஞ்ஞானிகளும் அவர்களது இறுதி வருடத்தில் புகழ்மிக்க தொழில் நிறுவனம் மற்றும் கைத்தொழில் தொடர்பான ஆறு மாதகால ஆய்வுக் கருத்திட்டமொன்றினையும் புரணப்படுத்தல் கட்டாயமானதாகும். இவ்வாறு நவீன உலகிற்கு உருவெடு ஆய்வுக் கருத்திட்டமொன்றினையும் ரணப்படுத்தல் கட்டாயமானதாகும். இவ்வாறு நவீன உலகிற்கு உருவெடுக்கும் பட்டதாரிகள் சர்வதேச துறையில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் பிரகாசமான, வெற்றிகரமான தொழில் சந்தர்ப்பங்களுக்கு உரிமைகோரக் கூடியவர் என்பதை நம்பிக்கையுடன் குறிக்க முடியும்.

**2. விவசாய வியாபார முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான பட்டம்** (BSc in Agribusiness Management)

விஞ்ஞான பட்டதாரி விவசாய வியாபார முகாமைத்துவ பட்டப் படிப்பு பாட நெறியானது நான்கு வருடகால (8சம தவணைகள்) விசேட கௌரவ பட்டம் (SQLF6 ஆவது கட்டம் மற்றும் சம) பாடநெறிகளைக் கொண்டதுடன் தகுந்த தகைமைகளையுடைய புலமைவாய்ந்த பதவிசார் பதவியினர் குழுவின் கீழ் விரிந்து சென்ற விடயப்பிரிவுகள் பலவற்றையும் மற்றும் அதற்கான கோட்பாடு ரீதியான அறிவினையும் பூர்த்தியாக்கப்படுவதுண்டு. இதனைத்தவிர இந்த பட்டப்படிப்பு பாடநெறியின் மூலம் நடைமுறை வல்லமை மற்றும் இத்துறையின் ஆய்வுகள் ஊடாக பட்டதாரிகளுக்கு முனைத்தொழில் மற்றும் வியாபார முகாமைத்துவ பிரிவுகளில் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக பட்டப்படிப்பினை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு ஆரம்ப விவசாயக் கோட்பாடுகள், விவசாய உற்பத்தி அறிவு, வணிக ஆற்றல் மற்றும் வியாபார முகாமைத்துவ அறிவினைப் பெற்றுக்கொடுப்பதுண்டு. முழு பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் நடத்தப்படுவதோடு, இந்தப் பாடநெறியில் உள்ளடங்கிய விடயங்களாக நுண் பொருளாதார விஞ்ஞானம், சர்வதேச பொருளாதார விஞ்ஞானம், விவசாய இயந்திரவியல் விவசாயத்தின் போது தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (ICT) மிருக உணவு போக உற்பத்தி பயன்பாட்டு புள்ளிவிபரங்கள், விவசாய அபிவிருத்தி மற்றும் குறிக்கோள் கல்வி நுகர்வோர் அமைப்பு, விவசாய ஆரம்பக் கல்வி, மணல் விளைச்சல் தொழில்நுட்பம், பயிர் உயிரியல், மற்றும் மரபுத் தொழில்நுட்பம், மணல் விஞ்ஞானம் விவசாய வியாபார முகாமைத்துவம், புத்தகம் வைத்தல் மற்றும் கணக்கியல், பழக்கன்று போக முகாமைத்துவம் உணவு மற்றும் போசனை விஞ்ஞானம், நுண்ணங்கி உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம், கால் நடைபோசாக்கு மற்றும் உணவு வளங்கள் தொலைத்தொடர்பு மற்றும் அறிவு விவரம், சர்வதேச வியாபாரம், தொழில் முனைத்துறை, விவசாய இறக்குமதி போக முகாமைத்துவம், உணவு பாதுகாப்பு, மற்றும் தயாரிப்பு தொழில்நுட்பம், புவி வள முகாமைத்துவம், விவசாய பரப்பு, நிருவாக முகாமைத்துவம், சூழல் பாதிப்புகல்வி, தொழிற்துறை வழிகாட்டி, மனித வள முகாமைத்துவம், விவசாய விற்பனை, இழைய வளர்ப்பு விஞ்ஞானம், பூந்தோட்ட அலங்கரிப்பு, இயற்கை வள முகாமைத்துவம், வருடத்தில் அனைத்து மாணவர்களும் இரண்டு மாதகால தொழிற் பயிற்சியையும் ஆறு மாதகால ஆய்வு கருத்திட்டத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கு இணைக்கப்படுவதுண்டு. விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டதபரிகள் உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொரு நிறுவனத்தின் உயர்பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதியை பூரணப்படுத்தியதாகவும் அவர்களின் எதிர்கால தொழிற்துறை பாதை மிகவும் தெளிவானதாகவும், வெற்றிகரமானதாகவும் என்பது உண்மையானதாகும். புதிய ஆய்வுகளின் படி இதுவரை உருவாக்கப்பட்ட விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரிகள் தற்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் வெளியுர் நிறுவனங்களில் உயர் தகுதிகள் வாய்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**3. விஞ்ஞான பட்டதாரி பசுன்நிற தொழில்நுட்ப பட்டப்பாடநெறி** (BSc in Green Technology)

விஞ்ஞான பட்டதாரி பசுன்நிற தொழில்நுட்ப பட்டப்பாட நெறி நான்கு வருடகால (8 மாத தவணைகள்) விசேட கௌரவ பட்ட பாட நெறிகளாவதோடு (SQLF6 ஆவது கட்டம்) சிறந்த தகுதிவாய்ந்த பதவிசார் பதவியினர் குழுவின் கீழ் விரிவடைந்த விரிந்த விடயப்பிரிவுகள் பலவற்றினையும் மற்றும் அதற்கான கோட்பாட்டு ரீதியான அறிவினையும் பூர்த்தியாக்கப்படுவதுண்டு. இதனைத் தவிர இந்த பட்டப்படிப்பு பாடநெறியின் மூலம் நடைமுறை வல்லமை மற்றும் இத்துறையின் ஆய்வுகள் ஊடாக பட்டதாரிகளுக்கு நவீன பசுன்நிற தொழிலநுட்ப முறைமைகள் மற்றும் அதன் அபிவிருத்தி தொடர்பாக சிறந்த அறிவைப் பெற்றுக்கொடுப்பதுண்டு. பசுன்நிற தொழில்நுட்ப பட்டதாரியாக தற்போது ஏற்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அபிவிருத்தி செயற்பாட்டுக்கு கைகொடுப்பதை நோக்கமாகக் கொண்டு தேசிய மற்றும் வெளிநாட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தொழிற் துறையினர்களின் அபிவிருத்தியை நோக்காக் கொண்டு குறைந்த சூழல் பாதிப்புக்கு ஆதரவு கொடுத்து நவீன தொழில்நுட்ப முறைமைகளை

ஏற்படுத்தும் சிறப்பு தன்மை வாய்ந்தவர்களாகும். இந்த பட்டப்படிப்பு பாடநெறியானது ஆங்கில மொழியில் மாத்திரம் கற்க வேண்டியதோடு, இந்த கற்கைநெறியில் உள்ளடங்கிய விடயங்கள் சூழல் முகாமைத்துவம், மின்சக்தி பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவம், மின்சக்தி பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவ மீள்உயிர்வாய்த்தல், வளு சக்தி, திறமையான பூமி பாவனை மற்றும் போக உற்பத்தி, நிரந்தர கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள் உற்பத்தி, உற்பத்தி தர முகாமைத்துவம் உயிரியல் உற்பத்தி தொழில்நுட்பம், சூழல் முன்னேற்றம் காலநிலை பாதிப்பு சூழல் பொருளாதார விஞ்ஞானம் உற்பத்தி கல்வி உற்பத்தி உயிரியல் தொழில்நுட்பம் நனோ தொழில்நுட்பம், நீர் வள முகாமைத்துவம், கூர்மையான விவசாய தொழில்நுட்பம், சூழல் பொருத்தமான உள்ளாச கைத்தொழில், பசுந் கட்டிட நிர்மானம், இலக்ரோனிக் விஞ்ஞானம், மற்றும ் உதிரிப்பாகங்கள், பசுந் இரசாயனம் சூழல் குறிப்புகள், தகவல் முகாமைத்துவம், தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) புவியியல் தகவல்கள் தொகுதி மற்றும் தொலைவிலுள்ள உணர்வு (GIS and remote Sensing) இடர் மற்றும் தீர்வு நவீன தொழில்நுட்ப பார்வை மற்றும் ஆக்கப்பூர்வமான முன்வைத்தல், திறமை அபிவிருத்தி ஆகியன காட்ட முடியும். இன்னும் இறுதி வருடத்தில் அனைத்து மாணவர்களும் மூன்று மாத கால பயிற்சி நெறியையும் ஆறுமாதகால ஆய்வு கரத்திட்டத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிருவனமொன்றிற்கு சேர்க்கப்படும். பசுன்நிற தொழில்நுட்ப விஞ்ஞான பட்டதாரிகள் தற்பெழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் வெளியுர் நிறுவனங்களில் உயர் தகுதிகள் வாய்ந்த தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள தேர்ச்சிகள் பெற்றுள்ளதோடு அவர்களின் எதிர்காலம் தொழிற்துறை பிரகாசமான, வெற்றிகரமான தொழில் சந்தர்ப்பங்களுக்கு உரிமைகோரக்கூடியவர் என்பதை நம்பிக்கையுடன் குறிக்க முடியும். புதிய ஆய்வு அறிக்கைகளின் படி இதுவரை உருவாக்கப்பட்ட பசுன்நிற தொழில்நுட்ப பட்டதாரிகள் தற்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் வெளியுர் நிறுவனங்களில் உயர் தகுதிகள் வாய்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடம்**

உறுகுணைப் பல்கலைக்கழகத்தின் கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப்பீடம், கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானங்கள் மற்றும் நன்னீரியல் மற்றும் நீரியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பாடச் சேர்க்கைகளுக்கான பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கும் இலங்கை அரச பல்கலைக்கழக முறைமைகளில் இயங்கும் ஓரேயொரு பீடமாகும். இப் பீடம், 15 கிழமைகள் அடிப்படையான அரையாண்டு கல்வி முறைமையின் கீழ் பாடநெறிகளைச் செயற்படுத்துவதுடன் பட்டக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகள், தர நிலைச் சராசரி (GPA) அடிப்படையின் கீழ் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தற்போது பீடம் இரண்டு, விஞ்ஞான இளமாணி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது.

1. கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானங்களுக்கான விஞ்ஞான இளமாணி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டம்: இத் திட்டம், (அ) கடல்சார் விஞ்ஞானங்கள் மற்றும் (ஆ) நீரியல் வாழ் விருத்தி பற்றிய இரண்டு விசேட துறைகளை உள்ளக்கியுள்ளது.

11. கடல்சார் மற்றும் நன்னீரியல் விஞ்ஞானங்களுக்கான விஞ்ஞான இளமானி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டம்: இத்திட்டம்,
(அ) சமுத்திரவியல் மற்றும் கடல்சார் கடற்சரிதவியல் (ஆ) நீரியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பற்றிய சார்பான இரண்டு விசேட துறைகளை உள்ளக்கியுள்ளது.

பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் 3 ஆம் கட்ட ஆரம்பத்தில் மாணவர்களுக்கு குறிப்பிட்ட பாட அலகுகளில் தங்களது செயற்பாடுகள் மற்றும் பதிவேடுகளின் அடிப்படையில் விசேடத்துவ துறையினைத் தெரிவு செய்ய முடியும். மேற்குறிப்பிட்ட பட்டங்களை பூர்த்தி செய்வதற்காக அபேட்சகர்கள், மூன்று மாத தொழிற் பயிற்சியில் ஈடுபடுவதுடன் இறுதியாண்டில், ஆய்வு அடிப்படையில் அமைந்த ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தல் மற்றும் 120 பாட அலகுகளை பூர்த்தி செய்தலும் அவசியமாகும்.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை (மட்டக்களப்பு)

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| விவசாயம் | - | E |
| உயி. விஞ்ஞானம்* | தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல், கணனி விஞ். | E |
| பௌ. விஞ்ஞானம்* | பிர. கணி., பௌதிகவியல், தூய கணி., இரசாயனவியல், கணனி விஞ்ஞானம் | E |
| முகாமைத்துவம் | - | E |
| வணிகவியல் | - | E |
| கலை | அரபு, இஸ்லாமியக் கற்கைகள், அரசியல் விஞ்ஞானம், தத்துவவியல், புவியியல், நுண்கலை, சமூகவியல் மற்றும் மானிடவியல், ஆங்கிலம், தமிழ், சமய ஒப்பீடு, பொருளாதாரக் கல்வி, இந்து நாகரீகம், நாட்டியமும் அரங்கேற்றக் கலையும், வரலாறு, கிறிஸ்தவம் | T |
| தாதியியல் # | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | - | E/T |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | - | E |

விஞ்ஞானம், விவசாயம், முகாமைத்துவக் கற்கை, கலையும் கலாசாரமும் ஆகிய பீடங்களிலிருந்து எடுத்த பாடச்சேர்க்கைகளை கிழக்குப் பல்கலைக்கழகம் அனுமதிக்கும்.

* உயிரியல் விஞ்ஞானத்திலும், பௌதிக விஞ்ஞானத்திலும் உள்ளோர் இடங்கள், ஊழியர் ஆகியன கிடைக்கும் வரையறைக்கு அமைய இப்பாடங்கள் எவற்றிலுமிருந்து பல்வேறு கற்கை நெறி அலகுகளை எடுக்கலாம்.

# இலங்கையில் தரம்வாய்ந்த தாதியர் பணியாளரை உற்பத்தி செய்வதுடன் தாதியியல் கல்வியை மேம்படுத்துதல்.

## விஞ்ஞான பீடம்

### அறிமுகம்

விஞ்ஞான பீடமானது அரையாண்டு (Semester) அடிப்படையிலான பாடத்திட்டதின் கீழ் ஆங்கில மொழி மூலத்துடனாக பட்டக் கற்கைகளை நடாத்துகின்றது.பட்டதாரிகளின் திறன் மற்றும் கற்கைநெறியின் பயன் என்பவற்றை கற்கைகளின் கற்றற் பேறுகளுடன் (ILOs) ஒருங்கிணைந்து பேறுகளின் அடிப்படையாகக் கொண்ட கல்வியை நடைமுறைப்படுத்துகின்றது: மற்றும் கற்பித்தல் - கற்றல் - மதிப்பீடு உத்திகள் என்பன கற்கைகளின் கற்றற் பேறுகளுடன் (ILOs) நன்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பீடமானது பொது மற்றும் விசேட விஞ்ஞானமானி (BSC(General) & BSc(Hons) கற்கைகளை முறையே மூன்று மற்றும் நான்கு கல்வி ஆண்டுகளில் வழங்குகின்றது. இக்கற்கைகளின் பாடத்திட்டத்தின் பிரதான பகுதியானது முதன்மைப்பாடங்களின் கற்கை அலகுகளை உள்ளடக்குவதுடன் மீதமுள்ள கற்கை அலகுகள் துணைக்கற்கைகளை (Auxiliary, Enhancement, and Supplementary Courses) உள்ளடக்கியுள்ளது. விஞ்ஞானத் துறையின் பரந்த அளவிலான மாணவர்களின் ஆர்வத்திற்கு இடமளிக்கும் வகையில் போதிய நெகிழ்வுத்தன்மையான பாடத்திட்டத்தை வழங்குகின்றது.

பீடமானது தாவரவியற் துறை, இரசாயணவியற் துறை, பௌதீகவியற் துறை, கணிதத் துறை, மற்றும் விலங்கியற் துறை ஆகிய ஐந்து கல்வித்துறைகளைக் கொண்டுள்ளதுடன் பின்வரும் பட்டக்கற்கைகளை வழங்குகின்றது.

- விஞ்ஞானமாணி (பொது) – BSc Hons (General)
- விசேட விஞ்ஞானமாணி (தாவரவியல்) - BSc Hons (Botany)
- விசேட விஞ்ஞானமாணி (இரசாயணவியல்) - BSc Hons (Chemistry)
- விசேட விஞ்ஞானமாணி (கணினி விஞ்ஞானம்) - BSc Hons (ComputerSc)
- விசேட விஞ்ஞானமானி (கணிதம்) - BSc Hons (Mathematics)
- விசேட விஞ்ஞானமாணி (பௌதிகவியல்) - BSc Hons (Physics)
- விசேட விஞ்ஞானமாணி (விலங்கியல்) - BSc Hons (Zoology)

100 மற்றும் 200 மட்டங்களில் மாணவர்களின் கல்வித் திறனை அடிப்படையாகக் கொண்ட பீடத்தினால் அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்ச தகைமையைப் பூர்த்தி செய்யும் மாணவர்களிடையே போட்டித்திறன் அடிப்படையில் மூன்றாம் வருட ஆரம்பத்தில் விசேட பட்டக் கற்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

மாணவர்கள் முதலாம் வருடத்தின் ஆரம்பத்தில் பின்வரும் முதன்மைப் பாடங்களின் சேர்க்கை ஒன்றினைத் தெரிவு செய்வதுடன், குறிப்பிட்ட பாடச் சேர்க்கையின் அடிப்படையில் அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய பட்டங்கள் கீழேயுள்ள அட்டவணையில் சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளது.

| முதலாம் வருடத்தின் முதன்மைப் பாடங்களின் சேர்க்கைகள் | பெற்றுக்கொள்ளக்கூடிய பட்டங்கள் | |
|---|---|---|
| | SLQF மட்டம் 5 | SLQF மட்டம் 6 |
| பௌதீக விஞ்ஞானத் தொகுதி | | |
| இரசாயனவியல், கணிதம் - I, பௌதீகவியல் | BSC (General) - இரண்டு அல்லது மூன்று முதன்மைப் பாடங்களுடன் ( மீதமுள்ள கற்கைஅலகுகள் துணைக்கற்கை அலகுகள்/முதன்மைப் பாடக் கற்கை அலகுகளைக் கொண்டிருக்கும் ) | BscHons (Chemistry) or BScHons (Physics) |
| இரசாயனவியல், கணிதம் - I, கணிதம் - II | | BscHons (Mathematics) or BscHons (Chemistry) |
| கணினி விஞ்ஞானம், கணிதம் - I, கணிதம் - II | | BscHons (Mathematics) or BscHons (ComputerSc) |
| கணிதம் - I, கணிதம் - II, பௌதீகவியல் | | BscHons (Mathematics) or BScHons (Physics) |
| கணினி விஞ்ஞானம், கணிதம் - I, பௌதீகவியல் | | BScHons (Physics) or BscHons (ComputerSc) |
| இரசாயனவியல், கணினி விஞ்ஞானம், கணிதம் - I | | BscHons (Chemistry), BscHons (ComputerSc) |
| உயிரியல் விஞ்ஞானத்தொகுதி | | |
| தாவரவியல், இரசாயணவியல், விலங்கியல் | | BscHons (Botany) or BscHons (Chemistry) or BscHons (Zoology) |

குறிப்பிட்ட சில முதன்மை பாடங்களின் சேர்க்கைக்கான அனுமதி (பௌதீக விஞ்ஞானத் தொகுதிக்கு) அதிக போட்டித்தன்மையுடன் இருக்கக்கூடும் என்பதை நினைவில் கொள்க.

# இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்)

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கலை | பொருளியல், மெய்யியலும் உளவியல் சார் உளவளத்துணையும், சமூகவியல், வரலாறு, புள்ளி விபரவியல், தமிழ் மொழி, ஆங்கில மொழி, சிங்கள மொழி, இந்து நாகரீகம், புவியியல், புவித் தகவல் முறைமை, அரசியலும் சமாதானக் கற்கையும், பணியகவமைப்பும், பொதுக் கொள்கையும், மும்மொழிக் கற்கைகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், ஆங்கில மொழி கற்பித்தல் | T |
| முகாமைத்துவம் F | - | T/E |
| வணிகவியல் | - | T/E |
| முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) ♣ | - | E |
| உயிரியல் விஞ்ஞானம் # | உயிரியல், இரசாயனவியல், பிரயோக புள்ளி விபரவியல், பௌதிகவியல், மண் விஞ்ஞானம், கணனி விஞ்., சக பொது கட்டாய மற்றும் விருப்ப பாடங்கள் * | E |
| பொறியியல் | - | E |
| பௌதிக விஞ்ஞானம் # | கணனி விஞ்ஞானம், கணிதவியல் I, கணிதவியல் II, பிரயோக புள்ளிவிபரவியல், இரசாயனவியல், பௌதிகவியல், மண் விஞ்ஞானம் சக பொது கட்டாய மற்றும் விருப்ப பாடங்கள்* | E |
| இஸ்லாமியக் கற்கைகள் | இஸ்லாமிய சிந்தனையும் நாகரீகமும், இஸ்லாமிய வங்கியியலும் நிதியியலும், இஸ்லாமிய சட்டமும் சட்டவாக்கமும், ஆங்கிலம், சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், தமிழ், கணக்கியலும் நிதியியலும், பொருளியல், கல்வி | T/E |
| அரபு மொழி | மொழியும் இலக்கியமும், மொழியியலும் மொழிபெயர்ப்பும், ஆங்கிலம், சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், தமிழ், கணக்கியலும் நிதியியலும், பொருளியல், கல்வி | A/T/ E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடமானது வியாபார நிருவாகமானி, வர்த்தகமானி, முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமானி ஆகிய மூன்று பட்டப்படிப்புக்களை வழங்குகின்றது. நான்கு வருடங்களைக் கொண்ட விஷேட கற்கைநெறிகளான வியாபார நிருவாகமானி மற்றும் வர்த்தகமானி பட்டப்படிப்புக்கள் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றன. வியாபார நிருவாகமானியானது கணக்கீடு, நிதியியல், தகவல் முறைமைகள், சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம் ஆகிய துறைகளில் விசேட கற்கைகளையும் கொண்டுள்ளது. மூன்றுவருட கால முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான பொதுமானிப் பட்டமானது ஆங்கில மொழிமூலம் மட்டும் வழங்கப்படுகின்றது.

# கட்டாய மற்றும் விருப்பங்கள்: ஆங்கிலம், கணிதத்திற்கான உயிரியல், உயிரியலுக்கான கணிதம், அடிப்படை சூழலியல், சமூக நல்லிணக்கம், தொழில்முறை மேம்பாடு, அறிமுகம் புள்ளிவிவரம், கணினி கணிதம், தகவல் தொழில்நுட்பம், மன அழுத்த மேலாண்மை, தகவல் கல்வியறிவு, காலநிலையியல், நசியலுக்கான அறிமுகம், விளைதிறன் பொருளாதாரத்தின் உயிரியல் நீதிநெறி, முகாமைத்துவ தத்துவங்கள், கருத்திட்ட பகுப்பாய்வு ஆராய்ச்சி முறைமையியல் , சமாதானமும் முறன்பாட்டு முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம்

# பிரயோக விஞ்ஞான பீடம் 4 துறைகளைக் உள்ளடக்கியது. அவையாவன, உயிரியல் துறை, இரசாயனவியல் துறை, கணிதவியல்துறை, மற்றும் பௌதீகவியல் துறை. ஆண்டு இப்பீடம் 3 பொதுப்பட்டம் மற்றும் பிரயோக உயிரியியல், பிரயோக புள்ளிவிபரவியல், தாவரவியல், இரசாயனவியல், கணினி அறிவியல், கணிதம், பௌதீகவியல் ஆகியவற்றில் 4 ஆண்டு கௌரவபட்டங்களுக்கான கற்கைநெறிகளை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக பிரயோக அறிவியலில் 4 ஆண்டு கௌரவ பட்டத்திற்கான கற்கைநெறியை வழங்குகின்றது

♣ **முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்** (SEUSL)

1. தகவல் தொழில்நுட்பம், வியாபார முறைமைகள் மற்றும் மாதிரிப்படுத்தலும், பகுப்பாய்தலும் ஆகியவற்றில் அடிப்படைத் திறன்களை விருத்தி செய்தல். இது வியாபார மூலோபாயத்தினதும், வியாபார அபிவிருத்தியினதும் முகாமைத்துவ கருத்துருக்களினதும், மக்களையும், தாபனங்களையும் சந்தைப்படுத்தல் மற்றும் நிதி மற்றும் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றில் பின்னணியொன்றுடன் கருத்திட்டங்களினதும் செயற்பாடுகளினதும் சக்திமிக்க பிரயோகத்தை இயலச் செய்யும்.

2. முகாமைத்துவ அறிவை நெம்புகோல்படுத்துவதற்கு உதவுகின்ற தகவல் தொழில்நுட்பத் திறன்களை பயன்படுத்துதல். அவ்வாறாக உலகளாவிய சந்தை இடத்தில் வெற்றிகரமாக போட்டியிடுவதற்கு உள்ளூர் தாபனங்களை நகர்த்துதல்.

3. தெரிவு செய்யப்பட்ட தொழில்படுத்தல் துறைகளில் திறமையானதொரு கோட்பாட்டிலான பின்னணியுடன் முகாமையாளர்களை போட்டிக்குரியதாக்குகின்ற அதேவேளை கற்கைக்கு வகுப்பறையொன்றை உண்மையானதொரு ஆய்வுகூடமாகச் செய்வதற்கு செயல்முறை விடயங்களுடனும் குறித்தொதுக்குதல்களுடனும் அவர்களின் கற்கைகளை குறைநிரப்புதல்.

4. கற்பித்தலிலும், ஆராய்ச்சியிலும் மாணவர்களையும் பணியாளர்களையும் தீவிரமாக ஈடுபடுத்துவதற்கு ஊக்கமளிப்பதுடன், கைத்தொழிலுக்கு விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குதல்.

ஆராய்ச்சி, விளைபொருள் அபிவிருத்தி, வணிகம், புத்தாக்கம் மற்றும் தொகுதி அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்கள், தொழில் துறை சார்ந்த [illegible] என்பவற்றையும் இப்பாடத்திட்டம் கொண்டுள்ளது.

விரிவுரைகள் மற்றும் ஆய்வுகூட வகுப்புகள் என்பவற்றையே இப்பாடத்திட்டம் பிரதானமான கற்பித்தல் முறையாகக் கொண்டுள்ளது. மாணவர் மையமான கற்பித்தல் வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் உபகரணங்களைக் கொண்டு வசதி செய்யப்படுவதுடன் தொடர் மதிப்பீடானது மெய்நிகர் கற்றல் தொகுதியினுடாக நிர்வகிக்கப்படுகின்றது.

மேலும், ஆய்வுகூட மற்றும் வெளிக்கள செயற்பாடுகள், அறிக்கை செய்தல், சுய கற்றல்(நூலகம் /கள அடிப்படையிலான வேலை, முன்னிலைப்படுத்துதல், கூட்டான முன்னிலைப்படுத்துதல்) பெரிய மற்றும் சிறிய குழுக்களான கலந்துரையாடல்கள், பயிற்சி முன்னிலைப்படுத்துதல் என்பன மாணவர் மையமான கற்கையை மேம்படுத்தும் பொருட்டு பாடத்தில் இணைக்கப்பட்டுள்ளது.
பாடத்திட்டத்தின் நிறைவின் போது பட்டதாரிகள் விவசாயத் தொழில்நுட்பத்தின் திறன் மற்றும் அறிவு என்பவற்றுடன் திகழ்வதோடு சம்மந்தப்பட்ட விஞ்ஞானங்கள் மற்றும் ஏனைய துறைகளிலும் இணைக்கப்பட்ட பின்புலத்தை கொண்டவர்களாக காணப்படுவர். நவீன விவசாயத் துறையின் உட்பத்தி மற்றும் முகாமைத்துவ திறன்களையும் விவசாயத் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைக்கக் கூடியவர்களாக இப்பட்டதாரிகள் காணப்படுவார்கள்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பட்டமானியில் கௌரவ தேர்ச்சி பெறுகின்ற பட்டதாரிகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் அதனோடு இணைந்த பல்வகை துறைகளிலும் பிரயோகிக்கக்கூடியவாறு திறன்கள், தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ ஆற்றல் என்பவற்றை கலவையாகக் கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளாக இருப்பார்கள்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்படுகின்ற துரித அபிவிருத்திக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆற்றலுடையவர்களாகவும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறையில் விற்பன்னர்களாக விளங்குவதற்கும் இப்பட்டப்படிப்பானது மாணவர்களை உந்துகிறது.

# இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் (மிகிந்தலை)

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| கலை | தகவல் முகாமைத்துவம், மரபுரிமை முகாமைத்துவம், மானிடவியல் சூழல் முகாமைத்துவம், சுற்றுலா, நீர் வள அபிவிருத்தியும் முகாமைத்துவமும் | S |
| முகாமைத்துவம் | - | S/E |
| விவசாயம் # | - | E |
| பிர. விஞ். (உயி. விஞ்.) + | - | E |
| பிர. விஞ். (பௌ. விஞ்.) + | - | E |
| சுகாதார விருத்தி | - | E |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (ICT) | - | E |
| சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |

**சமூக விஞ்ஞான மற்றும் மானுடவியல் பீடம் +**
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடவியல் பீடமானது பின்வரும் ஆறு பட்டங்களை வழங்குகின்றது.

| தொ இல பட்டப் பாடநெறி | சுருக்கம் | காலம் | மொழி மூலம் |
|---|---|---|---|
| 1 கலைமாணி (பொது) | BA | 03 வருடங்கள் | சிங்களம் |
| 2 கலைமாணி (கௌரவம்) வரலாறு | BAHons (Hist) | 04 வருடங்கள் | சிங்களம் |
| 3 கலைமாணி (கௌரவம்)தொல்லியலம் மற்றும் மரபுரிமை முகாமைத்துவம் | BAHons (Archae) | 04 வருடங்கள் | சிங்களம் |
| 4 கலைமாணி (கௌரவம்) பொருளியல் | BAHons (Ec) | 04 வருடங்கள் | ஆங்கிலம் |
| 5 கலைமாணி (கௌரவம்) சுற்றுச்சூழல் | BAHons (Env Mgt) | 04 வருடங்கள் | ஆங்கிலம் |
| 6 கலைமாணி (கௌரவம்) வெகுஜனத்தொடர்பு | BAHons (Mass Comm) | 04 வருடங்கள் | ஆங்கிலம் |
| 7 கலைமாணி (கௌரவம்) சிங்களம் | BAHons (Sinhala) | 04 வருடங்கள் | சிங்களம் |
| 8 கலைமாணி (கௌரவம்) சமூக விஞ்ஞானம் | BAHons (Social) | 04 வருடங்கள் | ஆங்கிலம் / சிங்களம் |

**கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சி பாடநெறி**

சமூக விஞ்ஞான மற்றும் மானுடவியல் பீடம். 18 முக்கிய பாடங்களில் சிறப்புக் கலைமாணிப் பொதுப் பட்டப்படிப்புக்களை வழங்குகிறது. கலைமாணி பொதுப் பட்டப் படிப்பின் முதலாம் வருடத்தின் முதலாவது பருவத்தில் (Semester) தங்களுக்கு விருப்பமான மூன்று பாடங்களைத் தேரிவு செய்ய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். கலைமாணிப் (பொது) பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்கள் இரண்டாம் வருடத்தின் முதற் பருவத்தில் (Semester) மூன்று பிரதான பாடங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தங்களது திட்ட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் சமமான கிரடிட் எல்லை (Credit Limit) உண்டு. மாணவர்கள் மூன்றாம் வருட இரண்டாம் பருவத்தில் சமூக விஞ்ஞான மற்றும் மானுடவியல் பீடம் பின்வரும் 8 பட்டப் பாடநெறிகளை வழங்குகிறது.

பிரதான பாடங்கள் பின்வருமாறு.
தொல்லியல், சீனமொழி, பொருளியல், கல்வி விஞ்ஞானம், ஆங்கிலம், சுற்றுச்சூழல் முகாமைத்துவம், பிரெஞ்சு மொழி, ஹிந்தி மொழி, வரலாறு ஜப்பான் மொழி முகாமைத்துவம், வெகுஜனத் தொடர்பு, சிங்களம், சமூக புள்ளிவிபரவியல், சுற்றுலா முகாமைத்துவம். நீர்வள முகாமைத்துவம், மரபுரிமை முகாமைத்துவம்

**கலைமாணி (கௌரவம்) பட்டப் பாடநெறி**
முதலாம் வருட தேர்வின் செயல்திறன் அடிப்படையில் மாணவர்கள் கௌரவப் பட்டப்படிப்பைத் தொடர தேர்ந்தெடுக்கப்படுவர். இரண்டாம் வருடம் முதல் அவர்கள் விரும்பும் சிறப்புப் பாடப்பிரிவைக் கற்க வேண்டும். அவர்கள் நான்காம் வருடத்தின் இரண்டாம் பருவத்தில் சுயாதீன ஆராய்ச்சியை செய்து முடிக்க வேண்டும்.

**முகாமைத்துவப் பீடம்**

முகாமைத்துவ கற்கை பீடம் பின்வரும் 06 பட்டப்படிப்புகளுக்கான கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது.

1. கணக்கியல் மற்றும் நிதியியல் - விஞ்ஞான கௌரவமாணி
2. வணிக முகாமைத்துவம் - விஞ்ஞான கௌரவமாணி
3. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் - விஞ்ஞான கௌரவமாணி
4. சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் - விஞ்ஞான கௌரவமாணி
5. மனிதவள முகாமைத்துவம் - விஞ்ஞான கௌரவமாணி
6. தகவல் முறைமைகள் - விஞ்ஞான கௌரவமாணி

விஞ்ஞானமாணி (கணக்கியல் மற்றும் நிதி) கௌரவ பட்டம், விஞ்ஞானமாணி (வியாபார முகாமைத்துவம்) விசேட பட்டம், விஞ்ஞானமாணி (சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்) கௌரவப் பட்டம், பீ.எஸ்சி. (மனிதவள முகாமைத்துவம்) கௌரவப் பட்டம், பீ.எஸ்சி. (தகவல் முறைமைகள்) கௌரவப் பட்டம் ஆகிய 5 பட்டப் படிப்புகளுக்கான மாணவர்கள், அவர்கள் பெற்ற Z புள்ளி, மாவட்ட நிலை மற்றும் அவர்களது விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையிலும், விஞ்ஞானமாணி (சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்) விசேட பட்டப்படிப்புக்கான மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடித் தெரிவின் அடிப்படையிலும் உள்வாங்கப்படுவார்கள்.

விஞ்ஞானமாணி (கணக்கியலும் நிதியும்) கௌரவ பட்டம், மற்றும் விஞ்ஞானமாணி (வியாபார முகாமைத்துவம்) பட்டப் படிப்புகளுக்கான விரிவுரைகள் முதலாம் வருடத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் இரண்டாம் வருடம் தொடக்கம் ஆங்கில மொழியில் மாத்திரம் இடம்பெறும்.

விஞ்ஞானமாணி (தகவல் முறைமைகள்) கௌரவப் பட்டம் விசேட பட்டம் மற்றும் விஞ்ஞானமாணி (சுற்றுலா மற்றும் உபசரிப்பு முகாமைத்துவம்) கௌரவப் பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள் ஆங்கில மொழியில் மாத்திரம் இடம்பெறும்.

**விவசாயப் பீடம்**

**விவசாயத்துறையில் கௌரவ விஞ்ஞானமாணிப் பட்டம்**

# இப்பட்டப்படிப்பு ஆழமான பரவலான கோட்பாட்டு அறிவு மற்றும் பயிற்சிக்கூடாக, தேவைப்படும் அறிவும் தகைமையும் மனப்பாங்கும் உடைய பட்டதாரிகளை உருவாக்கும் நோக்குடன் விவசாயத்துறையின் தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப்படிப்பில் பயிர் உற்பத்தியும் முகாமைத்துவத் தொழினுட்பமும், விலங்கு விஞ்ஞானமும் விலங்குப் பண்ணையியலும், மண் பற்றிய அறிவு, பண்ணை முறைமைகள் போன்ற விவசாயத்துறையின் பொதுவான முக்கிய விடயப்பரப்புகளும் ஆங்கிலமொழி, கணினி சம்பந்தமான பிரயோக அறிவு போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பீடமானது விவசாயப்பொறியியல், சுற்றாடலும் மண் முகாமைத்துவமும், விவசாயப் பொருள-ியலும் விரிவாக்கமும், விவசாய முறைமைகளும் முகாமைத்துவமும், விலங்கு உற்பத்தியும் தொழினுட்பமும், உணவுக்கும் அறுவடையின் பின்னருக்குமான தொழினுட்பம், பயிர் விஞ்ஞானம், விவசாய உயிரியல் ஆகிய எட்டு வகையான துறைகளில் நான்காண்டுகள் காலப்பகுதி கொண்ட கௌரவப் பட்டப் படிப்பினை வழங்குகின்றது. அத்துடன் இப்பட்டப்படிப்பு கோட்பாட்டு அறிவின் செய்முறை நோக்கிலான வாய்ப்புக்களைப் பட்டதாரிகளுக்கு வழங்குவதற்காக சுயாதீனமான ஆய்வுக் கற்கையையும் செய்முறைக் கைத்தொழில் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. இதன் பல்வகைத் தன்மையானது பட்டதாரிகளை அவர்கள் ஈடுபடும் எத்துறையிலும் முழுமையான ஆற்றலுடன் பிரகாசிக்கச் செய்யும்.

**பிரயோக விஞ்ஞான பீடம்**

+ பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் நெறி திறமை பெறுமானங்கள் முறைமையொன்று உள்ளது. ஒரு மாணவன் ஒவ்வொரு வருடமும் குறைந்தது 30 திறமைப் பெறுமானங்கள் கொண்ட நெறி அலகுகளைக் கற்றல் வேண்டும். பின்வரும் பாடங்களிலிருந்து பல பாடச்சேர்க்கைகள் முதலாம், இரண்டாம் வருடங்களில் உள்ளன: உயிரியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதீகவியல், கணினி விஞ்ஞானம், தூய கணிதம், பிரயோக கணிதம். மூன்றாம் வருடத்தில் அதிக தெரிவு நெகிழ்ச்சியைத் தரக்கூடிய பின்வரும் பிரயோக விஞ்ஞானத்துறைப் பாடச் சேர்க்கைகள் பல உள்ளன: பிரயோக உயிரியல், பிரயோகத் தாவரவியல், பிரயோக விலங்கியல், பிரயோகப் பௌதீகவியல், கணனி விஞ்ஞானம், கைத்தொழில் இரசாயனம், கைத்தொழில் கணிதம், நிதிக் கணிதம்.

**சுகாதார விருத்தி விஞ்ஞானமானி பட்டநெறி**

தென்கிழக்காசியா பிராந்தியம் முழுவதிலும் சுகாதார விருத்தி தொடர்பான ஒரே ஒரு விஞ்ஞானமானி (பொது மற்றும் கௌரவப்) பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை வழங்கும் பெருமை இலங்கை இரஜரட்ட பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்தினை மட்டுமே சாரும். தனிநபரினதும், சமூகத்தினதும் நலனை முன்னேற்றுவதற்காக வினைத்திறனானதும், செலவு வினைதிறனை கொண்டதுமான வழிமுறையாக பல நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், சிறந்த சுகாதார வெளியீடுகளை அடைவதற்கு சமகாலத்தில் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றதுமான ஒரு சமூகத்தினை மையப்படுத்திள செயன்முறையே சுகாதார விருத்தியாகும். இது சமூக அங்கத்தவர்களின் நடைமுறைகளிலும், மனப்பாங்குகளிலும் காணப்படுகின்ற அபிவிருத்தி சவால்களிற்கும், விரும்பத்தக்க மாற்றங்களிற்கும் இடையில் காணப்படுகின்ற இடைவெளியினை ஈடுசெய்வதாக அமைகின்றது.

சுகாதார விருத்தியில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற, போட்டித்தன்மை மிக்க தொழில் நிபுணர்களை உருவாக்குவதே இக்கற்கைநெறியின் நோக்கமாகும். சுகாதார விருத்தி தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற தொழிற் தகைமைகளை இப்பட்டதாரிகள் பெற்றுக்கொள்வதோடு, மக்களின் நலனை விருத்தி செய்வதில் ஒரு விளைதிறன் மிக்க பாத்திரத்தினை வகிப்பதற்கான திறன்களையும், சுகாதார விருத்திக்கு தேவையான அறிவினையும் பெற்றுக்கொள்வர்.

இப்பாடத்திட்டமானது கோட்பாடுகளும், செயன்முறை பயிற்சிகளும் இணைந்ததாக அமைந்துள்ளதோடு, செயன்முறை பயிற்சிகளின் பொழுது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சுகாதார விருத்தியுடன் சார்பான அடிப்படை அறிவினையும் பரந்த விளக்கத்தினையும் வழங்குவதாக கோட்பாட்டு உள்ளடக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறியானது ஒரு தனித்துவமானதும், அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டதுமான சமூக பங்குபற்றல் மூலத்தினை வழங்குவதோடு, சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட சுகாதார விருத்தியினூடாக கூட்டு சமூக நடத்தையினை வழிநடாத்துகின்றது. உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய பங்குதாரர்களுடன் கூட்டிணைவதின் மூலம், குடிமக்கள், சமூகம் மற்றும் தனிநபர்களினது நலனையும், சுகாதாரத்தினையும் அபிவிருத்தி செய்யக்கூடியதும், முன்னேற்றக்கூடியதுமான சுகாதார விருத்தி கண்டுபிடிப்புக்களை வடிவமைக்கவும், நடைமுறைப்படுத்தவும், பட்டதாரிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இப்பட்ட நிகழ்ச்சியின் முடிவில் சமூகம் பல்வேறு குழுக்கள் மற்றும் தனிநபர்களினது சுகாதார விருத்தி தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்யவும், பல்வேறு சுகாதார விருத்தி தந்திரோபாயங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கொள்கைகளையும், வடிவமைக்கவும், நடைமுறைப்படுத்தவும் அதன் தாக்கங்களை மதிப்பீடு செய்யவும் இயலுமானவர்களாக பட்டதாரிகள் காணப்படுவர். இதற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவும் சுகாதார விருத்தியில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்ற பரப்புகளான சிறுவர் நல்வாழ்வு, மந்தபோசனை குறைத்தல், தொற்று நோய்களைத் தடுத்தல், போதைப்பொருள் பாவனையைக் குறைத்தல், தற்கொலை, வன்முறை முதலான பிரச்சினைகளை தடுத்தல் ஆகியனவற்றினை கையாளுவதில் மாணவர்கள் தம் போட்டித்தன்மையினை விருத்தி செய்துகொள்வர்.

**தொழில்நுட்பப்பீடம்**

இலங்கை இரஜரட்ட பல்கலைகழகத்தின் தொழில்நுட்ப பீடமானது 2017 ஜீன் மாதம் 30ம் திகதி மிஹிந்தலையில் நிறுவப்பட்டது. இப்பீடம் தற்போது 5 துறைகளைக் கொண்டுள்ளது. அவை பின்வருமாறு:

- உயிரியக்க செயன்முறை தொழில்நுட்பப் பிரிவு
- உணவுதொழில்நுட்பப் பிரிவு
- மின் மற்றும் மின்னனு தொழில்நுட்பப் பிரிவு
- பொருட் தொழில்நுட்பப் பிரிவு
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு

இப்பீடம் 5 பிரதான துறைகளில் மூன்று கௌரவ பட்டப்படிப்புக்களை (SLQF நிலை 6) வழங்குகிறது. முதல் இரண்டு அரையாண்டுகளில் அம்மூன்று பட்டப்படிப்புகளில் உள்ள அனைத்து மாணவர்களும் பொதுவான அடிப்படை பாடநெறிகளை பின்தொடர வேண்டும். பின்னர் மூன்றாம் அரையாண்டு முதல் மாணவர்களின் விருப்பு மற்றும் முதல் இரண்டு அரையாண்டுகளில் செயல்திறன் அடிப்படையில் பின்வரும் சிறப்பு கற்கைநெறிகளை தெரிவு செய்ய முடியும்.

| கற்கைநெறி | பிரதானபாடப் பிரிவுகள் |
|---|---|
| உயிர் அமைப்பு தொடர்பான கௌரவ இளமாணிப் பட்டம் [BBST (Hons)] | உயிரியக்க செயன்முறை தொழிநுட்பம் |
| பொறியியல் தொழிநுட்பம் தொடர்பான கௌரவ இளமாணிப் பட்டம் [BET (Hons)] | உணவு தொழில்நுட்பம் |
| | மின் மற்றும் மின்னணு தொழில்நுட்பம் |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொடர்பான கௌரவ இளமாணிப் பட்டம் [BICT (Hons)] | பொருட் தொழில்நுட்பம் |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |

BBST (Hons) பட்டமானது தேசிய உயிர் தொழில்நுட்ப தொழில்துறை அமைப்பின் கீழ் அங்கீகார அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. BICT (Hons) பட்டமானது இலங்கை கணனி அமைப்பின் கீழ் அங்கீகார தேவை அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

BET (Hons) பட்டமானது இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் கீழ் அங்கீகார தேவை அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பட்டம் Sydney Accord இன் தேவைகளை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உயிரியக்கசெயன்முறைத் தொழில்நுட்பத்தில் BBST பட்டம்.**

உயிர் அமைப்பு தொடர்பான கௌரவ இளமாணிப் பட்டத்தின் உயிரியக்க செயன்முறைத் தொழில்நுட்பமானது விவசாயம், மருத்துவம், உணவு மற்றும் உயிர் தொழில்நுட்ப தொழில் துறைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பலதரப்பட்ட அணுகுமுறைகள் மூலம் தீர்வு வழங்குவதோடு அத்துறைகளுக்கு பல்வேறு பயன்பாடுகளை உருவாக்குகிறது. மேலும் இக்கற்கைநெறியானது உயிரியக்கவியல் செயற்பாடு, ஊடுகதிரியக்க இலத்திரன் நுண்ணோக்கி, ஹோரசன்ஸ் நுண்ணோக்கி, நுண்ணோக்கி கையாளுகை, மரபணு துப்பாக்கி அடிப்படையான மாற்றம் மற்றும் UPLC-MS/MS அடிப்படையான வேதியல் செயன்முறைகள் போன்ற நவீனதொழில்நுட்பம் சார்ந்த திறன்களை வழங்குகிறது. இக்கற்கைநெறியின் பாடத்திட்டமானது பங்குதாரர்களின் சந்திப்பு, உயிரமைப்பு தொழில்நுட்பம் தொடர்பான தேசிய நிபுணர்கள் மற்றும் சால்மஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், ஸ்வீடன் மற்றும் வாகனின்கன் ஆராய்ச்சி பல்கலைக்கழகம், நெதர்லாந்து ஆகியவற்றை சேர்ந்த சர்வதேச நிபுணர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி மற்றும் தொழில் துறைசார் உள்ளீடுகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கற்கைநெறியானது மிச்சிகன் ஸ்டேட் யூ.எஸ்.ஏ,சுண்ணம் மற்றும் ஜெஜவூ பல்கலைக்கழகங்களுடனான உறுதியான தொடர்புகள் மூலம் உயிரியக்க தொழில்நுட்பதுறையிலுள்ள நவீன வளர்ச்சிகளுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் கல்வியில் உலகளாவிய முன்னோக்கினை வழங்குகிறது. இக்கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பின்வரும் தொழில்வாய்ப்புகளை பெறுவர்.

- ☐ உயிர் செயன் முறை தொழில்நுட்ப ஆலோசகர்
- ☐ உயிர் செயன் முறை தொழில் நுட்பவியலாளர்
- ☐ உயிர் செயன் முறை தயாரிப்புமுகாமையாளர்
- ☐ உயிர் செயன் முறை தொழில் நுட்பவியலாளர்
- ☐ உயிர் செயன் முறை தயாரிப்பு ஆக்கவியலாளர்
- ☐ உயிர் தொழில்நுட்பவியலாளர்கள்
- ☐ உயிர் தகவலியலாளர்கள் மற்றும் கணனியியல் உயிரியலாளர்கள்
- ☐ மருந்து வடிவமைப்பாளர்கள்
- ☐ விரிவுரையாளர்கள் மற்றும் ஆராய்ச்சி அதிகாரிகள்

**உணவுதொழில்நுட்பம் தொடர்பான BBST பட்டம்**

உணவுதொழில்நுட்பப்பிரிவானது இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் பிரிவாகும். இப்பிரிவு உணவுதொழில்நுட்பத் துறையில் பணியாற்ற விரும்பும் பல்கலைக்கழக ஒரு முன்னணி மாணவர்களின் அறிவியல் வளர்ச்சி மற்றும் தொழில் துறைசார் வாழ்க்கைக்கு பங்களிப்பு வழங்குகிறது. இப்பிரிவில் செயற்பாட்டு உணவு மற்றும் உணவு நச்சுவியல், உணவு பொறியியல், உணவு உயிர் தொழில்நுட்பம், உணவு ஊட்டச்சத்து, சமையல் மற்றும் உணர்வியல் விஞ்ஞானம் மற்றும் உணவு உற்பத்திக்கான அமைப்பு ஆகிய ஆறு ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.

இப்பிரிவு இரசாயனவியல், நுண்ணுயிரியல், பொறியியல் மற்றும் அடிப்படை விஞ்ஞான கருவிகளை பயன்படுத்தி பண்ணை தொடக்கம் உணவுமேசைவரை உணவுகளில் உள்ள பௌதீக, இரசாயன, உயிரியல் பண்புகளை கற்க உதவுகிறது. மேலும் உணவு இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல், செயற்பாட்டு உணவு, உணவு பாதுகாப்பு, உணவு நுண்ணுயிரியல், தானியம் மற்றும் பால் விஞ்ஞான தொழில்நுட்பம், உணவு சேர்க்கைகள் மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளில் அரசாங்க மற்றும் தனியார் தொழில் துறைகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மாணவர்களுக்கு கல்வியை வழங்க பல ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறது. எமது பட்டதாரிகள் உணவு செயலாக்கத் துறை, ஆலோசனை வழங்குதல், கற்பித்தல், தொழில்நுட்ப சந்தைப்படுத்தல், முகாமைத்துவம், ஆய்வுஉணவுப் பொருள் உருவாக்கம் ஆகிய துறைசார்ந்த அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள முடியும்.

**பொருள் தொழில்நுட்பம் தொடர்பான BET பட்டம்**

பொறியியல் தொடர்பான கௌரவ இளமாணிப்பட்டத்தின் பொருள் தொழில்நுட்ப பட்டமானது உலோக வடிவ உருவாக்கம், செயன்முறை மற்றும் உலோக உற்பத்தி ஆகிய துறைகளில் தேர்ந்த பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கற்கைநெறியில் உள்ள மாணவர்கள் உலோகம், செரமிக், பொலிமர், கண்ணாடி, கலப்புக்கள் மற்றும் கனியுப்பு ஆகிய துறைகளில் மிகையான பயிற்சியை பெறுவர். இக்கற்கைநெறி உலோக சோதனை, கணினி வழிபடுத்திய வடிவமைப்பு (CAD), உற்பத்தி தொழில்நுட்பம், தர முகாமைத்துவம் மற்றும் ஏனைய பொருட்சார்ந்த உற்பத்திகளில் கவனம் செலுத்துகிறது. மாணவர்கள் மூன்றாவது கல்வியாண்டில் ஆறு மாத காலம் தொழில் நிறுவனத்தில் தொழிற்பயிற்சியை மேற்கொள்வதோடு இறுதியாண்டில் பொருட் தொழில்நுட்பத்தில் தமது ஆராய்ச்சி செயற்றிட்டத்தை மேற்கொள்வர். இக்கற்கைநெறி தொடர்பான தொழில்வாய்ப்புகள் பின்வருமாறு,

- தொழில்துறை பொறியியலாளர்
- உற்பத்தி முகாமையாளர்
- ஊயுனு வரைவாளர்
- கட்டுமானப் பொருள் ஆய்வாளர்
- பொறியியல் முகாமையாளர்
- இயக்கவியலாளர்
- துர ஆய்வாளர்
- ஆய்வக தொழிநுட்பவியலாளர்
- ஆராய்ச்சி மற்றும் உருவாக்கம்

**தகவல் மற்றும் தொடர்பாடல் தொடர்பான கௌரவ இளமாணிப் பட்டம்**

BICT (Hons) கற்கைநெறியானது தேசியமற்றும் சர்வதேச தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய தரம் மற்றும் திறன் வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது செயற்கை நுண்ணறிவு, இணையம் தொடர்பான விடயங்கள், தரவு விஞ்ஞானம், கைத்தொலைபேசி கணனியியல், வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு ஆகிய நவீன துறைளை உள்ளடக்கியுள்ளது. இக்கற்கைநெறி இலங்கையின் முன்னணி தொழிற்துறை சார்ந்த நிபுணர்களை உள்ளீடாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இக்கற்கைநெறியை தொடர விரும்பும் மாணவர்கள் க/பொ/த உ/த பரீட்சையில் தொழில்நுட்பபிரிவில் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பபாடங்களில் சித்திபெறவேண்டும். இக்கற்கைநெறியின் முதல் இரு வருடங்கள் கட்டாயப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடங்களையும் கடைசி 2 வருடங்கள் மாணவர்கள் தமக்குபிடித்த துறையை தேர்ந்தெடுக்கும் முகமாக சிறப்புப் பாடங்களையும் கொண்டுள்ளது. மேலும் முதல் மூன்று வருடங்களும் மாணவர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தும் நோக்கில் பல குழு செயற்றிட்டங்கள் நடாத்தப்படும். இறுதியாண்டில் மாணவர்கள் தமது தொழில் துறை பயிற்சியையும் ஆராய்ச்சி செயற்றிட்டத்தையும் மேற்கொள்ளவேண்டும்.

**மின் மற்றும் மின்னணு தொழில்நுட்பம் தொடர்பான BET பட்டம்**

பொறியியல் தொடர்பான கௌரவ இளமாணிப் பட்டத்தின் மின் மற்றும் மின்னணு தொழில்நுட்ப கற்கைநெறியானது பட்டதாரிகள் தேசிய மற்றும் சர்வதேச தொழில் துறைகளில் பணிபுரியும் விதமாகவும் மின் மற்றும் மின்னணு தொழிநுட்பதுறையில் தமது சுய தொழிலை மேற்கொள்ளும் விதமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறியை பின் தொடரும் மாணவர்கள் பின்வரும் 4 துறைகளில் அறிவு மற்றும் திறன்களை பெறமுடியும்.

- மின் தொழில்நுட்பம்
- மின்னணு தொழில்நுட்பம் தொலைத்தொடர்பாடல்
- ரோபோ மற்றும் தன்னியக்கம்

மாணவர்கள் முதல்: 2 வருடமும் பயிற்சிகளுடன் கூடிய மின் மற்றும் மின்னணு தொழில்நுட்பம் சார்ந்த அடிப்படை கொள்கைகளை கற்பர். மூன்றாம் ஆண்டின் முதல் அறையாணிடில் மின் மற்றும் மின்னணு தொடர்பான வெவ்வேறு துறைசார்ந்த பாடங்களை கற்பர். இரண்டாம் அரையாண்டில் ஆறுமாத தொழில் துறை பயிற்சியை ஒரு தொழில் நிறுவனத்தில் மேற்கொள்வர். இறுதியாண்டில் மின் மற்றும் மின்னணு தொடர்பான முன்னணி பாடங்களையும் ஆய்வு செயற்றிட்டத்தையும் மேற்கொள்வர். இக்கற்கைநெறியை தெரிவு செய்யும் பட்டதாரிகள் பின்வரும் துறைகளில் தொழில்வாய்ப்புகளை பெறலாம்

- மின் நிறுவல்
- மின் உற்பத்தி மற்றும் விநியோகம்
- கட்டுமானத் துறைசார்ந்த இயந்திர, மின் மற்றும் வடிகால் அமைப்பு (MEP)
- இணையவிடயங்கள் தொடர்பான தயாரிப்பு அபிவிருத்தி
- Embedded அமைப்பு பழுதுபார்த்தல், ஒன்றிணைத்தல், நிறுவல்
- கைத்தொலைபேசி தொடர்பாடல் வலையமைப்பு முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு
- நார் ஒளியியல் தொடர்பாடல், உபகரணக் கையாளல் மற்றும் பராமரிப்பு
- உணவு, கைவினை மற்றும் பொலிமர் உற்பத்தியில் தயாரிப்பு தன்னியக்கம்

# சப்ரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை (பெலிகுல் ஓய)

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| கலை (SAB) | - | S/E |
| முகாமைத்துவம் | - | E |
| விவசாயம் | - | E |
| உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | - | E |
| பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.) | - | E |
| பிரயோக விஞ்ஞானங்கள் (உயி. விஞ்.) | - | E |
| அளவையியல் விஞ்ஞானம் | - | E |
| விளையாட்டு விஞ்ஞானங்களும் முகாமைத்துவமும் | - | E |
| உடற்றொழில் கல்வி | - | E |
| சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் | - | E |
| மொழிபெயர்ப்பு கற்கைகள் | - | S/E |
| உணவு வணிக முகாமைத்துவம் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் | - | E |
| மென்பொருள் பொறியியல் | - | E |
| தகவல் முறைமைகள் | - | E |
| தரவு விஞ்ஞானம் | - | E |
| இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) | - | E |

**மருத்துவ பீடம்**

**மருத்துவத்துறை இளமாணிக் கற்கை (ஆடீடீளு பட்ட நிகழ்ச்சித்திட்டம்)**

மருத்துவத்துறை இளமாணி கற்கை நெறியானது (MBBS) ஐந்து வருட கால பகுதியை கொண்டது. இக் கற்கைகான பாடநெறியானது முறைப்படுத்தப்பட்ட மூன்று பிரதான பகுதிகளை கொண்டமைந்துள்ளது பகுதி I பகுதி II பகுதி III என்பன முறையே முன்சிகிச்சையியல் பாடநெறி (Preclinical) சம சிகிச்சையால் பாடநெறி (Paraclinical), சிகிச்சையியல் பாடநெறி (clinical) என்பனவாகும். முதல் மூன்று பருவ காலங்களில் கற்பிக்கப்படும் முன் சிகிச்சையியல் பாடநெறியானது மனித உடலின் பொதுவானகட்டமைப்புமற்றும் தொழிற்பாடுகளை பற்றியதாக அமையும். தனிமனித மற்றும் தொழிற்தகமைத் தொடரவிருத்தியும் இதில் (PPD) உள்ளடங்கும். சம சிகிச்சையியல் பாடநெறியானது 4 முதல் 7 வாரியான பருவங்களில் கற்பிக்கப்படும் என்பதோடு மனித உடலில்ஏற்படக்கூடியநோய்கள், அவற்றோடு தொடர்புடைய அசாதாரண உடல் அமைப்புகள் மற்றும் ஒவ்வொரு நிலைமையின்போதும் உடல்அமைப்புகளின் தொழில்பாடுகள் என்பவற்றோடு சமூக மருத்துவம் மற்றும்தனி மனித தொழிற்தகமை தொடரவிருத்தி என்பனஉள்ளடக்கப்பட்டதாகவும் அமையும். மருத்துவ துறை கற்கையின் இறுதி வருடத்தில் பயிற்றப்படும் இம் மூன்றாம் பகுதியானது மருத்துவம், அறுவை சிகிச்சை, மகப்பேற்று, மற்றும் பெண் நோயியல் உல நலவியல் மற்றும் குடும்ப நல மருத்துவம் உள்ளடங்கலான குழந்தை நல மருத்துவம் என்பவற்றில் தேர்ச்சியளிக்கும் வகையில் அமைந்திருக்கும். சிகிச்சையியல் பயிற்சிகளின் பொருட்டாக சகல வளங்களும் தேவையான அனைத்து வசதிகளும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையினால் வழங்கப்படும்.

மருத்துவத்துறை இளமாணி பட்ட கற்கை மாணவர்களின் தேர்ச்சி நிலையானது தொடர் கணிப்பீட்டு ஒப்படைகள் மற்றும் பாட இறுதி பரீட்சைகள் மூலம் கணிக்கப்படும். (MBBS) இப் பாட இறுதி பரீட்சை ஆனது முறையே இரண்டாம் படிநிலை MBBS மூன்றாம், படிநிலை MBBS மற்றும் இறுதி படிநிலை MBBS எனும் மூன்று படிநிலைகளை கொண்டமையும்.

மருத்துவத்துறை இளமாணி பட்ட கற்கை மாணவர்களுக்கு தமது முதல் பருவ கால கற்கை முதல் நோயாளர் பற்றிய தனி நிலை ஆய்வு அறிக்கை பகுப்பாய்வு வைத்திய சாலை ஆய்வு கூட விஜயம், நோயாளர் சந்திப்புகள், வைத்திய சாலை விஜயம் உள்ளிட்டு இக் கற்கைநெறியோடு தொடர்புடைய அணைத்து விதமான சிகிச்சையியல் துறை சார்ந்த பயிற்சிகளையும் பெற்று தேர்ச்சி நிலைய அடைய கூடிய வாய்ப்பு கிடைக்கும். மேலும் அனைத்து நிலைகளிலும் மாணவர்கள் தாம் பெற்றுள்ள அடிப்படை விஞ்ஞான அறிவை பிரயோகித்து நோய்மை கூறுகளை சரியாக இனமறிந்து விளங்கப்படுத்தக்கூடிய உச்ச பட்ச ஆற்றலை மேன்படுத்தக்கூடிய வகையில் அவர்களுக்கான பாடநெறி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஆழமானதாக அமைவதை உறுதிப்படுத்துவது இவ் கற்கைநெறியின் மித பிரதானமான அம்சமாக கருதப்படும். இக் கற்கையின் மிக பிரதமான அம்சமாக காணப்படும். இக் கற்கைகளின் அனைத்து விதமான கற்பித்தல் வழிகாட்டல்களும் கணிப்பீடுகளும் ஆங்கில மொழி மூலமே இடம்பெறும்.

மருத்துவ மாணவர்களுக்கு நோயாளர் நலன்களை மையப்படுத்திய சிகிச்சையியல் பயிற்சிகளில் தேர்ச்சியும் மிகத்தரமும் வாய்ந்த தொழிற்தகைமையை பெற்றுக்கொடுத்தல், நோய்களுக்கான தடுப்புமுறைகள், சிகிச்சை முறைமைகள் உள்ளிட்ட அடிப்படை சுகாதார நலன்களை பெற்றுக் கொடுக்கும் இப் பொறிமுறை தொடர்பான அடிப்படைக் கேள்விகளை இனங்கண்டு விடையளிக்கும் ஆற்றலும் தேர்ச்சியும் மிக்க தகைமையாளர்களை உருவாக்குதல் என்பன இந்தக் கற்கைநெறியின் அடைவு இலக்காக அமையும்.

எனவே தனிமனிதர்களின் சமூகப் பொருளாதார நிலை, பால் நிலை, இனத்துவ அடையாளம், வயதுவேறுபாடு மற்றும் இயலாமை முதலான அனைத்துவித பாகுபாடுகளுக்கும் அப்பால் சகலருக்குமான சுகாதார நலன்களை நிறைவுசெய்யும் வகையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகுந்த கருணையோடு பணியாற்றத்தக்க நாளைய மருத்துவத்துறைசார் தகைமையாளர்களை உருவாக்கதல், பொருத்தமான தொழில்நுட்ப பொறிமுறைகளைக் கையாண்டு சுகாதார நலன்களையும் நோய்த்தடுப்புமுறைகளையும் மேம்படுத்தக்கூடிய வகையில் ஆய்வுமுயற்சிகளை ஊக்குவிக்கும் போதிய திறன்சார் அறிவையும் பயிற்சிகளையும் வழங்குதல் என்பவற்றை இப் பீடம் தனது அடைவு இலக்குகளாகக் கொண்டு மிகுந்த அர்ப்பணிப்போடு பணியாற்ற உறுதிபூண்டுள்ளது.

இந்த அடிப்படையில் மருத்துவ துறை இளமானி பட்டபடிப்பினை சிறப்பாக பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு உள்வாரி மருத்துவ பயிற்சி பணிவாய்ப்பு கிடைக்கும் என்பதோடு அதோடு இப் பீடத்தில் இருந்து வெளியேறும் மருத்துவ துறை இளமானி பட்டதாரிகள் பன்முக தகைமைகளோடும் துறைசார் தேர்ச்சியோடும் பணியாற்ற தக்க திறன்வாய்ந்தவர்களாக திகழ்வார்கள் என்பதே நமது நம்பிக்கையாகும்.

**விவசாய விஞ்ஞானங்கள் பீடம்**

விவசாய விஞ்ஞான பீடத்தால் விவசாய விஞ்ஞானமும் முகாமைத்துவமும் எனும் நான்கு வருடப் பாடநெறியின் நிறைவில் விஞ்ஞானமானிப் (B.Sc) பட்டம் வழங்கப்படுகின்றது. இப்பீடத்தில் பின்வரும் மூன்று திணைக்களங்கள் அடங்குகின்றன. விவசாய வர்த்தக முகாமைத்துத் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தித் திணைக்களம். இலக்கையில் உள்ள பல்கலைக்கழகங்கினுள் விவசாய வர்த்தகம் சார்பான சிறந்த கற்கையை வழங்கும் பிரிவாக விவசாய வர்த்தக முகாமைத்துவத் திணைக்களம் விளங்குகிறது. உணவு வர்த்தக முகாமைத்துவ விஞ்ஞானமானிப் பட்டம் தொடர்பான விவரங்கள் இக்கையேட்டின் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தினால் பின்வரும் மூன்று கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன: விவசாயச் சுற்றுச்சூழல் வள முகாமைத்துவம், பயிர் மேம்பாடு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம். கால்நடை உற்பத்தித் திணைக்களத்தினால் நீர்வாழ் உயிர்வள முகாமைத்துவம் மற்றும் விலங்கு உயிர் வள முகாமைத்துவம் எனும் கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

விவசாய விஞ்ஞானப் பட்டத்திற்கான பாடநெறியில் அறிவு, திறன் மற்றும் புலமையை பெறுவதற்குக் குறைந்தது நான்கு வருட முழு நேர கற்கை அவசியாகும். நான்கு வருடத்தில் எட்டு தவணைகளில் இப்பாடநெறி இடம்பெறும். ஒரு வருடத்தில் இரு தவணைகள்; ஒரு தவணையில் 15 கிழமைகள். முதலிரு வருடங்களில் அடிப்படைப் பாடவிடயங்களையும் இறுதி இரு வருடங்களில் சிறப்புப் பாடங்களையும் கற்க வேண்டும். இந்த பட்டத்தை பெறுவதற்கு குறைந்தது 130 கிரெடிட்டுகளை (உசநனவைள) பெறவேண்டும்.

**கௌரவக் கற்கைநெறி**

கௌரவக் கற்கைநெறி மாணவர்களுக்குப் பிடித்த துறையில் மேம்பட்ட கல்வியை பெறுவதற்கு வழிவகுக்கிறது. பின்வரும் கௌரவக் கற்கைநெறிகளில் ஒன்றை மாணவர் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் உண்டு: விவசாய வர்த்தக முகாமைத்துவம், விவசாயச் சுற்றுச்சூழல் வள முகாமைத்துவம், பயிர் மேம்பாடு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம், நீர்வாழ் உயிர் வள முகாமைத்துவம், விலங்கு உயிர் வள முகாமைத்துவம். இந்தக் கற்கை நெறிகளில் சிறந்த வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இறுதித் தவணையில் பாடத்திட்டத்தின் தொழிற் பயிற்சி அம்சத்தைப் பூர்த்தி செய்வதற்காக மாணவர்கள் தொழில் வாய்ப்பு உள்ள இடங்களில் பயிற்சிக்காக அமர்த்தப்படுவர். முதல் இரு வருடங்களில் கட்டாயமாக அடிப்படைப் பாடங்களையும் இறுதி இரு வருடங்களில் மாணவர்கள் கட்டாயமான மற்றும் தமக்கு விருப்பமான பாடங்களையும் தெரிவு செய்யமுடியும்.

**தொழிற் பயிற்சியும் ஆய்வேடும்**

பாடத்திட்டத்தின் மிகச்சிறந்த அம்சமாக இறுதித் தவணை அமைந்துள்ளது. இதன்போது மாணவர்கள் நடைமுறைத் தொழில் அனுபவப் பயிற்சியுடன் அந்த இடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஆய்வேடு ஒன்றையும் எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.

முதல் மூன்று வருடங்களில் கட்டாயமாக சிறந்த தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் என்னும் பாடங்கள் கற்பிக்கப்படும். இவை கல்விக்கும் மேற்படிப்புக்கும் உறுதுணை புரியும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**B.Sc உணவு வணிக முகாமைத்துவம் :**

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் விவசாய வணிக முகாமைத்துவ திணைக்களத்தால் 2016இல் இருந்து வழங்கப்படும் ஒரு புதிய நான்கு வருட விசேட கற்கைநெறியாகும். இந்த கற்கைநெறி உணவுசார் துறை தொடர்பான ஒரு முழுமையான புரிந்துணர்வையும், உணவு வணிக முகாமைத்துவம் பற்றிய ஒரு விரிவான பயிற்சியையும் வழங்குகிறது. இத்துறை சார்ந்த உணவு தயாரிப்பு முதல் சந்தைப்படுத்தல் வரை அனைத்து பிரிவுகளிலும் சிறந்த பயிற்சியை வழங்கக்கூடிய வகையில் இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

**B.Sc உணவு வணிக முகாமைத்துவ பாடத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- உணவு வணிக முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் என ஒன்றோடொன்று இணைந்த இரு துறைகளில் சிறந்த பயிற்சி
- சர்வதேச தரத்திலான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி அனுபவமுள்ள விரிவுரையாலர்களினால் உணவு சங்கிலி தொடர்பான இயற்கை மற்றும சமூக விஞ்ஞான துறைகளில் தேர்ச்சி
- வணிக முகாமைத்துவ, சந்தைப்படுத்தல் சார் வல்லுனர்களுடனும் அத்தொழில் சார் துறையுடனுமான வலுவா இணைப்புகள். உணவுத்துறை சார் நிபுணர்களுடனான சிறந்த தொடர்புகள்
- உணவு சங்கிலிகளில் தொழில்கள் வருகைகள் மூலம் உலக அனுபவம் கிடைக்கும். மாணவர்கள் உண்மையான வணிக சூழ்நிலைகளுக்கு உணவு வணிகம், சந்தைப்படுத்தல் கொள்கைகளை பயன்பாடு வலியுறுத்தி தனிப்பட்ட மற்றும் குழு திட்ட பணிசெய்யும் பயிற்சி.
- பீடத்திலும் திணைக்களத்திலும் சிறந்த கல்வி கற்றலுக்கான சூழல்.

உணவு தொழில் வணிக முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை நான்கு பயிற்சி பெற்ற பட்டதாரிகள் கேள்வி உயர்ந்து வருகிறது. சாத்தியமான வேலைவாய்ப்பு உயவு துறையில் வணிக முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சந்தை ஆராய்ச்சி, புதிய தயாரிப்பு வளர்ச்சி, விற்பனை, கொள்முதல், சில்லறை மேலாண்மை, சங்கிலி மேலாண்மை மதிப்பு, மனிதவள முகாமைத்துவம், கொள்கை பகுப்பாய்வு, முகாமைத்துவம் ஆலோசனை, நிதி மற்றும் கணக்கியல் ஆகியவை அடங்கும்.

**கணக்கிடலும் தகவல் முறைமைகளும் பிரிவு**

ஆரம்பத்தில் புறம்பான கணக்கிடலும் தகவல் முறைமைகளும் பிரிவு ஆரம்பிக்கப்படும் வரை விவசாய விஞ்ஞானங்கள் பீடத்தின் கீழ் இது இருக்கும். நாட்டின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணக்கிடலிலும் தகவல் முறைமைகளிலும் பட்டதாரிகளை உற்பத்தி செய்யும்.

**பிரயோக விஞ்ஞான பீடம்**

பிரயோக விஞ்ஞான பீடங்கள் நான்கு திணைக்களங்களைக் கொண்டுள்ளது.

1. இயற்கை வளங்கள் திணைக்களம்
2. பௌதீக விஞ்ஞானங்கள் திணைக்களம்
3. உணவு விஞ்ஞானங்களும் தொழில்நுட்பமும் திணைக்களம்
4. விளையாட்டு விஞ்ஞானமும் உடற்றொழிலியல் கல்வியும் திணைக்களம்

இந்த பீடத்திலுள்ள இயற்கை வளங்கள் பிரிவு, பௌதீக விஞ்ஞானங்கள் பிரிவு மற்றும் உணவு விஞ்ஞானங்களும், தொழில்நுட்பமும் பிரிவுகள் பின்வரும் பட்டங்களை வழங்குகின்றன. மேலும் இயற்கை வளங்கள் பிரிவும், பௌதீக விஞ்ஞானங்கள் பிரிவும் மூன்று

வருட படிப்பு அல்லது நான்கு வருட விசேட துறை பட்ட படிப்பு திட்டங்களையும் கொண்டுள்ளன. பயிலுனர்களின் விருப்பத்தின் அடிப்படையில் படிப்புக்களை மேற்கொள்ளலாம்.

பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தினால் வழங்கப்படும் எல்லா பட்டத் திட்டங்களும் தனியே ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும். இந்த பீடம் எல்லா பட்ட திட்டங்களுக்கும், தவணை (15 கிழமைகள் ஒரு தவணை) மூலமான பாட புள்ளித் திட்டங்களை கொண்டுள்ளது.

பட்டத் திட்டங்கள்:

- அ. உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பத்தில் கௌரவப் பட்டம்
- ஆ. சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்தில் கௌரவப் பட்டம்
- இ. சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்தில் பொதுப் பட்டம்
- ஈ. இரசாயனத் தொழில்நுட்பத்தில் கௌரவப் பட்டம்
- உ. கணனி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் கௌரவப் பட்டம்
- ஊ. பிரயோக பௌதீகத்தில் கௌரவப் பட்டம்
- எ. பௌதீக விஞ்ஞானத்தில் கௌரவப் பட்டம்
- ஏ. உடற்றொழில் கல்வியில் கௌரவப் பட்டம்
- ஒ. விளையாட்டு விஞ்ஞானங்களும் முகாமைத்துவமும் கௌரவப் பட்டம்

**பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப திணைக்களம்**

பிரயோக விஞ்ஞானங்கள், பௌதீக விஞ்ஞான பிரிவின் கீழ் பீடமானது பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தில் மூன்று வருட பட்ட நிகழ்ச்சி திட்டத்தையும், கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், இரசாயன தொழில்நுட்பம் மற்றும் பிர-யோக பௌதீகவியல் ஆகியவற்றில் நான்கு வருட விசேட பட்ட நிகழ்ச்சி திட்டங்களையும் வழங்குகின்றது. நாட்டின் தற்போதைய தொழில் கிராக்கிக்கு ஈடு செய்வதற்காக இப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் கணனி இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் துறைகள் யாவும் பிரயோகங்கள் மூலமான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. முக்கியமாக இந்த படிப்பின் இறுதித் தவணையில் (நான்காம் வருடம் - இரண்டாம் தவணை) மாணவர்கள் கட்டாயமாக தொழில்பேட்டை சார் அல்லது தேடல் சார் பயிற்சியை 15 வாரங்களுக்கு மேற்கொள்ளல் வேண்டும். இந்த பயிற்சியின் முடிவில் தொகுப்பு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பது மட்டுமல்லாது வாய் மொழி மூலப்பரீட்சையையும் எதிர்நோக்கல் வேண்டும்.

**இரசாயன தொழில்நுட்பம்:** மின் இரசாயன தொழில்நுட்பம், பல்பகுதிய தொழில்நுட்பம், கைத்தொழில் இரசாயனவியல் மருத்துவ மற்றும் மருந்தாக்கவியல் இரசாயனவியல், இயற்கை உற்பத்தி இரசாயனவியல், பகுப்பாய்வு தொழில்நுட்பம், சூழல் இரசாயனவியல், உயிரியல் சேதன மூலக்கூறுகளின் இரசாயனவியல் மற்றும் உணவு இரசாயனவியல்.

**கணினி விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்:** நிகழ்ச்சிப்படுத்தல் தொழில்நுட்பங்கள், இணைய நிகழ்ச்சிப்படுத்தல், தரவுத் தளமுகாமைத்துவ முறைமை, மென்கணிய இயந்திரவியல், கணினி வரை படங்கள், பிரதிமை படிநிலைப்படுத்தல், நோக்கத்திலான முனைப்பிலான பகுப்பாய்வு, செயற்கையான புலனாய்வு, செயற்கையான நரம்பு சார்ந்த வலைப்பின்னல்கள், செயற்பாட்டு முறைமைகள்.

பிரயோக பௌதீகவியல்: இலத்திரனியல், சக்திச் சொட்டு பொறியியல், குறை கடத்தி பௌதீகவியல், மின்சாரம் மற்றும் காந்தவியல், ஆடலோட்ட தத்துவம் மற்றும் சுற்றுக்கள், பௌதீக ஒளியியல், நார்ப்பொருள் ஒளியியல் மற்றும் தொடர்பாடல், அணு மற்றும் கரு பௌதீகவியல்.

**இயற்கைவளங்கள் திணைக்களம்**

இந்த பிரிவானது இரண்டு பட்டப்படிப்புக்கான நிகழ்ச்சித் திட்டத்தை கொண்டுள்ளது. இலங்கையில் சூழலியல் விஞ்ஞானமும் இயற்கைவள முகாமைத்துவங்களும் என்ற பாடத்தில் முதற்பட்டத்தைப் பெற்றுக்கொடுக்கும் பிரிவாக விளங்குகின்றது. இந்த படிப்பை மாணவர்கள் மூன்று வருட பட்டப்படிப்பாகவும் அல்லது நான்கு வருட விசேட தரப்படிப்பாகவும் மேற்கொள்ளலாம். கணிதம், புள்ளிவிபரவியல், இரசாயனவியல், பௌதீகம், கணினி மற்றும் அடிப்படை முகாமைத்துவக் கொள்கைகள் ஆகிய பாடங்கள் முதல்வருட கட்டாய அடிப்படைப் பாடங்களாக உள்ளன. இதைத்தவிர பாடவிதானமானது சூழலியல் விஞ்ஞானம், இயற்கைவள பயன்பாடும் முகாமைத்துவமும், காடு வளர்த்தல், நில விஞ்ஞானம், நீரியல், உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சியறிவு, இயற்கை வள பொருளியல், மண்ணியல் விஞ்ஞானம், மண்ணரிப்பும் பாதுகாப்பும், கழிவு முகாமைத்துவம், சூழலியல் தாக்க மதிப்பீடு, புவிசார் தகவல் முறைமை/ தொலை உணர்தல் போன்ற பாடங்களை கொண்டுள்ளது.

மேலும் இந்த பாடங்கள் மூன்று பிரதான அலகுகளில் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன, சூழலியல் விஞ்ஞானம், பாரம்பரிய உயிரியல், நில விஞ்ஞானங்கள் ஆகும்.

விடுகை வருடத்தில் இந்த கற்கைநெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பாகவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிப்பரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

**உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் திணைக்களம்**

இந்த பிரிவினால் வழங்கப்படும் உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் விசேட படிப்பானது பட்டதாரிகளை முகாமைத்துவ வாண்மை வாய்ந்த தலைமைத்துவம் மிக்க ஆளமை மிக்கவர்களாக ஆக்குவதிலும், அவர்கள் அறிவை உணவு விஞ்ஞானத்துறையில் பரப்புவொராகவும், திட்டமிடல் முகாமைத்துவம் செய்தல், மேற்பார்வை செய்தல், ஆய்விலும் அபிவிருத்தியிலும் ஈடுபடல், சந்தைப்படுத்லில் ஈடுபடல் போன்ற தொழில்களில் விண்ணர்களாக இருப்பர்.

முதல் வருடத்தில், மாணவர்கள் அடிப்படைத் துணைப்பாடங்களாக இரசாயனவியல், பௌதீகவியல், கணிதம், புள்ளிவிபரவியல், முகாமைத்துவம், கணினி விஞ்ஞானம், உயிரியல் என்பவற்றை கற்றுக்கொள்ளல் வேண்டும். இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் மாணவர்கள் உணவு இரசாயனம், உணவுப்பகுப்பாய்வியல், உணவு நுண்ணாய்வியல், உணவு பொறியியல், உணவு பரிமாற்றத் தொழில்நுட்பம், போசாக்கும் தர முகாமைத்துவமும் போன்ற பாடங்களை கற்றுக்கொள்வர்.

விடுகை வருடத்தில் இந்த கற்கை நெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிப் பரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

**விளையாட்டு விஞ்ஞானமும் உடற்றொழில் கல்வியும் திணைக்களம்**

**விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் பட்ட திட்டம்**

இந்தப் பிரிவின் கீழ் பீடமானது நான்கு வருட கௌரவப் பட்டப்படிப்பை வழங்கி வருகின்றது. மேலும் இந்த விசேட படிப்பானது மாணவர்களை ஒரு சிறந்த விளையாட்டு வீரராக உருவாக்குவது மட்டுமில்லாது விளையாட்டு சம்பந்தமான அறிவுகளை வளர்க்கும் அளவுக்கு பாட விதானங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. விசேடமாக விளையாட்டும் சக்தியும், விளையாட்டு மருத்துவம், விளையாட்டு சட்டங்கள், விளையாட்டும் முகாமைத்துவமும் போன்ற பகுதிகளில் விசேட கவனம் செலுத்துமளவுக்கு பாட விதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

விடுகை வருடத்தில் இந்த கற்கைநெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிபரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

**உடற்றொழில் பட்ட திட்டம்**

இந்தப் பிரிவின் கீழ் பீடமானது நான்கு வருட கௌரவப் பட்டப்படிப்பை வழங்கி வருகின்றது. மேலும் இந்த விசேட படிப்பானது உடற்கல்வி துறையில் ஒரு சிறந்த வல்லுனரை உருவாக்குவது மட்டுமல்லாது விளையாட்டு சம்பந்தமான அறிவுகளை வளர்க்கும் அளவுக்கு பாட விதானங்கள் தன்னகத்தே கொண்டுள்ளது. விசேடமாக உடற்கல்வியும் பாடசாலைகளும், பயிற்றுவிப்பு கலைகள், உடற்கல்வி மற்றும் முகாமைத்துவம் சார்ந்த பயிற்சிகளை கொண்டுள்ளது. விடுகை வருடத்தில் இக் கற்கைநெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிபரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

## கேத்திரகணித பீடம்

தற்போதைய பீடம் இரு துறைகளை உள்ளடக்கியுள்ளது.

(அ) நில அளவையியல் மற்றும் புவி இயற்பியல் துறை

(ஆ) தொலையறிதல் மற்றும் பூகோளத் தகவல் முறைமைத் துறை

**பட்டப்படிப்பு கற்கைநெறி**

பீடத்தின் மூலம் வழங்கப்படும் நான்கு வருட பட்டப்படிப்பு கற்கைநெறியில் அளவையியல் விஞ்ஞானம்,புவி இயற்பியல், பொருத்தக் கோட்பாட்டு கொள்கை, பட வரைகலை விஞ்ஞானம், நிழற்படவியல், தொலையறிதல், பூகோள தகவல் முறைமை, நில மதிப்பீட்டு முறைமை, நிலவுக நீர் நிலை அளவையியல் மேலும் கணிதம், பௌதீகம், கணனிப் பிரயோகம், பொருளாதாரம், முகாமைத்துவம், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்படும்.

பட்டப்படிப்பு கற்கை நெறியானது 8 பருவ காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் 5 பருவ காலங்களில் கற்பிக்கப்படும் கற்கை நெறி அனைத்தும் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானவை. இந்த பருவ காலங்களின் போது நில அளவை தொடர்பான எல்லா எதிர்பார்ப்புகளும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. 5 பருவ கால கல்வி நடவடிக்கைகளின் பின்னர் மாணவர்கள் நில அளவை தொடர்பான எல்லாப் பிரிவுகளிலும் சிறந்த அறிவை பெற்றுக் கொள்வர். அடுத்த 2 பருவங்களின் போது மாணவர்கள் 5 விசேட பாடப் பரப்புகளில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

1. நில அளவை மற்றும் புவி இயற்பியல்
2. நில முகாமைத்துவம்
3. நிலவுக நீர் நிலை அளவையியல்
4. தொலையறிதல்
5. பூகோள தகவல் முறைமை

கடைசிப் பருவ காலம் மாணவர்கள் தொழிற் தேர்ச்சி பெறுதற் பொருட்டு தொழில் துறை பயிற்சிகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இப் பட்டப்படிப்பு கற்கை நெறி இலங்கை நில அளவை குழுமத்தினால்(RICS) அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு நிலவுக நீர்நிலை அளவியல் கௌரவப் கற்கைநெறியானது சர்வதேச நிலவுக ரோயல் பட்டய நில அளவையியலாளர்கள் குழுமத்தினால் IBSC) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிலவுக நீர் நிலை அளவியல், கடல் சார் படவரை கலைஞர்கள் தரம் B (IFG/IHO/ICA-CatB) போன்ற பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் இப் பீடமானது சர்வதேச நில அளவையியளாளர் ஒன்றியத்தின் ஒரு கல்விசார் அங்கத்துவம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**

முகாமைத்துவக் கற்கைகள் பீடமானது தனது செயற்பாடுகளை 1996ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆரம்பித்தது. முதலாம் வருடத் தொடக்கத்திலேயே இச் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டார்கள். இதன் வழிகாட்டல்க ஆங்கில மொழிமூலம் வழங்கப்படுகின்றன. கணக்கியல் மற்றும் நிதித்துறை, வியாபார முகாமைத்துவத்துறை, சுற்றுலா முகாமைத்துவத்துறை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை ஆகிய நான்கு திணைக்களங்களுக்குரிய கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் பொழுது பின்வரும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| கணக்கியல் மற்றும் நிதித் திணைக்களம் | - விஞ்ஞானமாணி (B.Sc) நிதியியல் முகாமைத்துவம் (கௌரவ)<br>- விஞ்ஞானமாணி (B.Sc) வங்கியியலும் காப்புறுதியும் (கௌரவ) |
| வியாபார முகாமைத்துவ திணைக்களம் | - விஞ்ஞானமாணி (B.Sc) வியாபார முகாமைத்துவம் (கௌரவ) |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவ திணைக்களம் | - விஞ்ஞானமாணி சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (கௌரவ) |
| சுற்றுலா முகாமைத்துவத் திணைக்களம் | - விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றுலா முகாமைத்துவம் (கௌரவ)<br>- விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றாடல் இயைவாக்க வியாபார முகாமைத்துவம் (கௌரவ)<br>- விஞ்ஞானமாணி (B.Sc) விருந்தோம்பல் முகாமைத்துவம் (கௌரவ) |

பீடத்திற்குரிய எல்லாப் பட்டக் கற்கை நெறிகளும் வருடத்திற்கு இரண்டு பருவகாலங்களைக் கொண்ட எட்டுப் பருவகாலங்களில் முழு நேரக் கற்கை நெறிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பருவகாலமும் 15 கிழமைகளை உள்ளடக்கியுள்ளன. கடைசிப் பருவகாலத்தில் 4 மாதச் செய்முறைக் கற்கைநெறியுடன் பல கற்கைப் பிரிவுகளையோ அல்லது சுதந்திரமான ஆய்வுக் கற்கையையோ நிறைவு செய்யும்படி மாணவர்கள் வேண்டப்படுவர்.

ஒவ்வொரு பருவகால முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுடைய திறமைகளை அளவிடுவதற்கு சராசரிப் புள்ளியிடல் (GPA) முறை பயன்படுத்தப்படுகின்றது. பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள் பீடத்தினால் அனுமதி வழங்கப்பட்ட ஒரு அமைப்பில் நான்கு மாதகாலச் செயன்முறைப் பயிற்சியையோ அல்லது தமது விசேட கற்கைத் துறையுடன் ஒத்த ஆய்வுக் கற்கைநெறியினையோ மேற்கொள்ள வேண்டுமென வேண்டப்படுவர்.

**பீடத்தினால் வழங்கப்படும் பட்டக் கற்கை நெறிகள் தொடர்பான சுருக்க விபரம்**

**விஞ்ஞானமாணி (B.Sc) நிதியியல் முகாமைத்துவப் (கௌரவ) பட்டக் கற்கைநெறி**

இப் பட்டக் கற்கைநெறியானது நிதியியல் தொடர்பான துறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள நினைப்பவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரதான கணக்கியல் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் தொழில்சார் பரீட்சைகள் தொடர்பான கற்கைநெறிகளுக்குச் சமமானதாகவே அதிகமான கற்கைநெறிகள் இந்நிகழ்ச்சியின் கீழ் கற்பிக்கப்படுகின்றன. இப் பட்டக்கற்கை நெறியினை பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு தொழில்சார் கணக்கியல் நிறுவனங்கள் வழங்கும் சில பாடங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

**விஞ்ஞானமாணி (B.Sc) வங்கியியலும், காப்புறதியும் (கௌரவ) பட்டக் கற்கைநெறி**

வங்கியியலும் காப்புறுதியும் கௌரவ பட்டக் கற்கைநெறியானது இத் துறை சார்ந்த அறிவு, ஆற்றல், திறமை நன்நடத்தை என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குவதனூடாக வினைத்திறன் மிக்க முகாமையாளர்களை தேசிய, சர்வதேசத் தரத்தில் உருவாக்குமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களுக்கு அதே துறையில் கோட்பாட்டு அறிவுடன் செயற்பாட்டறிவையும் வழங்குகின்றது. அது மட்டுமன்றி காத்திரமான கற்கைப் பிரிவுகளை வழங்குவதனூடாக மாணவர்களைச் சமுதாயத் தேவைக்கேற்பவும் தொழிற்றுறைகளில் நிலவும் சந்தைக் கேள்விகளுக்கு ஏற்பவும் தயார்படுத்துகின்றது.

**விஞ்ஞானமாணி (B.Sc) வியாபார முகாமைத்துவக் (கௌரவ) கற்கைநெறி**

இப் பட்டப்படிப்புக் கற்கைநெறியானது இத்துறை சார்ந்த மாணவர்களுக்கு முகாமைத்துவம், வியாபாரம், வர்த்தகம் போன்ற துறைகளில் சிறந்த ஆளுமையைப் பெற்றுக்கொடுத்தல் மூலம் அத்துறை சார் தொழிற்துறைகளுக்கு ஏற்றவாறு அவர்களைத் தயார்ப்படுத்துகின்றது. மேலும் மாணவர்களுக்கு அத்துறைசார் அறிவு, திறமை, ஆற்றல் என்பவற்றை வழங்குவதனூடாக தற்கால வர்த்தக உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவிதத்தில் அவர்களை உருவாக்குமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**விஞ்ஞானமாணி (B.Sc) சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் (கௌரவ) கற்கைநெறிகள்**

இத்துறையில் திறமையானதும் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் இத்துறையிலுள்ள சவால்களை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் உற்பத்தித்துறை, போக்குவரத்துத்துறை, தொடர்பாடல் துறை, அரசசேவைத்துறை, காப்புறுதித்துறை, உடல்நலத்துறை, வங்கியும் அரசாங்க நிறுவனங்களும் போன்ற துறைகளில் தொழிலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெறுவர்.

**விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றுலா முகாமைத்துவக் (கௌரவ) கற்கைநெறி**

இலங்கையில் இத்துறைதொடர்பாகவுள்ள ஒரே பட்டப்படிப்புக் கற்கைநெறி இதுவாகும். மாணவர்கள் இத்துறை தொடர்பான அறிவு, ஆற்றல், திறமை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுவதனூடாக சுற்றுலாத்துறையில் முகாமையாளர்களாகத் தொழில்செய்வதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் கற்கும் மாணவர்கள் இக் கற்கைநெறிக்காலத்தில் மேலதிகமாக மேலைத்தேய மொழியொன்றினையும் கற்க வேண்டும். இக் கற்கைநெறியினைப் பூர்த்திசெய்யும் மாணவர்கள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள சுற்றுலாத்துறை நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமையாளர் பதவிகளை நோக்கிய பதவிகளுக்குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்.

**விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றாடல் இயைவாக்க வியாபார முகாமைத்துவக் (கௌரவ) கற்கைநெறிகள்**

இக்கற்கைநெறியானது வித்தியாசமான சுற்றாடற் பிரச்சினைகளுக்குத் தொழில்நுட்ப ரீதியானதும் நிலையானதுமாகிய தீர்வுகளை எட்டக்கூடிய முகாமைத்துவப் பட்டதாரிகளை உருவாக்குமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறை தொடர்பான அறிவு, ஆற்றல், திறமை என்பவற்றினை வழங்குவதனூடாகத் தற்கால வர்த்தக உலகின் சவால்களைச் சமாளிக்கக்கூடிய மாணவர்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**விஞ்ஞானமாணி (B.Sc) விருந்தோம்பல் முகாமைத்துவக் (கௌரவ) கற்கைநெறிகள்**

இத்துறைக்குத் தேவையான அறிவு, திறமை, ஆற்றல் என்பவற்றைக் கொண்ட ஆளணியை உருவாக்குமுகமாக இக்கற்கை நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இத்துறை மூலம் இத்துறைக்குரிய கோட்பாட்டு அறிவுடன் செயன்முறைப் பயிற்சியோடு கூடிய கற்பித்தற் சூழல் வழங்கப்படுகின்றது. இத் துறையிற் கற்கும் மாணவர்கள், இக் கற்கைநெறிக்காலத்தில் மேலதிக மேலைத்தேய மொழியொன்றை கற்கும் வாய்ப்பினையும் பெறுகின்றனர். இத்துறையில் பூரணத்துவம் அடைபவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இத்துறை தொடர்பான நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமையாளர் பதவிகளை நோக்கிய பதவிகளுக்குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்.

**சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்**

கலை அல்லது வர்த்தக பிரிவில் குறைந்தபட்ச தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் இக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராவர்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் மற்றம் மொழிகள் பீடம் பின்வரும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றது.

1. கௌரவ இளங்கலைமாணிப் பட்டம் (நான்கு வருடங்கள்)
2. பொது இளங்கலைமாணிப் பட்டம் (மூன்று வருடங்கள்)

பீடமானது பொது இளங்கலைமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை பீடத்தின் ஐந்து துறைகளின் துனையுடனும் நடத்துகின்றது. அதேவேளை கௌரவ இளங்கலைமாணி பட்டங்கள் அதனுடன் தொடர்புடைய பாடங்களில் பின்வரும் வகையில் நடாத்தப்பட்டு வருகின்றது.:

**பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை**

01. பொருளியல் கௌரவ இளங்கலைமாணி
02. புள்ளிவிபரவியல் கௌரவ இளங்கலைமாணி
03. தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் கௌரவ இளங்கலைமாணி (ஆங்கில மொழிமூலம் மட்டும் வழங்கப்படுகின்றது)

**ஆங்கில மொழி கற்பித்தல் துறை (டி.இ.எல்.ரீ.)**

ஆங்கில மொழி கற்பித்தல் துறை, இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலை (டி.இ.எஸ்.எல்.) பிரதான மற்றும் துணைப் பாடங்களாக வழங்குவதுடன் மாணவர்களது பல்கலைக்கழக வாழ்வுக்கான ஆங்கில மொழிக் கற்கைநெறிகளையும் வழங்குகின்றது.

**புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை**

புவியியலில் கௌரவ இளங்கலைமாணி

**தகவல் தொழில்நுட்பத்துறை**

தகவல் தொழில்நுட்பத் துறையானது மாணவர்களின் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கற்கைநெறியினை வழங்குகின்றது.

01. சிங்களத்தில் கௌரவ இளங்கலைமாணி
02. தமிழில் கௌரவ இளங்கலைமாணி
03. ஆங்கிலத்தில் கௌரவ இளங்கலைமாணி
04. ஜெர்மன் மொழியில் கௌரவ இளங்கலைமாணி
05. ஜப்பான் மொழியில் கௌரவ இளங்கலைமாணி
06. சீன மொழியில் கௌரவ இளங்கலைமாணி
07. ஹிந்தி மொழியில் கௌரவ இளங்கலைமாணி
08. மொழிபெயர்ப்பு கௌரவ இளங்கலைமாணி

**சமூக விஞ்ஞானங்கள் துறை**

01. அரசியல் விஞ்ஞானத்தில் கௌரவ இளங்கலைமாணி
02. சமூகவியலில் சிறப்பு இளங்கலைமாணி

நான்கு வருட சிறப்புப் பட்டப் படிப்பிற்கான மாணவர்களது தெரிவானது அம் மாணவர்களது முதலாம் வருடத்தின் செயற்திறனை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது.

**தொழில்நுட்பவியல் பீடம்**

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஏழாவது பீடமாக அமைந்துள்ள இத் தொழில்நுட்ப பீடம் இரண்டு கல்வித் துறைகளைக் கொண்டுள்ளது. உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் துறை மற்றும் பொறியியல் தொழில்நுட்பத் துறை என்பவையே அவையாகும், அவை இரண்டும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான முழு நேர கற்கை நெறிகளை கொண்டவையாக காணப்படுவதோடு அவ் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு முறையே உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், பொறியியல் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் கௌரவ இளமானி பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் துறையினால் வழிநடாத்தப்படும் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் கௌரவ இளமானி (BBST Hons.) கற்கையானது, நான்கு வருட கற்கைநெறியனைக் கொண்டமைந்துள்ளது. முதல் இருவருட கால அடிப்படை பொதுக் கற்கைக்கான பாடநெறியினையும் மூன்றாம் வருடத் தொடக்கம் முதல் குறித்த துறையானது தலா 6 மாத கால தொழிற்துறை பயிற்சி நெறியுடன் கூடிய பின்வரும் மூன்று பிரதான பாடநெறிகளையும் ஒரு பருவகால ஆய்வுச் செயற்திட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது.

1. உயிர் வலு (Bio- Energy)
2. உயிர் தொழில் நுட்பம் (Bio- technology)
3. மருந்து கண்டுபிடிப்பு (Drug Discovery)

பொறியியல் தொழில்நுட்பவியல் துறையினால் வழிநடத்தப்படும் கற்கையை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு பொறியியல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமானி (BET Hons) பட்டம் வழங்கப்படுகின்றது. இக் கற்கை நெறியானது மித பிரதானமாக இயந்திர மற்றும் மின் பொறியியல் துறைகளிலும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளிலும் தொழில் தேர்ச்சி வாய்ந்த வல்லுனர்களை உருவாகும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதிக வேலை வாய்ப்புகளை உடைய இது தொழிற்துறையில் பட்ட கற்கையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் செயற்திறன் வாய்ந்தவர்களாகவும் அடிப்படை விஞ்ஞான மற்றும் பொறியியல் துறை சார் பிரயோக அறிவினூடே காத்திரமான புதிய கண்டு பிடிப்புகளில் ஈடுபட கூடியவர்களாகவும் நாட்டின் நிலையான சமூக பொருளாதார மற்றும் தொழில்நுட்ப மேம்பாடிற்காக பங்காற்றக்கூடியவர்களாகவும் அமைவார்கள் என்பது நமது எதிர்பார்ப்பாகும். அந்த வகையில் அங்கீகாரம் பெற்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் ஆய்வு மற்றும் கற்கை சார் துறைகளில் தரம் வாய்ந்த வல்லுனர்களுக்கான மத்திய நிலையமாக தொழிற்படுவதே இது தொழில்நுட்பவியல் பீடத்தின் அடிப்படை இலக்காகும்.

## வயம்பப் பல்கலைக்கழகம் (குளியாப்பிட்டி)

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| முகாமைத்துவம் | - | E |
| விவசாயம் | - | E |
| உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | - | E |
| பிரயோக விஞ்ஞானம் (பௌ. விஞ்.) | - | E |
| உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| இயந்திரப் பொறியியல் | - | E |

**வைத்திய பீடம்**

**MBBS கற்கைநெறி**

வயம்ப பல்கலைக்கழகத்தில் MBBS பட்டத்திற்கான கற்கை நெறியானது 5 வருட கற்கை நெறி ஆகும். அத்துடன் இது பாடங்களை அடிப்படையாக கொண்டது. இது 14 பிரதான பாடங்களை கொண்டது. அவை Preclinical (3 subjects), Paraclinical (6) and Clinical (5) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. Preclinical and Paraclinical என்பன பாட அலகுகளாக கற்பிக்கப்படும். முதல் மூன்று அரை ஆண்டுகளும் Preclinical பாடங்களும் 4-7 அரை ஆண்டுகள் வரை Paraclinical பாடங்களும் கற்பிக்கப்படும். Clinical பாடங்கள் 4 ஆம் அரை ஆண்டிலிருந்து 10 ஆம் அரை ஆண்டு வரை பரவலாகக் கற்பிக்கப்படும். அவை பாட அலகுகளாக கற்பிக்கப்பட மாட்டாது. கற்பித்தல் நடைபெறும் போதும் முடிந்த பின்னரும் இப் பாடங்கள் மதிப்பீடு செய்யப்படும். இரண்டாவது MBBS மற்றும் இறுதி MBBS என மூன்று தொகுக்கப்பட்ட பரீட்சைகள் நடைபெறும்.

மிகவும் திறமையான சமூக பொறுப்புணர்வு கொண்ட, ஆரோக்கிய பராமரிப்பு நிபுணர்களை உயர் தொழில் முறை தர நிலைகளுடன், பன்முகத்தன்மை, விமர்சன சிந்தனை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய கலாச்சார பண்புள்ள விற்பன்னர்களை உருவாக்குவதே எமது குறிக்கோள் ஆகும்.

அடிப்படை கோட்பாடுகளை கொண்ட இக் கற்கைநெறியின் எதிர்பார்க்கப்படும் வெளிப்பாடுகளாக (1) அதிக பட்ச சுகாதார பராமரிப்பு, முன்னேற்றம் மற்றும் சிறப்பம்சங்களை வழங்குவதற்கான உறுதி (2) சமூக மற்றும் பொது சுகாதாரதிற்கு உறுதியளித்தல் (3) திறமையான ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல் (4) நெறிமுறை மற்றும் நிபுணத்துவ நடத்தை (5) தலைமை மற்றும் குழு நிலை அர்ப்பணிப்பு மற்றும் (6) பன்முக தன்மைக்கான மரியாதை என்பவை அமையும்.

முதல் அரை ஆண்டிலிருந்து கற்பிக்கபடும் பாடங்களின் மருத்துவ ரீதியான சம்பந்தங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதே MBBS இன் அடிப்படை அம்சமாகும். உண்மையான நோயாளிகள், நிழற்றப்படங்கள், ஒளிப்பதிவுகள் மற்றும் காகித ஆவணங்களை பாவிப்பதன் மூலம் இந்த இலக்கானது எட்டப்படும். நான்காவது அரை ஆண்டிலிருந்து வைத்தியசாலையில் வைத்திய பயிற்சி வழங்கப்படும். ஏறத்தாழ எல்லா கற்கைகள் மற்றும் பயிற்சிகள் யாவும் வைத்தியசாலையிலேயே நடைபெறும். இக்கல்வி திட்டத்தின் மேலதிக அம்சங்களாக பிரச்சனைகளை தீர்க்கும் திறன்களை வளர்த்தல், மருத்துவத்தினாய் பயில்வேதற்கான அடிப்படை விஞ்ஞான பயன்பாடு, மாணவர் - மைய கற்றல் மற்றும் சுயமாக கற்றல், சிறு குழு நிலை கற்றல் மற்றும் பாடங்களின் கிடைமட்ட மற்றும் செங்குத்து மட்ட ஒருங்கிணைப்பு என்பவை காணப்படும். மாணவர்களின் பயிற்சிக்கான ஒரு பகுதியாக ஆய்வு திட்டத்தினை நிறைவு செய்யவேண்டியது கட்டாயமானது.

இக் கற்கைநெறிக்கான போதனை மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கான மொழிமூலம் ஆங்கிலம் ஆகும். இறுதி MBBS பரீட்சையில் தேறுவதுடன் சிறந்த நடத்தையினை கொண்ட மாணவர்களால் உள்ளாக்கப் பயிட்சி மற்றும் இலங்கை வைத்தியச் சங்கத்தில் பதிவு செய்தல் ஆகியவற்றிற்கு பரிந்துரைக்கப்படுவார்.

**வியாபாரக் கற்கைகள் மற்றும் நிதி பீடம்**

பீடத்தில் ஒரு நெறி – திறமை பெறுமான முறையொன்று தற்போது நடைமுறையிலுள்ளது 4 ஆண்டு காலப்பகுதிக்கு மொத்த திறமை பெறுமானங்கள் 120 ஆகும். கற்கைநெறிகள் ஆங்கில மொழி மூலமாக நடாத்தப்படும். மாணவர்களின் சிறப்புப்பட்ட நெறிகளுக்கான கற்கை புலங்களாவன வியாபார முகாமைத்துவம், கணக்கியலும் வியாபார நிதியும், வங்கியிலும் நிதியும் மற்றும் காப்புறுதி மற்றும் நிதியியலில், சிறப்பு பட்ட நெறிக்கு தெரிவு அடிப்படையாக முக்கியமாக முதலிரு வருடங்களில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடநெறிகளின் செயல்திறமை அடிப்படையிலானது. (அரையாண்டு I.II)

**விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் (மாகந்துர)**

விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடமானது பின்வரும் இரு கற்கைநெறிகளை வழங்குகின்றது.

I. விவசாயத்துறையில் இளங்கலை அறிவியல் கௌரவப்பட்டம் [BSc Hons) Agriculture)]
II. இளங்கலை உயிரியல் தொழில்நுட்ப கௌரவப்பட்டம் [BBST (Hons)]

இரண்டு கௌரப்பட்டக் கற்கைநெறிகளும் திறன் அலகுத் திட்டத்தினைப் (credit unit) பின்பற்றி ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படுகின்றன. ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மையமும் இக்கற்கைநெறிக்காக இணைந்து செயற்பட்டு தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் மாணவர்களின் மொழி மற்றும் தகவல் தொடர்பாடல் திறமைகள் மெருகூட்டப்படுகின்றன.

I. **(விவசாயத் துறையில் இளங்கலை அறிவியல் கௌரவப்பட்டம்)** - B.Sc Hons (Agriculture) :
இலங்கை தகுதி கட்டமைப்பு நிலை 6 (SLQF level 6) இற்குச் சமமான இந்த 4 வருட கௌரவப்பட்டக் கற்கைநெறியானது விவசாயத்துறையுடன் தொடர்புடைய அடிப்படைக்கருத்துக்கள், கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல்துறை அறிவுகளுடன் கூடிய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் உத்தமமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப்படிப்பானது ஆங்கிலமொழி மூலம் வழங்கப்படுவதுடன், இதன் விரிவான பாடத்திட்டமானது 120 திறன் அலகுகளுடன் (credits) அடிப்படை மற்றும் சிறப்புப்பாடநெறிகளை உள்ளடக்கி துறைசார் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் 2 வருடங்களும் வயல் மற்றும் பெருந்தோட்ட பயிரியல் உணவு விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், மண் விஞ்ஞானம், விவசாய மற்றும் கைத்தொழில் நுண்ணுயிரியல், பொருளாதாரம், வேளாண்மை வணிக முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல், பயிர் உடலியல், பயிர் பாதுகாப்பு மற்றும் பயிர் மேம்பாட்டு, கால்நடை வளர்ப்பு, பயிர் சோதனை, விவசாய பொறியியல், மற்றும் புள்ளிவிபரமுறைமை ஆகிய பாடப்பரப்புக்களை உள்ளடக்கிய அடிப்படைப்பாடத்திட்டமானது கற்பிக்கபடுகின்றது. மூன்றாம் வருடத்திலிருந்து வேளாண்மை பொருளாதாரம் மற்றும் வணிகம், பெருந்தோட்ட வள முகாமைத்துவம், பெருந்தோட்ட உற்பத்தி மற்றும் வணிகம், மேம்பாட்டுத் தொழிநுட்பம், தோட்டக்கலை மற்றும் இயக்கைத்தோட்டம் அறுவடைக்கு பிந்திய தோட்டக்கலை மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகிய ஆறு சிறப்புப் பாடப்பிரிவுகளிலிருந்து ஏதேனுமொன்றை மாணவர்கள் தமது விருப்பத்திற்கமைய தெரிவு செய்யலாம். மாணவர்கள் தமது இறுதியாண்டில் நேர்முக மற்றும் எழுத்து மூல தொடர்பாடல் ஆற்றல்களுடன் சுயாதீனமான விமர்சன சிந்தனைக்கிறந்களை வளர்த்துக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு ஆராய்ச்சித் திட்டத்தை செய்து முடித்தல் வேண்டும். மேலும் தொழிற்பாதுகாப்பினை உறுதி செய்யக்கூடிய நடைமுறைத் தொழில் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இறுதியாண்டு மாணவர்கள் தனியார்துறையில் தொழிதுறைப்பயிற்சிகளை பெறுதல் வேண்டும். தொழில் வழிகாட்டற்பிரிவினால் (Creer Guidance Unit) சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தொடர் திட்டங்கள் மூலம் மாணவர்களின் சுயதொழில் மேம்பாட்டுத் திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட இயல்பினால் இக்கற்கைநெறியானது பட்டதாரிகளைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் துறைசார் தொழில்களைப் பெற்றுக்கொள்ள வசதியளிக்கின்றது. பல மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்கான புலமைப்பரிசில்களையும் பெற்றுள்ளனர்.

II. **இளங்கலை உயிரியல் தொழில்நுட்ப கௌரவப்பட்டம்** [BBST (Hons)]
இளங்கலை உயிரியல் தொழில்நுட்ப கௌரவப்பட்டக் [BBST (Hons)] கற்கைநெறியானது உயிரியல் உற்பத்தி முறைமைகள் மற்றும் உற்பத்தி வளர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்பான அடிப்படைக்கருத்துக்கள், செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் கணிசமான கோட்பாட்டு அறிவையும் சிறப்பான தொழில்நுட்ப ஆற்றல்களையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நான்கு வருட கற்கைநெறியாகும் 124 திறன் அலகுகளைக் (credit) கொண்ட நன்கு வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம் பட்டதாரிகள் விவசாய தொழிநுட்பம், உயிரியற்சக்தி, இலத்திரனியல் மற்றும் மின்தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், இயற்கை வளமுகாமைத்துவம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் பரந்துபட்ட ஆற்றல்களை அடைகிறார்கள். நவீன கற்றல் மற்றும் கற்பித்தல் முறைமைகளுடன் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நிபுணத்துவம் மற்றும் நாடு மற்றும் உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய முடிவுகள் எடுத்தல், புதுமைகளைப் புகுத்துதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு பங்களித்தல் போன்றவற்றிற்கு எமது பட்டதாரிகளைத் தயார்படுத்தி புதிய நுணுக்கங்களுடன் ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட பன்முகப்படுத்தப்பட்ட அறிவினை வழங்குகின்றோம். ஆராய்ச்சித்திட்டம் மற்றும் விரிவான உள்ளக ஆலைப்பயிற்சி ஆகியன எமது பட்டதாரிகளுக்கு அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் அறிவையும் வளர்த்துக்கொள்ள அனுமதிப்பதுடன். நாட்டின் கைத்தொழில்துறையில் நடுத்தர மற்றும் உயர்மட்ட தொழில்நுட்ப மற்றும் உயர்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ பதவிகளுக்கு பட்டதாரிகளை பொருத்தமானவர்களாக்க வசதியேற்படுத்துகின்றது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடமானது மாகந்துரவில் அமைந்துள்ளது. இது பன்னல நகரத்திலிருந்து 4 கி.மீ தூ ரத்திலும், தங்கொட்டுவவிலிருந்து குருநாகல் - நீர்கொழும்பு வீதியில் 15 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளதோடு கொழும்பிலிருந்து 1.5 மணித்தியாலங்களில் வந்தடைவதற்கேற்றதாயும் அமைந்துள்ளது.

**கால்நடை, மீன்பிடி போசாக்கு பீடம்**

கால்நடை, மீன்பிடி போசாக்கு பீடமானது முறையே இரண்டு இளமானி பட்ட நிகழ்ச்சிகளை வழங்குகின்றன. அவையாவன,

(அ) விஞ்ஞான இளமாணி உணவு விஞ்ஞானமும் போசாக்கும் கௌரவப் பட்டம்
(ஆ) விஞ்ஞான இளமாணி உணவு உற்பத்தியும் தொழில்நுட்பவியல் முகாமைத்துவமும் கௌரவப் பட்டம்

இது நான்கு வருட கௌரவப் பட்ட திட்டமாகும். மாணவர்கள் முதல் இரண்டு வருடங்களுக்கு பொதுவான உள்ளக திட்டமொன்றை பின்பற்றவும் மூன்றாம் மற்றும் நான்காம் வருட பட்டத் திட்டத்தின் போது பிரயோக போசாக்கு அல்லது உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்பவற்றில் சிறப்பெய்த முடியும்.

**(அ) உணவு விஞ்ஞானமும் போசாக்கும்**

உணவு தொழில்நுட்பவியல் மற்றும் மானிட போசாக்கு விஞ்ஞானத்தின் விதிகளை அடிகோலிட்டு வலுவான பின்னணியை வழங்குவது உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு நிகழ்ச்சித் திட்டம். உ.வி.போ.நி.இனை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்கள் அடைவது/செய்முறை மூலம் விளக்குவது: (அ) பரந்துபட்ட விஞ்ஞான அறிவு மற்றும் உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு பற்றிய புரிதல். (ஆ) சமூக விஞ்ஞானங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ விடயங்கள் தொடர்புபட்ட தலைப்புகளின் அறிவு மற்றும் புரிதல். (இ) பிரச்சினைகளை தீர்க்கும் திறமை மற்றும் ஆய்வினை மேற்கொள்ளுதல் (ஈ) பாடம் - குறிப்பிட்ட தொழில்சார் அத்துடன் செயன்முறை திறமைகள் மற்றும்தொழில் முயற்சி அத்துடன் தனிப்பட்ட திறமைகள் தரம் I இல் அளிக்கப்படும் பாடங்கள் உயிரசாயனவியல், மனித உடற்றொழிலியல் மற்றும் ஊட்டம், உணவு மற்றும் ஊட்டம், நுண்ணுயிரியல், சந்தைப்படுத்தல், உணவு பரிமாற்றம் மற்றும் பதப்படுத்தல், உணவு பகுப்பாய்வியல் மற்றும் தர உறுதிப்பாடு போன்ற பிரதான பரப்புகளை ஆங்கிலம், கணிதம், புள்ளிவிபரவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றை பின்பற்ற வேண்டும். பிரயோக போசாக்கு (பொது சுகாதாரம் மற்றும் இன போசாக்கு, ஊட்டமுறை மற்றும் நோய், உணவு விதிமுறை, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி போசாக்கு) அல்லது உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (உணவு இரசாயனவியல், உணவு நுண்ணாய்வியல், உயிர்தொழில் நுட்பவியல், பாலுணவு, மீன், இறைச்சி, உணவு தானியம், பழம் மற்றும் மரக்கறிகளில் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு தொழில்நுட்பவியல் பாடநெறிகள்). அனைத்து கற்கை நெறிகளும் ஒன்றில் ஆய்வுகூடம் அல்லது கள அடிப்படையிலான செயன்முறை நடவடிக்கைகளை கொண்டு விளங்கும். ஏழாம் பருவத்தில் மாணவர்கள் தனித்து செயல்படும் வகையில் ஆய்வு

நிகழ்ச்சித் திட்டங்களை எடுத்துக் கொள்வர். தொடர்புபட்ட நிறுவகங்கள்/ கழகங்களில் மாணவர்கள் பத்து வாரத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

உணவு தொழில்நுட்பவியலாளர், உணவு போசாக்காளர், உணவுபிரிவில் முகாமையாளர், உணவுமுறை வல்லுனர், உணவு வேதியியல் வல்லுநர், தர உறுதிப்பாட்டு அறிவியலாளர், கல்வியாளர் மற்றும் தொடர்புபட்ட களங்களில் பயிற்சியாளர் முதலிய தொழில்வாய்ப்புகளை தொடரும் மாணவர்களுக்கு அவசியமான தொழில்முன்னேற்றம் மற்றும் தொழில்சார் அபிவிருத்திகளை உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் வழங்குகிறது. மேலும், உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு ஆனது உயர்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை தொடரும் மாணவர்களுக்கான திறமைகளை விருத்தி செய்கின்றது.

**(ஆ) உணவு உற்பத்தியும் தொழில்நுட்பவியல் முகாமைத்துவமும்**

இது நான்கு வருட கௌரவப் பட்ட திட்டமாகும். மாணவர்கள் முதல் இரண்டு வருடங்களுக்கு பொதுவான உள்ளக திட்டமொன்றை பின்பற்றவும் மூன்றாம் மற்றும் நான்காம் வருட பட்டத் திட்டத்தின் போது கால்நடையும் பறவையின விஞ்ஞானங்களும் அல்லது நீர்வாழ் ஐந்துகள் வளர்த்தல் என்பவற்றில் சிறப்பெய்த முடியும்.

தனித்தன்மை, கேள்வி நிறைந்ததுமான உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் பி.எஸ்சி நான்கு வருட கௌரவப் பட்டமாக அமைந்துள்ளதுடன் இது உள்ளூர் மற்றும் உலகளாவிய உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ பிரிவுகளில் தற்போது மற்றும் எதிர்கால சவால்களை சமாளிப்பதற்கு வடிவமைகக்பபட்டுள்ளது. மாணவர் - கற்பித்தல் நிலையம், ஆய்வுகூடம் மற்றும் களப்பணி செயன்முறை, கைத்தொழில் வெளிப்பாடு மற்றும் ஆய்வு வழியாக உணவு உற்பத்தியுடன் தொடர்புபட்ட அனைத்து விஞ்ஞானங்களை இளமாணிப் பட்டதாரிகளுக்கு வழிகாட்டுவதாக இப்பட்டம் அமைகிறது. மூலாதார மற்றும் விருப்பத்திற்குரிய மொடியூல்ஸ், கைத்தொழிலில் இடமளிப்பு, பயிற்சிகளை நிறுவுதல் மற்றும் 6 மாத ஆராய்ச்சி, நூலறிவு மற்றும் செயன்முறை அறிவு என இரு தரப்பையும் சேர்த்து கவனமாக கலக்கப்பட்டுள்ளது. இங்கு உயர்தர வேலைவாய்ப்புக்களில் மாணவர்கள் இடம்பிடிப்பதற்காக அடிப்படையிலிருந்து பிரயோகத்திற்கான அகன்ற அறிவு மற்றும் புரிந்துகொள்ளல், திறமைகள் மற்றும் மனப்பான்மையை வழிநடத்துவதில் பல்நோக்கு தன்மை வாய்ந்த கற்கை நெறிகள் அமைகின்றன. தரம் I, இது 2 வருடங்களை உள்ளடக்கிய மூலாதார நிகழ்ச்சித் திட்டமாகும். இங்கு மாணவர்கள் உணவு உற்பத்தி பற்றிய தத்துவங்கள் மற்றும் அடிப்படை கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன் பிற திறமைகளான தகவல் தொழில்நுட்பம், புள்ளிவிபரவியல் மற்றும் கணிதம் ஆகியவற்றையும் அறிகின்றனர். இப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தரம் I இனை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களின் விருப்பு மற்றும் செயல்திறனிற்கேற்ப நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்பிடி துறை அல்லது கால்நடை வளர்ப்பு மற்றும் பட்சி வளர்ப்பு விஞ்ஞானத் துறையில் சிறப்பு பெறுவதற்கு வாய்ப்புள்ளது. நான்கு வருட காலத்தில் பல்வித மொடியுல்கள் ஊடாக பிரயோக போசாக்கு துறை அத்துடன் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பதுறை பங்களிப்பு ஆற்றியுள்ளன.

இந்த பட்டம் பாரம்பரிய உற்பத்தி முறைமை வெளிப்பாடு, நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை வழங்குதல், முழு ஒழுங்கு முறையிலான உற்பத்தி முகாமைத்துவம் மற்றும் நுகர்பொருள் மற்றும் வணிக முகாவமைத்துவம் கொண்டு விளங்கவும் அத்துடன் உற்பத்தியில் தலைமைத்துவம், மேற்பார்வை செய்தல், முகாமைத்துவவாளர், ஆய்வு மற்றும் உணவு உற்பத்தி பிரிவில் அபிவிருத்தி செய்தலும் சந்தைப்படுத்தல் பொறுப்பும் மிக்கவராவதற்கு அறிவு மற்றும் திறமைகளை வழங்கி அதன் மூலம் புதிய சந்ததியினரான இளமாணிப்பட்டதாரிகளை வெளிகொணர்வதே இதன் வெளிப்பாடாகும். இதற்கு மேலதிகமாக, பட்டம் முடிவு பெற்றதும் வேலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு முன்னணி ஸ்தாபன கைத்தொழில் சூழலில் பயிற்சி வழங்குவதன் வாயிலாக அவர்கள் சிறப்பாக உருப்பெற உதவுகிறது. ஆறுமாத ஆய்வானது திறனாய்வு மற்றும் சமயோசித அறிவு திறமையை கொண்டு பட்டபின் கற்கைகள் ஊடாக பெறும் தொழில்சார் அபிவிருத்தியை வழிநடத்த வடிவமைக்கப்பட்டது.

**பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்**

பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலின் பிரிவு 2.2.4.4 இல் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த க.பொ.த.(உ/த) பரீட்சையில் பௌதீகவியற் துறையைச் சேர்ந்த எல்லா மாணவர்களும் இலங்கை வயம்பப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவாகத் தகுதியுடையவராவர். கீழே விபரித்தபடி மூன்று விதமான பட்டம் படிப்புகள் இப்பீடத்தினால் வழங்கப்படுகின்றன. அவையாவன (a) ஆய்வுத்திட்டதுடன் கூடிய பாட ரீதியான நான்கு வருட விசேட பட்டம், (b) தொழில்சார் பயிற்சியுடன் கூடிய நான்கு வருட இணைந்த பிரதான பட்டம், மற்றும் (c) மூன்று வருடப் பொதுப் பட்டம். நான்கு வருடப் பட்டப் படிப்புகளுக்கான மாணவர்களின் அனுமதியானது, முதலிரு வருடங்களிலும் பெற்றுக்கொண்ட பெறுபேற்றின் அடிப்படையிலான பீட உள்ளகத் தேர்வுத்திட்டத்தில் தங்கியுள்ளது. ஆரம்பத்தில் மாணவர்களின் மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரத்திலும், அவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் பெற்றுக்கொண்ட z புள்ளிகளின் அடிப்படையிலும், கீழுள்ள ஏதேனுமொரு பாட இணைப்பினைப் பயில்வதற்கு ஒவ்வொரு மாணவனும் தேர்ந்தெடுக்கப்படுவான்.

**இணைப்பு 1 : கணித்தலும் தகவற்தளமும், இலத்திரனியல் மற்றும் கணிதமும் புள்ளிவிபரவியலும்**
**இணைப்பு 2 : இலத்திரனியல், தொழில்சார் முகாமைத்துவம், மற்றும் கணிதமும் புள்ளிவிபரவியலும்**
**இணைப்பு 3 : கணித்தலும் தகவற்தனமும் தொழில்சார் முகாமைத்துவம் மற்றும் கணிதமும் புள்ளிவிபரவியலும்**

இணைப்பு 2 க்குத் தெரிவாகும் மாணவர்கள் தமது பட்டக் கல்வியுடன், கணித்தலும் தகவற்தளமும் என்ற பாட அறிவினை வளர்ப்பதற்காக "தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா" பயிற்சி நெறியைப் பயில்வதற்கான சந்தர்ப்பம் அம்மாணவர்களுக்கு வழங்கப்படும்.

பாட இணைப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பு, எல்லா மாணவர்களும் அதனை முதலிரு கல்வியாண்டுகளும் தொடர வேண்டும். முதலிரு கல்வியாண்டுகளையும் பூர்த்தி செய்த பின்னர், பீடத்தினால் வரையறுக்கப்பட்ட தகுதியுடைய மாணவர்கள், கீழ் தரப்பட்டுள்ள நான்கு வருடப் பட்டப்படிப்புகளுள் ஏதேனும் ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

(a) **4 வருட பிரயோக இலத்திரனியலில் கௌரவ விஞ்ஞான மாணிப் பட்டம் (ஆங்கில மொழி மூலம்)**
**4 வருட தொழில்சார் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞான மாணிப் பட்டம் (ஆங்கில மொழி மூலம்)**
**4 வருட புள்ளிவிபரத்துடன் கூடிய கணிதத்தில் கௌரவ விஞ்ஞான மாணிப் பட்டம் (ஆங்கில மொழி மூலம்)**

* எனக் குறிக்கப்பட்ட பட்டக் கல்வியானது திட்டமிடல் நிலையிலுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்தவுடன் இப்பட்டப் படிப்பானது எமது பீடத்தினால் கற்பிக்கப்படும். பட்டப்படிப்பிற்குப் பின்னர், மேற்படிப்பை மேற்கொள்ளவும், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஆய்வாளராகவோ அல்லது நிபுணராகவோ வரவும் விரும்பும் மாணவர்களுக்காகவே மேற்படி பட்டக்கல்வி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் உரிய தகுதியையும் சிறந்த பெறுபேற்றினையும் பெற்றுக்கொள்ளும் மாணவர்களே போட்டி முறையில் தெரிவுசெய்யப்படுவதால், மிகக் குறைந்த மாணவர்களே விசேட பட்டப் படிப்புக்குத் தெரிவு செய்யப்படுவர். எல்லா விசேட பட்டப்படிப்பிலும், நான்காம் வருடத்தில் அந்தந்தப் பாடப் பரப்பிற்குள் அமைந்த ஒரு விசேட ஆய்வுத்திட்டமானது உள்ளடக்கப்பட்டுள்ளது.

(b) **4 வருட விஞ்ஞானமாணி (இணைந்த பிரதான) பட்டம் (பிரதான பாடம் 1 இலும் பிரதான பாடம் 2+ இலும்)**
**[ஆங்கில மொழி மூலம்]**

+ பிரதான பாடம் 1, பிரதான பாடம் 2 ஆகிய பாட விதான இணைப்பு பின்வருவனவற்றில் ஒன்றாக அமையலாம்.

| **பிரதான பாடம் 1** | **பிரதான பாடம் 2** |
|---|---|
| கணித்தலும் தகவற்தளமும் | இலத்திரனியல் / தொழில்சார் முகாமைத்துவம் / கணிதம், கணிதத் திட்டமிடல் மற்றும் புள்ளிவிபரவியல் |
| இலத்திரனியல் | கணித்திலும் தகவற்தளமும் / தொழில்சார் முகாமைத்துவம் / கணிதம், கணிதத் திட்டமிடல் மற்றும் புள்ளிவிபரவியல் |
| தொழில்சார் முகாமைத்துவம் | கணித்திலும் தகவற்தளமும் /இலத்திரனியல்/ கணிதம், கணிதத் திட்டமிடல் மற்றும் புள்ளிவிபரவியல் |
| கணிதம், கணிதத் திட்டமிடல் | கணித்திலும் தகவற்தளமும் /இலத்திரனியல் / தொழில்சார் முகாமைத்துவம் மற்றும் புள்ளிவிபரவியல் |

பாட விதானங்களில், பிரதான பாடம் 1 ஆனது பிரதான பாடம் 2 ஐ விட மாணவர்களுக்கு அதிகளவான பாட அறிவினை வழங்குவதால், பிரதான பாடம் 1 க்காக ஒதுக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை விட அதிகளவான விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அந்தக் குறிப்பிட்ட பிரதான பாடம் 1 க்காக ஒதுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும். எல்லா இணைந்த பிரதான பட்டக் கல்வியும் மூன்றாம் வருடத்திலிருந்து பிரதான பாடம் 1 மற்றும் பிரதான பாடம் 2 ஆகிய இரண்டு பாடங்களின் தொடர்ச்சியாகவும், நான்காம் வருடத்தில் ஒரு அரையாண்டானது பீடத்தின் உள்ளக கற்கை நெறிகளையும், கடைசி அரையாண்டானது, பீடத்திற்கு வெளியே ஏதாவது ஒரு அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தில் ஆறு மாதக் கைதொழிற் பயிற்சியையும் கொண்டிருக்கும்.

பட்டம் பெற முன்னர், இரண்டு பாடங்களில் தமது அறிவையும் அனுபவத்தையும் அதிகரிக்க விரும்பும் மாணவர்களுக்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தில் நிகழ்கால/ நடைமுறைத் தொழில்/ அலுவலகச் சூழலைச் சரியாக அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்களுக்குமாகவே, இந்த இணைந்த பிரதானப் பட்டக் கல்வியானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டக் கல்விக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையானது, விசேட பட்டக் கல்விக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை விட இலகுவாக இருப்பதனால், பிரத்தியேகமாக, தனியால் துறையில் உடனடியாக தொழில் பார்க்கத் தகுதியானவராக விரும்பும் மாணவர்களுக்கு இந்த இணைந்த பிரதான பட்டக் கல்வியைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் கூடுதலாக உள்ளது.

(c) **3 வருட பொது விஞ்ஞானமாணிப் பட்டம்**

ஆரம்பத்திலேயே 3 வருட பட்டத்தை விரும்பும் மாணவர்களும் 4 வருட பட்டத்துக்குத் தெரிவாகாத மாணவர்களும், ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படும் இந்தக் கற்கைநெறியைக் கற்றல் வேண்டும். ஆரம்பத்தில் வரிசைப்படுத்தப்பட்ட பாட இணைப்புகளிலிருந்து, மூன்று பிரதான பாடங்கள் இந்தப் பட்டக் கல்வியில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(a), (b) மற்றும் (c) இல் குறிப்பிடப்பட்ட எல்லாப் பட்டக் கற்கை நெறிகளும் ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்படுவதால்,முதலிரு வருடங்களும், குறிக்கப்பட்ட பாட நெறிகளுடன் ஆங்கிலமும் கற்பிக்கப்படும். தமது ஆங்கில மொழிப்புலமையை மேல் நிலைக்குக் கொண்டுவர விரும்பும் மாணவர்களுக்காக, மூன்றாம் வருடத்தில் "வியாபார ஆங்கிலக் கற்கைநெறி" மற்றும் "மேல்நிலை ஆங்கில புலமைக் கற்கைநெறி" என்பன கற்பிக்கப்படுகின்றன.

**தொழில்நுட்பப்பீடம்**

இலங்கை வயம்ப பல்கலைகழகத்தின் தொழில்நுட்பபீடமானது பின்வரும் நான்கு கல்விசார்துறைப்பகுதிகளை உள்ளடக்குகிறது.

I. கட்டுமானத் தொழில்நுட்பவியல் துறைப்பகுதி
II. மின் தொழில்நுட்பவியல் துறைப்பகுதி
III. இயந்திரவியல் மற்றும் செயல்தொழிலாக்கத் தொழில்நுட்பவியல் துறைப்பகுதி
IV. நானோ விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் துறைப்பகுதி.

பீடமானது உயர்தர பொறியியல் தொழில்நுட்ப பிரிவிலிருந்து இளங்கலை பொறியியல் தொழில்நுட்ப கொளரவப்பட்டப்படிப்புத் திட்டத்திற்கு மாணவர்களை அனுமதிக்கிறது. மாணவர்கள் மேற்கண்ட பட்டபடிப்புத்துறைகளில் ஒன்றில் நுழைய முடியும் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள அந்தந்த கௌரவப்பட்டப்படிப்புகளில் ஒன்றில் பட்டம் பெற முடியும்.

I. கட்டுமான தொழில்நுட்பத்தில் இளங்கலை பொறியியல் தொழில்நுட்ப கௌரவப்பட்டம்.
II. மின் தொழிநுட்பத்தில் இளங்கலை பொறியியல் தொழில்நுட்ப கௌரவபட்டம்
III. இயந்திர மற்றும் செயல்தொழிலாக்க தொழில்நுட்பத்தில் இளங்கலை பொறியியல் கௌரவபட்டம்.
IV. மூலப்பொருள் மற்றும் நானோ அறிவியல் தொழில்நுட்பத்தில் இளங்கலை பொறியியல் தொழில்நுட்ப கௌரவப்பட்டம்.

அனைத்து பாடத்திட்டங்களும் க்ரெடிட் அடிப்படையிலான பாடநெறி அலகு முறை மூலம் வழங்கப்படுகின்றன. மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றன. ஆனைத்து பட்டப்படிப்பு திட்டங்களும் முழுநேர படிப்புத்திட்டங்களாக நான்கு கல்வியாண்டுகளல் நடத்தப்படுகின்றன.

**சிறப்புப்பட்டங்களின் தேர்வு**

தொழில்நுட்ப பீடத்தில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் ஆசிரியர்களின் இணையத்தளததில் வெளியிடப்பட்ட மாணவர் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின் விபரிக்கப்பட்டுள்ளபடி அவர்களின் விருப்பம் மற்றும் z மதிப்பெண் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொண்ட பட்டப்படிப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். மேற்கண்ட (I), (II) மற்றும் (III) இல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப்பட்டங்களுக்கான மாணவர்கள் முதல் மூன்று தவணைகளை பொதுவான குழுவாகவிருந்து முடிந்த பின்னர் நான்காம் தவணை முதல் வெவ்வேறு பிரிவுகளாகபட பிரிக்கப்பட்டு தமது கற்றல் நடவடிக்கைகளைத் தொடங்குவார்கள். (IV)இல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப்பட்டத்திற்கான மாணவர்கள் ஆரம்பத்திலிருந்தே ஒரு தனிக்குழுவாக தமது கற்றல் நடவடிக்கைகளை தொடங்குவார்கள்.

**சிறப்புப் பிரிவுகளில் பின்பற்ற வேண்டிய படிப்புகள்**

(I), (II) மற்றும் (III) இல் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப்பட்டங்களுக்கான முதல் மூன்று தவணைகளின் பொதுவான திட்டத்தில் பொறியியல் கணிதம், பொறியியல் பௌதீகவியல், தொழில்துறை நிர்வாகம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மூன்று பிரிவுகளுக்கும் பொதுவாக தொடர்புடைய பல அலகுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நான்காம் தவணை முதல் மாணவர்கள் தங்கள் சிறப்புப் பதிவுகள் தொடர்பான பல கட்டாய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்நுட்ப பாட அலகுகளை பின்பற்றுகிறார்கள். பட்டப்படிப்பின் இறுதிப்பகுதியில் மாணவர்கள் குழுவடிவமைப்பு திட்டம் மற்றும் ஒரு தனிப்பட்ட ஆராய்ச்சி திட்டம் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். அனைத்து பட்டப்படிப்புத்திட்டங்களுக்கான பாடநெறி அலகுகளின் முழுமையான பட்டியல்கள் பீடத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மாணவர் கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று சிறப்புப்பட்டங்களும் உலகெங்கிலும் உள்ள பொதுவான பொறியியல் தொழிநுட்ப பிரிவுகளின் தொழில்நுட்ப பிரிவுகளின் கீழ் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்காக பட்டதாரிகளை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

நான்காவது சிறப்பு பட்டபடிப்புத்திட்டம் முதலிரண்டு தவணைகளில் பௌதீகவியல், இரசாயணவியல் மற்றும் உயிரியல் தொடர்பான அடிப்படைப்படிப்புகளைக் கொண்டுள்ளது. மூன்றாம் தவணை முதல் மாணவர்கள் தொழில்துறை பிரச்சினைகளுக்கு தீர்வு காணத்தேவையான ஆராய்ச்சி மற்றும் நானோ அறிவியல் தொழிநுட்பத்தின் முக்கிய துறைகளில் அடிப்படைக் கொள்கைகளைக் கற்றுக் கொள்கிறார்கள். இப்பாடத்திட்டம் பௌதிகவியல், இரசாயணவியல், மூலப்பொருள் அறிவியல், உயிர்தொழிநுட்பம், நெனோ மருத்துவம் மற்றும் எரிசக்தி போன்ற பல்வேறு துறைகளைக்கான தத்துவார்ந்த மற்றும் நடைமுறை அத்தியாவசியங்களையும் உள்ளடக்கியுள்ளது. நெனோ தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பான கணினி உருவகப்படுத்துதல்களைச் செய்வதற்காக மாணவர்கள் கணினி அறிவியலின் பாடப்பகுதியையும் கற்றுக்கொள்வார்கள். கூடுதலாக நான்கு பட்டப்படிப்பு திட்டங்களிலும் மாணவர்களுக்கு அவர்களின் மென்திறன்களை மேம்படுத்த வாய்ப்புகள் வழங்கப்படும். குழு வடிவமைப்புத்திட்டம் மற்றும் / அல்லது தனிப்பட்ட ஆராய்ச்சி திட்டங்கள் மூலம் நிஜ உலக தொழில்நுட்ப சிக்கல்களை தீர்ப்பதற்கான அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்த மாணவர்களுக்கு பளிற்சியளிக்கப்படும். மேலும் 7ஆம் தவணையின் போது மாணவர்கள் ஒரு உண்மையான பணிச்சூழலில் அனுபவத்தைப் பெறுவதற்காக வெளிப்புள அமைப்பில் கட்டாய 24 வார தொழில்துறை பயிற்சிக்கு உட்படுவார்கள்.

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| மருத்துவம் | - | E |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | - | E |
| கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | - | E |
| தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் | - | E |
| விலங்கு விஞ்ஞானம் | - | E |
| ஏற்றுமதி விவசாயம் | - | E |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | - | E |
| கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் | - | E |
| நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம் | - | E |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | - | E |
| பொறியியல் தொழில்நுட்பம் (ET) | - | E |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் (BST) | - | E |
| மனித வள மேம்பாடு | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | - | E |
| ஆங்கில மொழி மற்றும் பிரயோக மொழியியல் | - | E |
| பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் | - | E |

**விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி**

பல்வேறு தொழில்துறைகளில் நிலவும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் தேவைகளைக் கருத்தில் கொண்டு அது சார்ந்த அறிவை மாணவர் மத்தியில் விருத்தி செய்வது, மாறிவரும் உலகிற்கு ஏற்ப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தேவைகளைக் கருத்திற் கொண்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறியில் பல்பரிமாண ஆய்வுகளை ஊக்குவிப்பது, தேசிய வளங்களுக்குத் தொழில்நுட்ப ரீதியில் பெறுமதி சேர்க்கக்கூடிய விஞ்ஞான அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் இக்கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கணனி விஞ்ஞானமும் தொழிநுட்பத்திலும் கௌரவ விஞ்ஞான இளமாணி**

சுயகற்கை மற்றும் ஆய்வு முலம் பெறும் அறிவுக்கூடாக உள்நாட்டு தொழில்துறைகளுக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பெறுமதி சேர்க்கக்கூடிய வகையில் நவீன கணினித் தொழில்நுட்பவியல் அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் தொழில்துறைத் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தொழில்முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ கௌரவ இளமாணி பட்டம்**

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ விஞ்ஞானத் திணைக்களத்தினால் தொழில்முயற்சி மற்றும் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ கௌரவ இளமாணி பட்டம் வழங்கப்படுகின்றது. இது வளமான தொழில் முயற்சியாண்மை கலாசாரத்தில் முகாமைத்துவ திறன்களில் நன்கு தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளினை உருவாக்குவதற்காக நிறுவப்பட்டதாகும்.

இப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கம் யாதெனில், போட்டித்தன்மை மிகு வேலைச்சூழலில் வெற்றிகரமாக தொழிலொன்றினை ஆரம்பிக்கும் அல்லது தமது வேலைவாய்ப்பினை தக்கவைத்துக் கொள்ளும் தன்நம்பிக்கை கொண்ட பட்டதாரிகளினை உருவாக்குவதாகும்.

மேலும், இளங்கலை பட்டதாரிகளுக்கு இந்நிகழ்ச்சி திட்டமானது, தொழில் முயற்சியாண்மை, மனிதவள முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், பொருளியல், தகவல் தெழில்நுட்பம் மற்றும் பகுப்பாய்வு, பரந்த பொதுக் கல்வி மற்றும் அத்தியாவசிய திறன்கள் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து முகாமைத்துவ துறைக-ளிலும் சிறந்த அறிவை பெற்றுக்கொள்ளவும் திறன்களினை விருத்திசெய்து கொள்ளவும் வழிகோலுகின்றது.

இதேபோன்று, இப் பாடநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி செயற்திட்டமானது, தர்க்கரீதியான சிந்தனை, புதிய சிந்தனை மற்றும் கண்டுபிடிப்புகளை உருவாக்குதல், முறையியல் சார்ந்த வேலை, பகுப்பாய்வு திறன்கள், மாணவர்களின் எழுத்து மற்றும் முன்வைக்கும் ஆற்றல் போன்றனவற்றில் திறன்களினை மேம்படுத்த உதவுகின்றது.

இப் பட்டப்படிப்பு ஆறு மாத கால தொழில்துறை பயிற்சியை உள்ளடக்கியதோடு இது மாணவர்களிற்கு நடைமுறை தொழில்சார் உலகில் வேலை அனுபவங்களினை பெற்றுக்கொள்ளவும் உதவுகின்றது.

**விலங்கு உற்பத்தி மற்றும் உணவு தொழிநுட்ப விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணிக் (கௌரவ) கற்கைநெறி**

விலங்கு உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டப் பயில்நெறியானது இலங்கை ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையால் SLQF மட்டம் 6ஐப் பூர்த்திசெய்யும் ஒரு தனித்துவமான ஊவாப் பட்டப் பயில்நெறி ஆகும். இந் நான்கு (4) வருடச் கௌரவப் பட்டப் பயில்நெறியானது விலங்குசார் உற்பத்தி மற்றும் பெறுமதி சேர்ப்பில் துறைசார் அறிவும் திறனும் கொண்ட பட்டதாரிகளை உருவாகுவதோடு சுத்தம் - சுகாதாரம், நலன்பரி, தரமும் பாதுகாப்பும் பற்றிய போதுமான அறிவுள்ள தொழில்வாண்மையினரை உருவாக்கவும் விலங்குகளின் உற்பத்தித்திறனைப் பெருக்கவும் விலங்குசார் உற்பத்தியை மதிப்பிடவும் ஆரம்பிக்கப்பட்டது. இப் பட்டப் பயில்நெறியானது உற்புத்தி, முகாமைத்துவம் மற்றும் விலங்குப் பண்ணைத் துறைகளுக்கும் உணவுக் கைத்தொழிலுக்கும் பெறுமதி சேர்ப்பது குறித்துக் கவனஞ் செலுத்துகிறது. முதல் இரண்டுவருடக் காலப்பகுதியில் இன்றியமையாத் திறன் விருத்தி மற்றும் பரந்த பொதுக் கல்வி என்பவற்றுடன் விலங்கு உற்பத்தி மற்றும் உணவு விஞ்ஞானம் ஆகிய பாடப்பரப்புகளின் கொள்கைகள்

குறித்து முழுமையான பின்னணியும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும்வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. பெறுமதி சேர்ப்புக்கான உயர்தரத் தொழில்நுட்பம் உரித்தான விலங்கு உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பத்தின் தெரிவுசெய்யப்பட்ட துறைகள் மூன்றாம் வருடத்தில் பட்டப்பயிலுனருக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. நான்காம் வருடத்தில் பட்டப்பயிலுனர் உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பம் தொடர்பான துறைகளில் தாம் பெற்றுக்கொண்ட அறிவைப் பிரயோகிப்பதற்கும் உள்நாட்டுத் தேவைகள், பூகோளப் போக்குகள், இயற்கை வளங்களுகுப் பெறுமதி சேர்த்தல் மற்றும் மாறிவரும் சந்தைப்படுத்தல் நிலைமை-களை நிவர்த்திசெய்வதற்குச் சந்தர்ப்பம் பெறுகிறார்கள். மேலும் பாடத்திட்டதினூடாகப் பட்டப்பயிலுனர் புதிய எண்ணம் மற்றும் படைப்பாற்றலில் செறிவூட்டப்பட்டு அவர்களுக்குப் பல வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. களப் பயிற்சி மற்றும் தொழிற்றுறைப் பயிற்சிக;டாகக் கொடுக்கப்படும் நடைமுறை அனுபவமானது நமது மாணவர்களைத் தொழிற்றுறையில் கிராக்கியுடையவர்களாக ஆக்குகின்றது. இறுதி வருட ஆய்வுத் திட்டமானது மேற்கூறிய துறைகளோடு தொடர்புடைய பிரச்சினைகளை ஆராய்வதற்கும் மிகப் பொருத்தமானதும் விஞ்ஞானரீதியுமான தீர்வுகளைக் கண்டறியவும் அவர்களுக்கு வழிசமைக்கிறது. இது மேலும் தொழில்துறைக்குப் புதிய உற்கத்திகளை அறிமுகப்படுத்த மிகப்பெரிய வாய்ப்பையும் வழங்குகிறது. மறுபக்கம், களப் பயிற்சி, தொழிற் பயிற்சி மற்றும் ஆய்வுத் திட்டங்கள் அவர்களைத் தொழிற்றுறையோடு நெருங்கிப் பணியாற்றவும் அதிக தொழில்வாய்ப்புள்ள ஊவாப் பட்டதாரிகளை உருவாக்கவும் வழியேற்படுத்துகின்றன. BSc கௌரவ (விலங்கு உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பம்) பயில்நெறிப் பட்டதாரிகள் விலங்குப் பண்ணை உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பத்தின் கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகிய இரு அம்சங்களில் ஒரு பரந்த அறிவு, திறன் மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**ஏற்றுமதி விவசாயத்தில் விஞ்ஞான இளமாணிக் கௌரவ பட்டநெறி**

ஏற்றுமதி விவசாயத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி பட்டப் பயில்நெறியானது இலங்கை ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் ஏற்றுமதி விவசாயத் துறையால் வழங்கப்படுகிறது. இது நான்கு வருடப் (எட்டுப் பருவங்கள்) பட்டப் பயில்நெறியாகும் (SLQF மட்டம் 6). இது நாட்டின் ஏற்றுமதி சார்ந்த விவசாயத்தை ஊக்குவிக்கும் பெறுமதி சேர்ப்பில் சிறந்த அறிவைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கவென வடிவமைக்கப்பட்டுள்ளது. இந் நோக்கத்தை அடைவதற்காக, விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மைக் கருத்தியல்கள் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முதல் இரண்டு வருடங்களில் வழங்கப்படும் கற்கைநெறிகள் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமானவையாகும். அவை அடிப்படைப் பாடநெறிகள், பரந்த பொதுக் கல்வி மற்றும் இன்றியமையாத் திறன் விருத்தியில் பரந்த அறிவு என வழங்கப்படுகின்றன. மூன்றாம் வருடத்தில், விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம், உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மை விவசாயம் ஆகிய மூன்றில் ஒன்றைப் பட்டப்பயிலுநர் தமது சிறப்புத் துறையாகத் தொடரச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. பட்டப்பயிலுநருக்கு விசாலமான பல்முகப் பாடநெறிகள் கற்பிக்கப்படுவதற்கு மேலதிகமாக நடைமுறை அனுபவமாக விவசாய உற்பத்தி குறித்த நடைமுறை தன்மைகளைப் பொதுவாக உள்வாங்கும் வகையில் களப்பயிற்சியும் வழங்கப்படுகின்றது. நான்காம் வருடத்தில், இலங்கையின் முன்னணி விவசாய-அடிப்படைசார் தொழில்துறைகளில் மாணவர்கள் இணைக்கப்பட்டு தொழில்துறை பயிற்சியும் வழங்கப்படும். கடைசிப் பருவத்தில் அனைத்து மாணவர்களும் உள்ளூர் விவசாய வளங்களுக்குப் பெறுமதி சேர்க்கும் வலுவான நோக்கத்துடன் ஒரு ஆராய்ச்சித் திட்டத்தை (6 மாதங்கள்) மேற்கொள்ள வேண்டப்படுவார்கள். பிஎஸ்சி கௌரவ (ஏற்றுமதி விவசாயம்) பட்டதாரிகள் தமது பட்டப்படிப்பை நிறைவுசெய்ததும் எந்தவொரு வேலைத் தலத்திலும் சிறந்து விளங்குவதோடு, வேலைவாய்ப்பைத் தக்கவைக்க உறுதிபூணுவார்கள் அல்லது தங்கள் சொந்தத் தொழில்முயற்சியில் ஈடுபடுபவர்களாகத் திகழ்வார்கள்.

**கைத்தொழில் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணிக் கௌரவ பட்டநெறி**

கைத்தொழில் வியாபாரத் தொழில்முறைக்குப் பெறுமதி சேர்க்கும் வகையில் நவீன கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாகக் கோட்பாடு மற்றும் செயல்முறைக் கற்கைகளுக்கூடாக விஞ்ஞான அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் தனிச்சிறப்புடன் இக்கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் விஞ்ஞான இளமாணிக் கௌரவ கற்கைநெறி**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்புடைய இக்கற்கைநெறி நாட்டின் கனிப்பொருள் மூலவளங்கள் குறித்த மதிப்பீட்டுக்கு ஆழமான விஞ்ஞானபூர்வ அடித்தளத்தைக் கொண்டுள்ள பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கனிப்பொருள் வளங்களின் பயன்பாடு மற்றும் இயற்கையாகவும் பொறியியல் மூலமும் மூலப்பொருட்களுக்குப் பெறுமதி சேர்க்கும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பற்றி கள நுட்பவியலூடாகக் கோட்பாட்டுக் கற்கைகள் மற்றும் செயல்முறைப் பயிற்சிகளுக்கூடாக மாணவர்களுக்கு நிபுணத்துவ அறிவை வழங்குவது.

**நீர்வாழ் வளங்கள் தொழிநுட்பக் கௌரவ கற்கைநெறி**

நீர்நிலை வளங்கள் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான கௌரவ இளமாணிப் பட்டப் பயில்நெறியானது இலங்கை ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையால் வழங்கப்படுகிறது. இத் தனித்துவ நான்கு (4) வருட கௌரவ பட்டப் பயில்நெறியானது SLQF மட்டம் 6ஐப் பூர்த்திசெய்வதோடு உற்பத்தி, நீர்நிலை வளங்களை முகாமைசெய்தல், நீர்நிலை சுற்றாடலின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் நீர்நிலை உற்பத்திகளுக்குப் பெறுமதி சேர்த்தல் என்பவற்றினூடாக இத் துறையின் உள்நாட்டு, பிராந்திய மற்றும் பூகோளக் கிராக்கிகளை நிவர்த்திசெய்யவென உயர்தரக் கோட்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அணுகுமுறைகளைப் பயன்படுத்தித் தொடர்ச்சியாக நீர்நிலை வளங்களை ஆராய, அபிவிருத்திசெய்ய மற்றும் முகாமைசெய்யக்கூடிய பல்திறன்மிகு புலமையாளர்கள், புத்தாக்குநர்கள், முகாமையாளர்கள் மற்றும் வழிகாட்டிகளை உருவாக்குவதை நோக்காகக்கொண்டுள்ளது.

பட்டப் பயில்நெறியின் முற்பகுதியானது இன்றியமையாத் திறன் விருத்தி, பரந்த பொதுக் கல்வி என்பவற்றுடன் நீர்நிலை வளங்கள் பற்றிய அறிமுகம் தொடர்பில் முக்கிய கவனஞ்செலுத்துகிறது. பயில்நெறியின் நடுப்பகுதியானது உயிர்வாழ் மற்றும் உயர்வாழா நீர்நிலை வளங்கள், அவற்றின் பல்வகைகள், உற்பத்தித் தொழில்நுட்பம், பயன்படுத்துகை மற்றும் முகாமைத்துவம் பற்றிய தெளிவான அடிப்படை அறிவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பயில்நெறியின் இறுதிப்பகுதியானது பெறுமதி சேர்த்தலுக்கான புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்தல் மற்றும் அதியுயர் தொழில்நுட்ப பிரயோகித்தல் பற்றிக் கற்க, குறுங்காலச் செயற்திட்டங்களை மேற்கொள்ள, தொழிற்றுறைப் பயிற்சி மற்றும் ஆய்வுத் திட்டங்களில் ஈடுபடச் சந்தர்பங்களை வழங்குவதன் மூலம் உள்நாட்டுத் தேவைகள், பூகோளப் போக்குகள் மற்றும் தேசிய வளங்களுக்குப்

பெறுமதி சேர்த்தல் மாற்றமடைந்துவரும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை நிவர்த்திசெய்வதை நோக்காகக் கொண்டது. களப் பயிற்சிகள் மற்றும் தொழிற்றுறைப் பயிற்சிகளூடாகக் கொடுக்கப்படும் நடைமுறை அனுபவம் நமது மாணவர்களைத் தொழிற்றுறையில் கிராக்கிமிக்கவர்களாக ஆக்குகின்றது. இறுதி வருட ஆய்வுத் திட்டமானது துறைசார் பிரச்சினைகளை ஆராய்வதற்கும் மிகப் பொருத்தமானதும் விஞ்ஞானரீதியுமான தீர்வுகளைக் கண்டறியவும் மாணவர்களுக்கு வழிசமைக்கிறது. இது மேலும் தொழிற்றுறைக்குப் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்த மிகப்பெரிய வாய்ப்பையும் வழங்குகிறது. மறுபக்கம், களப் பயிற்சி, தொழிற் பயிற்சி மற்றும் ஆய்வுத் திட்டம் அவர்களைத் தொழிற்துறையோடு நெருங்கிப் பணியாற்றவும் அதிக தொழில்வாய்ப்புள்ள ஊவாப் பட்டதாரிகளை உருவாக்கவும் வழியேற்படுத்துகின்றன. நீர்நிலை வளங்கள் தொழில்நுட்பத்தில் பிஎஸ்சி கௌரவ பட்டப் பயில்நெறியைத் தொடரும் பட்டதாரிகள் நீர்நிலை வளங்கள் தொழில்நுட்பத் துறைசார் கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகிய இரு அம்சங்களில் ஒரு பரந்த அறிவு, திறன் மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் மேலாண்மை பட்டப்படிப்பு திட்டத்தில் வணிக மேலாண்மை இளங்கலைப் பட்டம்**

**பட்டப்படிப்பு திட்டத்தின் விளக்கம்**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் சுற்றுலாக் கற்கைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவ பட்டப்படிப்புக்கான வணிக முகாமைத்துவ பட்டப்படிப்பு இலங்கை தகைமை கட்டமைப்பின் ஆறாம் அடுக்கின் கீழ் உள்ளது மற்றும் மிகவும் நடைமுறையான தொழில்சார்ந்த பட்டப்படிப்பாகும். மேலும், ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் TEDQUAL Certification அங்கீகாரத்தைப் பெற்ற இலங்கையின் முதல் பட்டப்படிப்பு இதுவாகும்.

**பட்டப்படிப்பு திட்டத்தின் உள்ளடக்கம்**

விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் மேலாண்மை பட்டப்படிப்புத் திட்டம் நான்கு கல்வி ஆண்டுகள் மற்றும் எட்டு செமஸ்டர்கள், கட்டாய மற்றும் விருப்ப பாடப்பிரிவகளைக் கொண்டுள்ளது. முதல் கல்வியாண்டில் அடிப்படை மேலாண்மை கோட்பாடுகள், சந்தைப்படுத்தல் முறைகள், மனிதவள மேலாண்மை, கணக்கியல், விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகளில் அடிப்படை படிப்புகள், அத்தியாவசிய திறன் மேம்பாட்டு படிப்புகள் மற்றும் பரந்த பொது கல்வி படிப்புகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இரண்டாவது கல்வியாண்டில், சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகள் மேலாண்மை , வெளிநாட்டு மொழிகள் பற்றி அறிவு, தொடர்பு திறன்கள் ஆகியவற்றிற்கு இடையேயான உறவுகள் மற்றும் சமூக-உணர்ச்சி திறன் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட படிப்புகளின் தத்துவார்த்த அம்சங்களை முன்னிலைப்படுத்தும் படிப்புகள் உள்ளன.

இதன் விளைவாக, மூன்றாவது மற்றும் நான்காவது கல்வி ஆண்டுகளில், உள்ளடக்கத்தின் மையமானது ஆக்கப்பூர்வமான, மேம்பட்ட மற்றும் நடைமுறைப் படிப்புகளை இலக்காகக் கொண்டது, இது முக்கியமாக விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் மேலாண்மை கோட்பாடுகளின் பயன்பாட்டில் கவனம் செலுத்துகிறது.

குறிப்பாக, படிப்பின் இறுதியாண்டு பாடப் பகுதியில் மேலும் மேம்பட்ட பட்டப்படிப்புகளுக்கு அர்பணிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒரு மேற்பார்வையாளரின் வழிகாட்டுதலின் கீழ் தொழில்துறை சார்ந்த புதிய அறிவுத் தளத்தை உருவாக்க மாணவர்கள் அனைத்து கோட்பாட்டு அறிவையும் ஆக்கிரமிக்கும் தனிப்பட்ட கல்வி ஆய்வறிக்கைக்கு 08 வரவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 06 வரவுகள் தொழில்துறை பயிற்சிக்காக ஒதுக்கப்படுகின்றன, அங்கு மாணவர்கள் வேலை கற்றல் வேலையில் அமர்த்தப்படுகின்றனர்.

விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவ பட்டப்படிப்புக்கான வணிக முகாமைத்துவ பட்டப்படிப்பு, நிபுணத்து அறிவு, அணுகுமுறை மற்றும் திறன்களைக் கொண்ட நல்ல வாட்டமான பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக பங்களிக்கும் மற்றும் சவால்களை வெற்றிகரமாக சமாளிக்கும் வேலை உலகு.

**இயந்திரப் பொறியியல் தொழில்நுட்பம்- பொறியியல் தொழில்நுட்பச் கௌரவ கற்கைநெறி**

இயந்திரப் பொறியியலில் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப்பட்டப் பயில்நெறியானது இலங்கை தகைமைகள் சட்டக (SLQF) மட்டம் 06 க்கு இணங்க இலங்கை ஊவா வெலஸ்ஸப் பல்கலைக்கழக தொழில்நுட்ப கற்கைகள் பீடத்தின் பொறியியல் தொழில்நுட்பத்துறையால் வழங்கப்படும் ஒரு நான்கு - ஆண்டு தொழில்வான்மை பட்டம் ஆகும்.

இப்பட்டப் பயில்நெறியானது கட்டாய மற்றும் விருப்பு கற்கை அலகுகளைக் கொண்ட எட்டு பருவங்கள் - நான்கு நிலைகளாக (நான்கு வருடங்கள்: 100, 200, 300 மற்றும் 400 நிலைகள்) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. 100ஆம், 200ஆம் நிலை கற்கை அலகுகள் அடிப்படை விஞ்ஞானம், கணிதம் மற்றும் பொறியியல் தொழிநுட்பத்தில் தேவையான அறிவையும் இன்றியமையா திறன், விருத்தி மற்றும் பரந்த பொதுக்கல்வி என்பவற்றையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாடத்தின் முக்கிய பகுதியான தூய, பிரயோகப் பொறியியல் தொழிநுட்பக் கற்கை அலகுகள் இயந்திரப்பொறியியல் தொழில்நுட்பத்தில் சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 300 ஆம், 400ஆம் நிலை கற்கை அலகுகள் இயந்திரப் பொறியியல் தொழிநுட்பத்தில் உயர்தர கோட்பாடு மற்றும் செயன்முறை அறிவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டப்பயில் நெறியானது பட்டப்பயிலுநர்கள் ஒரு மேற்பார்வையாளரின் கீழ் இரண்டு பருவங்களில் குழுத்திட்டம்/ ஆராய்ச்சித் மிட்டம் ஒன்றில் ஈடுபடச்சந்தர்ப்பத்தை வழங்குகிறது. ஆறாவது பருவத்தில் பட்டப்பயிலுநர்கள் பிரயோக இயந்திரப் பொறியியலின் சமீபத்திய தொழில்துறைச் செயற்பாடுகள், பிரயோகங்கள் குறித்தும் தொழில்துறை பண்பாடு மற்றும் ஒழுக்கம் குறித்தும் கற்றுக் கொள்வதற்காக முன்னணி தொழில்துறை பண்பாடு மற்றும் ஒழுக்கம் குறித்தும் கற்றுக்கொள்வதற்காக முன்னணி தொழில்ப்பேட்டைகளுக்கு தொழில்துறைப் பயிற்ச்சிக்காக நியமிக்கப்படுவார்கள்.

இப்பட்டபயில்நெறி மூலம் மிகவும் போட்டிமிக்க பல்பரிமான உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற்சந்தைக்கு ஏற்ற அறிவு, திறன் மற்றும் குணநலன் கொண்டு உருவாகும் பல்துறை ஆளுமை மிக்க பட்டதாரிகள் இலங்கையை தென்னாசியாவின் முன்னேறி வரும் பொருளாதார நாடாக அபிவிருத்தி செய்வதற்கு பங்களிப்பவர்களாகத் திகழ்வார்கள்.

**தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப கௌரவ கற்கைநெறி**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கௌரவ இளமாணி [BICT(Hons)]பட்டப் பயில்நெறியானது இலங்கை தகைமைகள் சட்டக (SLQF) மட்டம் 06 க்கு இணங்க இலங்கை வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகத் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தினால் வழங்கப்படுப்படும் நான்கு - ஆண்டு தொழில்வாண்மைப் பட்டமாகும். இப்பயில் நெறியானது இலங்கை கணனிக்கழகம் (CSSL) மற்றும் சோல் (Seoul) அமையம் ஆகியவற்றின் தேவைகளுக்கு அமைவானது. இப்பட்டப் பயில்நெறியானது கட்டாய மற்றும் விருப்பு கற்கை அலகுகளைக் கொண்ட எட்டு பருவங்கள் - நான்கு நிலைகளாக (நான்கு வருடங்கள் : 100, 200, 300 மற்றும் 400 நிலைகள்) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது . 100 ஆம், 200 ஆம் நிலை கற்கை அலகுகள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணிதம், முகமைத்துவம் ஆகியவற்றில் தேவையான அறிவை வழங்குவதுடன் இன்றியமையா திறன், விருத்தி மற்றும் பரந்த பொது கல்வி என்பவற்றையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாடத்தின் முக்கியப் பகுதியான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக்கற்கை அலகுகள் மென்பொருள் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரப் புலமைத்துவம் என்பவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் 300 ஆம், 400 ஆம் நிலை கற்கை அலகுகள் மென்பொருள் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரப் புலமைத்துவமத்தில் நடைமுறை அறிவையும், உயர்தரக் கோட்பாடுகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப்பயில் நெறியின் இறுதி வருடத்தில் பட்டப்பயிலுநர்கள் ஒரு மேற்பார்வையாளரின் கீழ் ஒரு வருட ஆராய்ச்சித் திட்டம் ஒன்றில் ஈடுப்படுவதற்கான வாய்ப்பு வழங்குகின்றது. ஆறாவது பருவம் பட்டப்பயிலுநர்களை மென்பொருள் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரப் புலமைத்துவத்தின் அண்மைக்கால தொழில்நுட்பம் மற்றும் செயலிகள் குறித்தும் தொழில்துறைப் பண்பாடு மற்றும் ஒழுக்கம் குறித்தும் கற்றுக்கொள்ளவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது . இப்பட்டப்பயில்நெறியானது பல்பரிமான போட்டிமிகு உள்ளூர் மற்றும் சர்வதேசத் தொழிற்ச் சந்தைக்கு ஏற்ற அறிவு, திறன் மற்றும் குணநலன் கொண்ட தொழில்நுட்பவியல் பட்டதாரிகளை உருவாக்கும். அவர்கள் இலங்கையை தென்னாசியாவின் முன்னேறி வரும் பொருருளாதார நாடாக அபிவிருத்தி செய்வதற்குப் பங்களிப்பார்கள்.

## கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| சங்கீதம் | - | S |
| நடனம் | - | S |
| நாடகமும் அரங்கமும் | - | S |
| கட்புலக் கலை | - | S |

## இலங்கை கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும் | - | E |
| சுதேச மருத்துவ வளம் | - | E |
| சுகாதார தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை | - | E |
| மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | - | E |
| உயிரிமருத்துவத் தொழில்நுட்பம் | - | E |
| சுதேச மருந்தகவியல் தொழில்நுட்பம் | - | E |
| யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வ | - | E |
| சுதேச அறிவியல் மீதான சமூகக் கல்வி | - | E |
| சேவை முகாமைத்துவம் | - | E |

**சுதேச மருத்துவ பீடம்**

சுதேச மருத்துவ பீடத்தில் ஆயுர்வேத அடிப்படை மூலதத்துவங்கள், சிகித்சா திணைக்களம், திரவகுண விஞ்ஞானத் திணைக்களம், கௌமாரபுருத்ய பெண்நோயியல் திணைக்களம், சைல்யசாலக்ய திணைக்களம், மொழிகள் திணைக்களம், ரோகவிஞ்ஞான திணைக்களம் மற்றும் தேசிய சிகித்ஸா திணைக்களம் என 08 கல்விசார் திணைக்களங்களைக் கொண்டுள்ளன. இப்பீடமானது ஆயுர்வேத மருத்துவம் அறுவை சிகிச்சை பட்டப் பாடநெறியை வழங்குவதுடன் இத்திணைக்களங்கள் ஆயுர்வேத மருத்துவப் பட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு பாடநெறி அலகுகளையும் நடைமுறைப் பயிற்சிகளையும் வழங்குகின்றன.
ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை மாணி

இது ஐந்து வருட காலப்பகுதியில் இயங்கும் முன் - மருத்துவ, மனை - மருத்துவ மற்றும் மருத்துவ பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு முழுநேர பாடநெறியாகும். ஆயுர்வேத மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்ய அரசாங்க ஆயுர்வேத மருத்துவமனைகளில் மேலதிக ஓராண்டு உள்ளிருப்புப் பயிற்சி தேவை. இந்தத் திட்டம் பாடநெறி அலகு அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் இது கல்விப் பருவமுறைகளில் இயங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு பருவமுறைகளைக் கொண்டுள்ளது. பட்டம் வழங்க குறைந்தபட்சம் 150 திறமைச்சித்திகள் பெற வேண்டும் என்பதுடன் உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத் துறையில், உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் பாடங்களைச் செய்த மாணவர்களுக்கு அனுமதி பெறுவதற்கான தகைமை கிடைக்கும்.

கல்வி நிகழ்ச்சியின் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகளில், ஆயுர்வேத மருத்துவத்தின் அடிப்படைகளை மாணவர்கள் கற்றுக்கொள்வார்கள். மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது ஆண்டுகளில் ஆயுர்வேத மருத்துவத்தில் காயசிகித்சா, தேசியசிகித்சா ஸ்திரீரோக (பெண் நோயியல்), கௌமாரபத்ய (சிறுவர் மருத்துவம்), ஷைல்ய தந்திர (அறுவை சிகிச்சை), ஷாலக்யா தந்திர (காது, மூக்கு, தொண்டை) உள்ளிட்ட அனைத்து முக்கிய பகுதிகளும் உள்ளன. சிகிச்சைப் பயிற்சியும் மூன்றாம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு முதன்மையாக யக்கலையிலுள்ள கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத போதனா மருத்துவமனை மற்றும் பிற முன்னணி அரசாங்க ஆயுர்வேத மருத்துவமனைகளில் பெறுகிற நடத்தப்படுகிறது. முன்னணி ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிறுவனங்களில் தகுதிவாய்ந்த பணியாளர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த மாணவர்கள் மருந்து தயாரிப்பிலும் அனுபவம் பெறுகின்றனர்.

**சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்ப பீடம்**

சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பப் பீடமானது, சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் திணைக்களம், தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் சுதேச மருத்துவ வளங்கள் திணைக்களம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். உள்ளூர், பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் தேவைகள், விழுமியங்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் பிரச்சினைகள் ஆகியவற்றை அடையாளங்காண்பதனூடாக மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான சேவைகளை வழங்குவதில் அறிவுள்ள, திறமையான மற்றும் திறன்வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்கான கல்வி நிகழ்ச்சிகளை இப்பீடமானது வழங்குகிறது.

**சுதேச மருத்துவ வளங்கள் துறையில் கௌரவ விஞ்ஞானமாணி**

கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச சுகாதார – விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் சுதேச மருத்துவ வளங்கள் துறையினால் சுதேச சுதேச மருத்துவ வளங்கள் துறையில் கௌரவ விஞ்ஞானமாணி (BSc (Hons) in IMR] பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது. மேற்கத்திய மற்றும் உள்நாட்டு அறிவிற்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும் வகையில் இந்த தனித்துவமான பட்டப்படிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது விவசாயம், பெருந்தோட்டம், மிருக வைத்தியம் மற்றும் இயற்கை அறிவியலுடன் தொடர்புபட்ட பூர்வீக மருத்துவ வளங்களை மேம்படுத்துவதற்கான அடிப்படைக் கோட்பாடுகள், நடைமுறைகள் தொழில்நுட்பம் பற்றிய திருப்திகரமான பல்துறை அறிவைக் கொண்ட திறமையான மற்றும் நிபுணர்கள் மற்றும் தொழில்முனைவோரை உருவாக்குகிறது. பாடத்திட்டம் மற்றும் பாடவிதானம் ஒரு பாடத்திட்டத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது நான்கு ஆண்டுகளில் எட்டு கல்வி அரையாண்டுகளில் (SLQF மட்டம் 6) வேலை செய்யும் போது சுற்றல் முறையில் இயங்கும் இப்பாடநெறியானது, தொழில்சார் உலகிற்கு பட்டதாரிகளை உருவாக்குகிறது.

சுதேச மருத்துவ வளங்கள் துறையில் கௌரவ விஞ்ஞானமாணி பாடத்திட்டத்தில் முதலாம் வருடம், உள்நாட்டு மருத்துவ வளங்களின் அடிப்படைகள் பற்றிய ஆய்வுடன் தொடங்குகிறது. இதில் உள்நாட்டு மருத்துவத்தின் தத்துவ பின்னணி, அடிப்படை தத்துவார்த்த அறிவு மற்றும் உள்நாட்டு மருத்துவ வளங்களில் நடைமுறை அனுபவம் ஆகியன உள்ளடங்கியுள்ளன. பட்டப்படிப்பின் இரண்டாம் ஆண்டில் உள்நாட்டு மருத்துவ வளங்கள் பற்றிய பயன்பாட்டு அறிவு வலுப்படுத்தப்படுகிறது. பட்டப்படிப்பின் மூன்றாம் ஆண்டு, உள்நாட்டு மருத்துவ வளங்களை மேம்படுத்துவதில் அறிவு மற்றும் திறன்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. பூர்வீக மருத்துவ வளங்களை நிர்வகிப்பதில் கைதேர்ந்த அனுபவம் மற்றும் படிப்புத் துறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வாய்ப்பு குறுகிய கால அடிப்படையில் ஒவ்வொரு கல்வியாண்டின் முடிவிலும் வழங்கப்படும். மேலும், நான்காம் ஆண்டில் விவசாயம் சார்ந்த மற்றும் உள்நாட்டு மருத்துவ வளங்கள் சார்ந்த தொழில்களுக்கு ஆறு மாத கட்டாய தொழில்துறை பயிற்சி அளிக்கப்படும். இறுதியாண்டில் நடத்த ஓராண்டு ஆய்வுத் திட்டம் கோரப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகள் முழுவதும் பட்டதாரிகளின் மொழி, தொழில்முறை, தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்த துணைப் பாடநெறிகள் வழங்கப்படும்.

பூர்வீக மருத்துவ வளங்களில் சிறந்த அறிவைக் கொண்ட நல்ல தகுதி மற்றும் நன்கு பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கு நிலையான மற்றும் சுற்றுச்சூழல் நட்பு விவசாயத் துறையில் உயர் முகாமைத்துவ மட்டங்களில், ஏற்றுமதி சார்ந்த உயர்நிலை விவசாயம்/ உள்நாட்டு மருத்துவத் துறையில் உயர் முகாமைத்துவம், விவசாய உள்ளீடு உற்பத்தி நிபுணர்கள், விவசாய இயந்திரங்கள் உற்பத்தி மற்றும் வர்த்தக வல்லுநர்கள், மண் நுண்ணுயிரியலில் உயர்மட்ட விஞ்ஞானிகள், மற்றும் பயனுள்ள நுண்ணுயிர் தொடர்பான தொழில்கள், மருத்துவ உணவு மற்றும் தயாரிப்பு உருவாக்குநர்கள், கரிம மூலிகை மற்றும் உணவு தொழில்நுட்ப வல்லுநர்கள், தரக் கட்டுப்பாட்டாளர்கள், சான்றளிப்பவர்கள் மற்றும் விவசாயப் பொருட்களின் கணக்காய்வாளர்கள், கரிம கால்நடைகள் மற்றும் தாவர வளர்ப்புத் தொழில்கள், உள்நாட்டு மருத்துவ வள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளில் கல்வியாளர்கள் ஆகிய தொழில்களுக்கான வாய்ப்புகள் உள்ளன.

**சுகாதார தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் கௌரவ சுகாதார விஞ்ஞானமாணி**

சுகாதார தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் கௌரவ சுகாதார விஞ்ஞான மாணி என்பது நான்கு வருட முழுநேர படிப்புத் திட்டமாகும். இதில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் துறைகளுக்கிடையே சவால்மிக்க நடுநிலைகளைக் கொண்ட திறன்களை உள்ளடக்கிய சுகாதாரப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்குவதற்காக நடைமுறைப் பயிற்சி சுகாதாரப் பராமரிப்புத் பாதுகாப்பு அமைப்புகளுடன் இணைந்த தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத் துறையில் சிறந்த தொழில்முறை மற்றும் கல்வித் திறன்களை வளர்ப்பதில் ஆர்வமுள்ள மாணவர்களுக்காக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்புக்கு குறிப்பாக சுதேச மருத்துவத் துறையில் உறுதியான பின்னணியை வழங்குகிறது. இந்தத் திட்டம் மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் திறனைப் பயன்படுத்திக் கொள்ள அதிகாரம் அளிக்கும், மேலும் அவர்கள் சுகாதார தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிபுணராக பணியாற்றத்தேவையான தொழில் சார்ந்த தனிப்பட்ட திறன்களைப் பெற உதவும். ஆய்வுகள் முழுவதும், உண்மையான வணிகச் சிக்கல்களுக்கு கணி-னி அடிப்படையிலான தீர்வுகளை எவ்வாறு வடிவமைப்பது, உருவாக்குவது மற்றும் உருவாக்குவது என்பதை மாணவர்கள் கற்றுக்கொள்வதால் வழிகாட்டுதல் இருக்கும்.

மூன்றாம் கல்வியாண்டின் முடிவில், அனைத்து இளங்கலைப் பட்டதாரிகளும் நான்காம் ஆண்டைத் தவிர குறைந்தபட்சம் நான்கு மாதங்களுக்கு சம்பந்தப்பட்ட துறையில் உள்ளகப் பயிற்சியைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு கல்வியாண்டிலும் உள்ளகப் பயிற்சிக் கூறுகள் இருக்கும்.

இந்த உள்ளகப் பயிற்சியானது பயிற்சிக் காலமாக வடிவமைக்கப்பட்டுள்ளது, இதன் போது மாணவர்கள் நிஜ உலக வேலை சூழலை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். பட்டப்படிப்பு திட்டமானது நான்காவது கல்வியாண்டில் ஆராய்ச்சி கூறுகளையும் கொண்டுள்ளது.

**மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞானமாணி**

மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டப்படிப்பானது, இலங்கை, கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் (GWUIM) சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இது ஒரு தனித்துவமான முழுநேர நான்கு வருட (8 அரையாண்டுகள்) பட்டப்படிப்பு திட்டமாவதுடன் (SLQF நிலை 6) இது சுகாதார சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான ஆழமான அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இளங்கலைப் பட்டதாரிகள் ஆறு திட்டத்தை நடத்தி, இறுதி ஆண்டில்பகுப்பாய்வு திறன், சிக்கல் தீர்க்கும் திறன். சமூக மாத ஆராய்ச்சித் திறன்கள் மற்றும் விமர்சன சிந்தனை திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளகப் பயிற்சியைப் பின்பற்றுகின்றனர். மேலும், எதிர்காலத்தில் திறமையான பட்டதாரியாக தங்கள் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக இளங்கலைப் பட்டதாரிகளுக்கு நேரடி அனுபவங்கள், செயலமர்வுகள் மற்றும் களப்பயணங்கள் வழங்கப்படும்.

இலங்கை, கம்பஹா விக்கிரமாரச்சி மருத்துவ சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டதாரிகள், சுகாதார சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கருத்துக்கள், சுதேச அறிவு மற்றும் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய திருப்திகரமான பல்துறை அடிப்படைக் அறிவைப் பெற்றிருப்பார்கள். இப்பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெறுவதிலும், தங்கள் தொழிலில் சிறந்து விளங்குவதிலும் அதிக திறனை வெளிப்படுத்துவார்கள்.

**உயிரிமருத்துவத் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞானமாணி**

உயிரிமருத்துவத் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞானமாணி கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சுதேச விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் தொழில்நுட்பத் சுகாதார துறையால் வழங்கப்படும் நான்கு வருட கௌரவப் பட்டம் உயிரிமருத்துவத் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞானமாணி (BHSc Hons in BMT) பட்டமாகும்.

இந்த பட்டப்படிப்புத் திட்டம், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போதைய மருத்துவ மற்றும் சுகாதார நடைமுறைகளில் பல்வேறு திறன்களை ஆராய மாணவர்களை ஊக்குவிக்கிறது. இது உள்நாட்டு மற்றும் நவீன மருத்துவத்தின் பின்னணியில் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்மானங்களை வழங்குகிறது. உள்நாட்டு மற்றும் நவீன மருத்துவம்/ சுகாதார அமைப்புகளில் பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப திறன்களைப் பயன்படுத்தக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதில் இத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

மூன்றாம் கல்வியாண்டு நிறைவடைந்தவுடன், அனைத்து இளங்கலை பட்டதாரிகளும் குறைந்தபட்சம் நான்கு மாதங்களுக்கு சம்பந்தப்பட்ட துறையில் உள்ளகப் பயிற்சியைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது கல்வியாண்டில் கூடுதலாக ஒவ்வொரு கல்வியாண்டிலும் உள்ளகப் பயிற்சிக் கூறுகள் இருக்கும்.

கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் உயிரிமருத்துவத் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞான மாணி பிரிவின் பட்டதாரிகள், இறுதிப் பயனரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், உள்நாட்டு மற்றும் நவீன மருத்துவ சுகாதார அமைப்புகளில் நிஜ உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தொழில்நுட்ப சாதன அடிப்படையிலான அணுகுமுறைகளின் திறன்கள் உயிரிக்கவியல் மற்றும் உயிரியல் பொருட்கள், மருத்துவத் தகவல், மருத்துவக் கருவி, உயிரியல் மருத்துவப் பயன்பாடுகள், மனித-கணனித் தொடர்பு தொடர்பான அடிப்படைக் கருத்துக்கள், கோட்பாடுகள், நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய அறிவைக் கொண்ட திறமையான தொடர்பாளர்களாகவும் குழு வீரர்களாகவும் இருப்பார்கள்.

#### சுதேச மருந்தகவியல் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞானமாணி

சுதேச மருந்தகவியல் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞானமாணி (BHSc (Hons) in IPT) என்பது கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச சுகாதார அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் சுதேச மருத்துவ வளங்கள் துறையினால் வழங்கப்படும் கௌரவப் பட்டமாகும். இது நான்கு அரையாண்டுகள்) பட்டப்படிப்பு திட்டமாகும் (SLQF நிலை 06) மற்றும் உள்நாட்டு மருந்துத் துறையில் பயனுள்ள மற்றும் திறமையான சேவைகளை வழங்குவதற்காக வருட (8 திறமையான நிபுணர்கள் மற்றும் தொழில்முனைவோரை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, வளர்ந்து வரும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டு மருந்து தயாரிப்புகளின் முன்னேற்றத்திற்காக அறிவியல் அடிப்படையிலான தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து பயன்படுத்துவதன் மூலம் இப் பாடத்திட்டம் புகுத்தப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டில் வழங்கப்படும் பாடநெறிகள், சுதேச மருத்துவத்தின் அடிப்படைகள் பற்றிய ஆய்வோடு தொடங்குகின்றன, இதில் சுதேச மருத்துவத்தின் தத்துவப் பின்னணி வழங்கப்படும். அடிப்படை அறிவியலில் அடிப்படை தத்துவார்த்த அறிவு மற்றும் நடைமுறை அனுபவங்கள், உள்நாட்டு மருந்தகம் மற்றும் நிர்வாகத்தின் அடிப்படைகள் வழங்கப்படும். மொழி திறன் மற்றும் தொழில்முறை திறன்களை மேம்படுத்த துணை பாடநெறிகள் வழங்கப்படும். இரண்டாவதாக, பாடத்திட்டமானது உள்நாட்டு மருந்து செயலாக்கம் மற்றும் தொடர்புடைய உயர் விஞ்ஞானங்களின் அடிப்படைக் கோட்பாடுகளின் படிப்புடன் தொடங்குகிறது. பட்டதாரிகளின் திறன்கள் மற்றும் பெறுமதிகளை மேம்படுத்த மொழி, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் துணைப் பாடநெறிகள் வழங்கப்படும். சுதேச மருந்து தயாரிப்புகள் பற்றிய அறிவு மற்றும் திறன்களை உருவாக்குதல் மற்றும் சுதேச மருந்துகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் ஆகியவை மாணவர்களுக்கு மூன்றாம் ஆண்டில் கற்பிக்கப்படுகின்றன. நான்காம் ஆண்டு ஆய்வுக் காலத்தில் சுதேச மருந்துத் தொழில்துறையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்கும் வாய்ப்பும், சுதேச மருந்துகளின் தரப்படுத்தலில் அனுபவமும் வழங்கப்படும். ஒவ்வொரு கல்வியாண்டு முடிவிலும் இலங்கையில் விவசாயம் சார்ந்த மற்றும் உள்நாட்டு மருந்துத் தொழிற்சாலைகளுடன் இணைந்த குறுகிய கால கைத்தொழில் பயிற்சிக்கு மாணவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள். மேலும் நான்காம் ஆண்டில் ஆறு மாத கட்டாய தொழில்துறை பயிற்சியும் வழங்கப்படும். இறுதியாண்டில், அனைத்து மாணவர்களும் மருந்து மேம்பாடு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளுடன் ஒரு ஆராய்ச்சி திட்டத்தை ஓராண்டு) நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுதேச மருந்தகவியல் தொழில்நுட்பத்தில் கௌரவ சுகாதார விஞ்ஞான மாணி பட்டதாரிகள், சுதேச மருந்துத் தொழில்நுட்பத்தின் எந்தத் துறையிலும் சிறந்து விளங்க முடியும், மேலும் இந்த பட்டப்படிப்புத் திட்டமானது, ஆலோசனை நிறுவனங்கள், மற்றும் அரச நிறுவனங்கள், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள், மருந்து மற்றும் உயிரி தொழில்நுட்பத் தொழில்கள், தனியார் மற்றும் பொது ஆராய்ச்சி நிறுவனங்கள் உட்பட பல்வேறு வகையான தொழில் தெரிவுகளுக்கு தனிநபர்களை தயார்படுத்துகிறது.

#### யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வில் கௌரவ விஞ்ஞானமாணி

யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வில் கௌரவ விஞ்ஞானமாணி பட்டப்படிப்பானது, விக்கிரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் (GWUIM) சுதேச சுகாதார விஞ்ஞானங்கள் மற்றும் தொழிநுட்ப பீடத்தின் சுதேச சுகாதார விஞ்ஞானத் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது. இது ஒரு தனித்துவமான முழுநேர நான்கு வருட (8 அரையாண்டுகள்) பட்டப்படிப்புத் திட்டமாவதுடன் (SLQF நிலை 6) சுதேச சுகாதாரம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி நடைமுறைகளில் யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வில் சிறப்பு அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில், இளங்கலைப் பட்டதாரிகளுக்கு நடைமுறை கூறுகளுடன் யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வு குறித்த அடிப்படைப் படிப்புகள் மேலும், சிறந்த அறிவு மற்றும் திறன்களுடன் இளங்கலை வாழ்க்கையை திறம்பட உருவாக்குவதற்கு அத்தியாவசிய திற வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் முக்கியமாக பரந்த பொதுக் கல்வியி செலுத்துகிறது, இது வெற்றிகரமான வாழ்க்கையை செயல்படுத்துகிற ஆண்டில், இளங்கலைப் பட்டதாரிகளுக்கு, சிகிச்சை யோகா, சித்த மருத்து சாதனைகள், பயன்பாட்டு உளவியல், இயற்கை மருத்துவம் போன்ற பல்லே நிலப் பகுதிகளைப் பின்பற்ற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. படிப்பீன் இறுதியாண்ட எங்கலைப் பட்டதாரிகள் யோகா மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்விற்கு மதிப்பீட்லுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து ஆராய்ச்சித் திட்டத்தை நடத்த வேண் ஒரு களப் பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி மூலம் பட்டப்படிப்பு மே தொழில்துறையின் உண்மை நிலையைப் பற்றிய அனுபவத்தை வழங்குகின்றன. மே மற்றும் மனநிகழ்வுகளின் ஆய்வு மருத்துவத்தில் கொடுக்கப்பட்ட கோட்பாட்டு மற நடைமுறை அறிவின் அடிப்படையில், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் அவர்க தொழிலில் சிறந்து விளங்குவதற்கும் இது உதவியாக இருக்கும். இந்த பட்டப்படி வெற்றிகரமாக முடித்த பிறகு, இளங்கலை பட்டதாரி யோகா மற்றும் மனநிகழ்வு வலுப்படுத்தப்படுகிறது. இப்பயிற்சிகள் இளங்கலைப் பட்டதாரிகளும் ஆய்வில் பற்றிய சிறந்த புரிதலைப் பெற முடியும், இது சுகாதார அமைப்பில் ஒரு பயிற்சியாளராக மாற உதவுகிறது.

#### சுதேச சமூக அறிவியல் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

சுதேச சமூக அறிவியல் மற்றும் முகாமைத்துவப் பீடமானது, உள்நாட்டு, பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சமூகம் மற்றும் சூழலின் தேவைகள், விழுமியங்கள், பிரச்சினைகளை அங்கீகரித்து, அறிவு, திறமை மற்றும் திறன் வாய்ந்த மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான சேவைகளை வழங்கும் பட்டதாரிகளை உருவாக்குவதற்கான கற்கை நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக, சுதேச சமூக அறிவியல் ணைக்களம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் திணைக்களத்தை உள்ளடக்கியதாகும் .

**சுதேச அறிவியல் சமூகக் கல்வியில் கௌரவ விஞ்ஞானமாணி**

சுதேச அறிவில் சமூகக் கல்விக்கான கௌரவ விஞ்ஞானமாணி (BSc Hons) பட்டமானது இலங்கைத் தகுதிக் கட்டமைப்பின் வழிகாட்டுதல்களின்படி உருவாக்கப்பட்ட, சமூக விஞ்ஞானத் துறையில் நான்கு வருட சிறப்புப் பட்டமாகும். இந்த பட்டப்படிப்பு சமூகவியல், மானுடவியல், புவியியல், புவி-பொருளாதாரம், குற்றவியல், காப்பு மற்றும் பாதுகாப்பு, உளவியல் உதவி மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பரந்து விரிந்துள்ள பல துறைகளை உள்ளடக்கியதாக உள்ளது. மேலும், இது மாணவர்களுக்கு சுதேச மருத்துவத்தின் அடிப்படைகளைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதுடன் அவர்களின் முக்கிய பட்டப்படிப்புக்கு இணையாக தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளமோவையும் வழங்கும். மாணவர்கள் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் சமூகங்களில் வேலை அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முக்கிய பாடநெறிகளுக்கான விரிவான களப் பயிற்சியையும் இந்தத் திட்டம் உள்ளடக்கியதாகும். பட்டப்படிப்பு திட்டத்தின் பாடவிதானம் மற்றும் பாடத்திட்டம் தேசிய மற்றும் சர்வதேச தொழில்துறை சூழல்களில் சுயாதீனமாக பயிற்சி செய்யும் திறன் கொண்ட நிபுணர்களை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, டவிதானம் மற்றும் பாடத்திட்டங்கள் தேவையான அறிவை வழங்குவதற்கு பாட மட்டுமல்லாமல், தொழில்முறை அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் வெற்றிகரமான தொழில்முறை பங்காளிகளாக மாற முடியும்.

**சேவை முகாமைத்துவம் - விஞ்ஞான சிறப்புமாணி**

கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் துறை புதிதாக நிறுவப்பட்ட சேவை முகாமைத்துவத்தில் விஞ்ஞான சிறப்புமாணி பட்டப்படிப்பை வழங்குகிறது. இது சேவை முகாமைத்துவ ஒழுக்கத்தில் விரிவான மற்றும் முழுமையான அறிவைக் கொண்ட மாணவர்களை உருவாக்க வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான பாடத்திட்டமாகக் காணப்படுகிறது. இலங்கையில் அதிகளவான சனத்தொகையினர் பணியாற்றுவது சேவை துறையிலாகும். மேலும் இந்த துறையில் காணப்படும் தொழில் சந்தையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த பட்டப்படிப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் 120 - கிரெடிட் கற்பித்தல் மற்றும் கற்றல் பணிகளைக் கொண்ட நான்கு வருட சிறப்பு பட்டப்படிப்புத் திட்டமாகும். இந்த கற்கைநெறியானது உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் குறைந்தது மூன்று “எஸ்” (சாதாரண) சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## வவுனியா பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| முகாமைத்துவக் கற்கைகள் (TV) | - | E |
| பிர. விஞ். (உயி. விஞ்ஞானம்) | சூழல் விஞ்ஞானம் | E |
| பிர. விஞ்ஞானம் (பௌ. விஞ்.) | பிர. கணிதமும் கணக்கிடுதலும் | E |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (ICT) | - | E |
| செயற்திட்ட முகாமைத்துவம் | - | E |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம | - | E |
| வங்கி மற்றும் காப்புறுதியியல் | - | E |

## ஸ்ரீபாளி வளாகம், கொழும்புப் பல்கலைக்கழகம்

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| அரங்கேற்றற் கலை | - | S |
| வெகுசன ஊடகம் | - | S |

**அரங்கேற்றல் கலைகளின் கௌரவ பட்டம்**

வழங்கப்பட்டுள்ள பாடவிதானத்தின் கீழ் செயல் நிறைவேற்றக் கலைகளின் கௌரவப் பட்டப்படிப்பினை நிறைவு செய்வதற்கு மாணவர் ஒருவன் நான்கு வருட கல்விக் காலத்தின் பொழுது 43 கற்கை நெறிகளை உள்ளடக்கிய கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட வேண்டிய 43 கற்கை நெறிகள் ஆவன 26 பிரதான கற்கை நெறிகள், 6 அடிப்படை கற்கை நெறிகள் மற்றும் 11 தெரிவு கற்கை நெறிகளை உள்ளடக்கியதாகும். இக்கற்கை நெறி பாடவிதானத்தின் சுருக்க கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது. பிரதான அலகு ஒவ்வொன்றும் 45 மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும்.

**பிரதான கற்கை நெறிகள்**
நிகழ்ச்சித்திட்டத்தில் **கட்டாயமானவை** என்ற வகையில் 26 கற்கை நெறிகள் உள்ளன. இந்தக் கற்கை நெறிகள் ஒரு தொகுதி ‘செய்முறை நெறிகளை’ உள்ளடக்குகின்ற 7 கற்கை அலகுகளில் வழங்கப்படுகின்ற பாட நெறிகள் **நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும்** என 3 பாடப்பரப்புக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவையாக இருக்கும். எனவே, பிரதான அலகு ஒன்று ஒவ்வொன்றும் 45 மணித்தியாலங்களை உள்ளடக்கிய மூன்று சம ஒழுங்கு நெறிகளைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன், மாணவர் ஒருவர் ஒரு தெரிவுசெய்யப்பட்ட செய்முறை பாடநெறியை 4 வருட காலப் பகுதியில் பின்பற்றுவார்.

**அடிப்படை கற்கை நெறிகள் மற்றும் தெரிவுக் கற்கை நெறிகள்**
செயல் நிறைவேற்ற கலைகளின் களத்தினை ஊடறுத்துச் செல்கின்ற ஒரு சில முக்கிய துறைகளை உள்ளடக்கும் முகமாக வடிவமைக்கப்பட்டுள்ள 6 அடிப்படை கற்கை நெறிகள் இதில் காணப்படுகின்றன. இவை சகல மாணவர்களுக்கும் கட்டாயக் கற்கை நெறிகளாக வழங்கப்படும். 30 தெரிவுக் கற்கை நெறிகள் உள்ளன. சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும், சினிமா, கலையும் வடிவமைப்பும் என்ற 5 பாடத்துறைகளுடன் தொடர்புபட்ட விடயங்களை இவை கொண்டிருக்கும். மாணவர்கள் அவர்களது குறிப்பிட்ட தேவைகளுக்கு அமைவாக வழங்கப்படுகின்ற 30 அலகுகளில் 11 அலகுகளை மாத்திரம் தெரிவு செய்வதற்கு கடமைப்பட்டுள்ளார்கள்.

**குறிப்பு** : குறைந்தது 5 மாணவர்கள் ஒரு கற்கை நெறிக்கு பதிவு செய்திருந்தால் மாத்திரமே அது தொழிற்படத் தொடங்கும். பிரதானம் மற்றும் தெரிவு கற்கை நெறிகளுக்கு இத்தேவை பிரயோகிக்கப்படும்.

**வெகுசன ஊடகத்தில் பீ.ஏ (கௌரவ)**

அச்சு ஊடகத்துறை, வானொலி ஒலிபரப்பு ஊடகத் துறை, ஊடகத் துறையின் கோட்பாடும் வரலாறும் போன்ற சிறப்புக் கற்கைநெறிகளை உள்ளடக்கியதாக கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகத்தின் வெகுசன ஊடகத்துறை நான்கு வருட கௌரவப்பட்டபடிப்பு நெறி ஒன்றினை வெகுசன ஊடகத்துறையில் வழங்கவுள்ளது.

இந்தப்பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டதின் பிரதான நோக்கமாக இருப்பது வெகுசன ஊடகத்துறையின் எண்ணக்கருவியல் கோட்பாடு மற்றும் பயிற்சி அறிவு என்பனவற்றில் நிரம்பிய அறிவு கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல் ஆகும்.

வெகுசன ஊடகத்துறையில் கௌரவப்பட்டப் படிப்பு பின்வரும் கற்கைநெறிகளைக் கொண்டிருக்கும்.

1.பிரதான கற்கைநெறி
2.அடிப்படைக் கற்கைநெறிகள்
3.தெரிவுக் கற்கைநெறிகள்
4.சேவைசார் கற்கைநெறிகள்

வெகுசன ஊடகத்துறையினால் வழங்கப்படும் கற்கை நெறிகளின் எண்ணிக்கை 80 ஆகும். இவற்றில் ஆகக் குறைந்தது 43 கற்கை நெறிகளையாவது மாணவர் ஒருவர் கௌரவப் பட்டப்படிப்பு தகைமை பெறுவதற்கு பாட நெறியாக செய்திருத்தல் வேண்டும். இந்தக் கற்கை நெறிகள் பின்வரும் பிரதான நெறிகளுடன் இணைக்கப்படும். அவையாவன: அச்சு ஊடகக கற்கைகள், வானொலி ஒலிபரப்பு, ஊடகக் கற்கை, தொலைக்காட்சி ஊடகக் கற்கை, ஊடக சமூகவியல், ஊடக உளவியல்துறை, ஊடக மானுடவியல், தத்துவம், கலாசாரவியல், இலக்கியக் கற்கைகள், அரசியல் பொருளாதாரம், பதிப்பித்தல், தகவல் தொழில்நுட்பம்.

தேவைப்படுகின்ற பயிற்சி அறிவு எமது வளாகத்தில் உள்ள நவீன கலையகத்திலும், ஏனைய அரச தனியார் ஊடகத்துறை நிறுவனங்களில் உள்ள கலையகங்கள் மூலமும் வழங்கப்படும்.

## திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க/மொ |
|---|---|---|
| முகாமைத்துவக் கற்கைகள் (TV) | முகாமைத்துவம், கணக்கியலும் நிதி முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | E |
| தொடர்பாடல் கற்கைகள் | தொடர்பாடல், மொழியியல், ஆங்கில மொழி | E |
| சித்த மருத்துவமும் அறுவை சிகிச்சையும் ## | - | E |
| பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிகவியல்) | - | E |
| கணனி விஞ்ஞானம் | - | E |

## கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரி

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| கணனி விஞ்ஞானம் | - | E |
| தகவல் முறைமைகள் | - | E |

## சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

| கற்கைநெறி | பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து) | க./மொ |
|---|---|---|
| சங்கீதம் | - | T |
| நடனம் | - | T |
| நாடகமும் அரங்கமும் | - | T |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | - | T |